ஞானபத கீர்த்தனைகள்

T.D.R.C. 2638
R.R.M.: 9.5.3-1885

Qb:417
M88

114978

# CHRISTIAN LYRICS;

FOR PUBLIC AND SOCIAL WORSHIP.

தேவாலய ஆராதனையிலும் குடும்ப ஆராதனையிலும்

பாடத்தக்க

# ஞானபதகீர்த்தனைகள்

பற்பல இடங்களிலுள்ள

கிறிஸ்துமார்க்கக் கவிஞர்களால்

இயற்றப்பட்டன.

COMPILED AND EDITED BY THE REV. E. WEBB.

REVISED BY THE REV. G. T. WASHBURN.

TENTH EDITION, 4,000—TOTAL COPIES, 23,000.

MADRAS:

THE MADRAS RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

S. P. C. K. PRESS, VEPERY.

1888.

04:417
M88

114918

S. P. C. K. Press, Vepery, Madras. 1888.

2038
784.0954

# முகவுரை.

இதில் பழைய புத்தகத்திலுள்ள 52 கீர்த்தனைகள் விட்டும் நூதனமான 71 கீர்த்தனைகள் சேர்த்தும் இருக்கிறது.

அந்தப் புத்தகத்திலுள்ள கீர்த்தனைகளைவிட அதிக சாரமும் உணர்வும் பொருந்தியனவும் அதிக செம்பாகமான செய்யுள் நடையுடையனவும் அதிகம் நீளாமல் சபையார் லகுவாய்ப் பாடத்தக்கனவும் அதிகமாய்ப் பொருள் விகற்பப்படுவனவுமாகிய கீர்த்தனைகள் இதில் தெரிந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சுயபக்தி பிறப்பிப்பதாகிய ஞானபதங்களின் தொகை தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குள்ளே படிப்படியே அதிகரிக்கின்றது. ஆகிலும் இன்னும் இப்புத்தகத்தில் சில கீர்த்தனைகள் தேவநாமங்கள், தேவலட்சணங்களை அதிக சாரமின்றி தோத்திர கோவையாக இருக்கிறது. மேலும் கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றிய கீர்த்தனைகள் அநேகமாய் இருந்தாலும் கிறிஸ்தவர்களின் பரஸ்பர அன்பு, அனுதாபம், திருச்சபையின்பேரிலும் அதின் அபிவிர்த்தியின்பேரிலும் கிறிஸ்தவன் காட்டுகிற ஆவலாசை, பாவிகளைத் திருச்சபைக்கு அழைக்கிற அழைப்பு, குடும்ப கூட்டம், கோவில் ஆராதனையின் சிறப்பு, கிறிஸ்துவின் திவ்விய நன்மாதிரி, கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டிய யதார்த்தம், பரிசுத்த விருத்தி, சமாதான நாட்டம், சகோதர அன்பு, தனிச்செபத்தின் சிறப்பு, இன்பம், குடும்பசிலாக்கியங்கள், பிள்ளைகளுக்குச் செய்யத்தகும் கடமைகள், தேவாவியினால் உண்டாகும் எழுப்புதல், பிறருடைய ஆத்துமரட்சிப்பைப் பற்றும் கரிசனை, லோகத்தார் மனந்திரும்பல், அதன்பேரில் தேவன் கிறிஸ்துவுக்குப் பண்ணிய வாக்குத்தத்தங்களின் சபலம், கிறிஸ்தவன் மரணவேளையில் அடையும் இன்பம், சமாதானம், சவச்சேமம், உபவாசம், பாவ அறிக்கை, பிள்ளைப்பாட்டுகள், இப்படிக்கொத்த விஷயங்களின்பேரிலுள்ள கீர்த்தனைகள் சிலதாய்மாத்திரம் இருப்பதால், இந்த விஷயங்களைப்பற்றிய கீர்த்தனைகள் அதிகமதிகமாய் உண்டாக்க வேண்டியிருக்கிறது.

வேதத்தின் சில பாகங்களும் பல சங்கீதங்களும் சொற்சுவை பொருட்சுவை பொருந்திய கீர்த்தனைகளாக்கப்படலாம். இங்கிலீஷ் பாஷைகளிலுள்ள ஞானப்பாட்டுகளில் அநேகமும் மிக்க களிதுள்ளி

உருவகம், உணர்ச்சி, கருத்துப்பொருந்திய பாடல்மாதிரியாக வைத்துக் கொள்ளலாம்.

இதில் 250க்கு அதிகமான இராகவிகற்பங்கள் இருப்பதையிட்டு அந்தந்தச் சமயத்திற்கேற்க கீர்த்தனைகள் தெரிந்து பாடுதல் கிராமாந்தர சபைகளுக்கு இலேசான காரியம் அல்ல என்றெண்ணி ஒரே ராகத்தில் பாடத்தக்க கீர்த்தனைகள் இன்னவென்று காட்டுகிற ஓர் அட்டவணை சேர்த்திருக்கிறது. ஆதலால் இதுவரையில் கிறிஸ்தவர்களுக்குச் சாதாரணமாய்த் தெரியாத நூதன இராகங்களில் கீர்த்தனைகள் உண்டாக்குவதிலும் ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்திருக்கிற இராகங்களில் உண்டாக்குவது உத்தமம்.

தமிழருக்குச் சாதாரணமாய்த் தோன்றுகிற இராகங்களுடைய 50 கீர்த்தனைகளின் இலக்கங்களை இந்தப் புத்தகத்திலுள்ளபடி குறித்திருக்கிறேன்.—5, 6, 12, 13, 15, 16, 20, 23, 32, 41, 43, 53, 59, 60, 61, 62, 64, 66, 74, 78, 79, 82, 83, 86, 95, 96, 99, 105, 112, 116, 122, 123, 134, 138, 146, [illegible], 15[illegible], 169, 178, 206, 208, 221, 238, 243, 255, 258, 261, 264, 278, 284. இப்படிப்பட்ட இராகமுள்ள கீர்த்தனைகளை தமிழ்க்கிறிஸ்த சபையார் யாவரும் எளிதில் பாடக் கூடும்.

தமிழ் இராகங்களை தேவாராதனைக்குப் பாவித்தவராகிய தஞ்சை வேதநாயகசாஸ்திரியாரவர்களுக்குத் தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள் நன்றி பாராட்ட மிகுந்த கடமைப்பட்டிருக்கிறார்கள். திண்டுக்கல்லில் இருந்த கனம்: உவெப் ஐயரவர்கள் அந்த சாஸ்திரியாருடைய பாடல்களைத் தேவாராதனையில் உபயோகப்படுத்தி வைத்ததும் உபகாரந்தான். ஆகிலும் இவையனைத்தும் இந்தக் காரியத்தில் துவக்கமேயன்றி வேறல்ல.

உலகரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பூரண புண்ணியபலன்களை முன்னிட்டு யார் யார் தம் தம் பாவவழியை விட்டு மனந்திரும்பித் தேவவரப்பிரசாதம் பெறுகிறார்களோ அவர்கள் உள்ளத்தைப் பற்றும் கிலேசம், நம்பிக்கை, நல்லாசை, நல்விருப்பம், சந்தோஷம், அசந்தோஷங்கள், இவற்றை வர்ணித்துத் தேவாராதனையில் உபயோகிக்கத் தக்க தமிழ்ப்பதங்களைக் கவிஞர்கள் இன்னும் உண்டாக்கவேண்டி இருக்கிறது.

1870–ஆம்
டிசெம்பர்மீ
மதுரை.

G. T. W.

# INDEX OF AUTHORS.

## பாடகரின் நாம அட்டவணை.

| | |
|---|---|
| ஆ. அ. | ஆபிரகாம் அல்லின், உபதேசியார், திண்டுக்கல். |
| ஆ. உப. | ஆபிரகாரம், விசாரணை உபதேசியார், டோனாவூர். |
| இ. ஞா. | இசாக்கு ஞானமுத்து. |
| இ. உப. | இசாக்கு, உபதேசியார், மேஞர். |
| ஏ. ச. | ஏசுதாசன் சவரிராயன், உபாத்தியாயர், பாளையங்கோட்டை. |
| ஏ. உவா. | ஏசடியான், உபாத்தியார், நாசரேத்தூர். |
| ஏ. அ. | ஏசுதாசன், அண்ணாவியார், கும்பகோணம். |
| கா. உப. | காபிரியேல், உபதேசியார், பார்வதிபுரம், நல்லூர். |
| ச. உ. | சற்குண உவின்பிறீட், போதகர். |
| ச. உப. | சத்தியநாதன், உபதேசியார், தஞ்சைநகரம். |
| N. சா. | N. சாமுவேல். |
| ச. உவா. | சவரிமுத்து, உவாத்தியார், பன்றிகுளம். |
| தே. மு. | தேவவரம், முன்ஷி, திருவனந்தபுரம். |
| தே. றை. | தேவசகாயம், றைற்றர், தஞ்சைநகரம். |
| தை. றை. | தைரியம், றைற்றர். |
| P. பா. | P. பாக்கியநாதன், சிவகாசி. |
| P. | பாளையங்கோட்டையில் அச்சடித்த கீர்த்தனை புஸ்தகம். |
| ஜா. பா. | ஜான் பால்மர், றைற்றர், நாகர்கோவில், திருவனந்தபுரம். |
| மரி. உப. | மரியான், உபதேசியார், ஏழாயிரம் பண்ணை, திருநெல்வேலி. |
| மது. உப. | மதுரநாயகம், உபதேசியார், திருநெல்வேலி. |
| T. யோ. | T. யோசேப்பு, றைற்றர், நெய்யூர். |
| ஜே. யா. | ஜே. யாக்கோபு, கோல்போர்ட்டர், கருவூர். |
| JAFFNA. | இயாழ்ப்பாணத்தார். |
| C. யோ. | C. யோசேப்பு, கம்போசிட்டர், நாகர்கோவில். |
| தேசோ. | தேசோபகாரி. |
| வீர. | வீரமாமுனிவர். |
| A. வே. | A. வேதக்கண். |
| R.C. | R. CALDWELL. |
| வே. சா. | வேதநாயகம், சாஸ்திரியார், தஞ்சைநகரம். |
| E. W. | E. WEBB. |

# சாதாரண பொருள் அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| **தேவன்.** | |
| திரியேகருக்கு வணக்கம் | க—ங |
| தேவனுக்கு வணக்கம் | ச—எ |
| தேவலட்சணங்களைக் குறித்தல் | அ—கO |
| இரட்சணியத்தின் தேவனைக் குறித்தல் | கக—கங |
| **கிறிஸ்து.** | |
| அவருக்கு வணக்கம் | கச—உகூ |
| அவர் பூமிக்கு வந்தது | ஙO—ஙஅ |
| அவருடைய பிறப்பு | ஙகூ—ருக |
| அவர் தாழ்மையில் வந்தது | ருஉ—ருரு |
| அவருடைய சரித்திரம் | ருசா—ருஅ |
| அவருடைய பாடுபடுதலும் மரணமும் | ருகூ—எச |
| அவருடைய உயிர்த்தெழுதல் | எரு—எஅ |
| அவர் பரத்துக்கேறினது | எகூ—அஉ |
| அவர் முடித்த கிரியை | அங—அரு |
| கிறிஸ்துவே இரட்சணிய வழி | அசா—கூகூ |
| அவரே அடைக்கலம் | கOO—கOஎ |
| அவரை மன்றாடுதல் | கOஅ—கஉO |
| அவரை வாஞ்சித்தல் | கஉக—கஉகூ |
| **பரிசுத்தாவி.** | |
| அவருக்கு விண்ணப்பம் | கஙO—கஙகூ |
| **கிறிஸ்தவர்களுக்குரிய அநுபவங்கள்.** | |
| பாவத்தன்மையும் புதுச்சிறின் அவசியமும் | கசO—கசங |
| பாவிகள் மனந்திரும்ப தேவ அழைப்பு | கசச—கருஉ |
| பாவத்தை அறிக்கையிட்டு மன்றாடல் | கருசா—கசாகூ |
| கிறிஸ்துவுக்குத் தன்னை நேர்ந்துவிடல் | கஎO—கஎச |
| கிறிஸ்தவனின் ஞானபோராட்டம் | கஎரு—கஅO |

பக்தனே.

இடுக்கவேளையில் மன்றாடுதல் ................ ௧௮௧—௧௮௬
ஆவிக்குரிய நன்மைகளுக்காக மன்றாடல் ........ ௧௮௭—௧௯௧
நன்றியறிதலான ஸ்தோத்திரம் ................. ௧௯௨—௧௯௭
தேவனில் நம்பிக்கை வைத்தல் ................ ௧௯௮—௨0௨
தேவனோடும் கிறிஸ்துவோடும் ஐக்கியம் ........ ௨0௩—௨0௭
பரிசுத்தமாய்ப் பிழைத்தல் .................. ௨0௮—௨௧௮
உலகத்தின் அநித்தியத்தை வெறுத்தல் .......... ௨௧௯—௨௩0
ஜெயிக்கப்படாத பாவங்கள் ................... ௨௩௧—௨௩௪

## திருச்சபை.

ஓய்வுநாள் தேவாலய ஆராதனை ................ ௨௩௫—௨௪௬
தேவாராதனைத்தொடக்கம், முடிவு ......௫, ௯, ௭, ௧௭, ௧௯, ௨௯, ௮௭, ௨0௯, ௨௩௮—௨௪௫.
தேவாலயபிரதிஷ்டை ........................ ௨௪௭, ௨௪௮
போதகப்பட்டம் ............................ ௨௪௯, ௨௫0
பரிசுத்த வேதபுத்தகம் ...................... ௨௫௧—௨௫௬
கர்த்தருடைய இராப்போசனம் .................. ௨௫௭—௨௬0
குழந்தைஞானஸ்நானம் ....................... ௨௬௧, ௨௬௨
சுவிசேஷபிரபலியம் ......................... ௨௬௩—௨௬௭
அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கித்தல் ௧0, ௧௯, ௨௩, ௨௪, ௩௨, ௩௩, ௩௫, ௪௭, ௪௯, ௮௯, ௯௧, ௯௨, ௯௩, ௯௮, ௧0௭, ௧௧௯, ௧௨௫, ௧௪0, ௧௪௧, ௧௪௨, ௧௪௩, ௧௪௪, ௧௪௫, ௧௪௬, ௧௪௭, ௧௪௮, ௧௪௯, ௧௫0, ௧௫௧, ௧௫௨, ௧௫௪, ௧௬௯, ௧௮௭, ௧௯௨, ௨௧௨, ௨௧௩, ௨௧௭, ௨௨0, ௨௨௨, ௨௨௩, ௨௨௪, ௨௨௫, ௨௨௮, ௨௨௯, ௨௩௧, ௨௩௯, ௨௫௩, ௨௫௪, ௨௮௯, ௨௯௫.

## காலவிசேஷம்.

இழவும், சாவும் ............................ ௨௬௮—௨௭௫
சவச்சேமம் ௧0௪, ௨௨0, ௨௨௧, ௨௨௨, ௨௨௩, ௨௨௯, ௨௬௮, ௨௭௫.
மழைத்தாழ்ச்சியும், பஞ்சமும் ................. ௨௭௬, ௨௭௭
வருஷப்பிறப்பு ............................. ௨௭௮, ௨௭௯
வீட்டுப் பிரதிஷ்டை ......................... ௨௮0
விவாகம் .................................. ௨௮௧—௨௮௭



பக்தனே.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் நியாயத்தீர்ப்பும் ........ ௨௮௮—௨௯௨
மோட்சம், நரகம் ........................... ௨௯௩—௨௯௭
விக்கிரகாராதனை .......................... ௨௯௮—௩00

சிறுபிள்ளைகளுக்குத்தக்க பாட்டுகளும், ஓய்வுநாட்பள்ளிக்குரிய பாட்டுகளும், ௫, ௯, ௧௧, ௧௩, ௧௫, ௧௯, ௨0, ௨௨, ௨௩, ௨௪, ௩௩, ௪௧, ௪௩, ௫௩, ௬0, ௬௬, ௮௩, ௯௪, ௧0௫, ௧௨௮, ௧௫௭, ௧௭௫.

# GENERAL INDEX OF SUBJECTS.

GOD.

| | Lyrics |
|---|---|
| Adoration of the Trinity | 1—3 |
| " of God | 4—7 |
| " of God's Attributes | 8—10 |
| " of God's Love in Redemption | 11—13 |

CHRIST.

| | |
|---|---|
| Adoration of Christ | 14—29 |
| The Advent of Christ | 30—38 |
| The Birth of Christ | 39—51 |
| Christ's Humiliation | 52—55 |
| The History of Christ | 56—58 |
| The Sufferings and Death of Christ | 59—74 |
| The Resurrection of Christ | 75—78 |
| The Ascension of Christ | 79—82 |
| Christ's Completed Work | 83—85 |
| Christ the Way of Salvation | 86—99 |
| Christ a Refuge | 100—107 |
| Adoring Prayers to Christ | 108, 109 |
| Prayers to Christ | 110—120 |
| Love towards Christ | 121—129 |

THE HOLY SPIRIT.

| | |
|---|---|
| Prayers and Praise to the Holy Spirit | 130—139 |

CHRISTIAN EXPERIENCE.

| | |
|---|---|
| Man's Sinfulness and Need of Renewal | 140—143 |
| Sinners called to Repentance | 144—155 |
| Confession of Sin and Prayers for Mercy | 156—169 |
| Consecration to Christ | 170—174 |
| The Christian Conflict | 175—180 |



| | Lyrics |
|---|---|
| Prayers in time of Distress | 181—186 |
| Prayers for Spiritual Blessings | 187—191 |
| Gratitude to God | 192—197 |
| Trust in God | 198—202 |
| Communion with God and Christ | 203—207 |
| Holy Living | 208—218 |
| The Vanity of the World Renounced | 219—230 |
| Unconquered Sins | 231—234 |

CHURCH.

| | |
|---|---|
| Sabbath and Public Worship | 235—246 |
| Opening and Closing Worship 5, 6, 7, 17, 19, 26, 87, 206, 238—245. | |
| Dedication of a Place of Worship | 247, 248 |
| Ordination of a Minister | 249, 250 |
| The Holy Scriptures | 251—256 |
| The Lord's Supper (See also Death of Christ, 56—74.) | 257—260 |
| Baptism of a Child | 261, 262 |
| Spread of the Gospel | 263—267 |
| Preaching to the Heathen, 10, 16, 23, 24, 32, 33, 35, 47, 49, 86, 91, 92, 93, 98, 107, 119, 125, 140, 141, 142, 143, 144, 145, 146, 147, 148, 149, 150, 151, 152, 154, 169, 187, 192, 212, 213, 217, 218, 219, 220, 222, 223, 224, 225, 228, 229, 231, 239, 253, 254, 289, 295. | |

TIMES AND SEASONS.

| | |
|---|---|
| Bereavement and Death | 268—275 |
| Burial of the Dead 101, 220, 221, 222, 223, 226, 268—275. | |
| Drought and Famine | 276, 277 |
| New Year | 278, 279 |
| Christmas, 39—54. | |

| | Lyrics |
|---|---|
| Occupying a new House | 280 |
| Marriage | 281—287 |
| THE SECOND COMING OF CHRIST AND JUDGMENT. | 288—292 |
| HEAVEN AND HELL | 293—297 |
| IDOLATRY | 298—300 |

LYRICS IN SIMPLE LANGUAGE AND METRE FOR CHILDREN AND SABBATH SCHOOLS, 5, 6, 11, 13, 15, 16, 20, 23, 24, 32, 33, 41, 43, 53, 60, 69, 83, 96, 105, 128, 157, 175.

# ஞானபத கீர்த்தனைகள்.

க. (க) DOXOLOGY. 1.

## ஆராதனை முடிவின் சிறு தோத்திரம்.

இராகம், சௌராஷ்டிரம். அடதாளசாப்பு.

பல்லவி.

மங்களம், ஜெயமங்களம், மகத்துவற்கு
மங்களம், ஜெயமங்களம்.

சரணங்கள்.

க

எங்கும் ஒன்றாகவே இருந்திக பரங்களும்
பங்கம் இலாமலே படைத்த பிதாவுக்கு— மங்

உ

நல்ல கதியை மாந்தர் நலமதுடன் அடையத்
தொல் உலகை ரட்சிக்கும் சுதன் ஏசுநாதர்க்கும்— மங்

ங

சுத்திகரித்து நரர் சுக உலகம் அடையப்
பத்தர்களாக்கும் பரிசுத்த ஆவிக்கும்— மங்

ச

இம்முறை முத்தொழில் இயற்றி உலகனைத்தும்
செம்மையுடன் நடத்தும் திரியேக தேவனுக்கு— மங்

ஜா.—பா.

உ. (உ) PRAISE TO THE TRINITY. 2.

# திரியேகர்க்கு ஸ்தோத்திரம்.

விருத்தம்.

பூதலத்தோர் வானவர்கள் பணிந்து போற்றும்
புனிதபிதா மனிதர்பவம் புரிந்த தாலே
வாதைஉறத் தன்மகனைப் பலியாய்த் தந்த
மாதயவை யார் அளவிட் டுரைப்பார்? மேலும்,
ஓதுமறை ஊழியர்க்கும், சபைக்கும் மண்மேல்
உற்றதயை அளித்திந்நாள் வரையுங் காத்த
ஆதிபிதாச் சுதன், ஆவி ஆம்திரி யேகர்க்
கனவரதம் ஸ்தோத்திரம் உண்டாகத் தானே.

இராகம், வராளி.

பல்லவி.

ஆதிபிதாக் குமாரன்—ஆவி திரி யேகர்க்
கனவரதமும் ஸ்தோத்ரம்;—திரி யேகர்க்
கனவரதமும் ஸ்தோத்ரம்.

அனுபல்லவி.

நீதமுதற் பொருளாய் நின்றருள் சருவேசன்,
நிதமும் பணிந்தவர்கள் இருதயந்தனில் வாசன்,
நிறைந்த சத்திய ஞான மனோகர
உறைந்த நித்திய வேத குணாகர
நீடு வாரி திரை சூழு மேதினியை
மூடு பாவ இருள் ஓடவே அருள்செய்— ஆதி

சரணங்கள்.

க

எங்கணும் நிறைந்த நாதர்,—பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்,
துங்கமாமறைப்பிர போதர்,—கடைசி நடு
சோதனைசெய் அதி நீதர்,
பங்கில்லான், தாபம்இல்லான், பகர்அடி முடிவில்லான்,
பன் ஞானம், சம்பூரணம், பரிசுத்தம், நீதி என்னும்



பண்பதாய்சு யம்பு விவேகன்,
அன்பிரக்கத யாளப்பிரவாகன்,
பார்தலத்தில் சிருஷ்டிப்பு, மீட்பு, பரி
பாலனத்தையும்பண் பாய்நடத்தி, அருள்— ஆதி

உ

நீதியின் செங்கோல் கைக்கொண்டு,—நடத்தினால் நாம்
நீணிலத்தில்லாமல், அழிந்து,
நீதறு நரகில் தள்ளுண்டு,—மடிவோமென்று
தேவ திருவுளம் உணர்ந்து,
பாதகர்க் குயிர் தந்த பாலன் ஏசுவைக் கொண்டு
பரன் எங்கள்மிசை தயை வைத்தனர், இது நன்று
பகர்ந்த தன்னடி யார்க்குறு சஞ்சலம்,
இடைஞ்சல் வந்த போதே, தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான மேகமுதற்
சூரியன் முன் இருள் போலவே சிதறும்— ஆதி

௩

தேவன் நம்மேல் மனம் உவந்து,—கிறிஸ்துவெனும்
திவ்வியமான பலியை ஈந்து,
மா அலகைப் பலங் குறைந்து,—எங்கட்கு மேலும்
மங்களமும் வாழ்வும் சிறந்து,
ஆவல் கொண்டிந் நாளும் தன் அடி இணை துதிக்க நம்
அனைவர்க் காரோக்கியந்தந் தாண்டநுக்கிரகந்தான்;
அருட்கனால் மன தார் இருளே கெட
பெருக்க வாரிதி யோ, தயையானது!
ஆரும் ஓர் நிகர் இலாத தேவன் நரர்
ஆனபாவிகள் தம் மீதிரங்கினதால்— ஆதி

கா.—உப.

௩. (௩) PRAISE TO THE TRINITY. 3.

# திரித்துவத்துக்குத் துதி.

கலிப்பா.

விந்தையுடன் அந்தரமும், மேதினியா வும் படைத்து,
முந்தைநரர் தீதகல முகமாமீட் புண்டுபண்ணி,
சிந்தை சுசியாக்கி அருள் செய்திரித்வ ஏகபர
தந்தை சுதன் ஆவி எனும் தற்பரர்க்கு ஸ்தோத்திரமே.

இராகம், நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

## திபதை.

கண்ணிகள்.

௧

தந்தை பராபர சம்ப்ரம பூரண
சச்சிதானந்த நாதா!
அந்தரம், பூ யாவும் சுந்தர மாகவே
ஆக்கிய நிர் மல நாதா!

௨

மண்டலத்தோர் உய்ய வந்திக மேவிய
மானிடவதார நாதா!
அண்டரும் பூலோக தொண்டரும் போற்றிய
ஐயா கிறிஸ்தேசு நாதா!

௩

பாவ இருள் அகலத் தாவிப்ர காசிக்கப்
பார்மேல் துலங்கிய நாதா!
மேவியுறு பரிசுத் தாவி எனும் நித்ய
வேதனே! சுசி புரி நாதா!

௪

ஆக்கல் அளித்தல் சுசி யாக்கல் எனும் முத்தொழில்
ஆற்றிய அருகுண நாதா!
ஊக்கம் உற உமக்கே ஏற்கும் மங்கள துதி;
உன்னத திரியேக நாதா!

ஞா.—பா.

௪. (௫) PRAISE TO THE LORD OF ALL. 4.

# தேவனுக்கு ஸ்தோத்திரம்.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

கிருபாகரனைத் துதிப்போம்;—வணக்கமாய்ச் சங்
கீத் தோத்திரம் பாடி, வேதசாஸ்திரம் தேடி,— கிரு



அநுபல்லவி.

திரு மறை புரிந்து, வான் புவியுள பொருள்களும்,
சீவ நற் காலமும், வேளையும், செயல்களும்,
பெருகிட நமக்கிது வரையிலும் அருள்செய்து,
பேணினர் கிறிஸ்தேசு வானினர், அன்புடன்;— கிரு

சரணங்கள்.

௧

தாயின் வயிற்றில் அமைத்து, —பிறப்பித்து,
தரணியில்[1] அனுதினங் கருணையுடன் வளர்த்து,
சாரும் விபத்தெல்லாம் தீர்த்தே,—இரவுபகல்
சீருடன் கிருபைக் கண்பார்த்தே, அன்பைக்கொண் டோங்கி,
பேயின் சிரத்தை உடைத்து.—அதினுடைய
பெருந் தந்திரத்துக்குள்ளா யிருந்த நமை ஈடேற்றி,
பேசுஞ் சுவிசேஷத்தினால்—மகிழச் செய்து
நேச பரிசுத்தத்தினால் அலங்கரித்து,
வாயினால் யேசுவின் நாமத்தைக் கூறவும்,
மகிமை விள்ளும் நற்கிரியைகள் செய்யவும்,
நேயமுடன் துதி பாடிக் கொண்டாடவும்,
நெஞ்சினில் கிறிஸ்தன்பு மிஞ்சவும், செய்த நற்— கிரு

௨

பாவத்துடனே பிறந்து,—வளர்ந்தும், அதில்
பட்டுழன்று, மிகவும் கெட்டலைந்த நமையே,
பார்த்து, கிறிஸ்து அன்புடன்—இரத்தத்தைச் சிந்தி,
சேர்த்து திருச் சபையுடன் வளர்த்துயர்த்தி,
தேவ புத்திர சலாக்கியமும்,—உள்ளத்தில் அன்புந்,
திடமனச் சாட்சியும், நல் உடம்படிக்கையும், திவ்விய
சீரும், பரிசுத்தவான்கள்—என உயர்ந்த
பேரும், நல் ஆவி அருளும், நமக்கருளி,
சீவனையும், அழியாமையையும் சுவி
சேஷத்தினால் தெரியம்படி செய்து, மெய்
ஆவலுடன் அவர் திரு உரையினைக் கண்
டறியவும் ஸ்தோத்திரம் புரியவும் செய்த நற்— கிரு

௩

அந்தகாரத்தின் மக்களும்—மகா கொடூர
அலகைப் பசாசும் இந்த உலகின் மாய்கை உள்ளோரும்

---

[1] பூமி.

ஆதிப் பகையை எடுத்து,—நமைப் பிடிக்க
சோதனைக் கண்ணி தொடுத்து வளைந்து வந்தும்,
விந்தைக் கிறிஸ்து மேசியா—அவற்றை எல்லாம்,
வென்று, தூரத்திச் செயங்கொண்டு, நமைத்தற் காத்து,
மேன்மைப் படுத்தி வைத்தனர்;—கிருபையாய்ச் செங்
கோன்மைக் கடுத்துவைத்தார் மேன்மையில் மகிழ்ந்து
சிந்தை தனில் அவர் அன்பினை அணிந்து, மெய்ச்
சீர் உள சுவிசேஷ நேர் உயர் வழி தனில்
அந்தமுடன்[1] நடந் தேறிடப் பரிசுத்த
ஆவியின் அருளினை மேவியே, ஈந்த நற்— திரு

௪

வேத சங்கத்தினோர்களும்,—சலமோடெல்லா
மிஷியோன் சங்கத்தோர்களும் குறையாமல் பெருகவும்,
மேய்ப்பர் கண்காணிமார்களும்—சபைகள் தோறும்
மூப்பர் பிரசங்கிகளும் நற்சுவிசேஷ
போதகன்மார்களும், சத்ய—திருமறையை
புரிந்து, நாடெங்கும் சுற்றித் திரிந்து, நற்செய்தி சொல்லும்
போந்த உபதேசிகளும்—அவர்களுடன்
சேர்ந்த உதவிக்காரரும், வாத்திமார்களும்,
பூதல மீதெங்கும் உள்ள சபைகளும்,
புண்ய மொழிகளைப் படிக்கின்ற பிள்ளைகளும்,
நீதனும் ஏசுக் கிறிஸ்துவில் தழைக்கவும்
நித்த நல் ஆவி அருள் வர்த்திக்கவும் திவ்ய— திரு

௫

சத்திய ராசாக்கள் வாழ்க;—பிரபுக்களும்,
சகல துரைகளும் நற் சுகம் பெற்றுயர்ந்து வாழ்க;
சாதித் தலைவரும் வாழ்க;—அதிகாரிகள்
நீதி நெறியுடன் வாழ்க; கிருபை பெற்று
எத்திசை மாந்தரும் வாழ்க—தேசங்கள் தோறும்
இருந்து, பயிர்செய்வோரும், திரிந்து தொழில் செய்வோரும்,
ஏக மனதுடன் வாழ்க;—மெய் தெய்வத்தின் முன்
பாக நலமுடன் வாழ்க; அனுதினமும்
பத்தியுடன் சிறியோர் பெரியோர்களும்,
படியினில்[2] பலவித நிலைமையுள்ளோர்களும்
நித்தியனைக் கண்டறிந்து, என்றென்றைக்கும்
நீடூழி வாழ்க; அல்லேலூயா, ஆமன்— திரு

ஙரி.—உப.

[1] அழகு. [2] பூமி.



௫. (௬) PRAISE TO GOD. 5.

(For Morning Social, and Public Worship.)

# தேவனுக்கு தோத்திரப்பாட்டு.

வெண்பா.

ஆதம்வினை யாவும்என்றன் அக்கிரமத் தாலும்முழுப்
பாதகன் ஆனேனேஇப் பாருலகில்—நாதா!
மரணம்உறில் யான்உனது வானவரோ டொன்ற
சரணம்எனக் குன்றயையைத் தா.

இராகம், செஞ்சுருட்டி. பிலந்திதாளம்.

பல்லவி.

சரணம், சரணம், சரணம், எனக்குன்
தயைபுரியும், என்பரனே!

அனுபல்லவி.

மரணத்தின் பெலன் அழித்துயிர்த்த என்
மன்னா![1] ஓசன்னா— சர

சரணங்கள்.

௧

நரகம் அதனில் அழிவுறாமல், இச்
நாளில் கதி தேட,—சுத்த
சுருதி[2] தனைக்கற் றறிவு கொள்ளவே
துலங்காய்; மனத் திலங்காய்;— சர

௨

அன்னை, தந்தை, சுற்றத் தார் உபகாரத்தால்
ஆண பலனுங் காணேன்;—இனி
உன்னை அல்லால், விசுவாசித்துப் போற்ற ஆர்
உலகில் எனக்குண் டமலா!— சர

[1] இராசனே. [2] வேதம்.

௩

தரணி தனில் வந் தவதரித்த-தற்
பரனே! எனக்காக,—வலு
மரணம் அடைந்தும், உயிர்த்தெழுந்த தென்
மகிமை நித்திய பெருமை;— சர

௪

சுரர்கள் போற்றும் பரனே! உனக்குத்
துரோகியான எனக்கு,—நீயே
இரவு பகல் என் குறைவு நீக்க, உண்
டேது நலம் என் மீது;— சர

௫

எவ்வித நன்மைக்குங் காரணனே! உனை
ஏழை அடியேனே—பற்றி
இவ் உலகத்தில் எவ்வேளையும் போற்றவே,
இரங்காய் எனக் கிரங்காய்;— சர

௬

தப்பின ஆடதற் கொத்த அடியேனைத்
தானே வந்து தேட,—உனக்
கெப்படிச் சித்தம் உண்டானதில் அற்பனுக்
கற்புதமாம் முடி சூட— சர

ஜா.—பா.

———

சா. (எ) PRAISE TO JEHOVAH-CHRIST. 6.

*[Suitable for an Opening Hymn.]*

## கிறிஸ்துபரனுக்கு ஸ்துதி.

வெண்பா.

தூதர்கள் ஆச்சரியத் தோடினிய தாய்நோக்கும்
பேதமில்லா அன்புப் பிரஸ்தாபா!—நீதமுடன்
பாவத்தை வெல்ல வல்ல பஞ்சிறந்த மெய்ஞ்ஞானத்
தேவ தேவனே! எகோவா!



இராகம், தசாவந்தி. ரூபகதாளம்.

பல்லவி.

தேவ தேவனே! எகோவா!
வா, என் சீவனே!

அனுபல்லவி.

ாவலர்க் குபதேசனே!-கன-பாவிகட் கதிகேசனே!-உயர்
ர்த்தன் ஏக திரித்துவ ஞான மகத்துவ ராஜ கிறிஸ்துவாகிய-தே

சரணங்கள்.

க

ந்த[1] மேனியே![2]-கனம் பெருகும்-அனந்த ஞானியே!
நிந்தை மானியே![3]-சுதந்தரம்-மிகுந்த தானியே![4]
தந்தையர் தர, வந்தவா!-பசு-
மந்தை யூடு பிறந்தவா!-கதி
தந்தவா! சொல் உவந்தவா!—மெய்
சிறந்தவா! விண்ணெழுந்தவா! திவ்ய— தேவ

உ

த்திய வாசனே!-யூதர்குலத்—தவிது ராசனே!
நித்திய நேசனே!-அடியவர்—நிலைமை[5] ஈசனே!
பத்தருக்குப காரனே!-வளர்
பெத்தலேக் கதி காரனே!-கன
பாரனே! அதி தீரனே!-கல-
உதாரனே! பெல வீரனே! செய— தேவ

௩

ான சீலனே!-மனு உரு-வான கோலனே!
ஞான பாலனே!-அதிசய-நன்மை நூலனே!
பானுவே![6] மனு வேலனே!-இம்-
மானுவேல் அனு கூலனே!-கன
பத்தியே தரு நித்தியமே!-நெடு-
நித்தியமாய் வளர் வஸ்துவே! ஒரு— தேவ

வே.—சா.

---

[1] அழகு. [4] ஸ்தானத்தையுடையவனே!
[2] சொரூபம். [5] அடிமையின் நிலைமையைக்கொண்ட.
[3] கனம்பொருந்தியவனே! [6] சூரியனே!

எ. (அ) HOMAGE AND PRAISE TO GOD. **7.**

[*Suitable for Opening Worship.*]

# தேவனுக்கு நமஸ்காரம்.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

## தீபதைகள்.

க

திரி முதல் கிருபாசனனே! சரணம்;
செகதல ரட்சக தேவே! சரணம்;
தினம் அனுதினம் சரணம்;—கடாட்சித்,
தினம் அனுதினம் சரணம்;—சருவேசா!

உ

நலம் வளர் ஏக திரித்துவா! சரணம்;
நமஸ்கரி உம்பர்கள் நாதா! சரணம்,
நம்பினேன், இது தருணம்,—தருணம்,
நம்பினேன், தினம் சரணம்,—சருவேசா!

ங

அரு[1] உருவே! அருள் அரசே! சரணம்;
அன்றும், இன்றும், என்றும் உள்ளாய்! சரணம்;
அதிகுணனே! தருணம்;—கிரணம் ஒளிர்
அருள் வடிவே! சரணம்,—சருவேசா!

ச

ஏதமில்[2] நல்விப![3] ஞானா! சரணம்;
எழில்[4] கருணைக் குருவானாய்! சரணம்;
இடர் தொலைத்தருள், தருணம்;—பிரதாப
என் பரனே! சரணம்,—சருவேசா!

ரு

அதி கதிர் விடும் திருக்கண்ணா! சரணம்;
அசரசரந் தொழும் அண்ணா! சரணம்;
அருள் தருவாய், தருணம்!—பரம
பொருள் ஒருவா! சரணம்;—சருவேசா!

[1] உருவமில்லாதது.
[2] குற்றமில்லாத.
[3] பரிசுத்தனே!
[4] அழகு.



சா

உகம் கடந்து விட எழும் உனதா!—சரணம்;
ஓர் கிருபாசன ஒளியே! சரணம்;
ஒளி அருள்வாய், தருணம்;—மனுவோர்க்
குத்தமனே! சரணம்,—சருவேசா!

எ

நித்திய தோத்திர நிமலா! சரணம்;
நிதி இசுரேலரின் அதிபதி! சரணம்;
நீதா! இது தருணம்,—கிருபைக் கொரு
ஆதாரா! சரணம்;—சருவேசா!

ச.—உப.

அ. (க) THE DIVINE ATTRIBUTES. **8.**

[*Thy Holiness, Mercy, and Faithfulness surround and uphold me.*]

# தேவனுடைய மகத்துவ லட்சணங்களைப் புகழ்தல்.

## வெண்பா.

வல்லபம், மெய்ஞ்ஞானம், மா பரிசுத்தம், நீதி
வெல்லு பொறை, சர்வ வியாபகத்தின்—நல்ல
உருகைப் பிதாவின்றே வாளுகை, நன்றுண்மை
பெருக்கத் திருக்கருணையே!

இராகம், தோடி. ஆதிதாளம்.

## பல்லவி.

பெருக்கத் திருக் கருணைப்பிதா அத்தனே![1]

## அனுபல்லவி.

நெருக்கப்படும் எனை ஆள் நித்ய கர்த்தனே!— பெரு

[1] கடவுள்.

சரணங்கள்.

௧

வல்லபம் என்னுயிர் காக்கும் வெகுமானம்;
நல்ல வழி சேர்க்குதுன் உன்னத ஞானம்.— பெரு

௨

சுத்திகரிக்குதுன் தூய்ய பரிசுத்தம்;
பத்திரப்படுத்து தெனை நீதிப் பொருத்தம்.— பெரு

௩

சருவ வியாபகம் எனைச் சார்ந்திருக்குது;
பொறுமை சினத்தைப் பொருந்தா திருக்குது.— பெரு

௪

அருகை எனைத் தெரிந்துன் அடி சேர்க்குது;
மீளவும் உன் நன்மை செல்வம் மிகு ஆக்குது.— பெரு

௫

நேசத்தின் இரக்கம் என்பவத்தை நீக்குது;
மாசற்ற உன் அன்பெனை மகிழ்ச்சியாக்குது.— பெரு

௬

உந்தன் உண்மை மோட்ச வீட்டுக்குள்ளே கூட்டுது;
சந் தேகம் இலாமல் முடி தான் சூட்டுது.— பெரு

வே.—சா.

---

௯. (ம) CELEBRATION OF THE DIVINE ATTRIBUTES. 9.

## தேவ லட்சணங்களை புகழ்ந்து கொண்டாடுதல்.

வெண்பா.

ஆதி அந்தம் இல்லான், மாறுதான், சருவவல்லோன்,
எதும் அறிந் தோன், அளவில் லாறானன்—ஒருமிடம்
எங்கும் நிறைந்தோன், சத்தியன், தூயன், நீதியுளோன்
அருகிருபை யாளன், அமலன்.



இராகம், [illegible] ஆதிதாளம்.

பல்லவி.

அமலா![1] [illegible]பரா! அருள்கூர், ஐயா!—குருபர

சரணங்கள்.

௧

சமையம்[illegible]ரு[2] ஆறு சாஸ்திரங்கள் வேதநான்கும்
அமையும் [illegible] தொண்ணூற் றாறும், ஆறுங்[3] கடந்த— அம

௨

அந்தம்அடி [illegible][4] [illegible]ல்லாத தற்பரன் ஆதி,
சுந்தரம் மிகும் [illegible][5] சோதிப்பிரகாச நீதி— அம

௩

ஞானத் ர[illegible] வேத நன்மைப் பரம போத
வானத் தே[illegible] மகிமைக் களவில் லாத— அம

௪

காணப்படா [illegible] கருணைச் சுய சொரூப
தோணப்படா [illegible]யாப சுகிர்தத் திருத் தயாப— அம

௫

சத்ய வசன [illegible]! சமஸ்த புண்ணிய சகாயா!
கர்த்த தத்து[illegible]யா! கருணை பொழியும் வாயா!— அம

௬

எல்லை இல்லா [illegible] ஞான, ஏக பர வஸ்தான
சொல் அரி[illegible], துல்லியத் தோன்றும் மேலான— அம

௭

கருணைகர[illegible] [illegible] கரா! நிராகரா![6]
பரமேசுர[illegible] [illegible]யாகரா! சர்வேசுரா!— அம

வே.—சா.

---

[1] அ + [illegible]பரிசுத்தன். [4] அடி நடு[illegible] இடை.
[2] சமைய[illegible] இராறு = 12 சமயங்கள். [5] அதிர = [illegible]க்கு எட்டாத.
[3] ஆறும் = [illegible] உட்பகை. [6] நிராகரா = ரூபமில்லாதவனே.

கO. CHRIST, THE CAUSE OF ALL THINGS AND REFLECTED BY ALL THINGS. **10.**

## கிறிஸ்துவே சகலத்துக்கும் காரணராய் எங்கும் விளங்குகிறார்.

இராகம், நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

பல்லவி.

எல்லாம் ஏசு மயம்; ஜெகம்
எல்லாம் ஏசு மயம்.

சரணங்கள்.

க

பல்லாயிரங் கோடி படைப்புகள் யாவும்
பரலோகம் பூலோகம் பாதாள லோகம்— எல்

உ

அண்ட[1] சரா சரம்,[2] ஆதித்தன்,[3] அம்புலி,[4]
அரிய தராகணம்,[5] அக்கினி, காற்றும்— எல்

ங

பருவதம், அருவி, பயோததி,[6] தாபரம்[7]
பரர், நரர், விலங்கினம்[8] பற்பல ஜெந்துக்கள்— எல்

ச

சத்திய வேதமும் சார்ந்த நூலாகமம்
சாஸ்திரமொடு திருச் சபை அலங் காரமும்— எல்

ரு

ஆலயந் தோறு மெய் அன்பர் செய் பஜனையும்[9]
அடியர் செபங் களும், ஆராதனைகளும்— எல்

சா

செனித்தல், இரத்தமொடு சிலுவையுயிர்த்தலும்
செய களிப்பொடு நித்ய சீவனனுபவித் தலும்— எல்

ச.—பா.

---

1 ஆகாயம்.
2 அசைவுள்ளதும், அசைவில்லாததும்.
3 சூரியன்.
4 சந்திரன்.
5 நட்சத்திரக்கூட்டம்.
6 சமுத்திரம்.
7 புல் மரமுதலியவை.
8 மிருகசாதிகள்.
9 பாட்டுத் துதிகளும்.



கக. (THE FATHER AND SON COUNSEL TO RESCUE LOST MAN.) **11.**

## மனிதனை ரட்சிப்பதற்கான திரித்துவ ஆலோசனை.

விருத்தம்.

உன்[illegible] பிதா ஒன்றான புத்திரன் முகத்தை நோக்கி
என்[illegible] பிரிய நேச மைந்தனே! இரங்கக் காலம்;
கன்[illegible] நிலத்தால் தோன்றி, கருணையாய் உலகை மீட்டு,
பொ[illegible] அசர் வாழச்செய்யும் புண்ணியம் உமக்கென் றானே.

இராகம், க[illegible]போதி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

க

துய்ய திருப் பாலனே! துன்ப வினை சூழ்ந்ததோ?—மகனே!
வையகத்[illegible] தாரால் நமக்கு வந்த பலன் இது தானோ?

உ

ஆதமுடன் ஏவையை அந்த வனந் தனிலே—மகனே!
காதலுடன் வைத்ததற்குக் கண்ட பலன் இது தானோ?

ங

விலகும் [illegible] புசித்து வீழ்ந்த பாவிகளுக்காய்—மகனே!
வலமைத் [illegible] தேவன் மனுடன் ஆகவேண்டாமோ?

ச

தெண்டிக்[illegible] தராய்ச் சேர்ந்த நரரை எல்லாம்—மகனே!
கண்டு சந்[illegible] பாய்க் கருணைத் திருவடிவே!

ரு

கோபாக்கினை பெரிது, குற்றமில்லாத ஆடே!—மகனே!
பாவாட்களை [illegible] சகித்து, பாடுபட் டுத்தரிப்பாய்.

௬

நரகத்தைக் காணுமல் நரர் குலம் வாழவே—மகனே!
தருணத்தில் சென்றுலகின் சாபத்தையே தவிர்ப்பாய்.

௭

மானிடனாய்ப் பிறந்து, வல்வினையைச் சுமந்து,—மகனே!
ஈனச் சிலுவை தனிலே அறை யுண்டிறந்து,

௮

மரணத்தைச் செயங் கொண்டு, வலிய சர்ப்பத்தை வென்று,—
மகனே!
நரகத்தைப் பூட்டி, வான நாட்டில் வருகுவாயே.

வே.—சா.

---

## ௧௨. (௰௩) CONTEMPLATING THE LOVE OF GOD IN BECOMING MAN. 12.

# குமாரனைக் கொடுத்துக் காட்டிய பிதாவின் அன்பு.

---

### விருத்தம்.

மானிட உயிர்கள் ஓங்க, வானவன் மகிழ்ச்சி தாங்க,
ஞான நன் மைகளும் ஓங்க, காடெலாங் கருணை தேங்க,
ஈனஅஞ் ஞானம் நீங்க, இருள்அல கைகள்பின் வாங்க,
தானவன் மனுடன் ஆகி, தரணியில் பிறந்தார் அன்றே.

---

இராகம், முகாரி. ஆதிதாளம்.

### கண்ணிகள்.

௧

ஆதி அந்தம் இல்லானே! அளவில்லா வல்லபனே!
அன்பே! மானுடவ தாரத் திருவடிவே!
மாது பொருட்டாலே மாட்டையுங் கொட்டிலிலே
வானத்திலே இருந்து வந்தீரோ? மன்னவனே!



௨

உன்னதப் பராபரமே! ஒப்பில்லா மெய்ப் பொருளே!
ஓத அடங்கா மெய்ஞ் ஞான உச்சிதமே! அச்சயமே!
மன்னன் தாவீதின் வம்ச மா வேந்தே! பாவிகட்காய்
மாந்தர் வடிவாக வந்த திரு உளமே!

௩

அன்பே! என் ஆருயிரே! ஆனந்தப் பேரொளியே!
ஆர்க்கும் பராபரமே! அற்புத கருணாகரமே!
இன்பப்ர வாகமே! இம்மானுவேல் அரசே!
ஏசுக் கிறிஸ்தையாவே! ரட்சியும், ஒரே கர்த்தாவே!

௪

ஆராய்தல் இல்லாத ஆழக்ருபா நதியே!
ஆரும் அளவுக்குக் கூடாத அற்புதமே!
வாராயோ? பாவிகளைப் பாராயோ? பார்த்திரங்கி
வானத்தில் நின்றெழுந்து வந்த பரிபூரணமே!

௫

தேவ கிருபை பெருக, [illegible] ஜீவ கதி பெருக,
ஜீயோனின் மக்கள் எல்லாம் [illegible]திலே பருக
ஏவை துயர் அகல, எவ்வுயிரும் பிழைக்க,
இவ்விரி வித்தில் வந்தீரோ? இஸ்ரவேலின் கோமானே![1]

௬

ஞான மலை அருவி நன்மைப்ர வாகம் வர,
நாடனைத்துந் தழைக்க, நல்லோர் குழாம்[2] செழிக்க,
வானில் மகிமை பெற, மண் மீதில் ஆசி[3] உற,
மாந்தரில் அன்புண்டாக வந்தீரோ? மானுவேலே!

௭

சாஸ்த்ரவே தப்ரகாரா! தாவீதின் வம்ச வீரா!
நேத்திர[4] தேவாவதாரா! நித்திய பிதாவின் குமாரா!
ஸ்தோத்ரம், ஸ்தோத்ரம், தேவே! ஸ்துத்தியம் கிறிஸ்தையாவே!
சோபனம் சோபனந் தானே சொல்லுவன், சொல்லுவன் நானே.

வே.—சா.

---

[1] இராசனே. [3] ஆசீர்வாதம்
[2] கூட்டம். [4] கண்மணிபோன்ற.

## ௧௩. (௰௪) CALLING TO REMEMBRANCE THE LOVE OF GOD IN BECOMING MAN. 13.

### பிதாவானவர் குமாரனைக் கொடுத்துக் காட்டிய அன்பு.

இராகம், காம்போதி. ரூபகதாளம்.

பல்லவி.

மனமே! ஓ உன்னதம், மறை[1] தந்தவரே வந்தனர்.

அநுபல்லவி.

கன மிகுந்த திருக் குமாரன் கருணையாய் நரர் உருவமாகினர்.— மன

சரணங்கள்.

௧

ஆதி சற்பத்தின் தலையை உடைக்க,
அகிலத்தின் பவமனைத்தும் துடைக்க,
வேத மறையி னூடு சிறந்த மேசியா பிறந்தார்.— மன

௨

ஆ! கனமிகு மகிமைத் தேவனார்
யாவருக்கும் அருள் செய்ய மேவினார்,
ஏக முதல்வனும் ஒரு வஸ்து ஏக ராச கிறிஸ்து.— மன

௩

ஞானிலத்தில் நரர் பிழைக்கவே,
ஞான நன்மைகளே தழைக்கவே,
வான ராச்சியம் சேர்ந்து வந்தது; மானுவேல் பிறந்தார்.— மன

௪

நாம் நடத்திய படி செய்யாமல்,
நம்முட்மேல் உக்கிரம் வையாமல்,
ஆ! மகத்துவமே கதித்த அநாதியார் உதித்தார்.— மன

வே.—சா.

[1] வேதம்.



## ௧௪. (௰௫) THE CHURCH INVITED TO PRAISE HER LORD. 14.

### கிறிஸ்துவைத் துதிக்க திருச்சபையை ஏவுதல்.

வெண்பா.

ஆதில்லாத் தேவன் அணியாவும் பூண்டவனே!
மாசில்லா சீயோன் மடமானே!—தேசுமிகும்
உன் நேசர் ஏசு உதித்தார், வெல் லேப்பதியில்;
மின்னே! துதித்திறைஞ்சு வீர்.

பல்லவி.

உன் நேசர் என்னும் ஏசுவே—மனுவாய், பெத்லே
ஊருக்கருகே உதித்தார்; துதி ஓத ஓடி வாரீர், சபையே!

அநுபல்லவி.

மன்னர் மன்னவர் துதிக்கும் மன்னவர் ஆதி,
மகிமை பொருந்திய பரன் அருள் திரு உரை
நிறைவு பெறும்படி, புவியில் இறங்கின— உன் நேசர்

சரணங்கள்.

௧

சின்னம் நிறைந்த கடியின் இரு[1] வலையில்
தியங்கி, மயங்கி, மதி மயங்கியே, எங்கும் வேலை
உன்னை மிகுந்த தயவாய் உயிர் கொடுத்து,
ஒருக்காலும் ஒழியாத திருக்கதி சேர்க்க என்று,
முன்னோன் உரைத்தபடியே, பரம மேன்மை
முழுவதும் இனையாமல், தொழுவதிலே பிறந்த [தேடி,
முகில் நிகர் துகில் அணி தகை நிறை தேவன் அடி—அவரைத்
தக தக என இசை, தொகை தொகை அக மிசை
திசை திசையினில் வெகு நகை கதை யொடுபடி—உன் நேசர்

[1] பெரிய.

௨

மேகாசனப் பிரபல்லோ? உனக்காய், இதோ!
மேய்ப்பர் குடிலில் தலை சாய்ந்து, நித்திரை போறார்;
ஆகாச ஆசனர் அல்லோ? உனக்காய் இதோ!
ஆவின் தொட்டியில் கந்தை மேவி, நித்திரை போறார்;
நீ மா வன்னச் சீயோன் அல்லோ? உன் நாயகனார்
நீசச் சொருப மோ டதோ! சத்திரத்தில் உற்றார்;
நிதி புரி தவிதடை பிதிர் வரு பாலன் அடி அவரைப்—பாடிப்
பதி சதி பதி கிதி பதி யதி பதி விதி
பதி உதி பதி நித எனத்துதி புரி,— உன் நேசர்

௩

அண்டர் துதித் தந்நேரம் மேலானவர்க்கே
அதிக புகழ்; செக மணி தரி னிலே பிரியம்;
மண் மீதில் சமாதானமாய்;—எனப் புகன்றார்
மறித்திடும் ஆயர் சேயைத் துதித்து, வணங்கி நின்றார்;
எண்ணேறு புண்ணியர் இடம் சுவிறார் சிலர்
எழும்பி, ஆசையில் வந்து, தொழும்பு புரிந்து சென்றார்;
ஈது மகா புகழோடு [illegible] மல்லவா?—பரம தேவன்
நீதறு பாதகி யாமுனின் [illegible]
காதய வானது கோதையரே யிதோ,— உன் நேசர்

ச.—உவா.

---

## ௧௫. (௬௪) CHRIST, THE ETERNAL GOD, AS WELL AS MAN. 15.

## கிறிஸ்துவின் தேவத்துவ மகத்துவம்.

வெண்பா.

பூலோகம் எல்லாம் புரக்க, இரக்கமாய்
மேலோகம் விட்டு விரும்பிவந்த—மேல்லோக
தேவதேவர் ஏகவஸ்து தேவநாம முதிலிருந்து
தேவனுதி தேவே! நமா.

இராகம், புன்னாகவராளி. ஏகதாளம்.

பல்லவி.

தேவதே வர் ஏக வஸ்து! தேவ நாமனும் கிறிஸ்து!
தேவன் ஆதியே நமா!



அநுபல்லவி.

சீவ ஆவி ஏகோவா! அல்பா[1] ஓமேகா![2] மெஸ்து—ஒரு—தேவ

---

சரணங்கள்.

௧

மூவராய் அரூபியாய் முன் ஊழி ஊழி காலம் வாழ்
பாவ தாழ்விலா வலா! பராபரா! தயாபரா!—ஒரு— தேவ

௨

ஆதியாய் அநாதியாய் அரூபியாய் சொரூபியாய்
நீதி ஞாய நேர்மையாய் நீடூழி ஆள் சுயாதிபா!—ஒரு— தேவ

௩

மாசில்லாத நேச வாச மட்டில்லாத நன்மையே!
தேசலா[3] வனாதி ஏக மா சிறந்த உண்மையே!—ஒரு— தேவ

௪

ஈறிலா[4] மெய்ஞ்ஞான சோதி! சேமாம் ஆனந்தமே!
மாறிலா தனுக்ரகஞ்செய வந்த ஆதியந்தமே!—ஒரு— தேவ

வே.—சா.

---

## ௧௬. (௬௭) CHRIST, HE IS GOD.—THE ALMIGHTY—THE GOD OF OUR FATHERS, OUR GOD. 16.

## கிறிஸ்துவினுடைய மகிமை.

இராகம், காதகுமக்கிரியை. ரூபகதாளம்.

பல்லவி.

தெய்வம் இவர், தெய்வம் இவர்,—எங்கள் குல
தெய்வம் இவர் தானே.

---

1, 2 துவக்கமும், முடிவுமானவனே.
3 ஒளி. 4 முடிவு.

அநுபல்லவி.

கைவருந்தாமல், உலகம் கற்பித்த தெய்வம் இவர்;
சர்த்தத்துவங்கள், நித்திய கர்த்தர் என்னும் தெய்வம் இவர்;—
தெய்வ

சரணங்கள்.

க

ஆதியில் ஆதாமோடேவைக் கோதியகம் தெய்வம் இவர்;
பாதகர்க்காய் மாண்டுயிர்த்த பூதகுல தெய்வம் இவர்;— தெய்வ

உ

முன்னணையிலே பிறந்த தன்னிகரில் தெய்வம் இவர்;
பொன் எருசலேப்புரியர்[1] போற்றி நிற்கும் தெய்வம் இவர்; —
தெய்வ

௩

இருடியர்[2] எலாம் எழுது எந்தை தந்த தெய்வம் இவர்;
கறுவும்[3] ஆலகாலத்தின்[4] கட்டறுத்த தெய்வம் இவர்;— தெய்வ

௪

எல்லாவற்றையும் அமைத்த வல்லாண்மை தெய்வம் இவர்;
பல்லுயிர்க்கும் ஈவளிக்கும் பாக்கியமிகும் தெய்வம் இவர்;-தெ

௫

சந்திரர்க்கும், சூரியர்க்கும், அந்தரர்க்கும் தெய்வம் இவர்;
சுந்தரச் சீயோன் மலையில் தோத்திரிக்கும் தெய்வம் இவர்;—
தெய்வ

௬

கேருபின் சிரேஷ்ட வல் சாரிவரும் தெய்வம் இவர்;
ஆறுலட்சம் கானகர்[5] ஆராதனைசெய் தெய்வம் இவர்;— தெய்வ

௭

காலா காலங் கடந்த காட்சி இவர் மாட்சி இவர்;
ஆலே லூயா அமரர் அஞ்சலிசெய்[6] தெய்வம் இவர்;— தெய்வ

1 அழகான மோட்ச பட்டணத்தோர்.
2 தீர்க்கதரிசிகளான முனிவர்.
3 சினங்கொண்ட.
4 பிசாசு.
5 பாடகர்கள்.
6 கும்பிடுதல்.



அ

நித்திய த்வசுத்தர் பரிசுத்தர் நர ரூபமான
கர்த்தத்துவ நின்மல ப்ரகாச நசரேச ஏசு.— தெய்வ

ச.—உப.

## கஎ. (௨௩) A CALL TO WORSHIP JESUS. 17.

[For Opening Social or Public Worship.]

## கிறிஸ்துவைத் துதித்தல்.

இராகம், போர்த்துக்கீஸ். ஆதிதாளம்.

பல்லவி.

ஆ! வாரும் நாம் எல்லாரும் கூடி,
மகிழ் கொண்டாடுவோம்,—சற்றும்
மாசிலா நம் ஏசு நாதனை
வாழ்த்திப் பாடுவோம்.

சரணங்கள்.

க

தாரகம்[1] அற்ற ஏழைகள் தழைக்க நாயனார்,—இந்தத்
தாரணி[2] யிலே மனுடவ தாரம் ஆயினார்;— ஆ!

உ

வான் உலகோர்கள் போற்றும் மகத்வ தேவனார்,—கெட்ட
மானிடர் ஈடேறவே, ஓர் ஆன்[3] நிலை உற்றார்;— ஆ!

௩

பேய் உரங்[4] கொண்ட போததின் பெலன் குறைந்திடவே,
—அதைப்
பின்னிடத் துரத்தி வென்றது வன்மை தான் அன்றோ;— ஆ!

௪

மா கதியை இழந்திங்கு வறியர் ஆன நாம்,—அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார்;— ஆ!

1 ஆதரவு. 2 பூமி. 3 பசு. 4 பெலம்.

௫

ஞாலமதில்[1] அவர்க்கிணை[2] நண்பர் யாருளர்,—பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார்;— ஆ!

௬

மா கொடிதான சாவின் வலிமை நீக்கியே,—இந்த
மண்டலத்தி னின்றுயிர்த் தவர் விண்டலஞ் சென்றார்;— ஆ!

௭

பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே,—அவர்
பட்சம் வைத் துறும் தொழும்பரை ரட்சை செய்கிறார்;— ஆ!

ஞா.—பா.

---

௧௮. PRAISE TO CHRIST. 18.

## ஸ்தோத்திரப்பாட்டு.

பல்லவி.

ஏசுவையே துதிசெய், நீ மனமே!
ஏசுவையே துதிசெய்,—கிறிஸ் தேசுவையே.

சரணங்கள்.

௧

மாசணுகாத பராபர வஸ்து,
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து,— ஏசு

௨

அந்தரவான் தரையுந் தரு தந்தன்,
சுந்தர மிகுந்த சவுந்தராநந்தன்,— ஏசு

௩

எண்ணின காரியம் யாவுமுகிக்க,
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்துசுகிக்க,— ஏசு

வே.—சா.

---

[1] உலகம். [2] ஒப்பு.



௧௯. (௨௨) PRAISE TO CHRIST. 19.

[*An Opening or Closing Hymn.*]

## கிறிஸ்துவுக்கு ஸ்துதி.

இராகம், சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

சீர் ஏக நாதனுக்குச் செயமங்களம்;—ஆதி
திரி யேக நாதனுக்குச் சுப மங்களம்.

அநுபல்லவி.

பாரோறு[1] நீதனுக்கு பரம பொற் பாதனுக்கு,
நேரோறு[2] போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு,— சீர்

சரணங்கள்.

௧

ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்;
அதிலப்[3] பிர காசனுக்கு, நேசனுக்கு மங்களம்;
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குனாலனுக்கு,[4] சீர்
ஓதும் அநு கூலனுக்கு, உயர் மனு வேலனுக்கு,—

௨

மானுயி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வனர் கலைக் கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்;
கானுன் நல் தேயனுக்கு, கன்னிமரி சேயனுக்கு, சீர்
கோனுர் சகாயனுக்கு, கூறு பெத்த லேயனுக்கு,—

௩

பத்து லட்ச ணத்தனுக்கு சுத்தனுக்கு மங்களம்;
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்கு, சருவாதி காரனுக்கு, சீர்
பத்தர் உப காரனுக்கு, பரம கு மாரனுக்கு,—

வே.—சா.

---

[1] பூமி. [2] நன்னெறி. [3] பூமி, சர்வ. [4] குனாலன் for குனாலயன்=கடவுள்.

## உ0. (யக) JESUS, MY KING AND FRIEND, RULE OVER ME. 20.

[*A Hymn of Adoration.*]

# கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம்.

இராகம், தோடி. ரூபகதாளம்.

பல்லவி.

ஏசு ராசா!—எனை—ஆளும், நேசா!

சரணங்கள்.

க

மாசிலா மணி ஆன முச்சுடர்
மேசியா அரசே!—மனு
வேலே! மாமறை நூலே! தேவ செங்
கோலே! இங்கெனின்.மேலே அன்பு செய்,— ஏசு

உ

அற்புதப் பரஞ்சோதியே!—சீறு
வெற்பில் ஓங்கிய நீதியே!—எனக்
காக மா தய வாக மானிட
னாக மாமரி யாள் இடம் வந்த,— ஏசு

ங

பத்தர்கள் போற்றும் பராபரா!—எனக்
குத்தம ஞான தயாபரா!—பர
மேசுரா! சரு வேசுரா! கிரு
பாகரா! சன சேகரா!— ஏசு

ச

தாவீ தரசன் மைந்தா!—நின்
சரணம், சரணம் எந்தா!—சதா
னந்தா! வா னந்தா! உ
வந்தாள்; மிக வந்தனம், வந்தனம்,— ஏசு

ரு

ஐயா! என் மனம் ஆற்றி,—உன
தடிமை என்றெனைத் தேற்றி,—குண
மாக்கி, வினை நீக்கி, கை
தூக்கி, மெய்ப் பாக்கியங் கொடு,— ஏசு



சு

சுத்த திரித்துவ வஸ்துவே!—சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே!—பரி
சுத்தனே! சுசி சித்தனே இ
ரட்சித் தடிமைகொள், நித்தியம் ஸ்தோத்திரம்.— ஏசு

எ

மங்களம் ஈசாவே!—வளம் மிகும்
சங்கையின் ராசாவே!—நரர்
வாழ்வே! மன் னுவே! மெய்த்
தேவே! உமக் கோசன்னாவே!— ஏசு

வே.—சா.

## உக. (ருரு) THE GLORIOUS OFFICES AND WORK OF CHRIST. 21.

# இயேசுவின் சிறந்த உத்தியோகங்கள்.

வெண்பா.

கா, வா இருவா, கடுகவா, நின்பாதம்
தா, வா சமயம்வா, சற்றேவா,—நாவினில் வா,
வல்லபம் மேன்மை, மகத்துவ ஏகத்துவா!
சொல்லரும்மெய்ஞ்ஞானத்துவா!

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லரும் மெய்ஞ்ஞானரே! மேன்மைப்பிரபுவே!
சுரூபத் தரூபக் கோனே!—உரை

அனுபல்லவி.

வல்லறஞ் சிறந்த, மனுவானாரே,—உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே.— சொல்

சரணங்கள்.

க

மாடாயர்[1] தேடும் வஸ்துபகாரி,—மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி,[2]
வையகம் புரப்பதற்கு வந்தாரே;—அருள்
பெய்து, சுவமும், தவமுந் தந்தாரே.— சொல்

1 மாட்டிடையர். 2 தயாளன்.

௨

அட்சய[1] சவுந்தர அசரீரி!—அதி
உச்சித சுதந்தர அருள்வாரி![2]
ஐயா! வல்லாவே! மாதேவா!—ஓ
துய்யா![3] நல்லாவே! ஏகோவா!— சொல்

௩

பாவ வினை யாவையுந் தீர்த்தாரே,—உயர்
தேவ குலமாய் எமைச் சேர்த்தாரே;
பக்ஷத்தால்[4] முகம் பார்த்தாரே,—பெரும்
பொக்கிஷம் போல் எமைச் சேர்த்தாரே.— சொல்

வே.—சா.

---

௨௨. (௨ம) PRAISE TO CHRIST. 22.

*[Perpetual Praise, and Thanksgiving, and Glory, be unto Christ.]*

## கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம்.

இராகம், ஆனந்தபைரவி.

பல்லவி.

சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்கு
தோத்திரம், புகழ்ச்சி, நித்திய கீர்த்தனம் என்றும்.

அநுபல்லவி.

அந்தரம்,[5] புவியும் தந்து, சொந்தச் சீவனையும் ஈந்து,
ஆற்றினார், நமை ஒன்றாய்க் கூட்டினார், அருள் முடி
சூட்டினார், கிருபையால் தேற்றினாரே; துதி— சுந்

சரணங்கள்.

க

பாதகப் பசாசால் வந்த தீதெனும் பயத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி,[6] மீட்டாரே;
வேத பிதாவுக் குகந்த சாதியாகக் கூட்ட வந்த
மேசியாவைப் பற்றும் விசுவாச வீட்டாரே!

---

1 அழிவில்லாத.
2 கிருபைக்கடலே.
3 பரிசுத்தனே.
4 பட்சத்தால்.
5 வானம்.
6 ஆலோசித்து.



கோதணுகா[1] நீதி பரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள்; பவத்துயர்—
போடுங்கள், செயத்தைக் கொண்
டாடுங்கள், துதி சொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும்—சுந்

௨

விண்ணிலுள்ள சோதிகளும், எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து, போற்றவே;
மண்ணிலுள்ள சாதிகளும் மன்னரும் பல பொருள்களும்
வல்லபரன் எனத் துதி சொல்லி ஏத்தவே;
அண்ணலாம்[2] பிதாவுக் கொரே புண்ணிய குமாரனைக்கொண்
டாடிட—அவர் பதம், கூடிட
தேடிட,—வெகு திரள்
துதி புகழ் பாடிட, பாடிட, என்றும்— சுந்

௩

சத்தியத் தாசர்களும், உத்தியோகத் துரைகளும்,
சங்கத்தோர் களுமிருபை தங்கி வாழவே;
எத்திசை மனிதர்களும், பக்தர் விசுவாசிகளும்,
ஏக மிகுஞ் சமாதான மாக வாழவே;
உத்தம போதகர்களும், சத்திய திருச் சபை களும்,
உயர்ந்துவாழ,—தீயோன்
பயந்து— தாழ, மிக
நயந்து கிறிஸ்துவுக்குச் செயந்தான், ஜெயந்தான், என்றும்— சுந்

மரி.—உப.

---

௨௩. (௨க) PRAISE TO CHRIST. 23.

## கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம்.

இராகம், டப்பா. ஏகதாளம்.

பல்லவி.

துதிதங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்,
சுப மங்கள மிகு சம்பிரம சுக சோபன க்ஷேமம்!

---

1 குற்றம். 2 அரசன்.

சரணங்கள்.

க

அதி சுந்தர விறை கொண்டுயர் அருள் மோக்ஷ தீபன்,
கதி உம்பர்கள் தொழும் இங்கித[1] கருணைப் பிர தாபன்.—துதி

உ

மர்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அத்தனர்,[2]
விந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மா பரி சுத்தனர்.—துதி

ங

திருவான் உல காசாய் வளர் தேவ சொரூபானர்,
ஒரு மாதுடை வினை மாறிட நரர் ரூபம தானர்.— துதி

ச

அபிராம் முனி யிடமேவிய பதிலாள் உபகாரன்,
எபி ரேயர்கள் குலம் தாவீதென் அரசற் கோர் குமாரன்.—துதி

ரு

சாதா ரண வேதா கம சாஸ்திர சுவிசேஷன்,
சோதே புரி ஆதா முடை கோத்திர திரு வேஷன்,— துதி

சா

விண்ணோடரும் மண்ணோடரும் மேவுந் திருப் பாதன்,
பண்ணோதுவர்[3] கண்ணோம் வளர் பர மண்டல நாதன்,— துதி

வே.—சா.

உச. (உச) PRAISE TO CHRIST, THE INCARNATE SAVIOUR. **24.**

# இரட்சகருக்குத் துதி.

இராகம், பைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

தோத்திரம் செய்வேனே,—ரட்சகனை
தோத்திரம் செய்வேனே.—

1 இனிய. 2 கடவுள். 3 கதி.



அநுபல்லவி.

பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை,[1] யூதக் கோத்திரனை, என்றும்— தோத்

சரணங்கள்.

க

அன்னை[2] மரி சுதனை,—புல் மீது
அமிழ்ந்துக் கழுதவனை,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை யுற்படி, இக்கிலத் துற்றோனை— தோத்

உ

செம்பொன் னுருவானை,—தேசிகர்கள்[3]
தேடும் குருவானை,
அம்பரம் மேவிய உம்பர்[4] குழாங்களோ[5]
டன்பு பெற நின்று, பைம் பொன் மலர் தூவி,— தோத்

ங

கந்தை பொதிந்தவனை,—வானோர்களும்
வந்தடி பணிபவனை,
மந்தையர்க் கானந்த மாட்சிமை யளித்தோனை,
மான்[6] பரன் என்னும் ஞான குணவானை,— தோத்

ச.—உப.

ருரு. (உரு) PRAISE TO CHRIST. **25.**

[*Thou Christ art my Portion.*]

# கிறிஸ்துவை ஸ்தோத்திரித்தல்.

இராகம், யமுனகல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

பாதகம் வந்தனமே; வாப்பிர
சாதம் எந்தனமே.

1 இராசன். 2 தாய். 3 ஞானிகள். 4 வானோர். 5 கூட்டம். 6 மேன்மையுள்ள.

சரணங்கள்.

௧

ஆதரவொடு வேதமே விடுத் தாளும் அற்புதனே!
திவ்ய சுதனே! கிருபைப் பதனே![1] சுகிர— பாதம்

௨

பேசுதற்கரிதான ஸ்தோத்திய பெருமைக் கோமானே![2]
மெய்ச் சீமானே! அருள் கோனே! சுகிர— பாதம்

௩

ஞானமாய் நரர்க் கான சீவனே நல்கியத்[3] சீலா!
மனு வேலா! துரை பாலா! சுகிர— பாதம்

௪

தீவினை கொலைத் தாவியே மிருத் தேவும் இங்கிதமே![4]
என் ரஞ்சிதமே நீ சந்ததமே; சுகிர— பாதம்

௫

தாசனை விசுவாசமாய்க் கையில் தாங்குபகாரா!
அதிகாரா கன தீரா![5] சுகிர— பாதம்

ஆ—அ.

## ௨௬. (௨௧) A HYMN OF PRAISE TO CHRIST. 26.

[Suitable for Opening Social or Public Worship.]

# கிறிஸ்துவைத் துதித்தல்.

வெண்பா.

மன்உயிரை மீட்பதற்கு மாகிருபை யால்எழுந்து
தன்னுயிர்விட் டன்றுயிர்த்து தற்பரன்முன்,—இந்நிலத்தில்
கூடுவோம் அன்பவரில் கூர்ந்து, மிகப்புகழ்ந்து,
பாடுவோம் உட்கருத்தின் பால்.

இராகம், ஆனந்தபைரவி. ஏகதாளம்.

பல்லவி.

உள்ளக் கருத்துடன் இசைந்து கூடுவோம், நம்
  யேசுநாதரின்
உரிமையைத் தினம் புகழ்ந்து பாடுவோம்.

[1] பாதமுடையவனே. [2] அரசனே. [3] கொடுத்த. [4] பிரியம். [5] கதிரியவானே.



அனுபல்லவி.

வள்ளல் கிறிஸ்திங்கு வந்தெமை மீட்க,
வருந்தி அன்பாகப் புரிந்த செயல் பற்றி,
மனதே ஒருப்பட்டும், கனிவின் இடை எட்டும்
படி இன்னிசை இட்டும், உயிரே உள மட்டும்.— உள்

சரணங்கள்.

௧

பூவுலகும் அதின் நிறைவுயாவுமே—சொந்தமாயினும், அவர்
புல்லில் உற வந்த தென்ன, நம் பாவமே;
தேவநீதி நமை யழிக்க வருமே;—அவர்பிணை என வந்து
தீர்த்துவென்றார் பேயின் அடமும் சாவுமே;
தீவினையான தொன்றும் அறியாத
திருச்சுதன், நம்மைப் பரத்தினிற் சேர்க்கவே,
செழுமைய திழந்தார்; எளிமையில் விழுந்தார்;
நரர்உரு வடைந்தார்; பரன் நெறி நடந்தார்;— உள்

௨

தீயர் பய மின்றி வளைந்துவிட்டவும்,—சோரன்[1] போல் அவ
  னாயே
சேர்ந்து வந்து வலுவாகக் கட்டவும்,
நேயம் அற அவர் சிரசில் குட்டவும்,—கெட்ட பாவிகள் மிக
நிந்தை செய்து குறைவாகத் திட்டவும்,
காயமதிலும்[2] உளத்திலுமேவக்,
கடுந் துயர் மிக்க அடைந்தனரே நரர்
கரும வினை தீர, தரும நெறி சார,
பரம கதி சேர, மிகவும் மகிழ் கூர,— உள்

௩

காசினியில்[3] அவர் தமக்கு யாருமே—நிகர் இல்லை; அங்கவர்
கால் அடி செல்ல எவ் வினையுந் தீருமே;
பாசமுடன் அவர் கருணை பாருமே;—பிணையாய் உயிர்விடப்
பாரில்[4] வரும் இன் றதனை நிருமே;[5]

[1] திருடன். [2] தேகம். [3] உலகம். [4] பூமி. [5] அதிக்குதேனியுமே.

தாசர் அனைவரும் சாட்சி பகர்ந்திட,
தாரணியோர் அனைவோரும் உணர்ந்திட,
தருவில்[1] அறையுண்டார்; திரு வசனம் விண்டார்;[2]
உறு பகையை வென்றார்; மறுமையதிற் சென்றார்.— உன்

ஜா.—பா.

உஎ. CHRIST BORN TO SAVE THE WORLD. 27.

## உலகத்தாரை இரட்சிக்க ஏசு பிறந்தார்.

இங்கிலீஷ் இராகம். ஆதிதாளம்.

பல்லவி.

ஆதி திருவார்த்தை திவ்ய அற்புதப் பாலனாகப் பிறந்தார்;
ஆதந்தன் பாவத்தின் சாபத்தைத் தீர்த்திட
ஆதிரையோரை யீடேற்றிட

அனுபல்லவி.

மாசற்ற சோதி திரித்துவத் தோர் அந்த
மரி வயிற்றில் கெர்ப்பந்தரித்து
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்,
உன்ன தகஞ்சீர் முகஞ்சீர் வாசகி
மின்னுஞ்சீர் வாசகி, மேனிநிற மெழும்
உன்னத காதலும் பொருந்தவே
சர்வ நன்மைச் சொரூபனார், ரஞ்சிதனார்
தாம், தாம், தன்னா, னனா
தீம், தீம், தீமை யகற்றிட
சங்கீர்த சங்கீர்த சங்கீர்த
சந்தோஷம் மென சோபனம் பாடவே
இங்கிர்த, இங்கிர்த, இங்கிர்த சமத
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட— ஆதி

1 மரம்=சிலுவை. 2 சொன்னார்.



சரணங்கள்.

௧

ஆதாம் ஓதி ஏவினர் ஆபிரகாம் விசுவாசவித்து,
யூதர் சிம்மாசனத்தாளுகை செங்கோல்
ஈசாய் வங்கிஷத்தாலுதித்தார்.— ஆதி

௨

இஸ்ராவேலின் கோத்திரம் உதயமான நட்சத்திரம்,
ஏசையா ஒன்பதாம் ஆறுளா சாஸ்திரம்.
ஏசுப் பிரபந்தத்தின் ஸ்தோத்திரம்.— ஆதி

௩

பூலோகப் பாவ விமோசனர், பூரண கிருபையின் வாசனர்,
மேலோக இராசாதி இராசன் சிம்மாசன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார்.— ஆதி

௪

அல்லேலூயா! சங்கீர்த்தனம், ஆனந்த கீதங்கள் பாடவே,
அல்லல்கள் தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார்.— ஆதி

வே.—சா.

உஅ. (உஎ) I PRAISE THEE O CHRIST FOR THY WORK OF REDEMPTION FOR ME. 28.

## மீட்பின் கிரியைக்காக கிறிஸ்துவை வாழ்த்துதல்.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

ஏசுவே! உமதுரை மிகப் பகரும்—சுவிசேஷமானதை
எமக்கும் ஈந்ததால், உமக்கு ஸ்தோத்திரம்.

அனுபல்லவி.

தாசர் பிழைத்தென்றும் வாழ்ந்திட, ஏசுவே!
தயவுடன் உமதூழியக்காரரால்
சத்தியம் அறைந்தீர்; வெற்றியாய்ச் சிறந்தீர்;
முத்தியைத் திறந்தீர்; அத்தை எனக் கீந்தீர்.— ஏசுவே

சரணங்கள்.

௧

இருண்ட பள்ளத்தின் உழையினில் கிடந்தேன்;—நீர் உருக்க
 மாகவே,
எடுத்தெனக்குயிர் கொடுத்ததாற் பிழைத்தேன்;
வறண்ட தலமதாகவே இருந்தேன்;—உமதன்பின் ஞான
மழைபொழிந்ததின் மகிமையால் செழித்தேன்;
திரண்ட சத்துருக் கூட்டமதால் எங்கும்
புரண்டோடும் பாவ வெள்ளத்திலே நின்று
சேர்த்தெனை எடுத்தீர்; பார்த்தறத் துடைத்தீர்;
போர்த்துடை உடுத்தீர்; காத்தருள் கொடுத்தீர்;— ஏசுவே

௨

தேவ ஈவை நான் இழந்து போனதும்,-நீர் இரக்கமாய் எனைத்
தேடி இகத்தை[1] நாடி வந்ததும்,
சீவ கனியை நீர் ஈவேன் என்றதும்,—நான் இழந்த ஞானச்
சீர் உம்து திருப் பேரால் வந்ததும்,
ஆவலுடன் உற்று, அன்புடன் பார்க்கவும்,
மா விசேஷத்தின் மகிமை விளங்கவும்,
அருளதனை ஊற்றினீர்; மருளதனை ஓட்டினீர்;
இருள் நரகைப் பூட்டினீர்; பொருளதனைக் காட்டினீர், ஏசுவே

௩

இப்படி நான் பெற்ற ஞான சோதியும்,—ஏசுக் கிறிஸ்துவே
 நீர் அன்பாய்
இரங்கிச் செய்த நன் மறுமை நீதியும்,
தப்பிடாமல் என்றும் எனக்கு வீதியும்,[2]—நான் அடைந்த
 வாக்கியம்
தளர்ந்திடாமலே, தினமும் போதியும்;
எப்பொழுதும் உம தாழியக்காரரால்
செப்பிடப்பட்ட[3] நற் சுவிசேஷத்தால்
எல்லாரையும் பாரும்; பொல்லா வினை தீரும்;
அல்லும்[4] எனில் வாரும்; நல் ஆவியைத் தாரும்.— ஏசுவே
 மரி—டப.

1 பூமி. 2 பகுத்திடும். 3 சொல்லப்பட்ட. 4 இரவிலும்.



௨௯. (௨௫) PRAISE TO CHRIST FOR THE WORK OF REDEMPTION. 29.

# மீட்பின் கிரியைக்காக கிறிஸ்துவை வாழ்த்தல்.

ஆதிதாளம்.

இராகம், செஞ்சுருட்டி.

பல்லவி.

அனந்த ஞான சொரூபா! நமோவே,[1] அனந்த ஞான
 சொரூபா!

சரணங்கள்.

௧

கனங்கொள் மகிமையின் கர்த்தாவே, காத்திர நேத்திர பாத்
 தாவே,—நரர்
காண வந்தாரே;—பரன் நரர் காண வந்தாரே, அன
கரு ணாகர தேவா! அனந்த ஞான சொரூபா!—

௨

துங்க[2] வானச் சங்கையின் ராசா, சத்திய மகத்துவ சருவே
 சா,—கிருபை
தோன்ற நின்றாரே;—என்றுங் கிருபை தோன்ற நின்றாரே;
ஒரு சயாதிப கர்த்தா! அனந்த ஞான சொரூபா!— அன

௩

அத்தப் பரமானந்த குணாலா,[3] ஆதத்தின் தீதற்ற மனுவேலா;—
 எமை
ஆண்டு கொண்டாரே;—பரன் எமை ஆண்டு கொண்டாரே;
ஞானதிக்கத்[4] துணையே! அனந்த ஞான சொரூபா!— அன

1 வணக்கம். 2 மேன்மையுள்ள. 3 குணமயமானவனே. 4 ஞானத்தைச் சுதந்தரமாக உடைய.

௪

ஆடுகளுக்குரிமைக் கோனே, ஆரண காரணப் பெருமானே,—நரர்க்
கன்பு கூர்ந்தாரே,—பரன் நரர்க் கன்பு கூர்ந்தாரே;
கிருபாசனத் தானே! அனந்த ஞான சொரூபா!— அன

௫

பந்தத் துயரந் தீர்த்தாரே, பாவத்தைச் சாபத்தை ஏற்றாரே;—எமைப்
பார்க்க வந்தாரே;—பரன் எமைப் பார்க்க வந்தாரே;
பரமாதிக்கத் தோரே! அனந்த ஞான சொரூபா!— அன

வே.—சா.

## ௩௦. (௨௯) THE WORD BECAME FLESH. 30.

# வார்த்தை மனுஷனானது.

வெண்பா.

கருத்தர் வருகை கனிகூருங் காலம்
பொருந்த பிதாவின் கிருபை—உரித்தாக
ஆர்த்த உலகம் அனைத்தும் படைத்ததிரு
வார்த்தை மனுடவதாரம்.

இராகம், சகானா. சாப்புத்தாளம்.

பல்லவி.

மனுடனானதே,—வார்த்தையும்,—மனுடனானதே.

அனுபல்லவி.

மனுடன் ஆதி ஆதனுடை முழுமர[1]
பிணுடை பவம் அற, தனுடை கிருபையால்,— மனு

[1] வம்சம்.



சரணங்கள்.

௧

அடவியதில்[1] நரர் கெட, வினையை இடு
கொடிய அரவுடை[2] தட[3] முடி உடைய,
புடவியதில்[4] அதி திட மொழியர் தவி
துடை குலமினிடை கடவுள் திருமுதல்— மனு

௨

ஆதி இருந்தத ஜோதியுடன் இருந்
தோது மறை பரஞ் சோதி என இருந்
தேதும் வனைந்தது,[5] ஜீவன் இருந்தது,
நீதம் விடிந்தது, வேதம் முடிந்தது— மனு

௩

நீட்டி முனிவர்கள் ஏட்டில் எழுதிய
பாட்டின் முறை மன நாட்ட முடன் அருள்
காட்டி, நரர் சிறை மீட்டு, வளமை பா
நாட்ட, உலகில் விண் நாட்டின் ஒரு பொருள்— மனு

௪

விருக்கத்[6] தடர் வினை நெருக்கத் துயர்படு
நரர்க்குத் தயைமிகும் உருக்கத் திரு வுளத்
திரக்கத் துடன் அருள் சுரக்க, கருணைகள்
பெருக்க, இவ்யபர மருக்குப் பிணை சொலி— மனு

வே.—சா.

## ௩௧. JESUS MY REDEEMER! 31.

# கிறிஸ்து எமை மீட்க மனிதனானார்.

இராகம், கமாசு. ஆதிதாளம்.

பல்லவி.

மேசியா ஏசு நாயனார்,—எமை மீட்
கவே நரனாயினார்; எமை மீட்

[1] வனம். [3] தலை. [5] உண்டாக்கல்.
[2] பாம்பு. [4] பூமி. [6] விருட்ச.

சரணங்கள்.

௧

நேசமாய் இந்தக் காசினியோரின்
நிந்தை அனைத்தும் போக்கவே,
மாசிலான் ஒரு நீசனாகவே
வந்தார் நரர் கதி நோக்கவே;— மேசியா

௨

தந்தையின் சுதன் மைந்தர் பாதகம்
சமஸ்தமும் அற வேண்டியே,
விந்தையால் குடில் மீது வந்தனர்
விண்ணுலகமும் தாண்டியே;— மேசியா

௩

தொண்டர் வாழவும், அண்டரின் குழாம்
தோத்திரம் மிகப் பாடவும்,
அண்டு பாவிகள் விண்டலஞ் சேரவும்,
ஆயர் தேடிக் கொண்டாடவும்;— மேசியா

௪

தேவனும் நித்திய சீவனும் ஒரே
திருச் சுதன் மனுவேலனார்
பாவியாம் நரர் பாவம் மாறவே
பார்த்திபன்[1] தேவ பாலனார்,— மேசியா

C.—யோ.

௩௨. (௩௰) CHRIST THE MIGHTY GOD CAME TO GIVE UP HIS LIFE FOR OURS. **32.**

# கிறிஸ்துவின் வருகை.

கொச்சகம்.

தன்னரண் மனைதுறந்தான், தந்தைவாழ் வையும்மறந்தான்,
முன்னணைத னிற்பிறந்தான், மூவுலக மும்நிறைந்தான்,
மன்னுயிர்க் கருள்சொரிந்தான், வான்நாட் டிலிருந்தான்,
தன்னையேதந் தான், நந்தா சற்பரா பரன்வந்தானே.

[1] ராஜன்.



இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧

மன்னுயிர்க்காக தன்னுயிர் விடுக்க
வல்ல பராபரன் வந்தார், வந்தார்.— பாவி

௨

இந்நிலம் புரக்க,[1] உன்னதத் திருந்தே
ஏக பராபரன் வந்தார், வந்தார்.— பாவி

௩

வானவர் பணியுஞ் சேனையின் கருத்தர்
மகிமைப் பராபரன் வந்தார், வந்தார்.— பாவி

௪

நித்திய பிதாவின் நேய குமாரன்
நேமி[2] அனைத்தும் வாழ வந்தார், வந்தார்.— பாவி

௫

தந்தைப்[3] பிரானார்[4] விந்தைக் குமாரன்
சச்சிதானந்த[5] குரு வந்தார், வந்தார்.— பாவி

௬

மெய்யான தேவன், மெய்யான மனுடன்
மேசியா, ஏசையா வந்தார், வந்தார்.— பாவி

௭

தீவினை நாசர் பாவிகள் நேசர்
தேவ கிறிஸ்தையா வந்தார், வந்தார்.— பாவி

௮

செய அனுகூலர் திவ்விய பாலர்
திரு மனுவேலனே வந்தார், வந்தார்.— பாவி

௯

ஆசைக்கண்ணாளர்[6] ஆத்தும நேசர்
அருமை[7] மணாளர் வந்தார், வந்தார்.— பாவி

வே.—சா.

[1] காப்பாற்ற, [3] பிதா. [5] தெய்வீக. [7] கணவர் or அருமையுள்ளவர்.
[2] பூமி. [4] கடவுள். [6] பிரியம்.

ருரு. (ருக) THE INCARNATION OF CHRIST. **33.**

# கிறிஸ்துவின் மனித அவதாரம்.

விருத்தம்.

அதம்[1] செய்த பவத்தை நீக்கி, அனைத்தையும் படைத்த நாதன்
சதம்செய்த நாற்ப தாண்டில் தரணியில் மனிதனாய் அற்
புதஞ்செய்து, தாவீ தேந்த்ரன் புத்திரன் என்று போற்றி
பதம் செய்யும் படி, பெத் லேகேம் பதியினில் பிறந்தார் அன்றே.

இராகம், இலாவணி. ஆதிதாளம்.

பல்லவி.

அதம்[1] செய்த பாதகம் தொலைய மன்றாடி,
அனுக்கிரக மாகவே திருக் குமாரனும் நீடி,—அதம்

அனுபல்லவி.

விதப் பரம போதன்,—உயர்
மேன்மைக் கிறிஸ்து நாதன்,
வெகு கோடிப் புகழ் பாடி, தூதர் கூடி
கொண்டாட, நாடி வந்தானே,— அதம்

சரணங்கள்.

க

மன்னன் தவிது குல கன்னி மரியினிடமாக
மனுடர்களில் அதிக பிரியம் உற, வினைகள் போக
திருவூரானே,[2] தருகுவானே,[3]—சய திரு உருவானே,
மலையானே, கலையானே,—மலைச்
சார்பில் பெத்தலேம் ஊரினில் பிறந்தானே—, அதம்

உ

அகத் துதித்[4] தொளிர் திரித்துவத்தி லொன்றானே,
அனைத்துலகமும் வகுத்துக்[5] காத்து நின்றானே,

[1] அதம்=ஆதாம்.
[2] பரிசுத்த மோட்சம்.
[3] தருவானே.
[4] மனதில் உதித்து.
[5] உண்டாக்கி.



மா மகத்வ இம்மானுவேலே,—மன
பிரிய மிகுதியாலே
மனுவாக, வினை போக,—பசு
மாட்டுக் கொட்டிலில் காட்டினில் பிறந்தானே— அதம்

வே.—சா.

ருச. (ருரு) THE INCARNATION OF CHRIST. **34.**

# கிறிஸ்து மனிதரூபம் எடுத்தார்.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

ஆதாமின் பாவத்தாலே அரூபன் உருபமான
அதிசயம், இதோ! பாரும்.

அனுபல்லவி.

மாதேவை புத்திர ரான மானிடர் குழாங்களே! நீர்
வல்லமைப் பிதாவின் ஒரு மைந்தனைச் சந்திக்க வாரும்,— ஆதா

சரணங்கள்.

க

ஆதி பிதாவின் திரு பாசனத்தைத் துறந்தார்;
அழகான மோட்ச செல்வப் பாக்கியத்தை மறந்தார்;
பாதகந் தீர வேண்டிப் பெத்தலையில் பிறந்தார்;
பராபர வஸ்து வானோர் பாலனாகப் பிறந்தார்;— ஆதா

உ

உன்னத வஸ்து வானோர் உலகத்தை நேசித்தார்;
ஒப்பில்லா தேவ தேவன் மனுஷனை ஆசித்தார்;
தன் ஒளிவை விளங்க, தானே பிரகாசித்தார்;
சாதிகளுக்குத் தயவாய் உபதேசித்தார்;— ஆதா

௩

மந்தை ஆயர் சந்திக்க, சந்தோடமே விண்டார்;
வான நாட்டைப் பிரிந்து, மாட்டுக் கொட்டிலைக் கண்டார்;
விந்தைத் திரு முதலார் கந்தைத் துணியைக் கொண்டார்;
வேத காரணர் தானே மேவி, தாயின் பால் உண்டார்.— ஆதர

வே.—சா.

---

## ௩௫. (௩௨) THE SON OF THE ALMIGHTY GOD BECOMES MAN. 35.

# கிறிஸ்துவின் மனித அவதாரம்.

வெண்பா.

வானமே! நீ கேளு, மண்டலமே காது கொடு,
ஏன் இதுமக் காச்சரியம் இல்லையோ?—மானிடர்க்காய்
தொல்புவியின் பாவம் சுமக்கஇங் கேயெழுந்த
வல்லபரன் மைந்தன்வந் தார்.

பல்லவி.

வல்ல பராபரன் மைந்தன் வந்தாரே,—புவிதனில்
வல்ல பராபரன் மைந்தன் வந்தாரே.

அநுபல்லவி.

எல்லை இல்லாப் பொருள் யாவும் படைத்த
இறையவன், ஏக சருவ தயாபர
எந்தை அறுதியர் சொந்த வடிவின் அ
சிந்திய[1] மகத்துவ சிஷ்ட திரித்துவ.— வல்

சரணங்கள்.

௧

மூவுல கோரும் முடி பணிந் தேற்றவே,—ஞாயப் பிரமாணத்தை
முற்றும் முடித்தவராய் நிறைவேற்றவே,

[1] புத்திக்கெட்டாத.



பாவிகளுக்குப் பரிந்துகொண்டாற்றவே,—ஒன்றான அநாதி
பராபர வஸ்துவின் கோபத்தை மாற்றவே,
தேவ சுபாவம் இயாவும் உடைத்தவன்,[1]
சிர்ஷ்டிக்கப் பட்ட தனைத்தும் படைத்தவன்
காவில் உண்டாகிய சாபம் துடைத்தவன்,
சுடு நரகக் கபாடம்[2] அடைத்தவன்,
கற்பனை பத்தையும் தாக்கி,—ரண்டு
விற்பனை கற்பனை ஆக்கி,—வழி
காட்டு தற்காய் உரு வெடுத்தான்;— இங்கே
மாட்டுக் கொட்டிலுக்குள் படுத்தான்;— நரர்
காட்சிக் கெளியான்,—சுரர்
சூட்சிக் கொளியான்,—பரன் மாட்சிக் களியான்—நிரம்பி அ
காதத் தெருளாம் உச்சித நீதத் துரை, மா சத்திய
வேதப் பொருள் ஓதக் கலை ஓதித் தரும் ஆதிக் குரு,
மிகஉத்தம சுக முக்கிய உகமைக்குயர் தகமைப் பரன்.— வல்

௨

வானத்தின் சேனைகள் ஆனந்தம் பாடவே,—மந்தைக்காரர்
அங்கே
வர்த்தனர்கள் ஒருமித்துக் கொண்டாடவே,
ஞானத்தின் சாஸ்திரிமார்கள் தேடவே,—பூதகணங்கள்
நடுங்கித் திடுக்கிட் டொடுங்கி ஓடவே,
ஈனத் துரோகிக விடத்தை நீக்கி,
இத்தரை யோர்களின் பாவத்தைத் தாங்கி,
கானத்தில் ஆனக் குடிலுக்குள் ஏங்கி,
கருணைத் திரு வடிவங் கொண்டோங்கி,
கன்னிமரியவள் இடமாய்,—மறை
சொன்ன முறைப்படித் திடமாய்,—இதோ!
காரணமோ, சுதன் பிறந்தான்;—பரி
பூரணமாகவே நிறைந்தான்;—தேவ
கர்த்தனைக் கண்டோம்;—பராபர
வஸ்தினைக் கொண்டோம்;—மாசரி
சித்துரை விண்டோம்;—வானில்பிர
காசத் தொளிவாம் நித்திய வாழ்வைப், பொருளா முக்கிய
ராசத் துவம் மேவிச்சுப சீவப் பிரபுமகத்துடன்
கலமைத் தலைமைப் பரன் மலப் பக்கத் துணையைக் கொள்
வோமே.— வல்

வே.—சா.

[1] உடைத்தானவன். [2] கதவு.

௩௬. THE WONDER OF THE GOSPEL. **36.**

# சுவிசேஷத்தின் அதிசயம்.

வெண்பா.

வானிலில்லை மின்சோதி வட்டத் திலுமில்லை
பானுவிலும் சோமனிலும் பார்த்ததில்லை—வேனத்
தலைமீதிலும் இல்லை சாற்றவுண் டிப்பூ
தல மீதிலோரதி சயம்.

இராகம், கமாசு. ஏகதாளம்.

பல்லவி.

பூதலமதிலொரு அதிசயமே,
புதிய[1] சுவிசேஷமே.

அநுபல்லவி.

வேதபுவிதர்[2] துதி விமல சதாபதி—ரீ ரீ ரீ ரீ
நாதனேழை மனுருபமான துதி— பூதல

சரணங்கள்.

க

பரமுல கதில் நிறை பொருளருளிய சருவேசன்—சோங்கு
படாடவியி[3] லதம் மடவரல்[4] புரியினை அறத்[5]
திருவளர் கலமொரி[6] யிருள் பிணிதுயர் செறி—ரீ ரீ ரீ ரீ
ஜெகத்தில் மாது[7] மரி வயிற்றிலான திரு,— பூதல

உ

திகழ்[8] பரமொடு திரிபுவனமு[9] மடங்கொணு வேதன்—பாவ
செரு நவர்[10] பாம வீடதிற் சுகம்பெறுவதற்காக
இதழ் பழுக் துகிலொடு[11] குழவியாய்[12] மடமிடை—ரீ ரீ ரீ ரீ
இடையர் காணப் பசுக் குடிலில் தூங்கினதும்— பூதல

[1] அதிசயமான. [2] அறிவாளிகள். [3] வனம். [4] பெண். [5] அறிக்க. [6] வீட்டு. [7] ஸ்திரீ. [8] பிரகாசிக்கும். [9] மூவுலகம். [10] பகைவர். [11] துணி. [12] குழந்தை.



ந

அறிவுயி ரெனுமுயிர்க் குயிர் தரும் அருள் தெய்வீகம்— நேய
அடியவர் ஒரு போதும் மறுமையில் மாயாமலுய்ய
மெய்[1] தனில் வாரடி பாடுகள் பட்டுமே—ரீ ரீ ரீ ரீ
விதனமோடு சிலுவையி லிறந்ததுவம்— பூதல

ஈ.—பா.

௩௭. (ரூரூ) THE INCARNATION OF CHRIST. **37.**

# கிறிஸ்துவின் மனித அவதாரம்.

வெண்பா.

விண்ணுலகோர், மண்ணுலகோர், வேறுலகோர் எல்லாரும்
பண்ணுந் துதிமருவும் பாத்திரனே!—மண்ணைச்
சிதைவுசெய்வோய்! ஏழைச் சிறுபிள்ளை யான
அதிமங் கலகார ணா!

இராகம், கருபா. ஆதிதாளம்.

பல்லவி.

அதி-மங்கல காரணனே!
துதி-தங்கிய பூரணனே!—நார்

அநுபல்லவி.

வாழ விண்துறந்[2] தோர் ஏழையாய்ப் பிறந்த
வண்மையே[3] தாரணனே!— அதி

சரணங்கள்.

க

மதி—மங்கின எங்களுக்கும், திதி[4] சிங்கினர்[5] தங்களுக்கும்—
உனின்
மாட்சியும், திவ்விய காட்சியும் தோன்றிட வையாய்,
துங்கவனே!— அதி

[1] சரீரம். [2] வீட்டு. [3] தயாளம். [4], [5] மகிமை அழிந்தவர்கள்.

உ

முடி—மன்னர்கள் மேடையையும், மிகு—உன்னத வீடதை
யும்—என்று
மாட்டிடையே பிறந் தாட்டிடையர் தொழ, வந்தனையோ
தரையில்?— அதி

௩

தங்கக்-கட்டில்தனை விடுத்து, பசுத்-தொட்டியிலே படுத்து —
மிகு
காற்றுப் பனியின் கடுமைக் கன்னே கொடுங்
கைக்குள் ஒதுங்கினையோ?— அதி

௪

தீய-பேய்த்திர ளோடுதற்கும், உம்பர்-வாய்த்திரள் பாடுதற்
கும்,—உனைப்
பின்பற்றுவோர் முற்றும் துன்பற்று வாழ்வதற்கும் பெற்ற
நல் கோலம் இதோ?— அதி

௫

எந்த-பாவமதும் விலக, உயர்-தேவ வரம் இலக,—இந்தப்
பாங்கன்றி வேறொன்றும் ஓங்கு புகழ்க்குப் படாதெனக்
கண்டனையோ?— அதி

தே.—மு.

——————

௩அ. (௩௩) THE GOD OF ISRAEL BECOMES INCARNATE. 33.

## இஸ்ரவேலின் தேவன் மனிதனானார்.

———

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

வானாசனத் திருந்தார்—மனு உருவாய்
மா நிலத்தினில் பிறந்தார்.

———

அனுபல்லவி.

கோனர்[1] பணிய, நரர் கொடிய இடர் தணிய
ஞான முனிவர் கவி நாவலரும் புகழ;— வானா

[1] இடையர்.



சரணங்கள்.

க

ஆதி நரர்கள் கனி அருந்த அதனால் இந்த
அம்புவியில் விளைந்த அல்லல் அற மருந்தாய்,
நீதி பரன் தயவால் நீசருடன் பொருந்த,
நித்திய கதி வழங்க, பத்தர்க் கருள் விளங்க;— வானா

உ

வண்ணச் சீனா வரையில் மன்னுயிரை விதித்தவன்,
வையகம் புகழ் இஸரேலர்கள் துதித்தவன்,
மின்னும் மணி மகுட வேந்தரைச் சிதைத்தவன்,
வேத மறை நடுவாய் மெய்யொளி கதித்தவன்;— வானா

௩

கதி இழந்த நரர் மேலுங் கிருபை பாராட்டி,
கர்த்தன் திரு உளமையைக் காசினியோர்க்குத்[1] தீட்டி,
எதிர் செய்யும் வல்பிணி வறுமை என்பவை ஓட்டி,
ஏதம் இல்லாத கிறிஸ்தேசு என்னும் பெயர் காட்டி;—வானா

௪

சீர் பெறும் ஏகபரன் சிந்தைதனை நிறைத்து,
செய்ய மறை ஒளியால் தீய இருள் குறைத்து,
ஏர்[2] புவியில் மெய் அறி வென்னும் விளை விளைத்து,
எம் உருவை எடுத்தார், தம் உருவை மறைத்து;— வானா

கா.—உப.

——————

௩௯. (சக) THE HEAVENLY HOST CELEBRATE CHRIST'S BIRTH. 39.

## கிறிஸ்துவின் பிறப்பு.

———

விருத்தம்.

தரணியின் மாந்தர் பாவத் தாற்கொடும் பகைஞராகி
பரன்கிருபையை இழந்து, பாதபித் திருக்குங் காலை
சுராதி பதிமந்தியந்த ஞயப்பிறந் திட்டஅன்பு
திரமென விண்ணில் பரம சேனை கொண் டாடினரே.

[1] உலகோர். [2] அழகு.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

பரம சேனை கொண்டாடினார்; பரன் இரக்கத்தைப் பாடினார்.

௧

பரத்திலே இருந்து பதி பெத்தலேம் வந்து,
பரன்நரரு பணிந்து, பணிவானதிற் சிறந்து,— பரம

௨

இராவின் இருளை மாற்றி, இடையர் மனதைத் தேற்றி,
கிருபைப் பரனைப் போற்றி, கிறிஸ்தின் பிறப்பைச் சாற்றி,- பரம

௩

சர்ப்பப் பேயை வென்று, சகலர்க் கேய[1] நன்று
அற்புதமாக இன்று அத்தன் பிறந்தாரென்று,— பரம

தை.—றை.

## ௪௰. THE ONLY BEGOTTEN OF THE FATHER, FULL OF GRACE AND TRUTH. 40.

## பூரண கிருபைமயமான கிறிஸ்து.

வெண்பா.

வானத் திருந்து மகத்துவ மெலாந்துறந்து
ஈனத் தலங்கயை விட்டடேற்றித்—தானத்தில்
மா பாதகனெனையே வாழ்விக்க வந்தனையோ
ஆ! பூரண கிருபையே.

1 பொருந்த, உண்டாக.



இராகம், இங்கிலீஷ்.

பல்லவி.

பூரண கிருபையின் மயமே! தேவா!
பொற்புச் செப்பத் தொப்பற் றதிசயமே!
ஆரண சுப செப சொரூபா! யோவா!
அடியனையே இரட்சித் தாள்.

அநுபல்லவி.

சீருச்சப் பட்சத் திரு முதலே!
சிட்டோர்க் காதரவே! யனுசாரி!
தீமைக் கட்டற்றுப், பூமக்கட் கொத்துச்,
சாமத்திற் பெத்தலேமிற் புற் கொட்டில்
மேவு ரூபா! தேவ ரூபா! மூவொரூபா! சீவவா!
தேசருன் வாசநேச சீயா! சுரர் பதியே!
மாசகிலேசு ராச பூமா! நரர் துதியே!
தேவரெலாம் சீடியடி தொழுபரா! காவா,
தேடரு முனிரு சரண் மலர் துணை துணையே— பூரண

சரணங்கள்.

௧

சாதிகளுட பரவசமே! சேயா!
சத்தியத் துத்தியச் சொர்க்கப் பதி நிசமே!
ஆதிவினையற வருசுதா! தீயோர்க்
கருமைமீனோர் மர்த்திஸ்தா!
மா தத்துவச் சுத்தப் பரவெளியே!
வற்று வாருதியே! யசரீரீ!
வானத்துப் பொற்புக் கானத்திற் கொட்டிற்
றுனத்திற் புக்கத் தானுற்றுற்பித்த
காவலவா! மாவலவா! ஓ நல்லவா! மேலவா!
மானுவேலாசை யேசையா! மீசுர வடிவே!
பானுவே! கேச மேசியா வாசக முடிவே!
மாசதிலா மூவரு மொரு தெய்வமே! நாதா!
மாயை யற வுன தருள் புரி நின துதியே— பூரண

௨

வானவர்தளின் ரகசியமே! ஏகா!
மட்டற் றுச்சப் பக்திந்த திருத்வமே!

ஞானதிசய மிகுனதமே! தூயா!
நல் குருவே! நற் கர்த்தா!
மோனத்துப் பத்தர்க் கணிகலமே!
மூட் காடானதின் மோசை முன் மேவு
மூலத்துச் சித்துச் சிலத்துச் சொக்குத்
தாலத்துட் பட்டுக் கோலத்துத் திட்டத்
தாடினவா! நாடினவா! தேடினவா! ஓடிவா
மூவுலகா ளோ ரேக நாதா! முடிவிலனே!
சிவ பிதாபிஷேகா! தாதா திடவலனே!
மோசமிலா யேசிசரவேலதிபா! வாகா!
மூட்மகல வுனருள் புரி திருவுளமே!— பூரண

௩

பாதகன் மனமுழுவதுமே லோகா
சைக் குட்புக்கிச் சிக்கிப் பலவிதமே
சூது வினை கபடுகளுமே மேலாய்த்
துயருற வாதைப்பட்டே
மேன்மைச் சொற்றுப் பற்றனுதினமே
வெட்காப் பேதையர் பாதையின் மேவி
வீண் வட்லசைப்பட்டு வீடற்றுக் கெட்டு
காணத்துக் குட்கி நாசக் கஸ்திக்குள்
போவதுவோ, சாவதுவோ, ஆவதுவோ, சீவனே!
வேதநாயக ஞேதுபாவே! பரிசனையே!
தீதற நீடனுதி தேவே! தெரிசனையே!
வேறுபடாதே முழு வருடமுமே நீயே
மேவியுறவி லென்னுடனிரு, சரணமய்யா!— பூரண
வே.—சா.

௪௧. (௪௪) PEACE ON EARTH. 41.

## பூமியின்மேல் சமாதானம்.

வெண்பா.

உன்னதத்துக் கேமஸிமை உண்டாக, மாந்தருக்குள்
அன்னியோன் யப்பிரிய மாகவே,—இக்கிலத்தின்
சாதிகளுக் கெல்லாந் தமது சமாதானம்
ஓதும் ஏசுக்கிறிஸ்துவர்.



இராகம், இந்துஸ்தான் காபி. ஆதிதாளம்.

பல்லவி.

சமாதானம் ஓதும் ஏசுக்கிறிஸ்து
இவர்தாம், இவர்தாம், இவர்தாம், இவர்தாம்.

சரணங்கள்.

௧

நம தாதி பிதாவின் திருப் பாலர் இவர்,
அனுகூலர் இவர், மனுவேலர் இவர்,— சமா

௨

நேய கிருபையின் ஒரு சேயர்[1] இவர்,
பரம ராயர் இவர், நமதாயர் இவர்.— சமா

௩

ஆதி நரர் செய்த தீதறவே,
அருளானந்தமாய், அடியார் சொந்தமாய்.— சமா

௪

வேத முதல்வனூர் போத மகிழ,
பூலோக மகிழ, வானோர்கள் மகிழ.— சமா

௫

ஆரணம்[2] பாடி, விண்ணோர் ஆடவே,
அறிஞோர் தேடவே, இடையோர் கூடவே.— சமா

௬

மெய்யாகவே மேசையாவுமே
நம்மை நாடினாரே, கிருபை கூறினாரே.— சமா

௭

அருளானந்த மோட்ச வழி காட்டினாரே,
நிலை நாட்டினாரே, முடி சூட்டினாரே.— சமா
வே.—சா.

[1] குமாரன். [2] வேதம்.

சஉ. (௱௯) THE BIRTH OF CHRIST. 42.

## கிறிஸ்துவின் மனித அவதாரம்.

வெண்பா.

அன்னை பொருட்டால் அவதார மாய்ப்பிறந்த
உன்னதப் பிதாவின் ஒருமைந்தா!—மன்னு!
அருணோ தயமே! அனந்தபே ரின்ப
கருணா கரனே! கா, கா.

இராகம், காம்போதி. அடதாளசாப்பு.

பல்லவி.

கருணா கரனே! பரமே சுரனே!
கனிவினை தீர்க்க வந்த தனிமுதல் வசு நாதா!

சரணங்கள்.

க

அருணோதயமே! பரமாதிசயமே!
அனந்த நன்மைத் தயாப முனைந்த உண்மைப் பிரதாப
அரிய பரம்பர தரும சிதம்பர[1]
அறிவி னிலங்கிய முறையின் விளங்கிய
அருத்த வேத புராண விசித்திரன்,
பெருத்த ஞானப்பிர தாப சுமித்திரன்,
அந்தரம் மேவிய சுந்தர நாயகன்
சந்ததமே ஒளிர் விந்தைமெய்த் தாயகன்
அகிலம்[2] அடங்கலு மகிமை பெறும்படி,
அனை மரியம்மனைத் தனையனாய் முன்னனை
ஆதியிலே ஆதம் ஏவையர் ஆடிய
பாதகம் மாற மகா தயவாய் வரு.— கரு

உ

பரன் ஆதியிலே திருவாய்மையிலே
பகுத்து விந்தையினோடு மகத்வ சந்தோட நீடு

[1] ஞானம். [2] பூமி.

34



பரிவுடனே அறு தின மதிலே உயர்
பரம் உலகியாவையும் அருளிய நேரமே
பாருலகந் தனில் ஓர் மனுடன்றனை
ஏவையர் என்றொரு பாவையுடன் செய்து,
படர்ந்த காவிடை இரண்டு மரந் தர,
அடர்ந்த சீவியம் நன்றறி வென்றொரு
பழத்திலே புசியாமல் விலக்கின
வழிப் படாது பசாசுட சொற்படி
பாவையர் ஆர்த்தின தீவினையால் நர-
தாவீது சேயென மேவு குணநிதி— கரு

௩

மறையாரணனே! நிறை பூரணனே!
வலமைக் கொரேயோவாவே! தலமைத்தேவாதி தேவே!
வருகையை மாமறை இருடியர் ஓதின
வரிசையின் ஓர் தவி தாசனின் ஊர் அயல்
மந்தையின் ஆயர்கள் வந்து பணிந்தெழ,
விந்தை மெய்ஞ் ஞானியர் சிந்தை உவந்திட,
மகிழ்ந்து வானவர், பூதலர், பாதலர்
புகழ்ந்து பாடியும் ஆடியுமே தொழ,
மரியவள் உந்தியில் அரிய பரன் திரு
மகனென அன்புடன் நரர் உருவங் கொடு[1]
மானிடர் யாவரும் வானிடமே பெற,
மாடடையுங் குடில் நீடிய சுந்தர— கரு

வே.—சா.

சந. (௬௰) THE SPOTLESS SON OF GOD BECAME MAN. 43.

## மாசில்லான் மனிதனானார்.

வெண்பா.

உன்னதத்தி லேசின் ஒளிர்பரிசுத் தாவியினால்
கன்னியாள் திரிதன் கருப்பத்தில்—சென்மித்தே,
ஆசில்லா மானிடன் ஆனார்; செயசெயா,
மாசிலாத் தேவபுத்தி ரன்.

[1] கொண்டு.

இராகம், சைந்தவி. ஆதிதாளம்.

பல்லவி.

மாசில்லாத் தேவ புத்திரன்
மானிடனானார்; செய, செய.

சரணங்கள்.

க

ஆசீர் வாதமே—கன—தேசார்[1] நீதமே—ஒளிர்
காசினி[2] மீதுநி நேச பிர காச விண் வாச கிருபாசன— மாசி

உ

சத்திய வாசகர்—சதா—நித்திய தேசிகர்—வளர்
பெத்தலேம் ஊர்தனிலே கரி சித்துக் கன்னியாஸ்திரி வித்தி
னில்— மாசி

௩

அந்தரம், பூமியும்—அதி—சுந்தர நேமியும்[3]—தினம்
ஐந்தொரு நாளினிலே தரு முந்தின மூன்றிலொன்றாகிய— மாசி

வே.—சா.

௪௪. THE BIRTH OF CHRIST. 44.

## கிறிஸ்துவின் பிறப்பு.

இராகம், கியால் இந்துஸ்தான்.

பல்லவி.

ஆ! அம்பர உம்பர மும்புகழுந்திரு
ஆதிபன் பிறந்தார்.

அநுபல்லவி.

ஆதிபன் பிறந்தார்!—அமலாதிபன் பிறந்தார்!— ஆ

1 தேச + ஆர் = ஒளிநிறைந்த. 2 பூமி. 3 சமுத்திரம்.



சரணங்கள்.

க

அன்பான பரனே!—அருள் மேவுங் காரணனே!—நவ
அற்செய—சச்சிதா—ரட்சகனாகிய உச்சிதவானே!— ஆ!

உ

ஆதம் பவமற—நீதம் நிறைவேற—அன்று,
அவ்விராவினில்—வெல்லைவடியினிற்;
புல்லணையிற் பிறந்தார்.— ஆ!

௩

ஞானர்கள் தேட,—வானவர் பாட,—மிக
நன்னய, உன்னித—பன்னரு மேசையா,
இந்நிலம் பிறந்தார்!— ஆ!

௪

கோனவர் நாட,—தானவர் கொண்டாட,—என்று
கோத்திரர் தோத்திரஞ் சாற்றிடவே,
யூத கோத்திரன் பிறந்தார்!— ஆ!

௫

விண்ணுடு தோண,—மன்னவர் பேண,—ஏரோது,
மைந்தனின் சிந்தையழுந்தி, கலங்கிட
விந்தையாய்ப் பிறந்தார்.— ஆ!

ஜே.—யா.

௪௫. THE ETERNAL SON OF GOD BECOMES MAN. 45.

## கிறிஸ்துவின் பிறப்பு.

வெண்பா.

சீயோனின் மன்னா! திவ்விய கிருபாசனா!
பாவிகளின் முன்னா! பிரசன்னா!—பூவில் வரு
தாவீது மன்னா! தருமதிரு வாசனா!
தேவ சேயோ! ஓசன்னா!

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

தேவ சேயோ![1] தேவ சேயோ! சீவவான
மன்னு! மா திவ்விய கிருபா சன்னு!
பாவிகளின் பிர சன்னு!
தேவ சேயோ! தேவ சேயோ! ஆண்டருள்
செயும் ஓசன்னு!— தேவ

சரணங்கள்.

க

ஆவியாய் அனுதியாய் அமர்ந்த தேவ சேயோ!
மூவுலகனைத்தையும் முன்தந்த தேவ சேயோ!— தேவ

உ

சுந்தரமிகும் பரமானந்த தேவ சேயோ!
கந்தர் மகிழ்ந்தடிபணிந்த தேவ சேயோ!— தேவ

ங

செங்கோல் தவிதிறைஞ்சுக் தங்க தேவ சேயோ!
மங்காக் கிருபை சிறந்த சங்கைத் தேவ சேயோ!— தேவ

ச

சீரார் மானிட அவதார தேவ சேயோ!
ஓராதி மூலரண வீர தேவ சேயோ!— தேவ

ரு

மாட்டுக் கொட்டிலில் பிறந்த வல்ல தேவ சேயோ!
மீட்டுக் கொண்டெமைப் புரந்த மேன்மை தேவ சேயோ!— தேவ

வே.—சா.

1 பாலன்.



சகூ. CHRIST THE REDEEMER BORN. 46.

# கிறிஸ்துவின் பிறப்பு.

வெண்பா.

அந்தோ! பரமண்டலந் திறவுண்டண்டரெல்லாம்
சந்தோடங் கொண்டாடிச் சந்திக்க,—வந்தான்;
செக திச நேச திவ்விய கேசர் யேசு
மகராச ராசபிதா மைந்தன்.

இங்கிலிஷ் இராகம். ஆதிதாளம்.

பல்லவி.

ராச ராச பிதா மைந்த தேசுலாவுசதா நந்த,
யேசு நாயகனர் சொந்த மேசியா நந்தனே!

அனுபல்லவி.

செக தீசநேசரன், சுக நேச மீசுரன் மக— ராச

சரணங்கள்.

க

மாசிலா மணியே! மந்தர ஆசிலா அணியே! சுந்தர
நேசமே பணியே, தந்திர மோசமே தணியே;
நிறைவான காந்தனே! இறையான சாந்தனே! மறை,— ராச

உ

ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே மூந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே;
பத ஆமனுமனு! சுதனுமனுமனு! சித[1]— ராச

ங

ஆதி காரணனே! சத்திய வேத பூரணனே! நித்திய
போத தாரணனே![2] துத்திய, சீத ஆரணனே!
மரியாளை தோத்ரனே!ஸ்திரியேளை கோத்ரனே! துணை— ராச

1 ஞானம். 2 தியானவன்.

௪

மேன்மையா சனனே! நன்மை மேவு போசனனே! தொன்மை
யான்மை வாசனனே! புன்மை பாவ மோசனனே!
கிருபா கரா நரா! சருவேசுரா! பரா! கிரீ— ராச

௫

வீடுதேடவுமே, தந்தை நாடுகூடவுமே, மைந்தர்
கேடு மூடவுமே, விந்தையோடு பாடவுமே,
நரவேட மேவினான்; சுராதி கோவினான்,[1] பர— ராச

வே.—சா.

---

௪௭. GOD BECOMES MAN. **47.**

## தேவன் மனிதனானார்.

வெண்பா.

காரணமோ? மானிடர்கள் காட்சியோ? சொல்லுகின்ற
ஆரணமோ? என்ன அதிசயமோ?—பூரணமே!
ஆனதெலாஞ் செய்த அருளி யிருப்பதற்கு
வானமோ மாட்டுக் குடில்!

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

வானம் பூமியோ? பராபரன்
மானிடன் ஆனாரோ? என்ன இது?

அநுபல்லவி.

ஞானவான்களே! நிதானவான்களே!— வானம்

சரணங்கள்.

௧

பொன்னகர் தானும், உன்னதமே நீனும்
பொறுமைக் கிருபாசனத்துரை,
பூபதி வந்ததேததிசயம்—ஆ! என்ன இது?— வானம்

[1] மேன்மையோன், மோட்சத்தான்.



௨

சத்திய சருவேசன், துத்திய கிருபைவாசன்,
நித்திய பிதாவினோர்,
மகத்துவக் குமாரனோ இவர்?—ஆ! என்ன இது? வானம்

௩

அருபரூப சொரூபன், கெருபின் வாகன தீபன்,
வீரியப் பிரதாபன், சீனா
வெற்பிலிருந்தவன் கற்பனை தந்தவன்—ஆ என்ன இது? வா

௪

மந்தைக் காட்டிலே மாட்டுக்கொட்டிலிலே,
கந்தைத் துணியைப் பொதிந்த குட்சி,
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி,—ஆ! என்ன இது?
வானம்

௫

வேறே பேரல்ல, சுரர் விண்ணவர் ஆருமல்ல,
மாறிலாத ஈறில்லாத வல்லமைத் தேவனே
புல்லில் கிடக்கிறார்.—ஆ! என்ன இது? வானம்

௬

சீயோனின் மாதே, இனிச் சேணத்தரியாதே,
மாயமென்ன உனக்குச் சொல்லவோ?
வந்தவர் மணவாளனல்லவோ?—ஆ! என்ன இது? வானம்

வே.—சா.

---

௪௮. (௪௨) THANKSGIVING THAT THE SON OF GOD IS BORN INTO THE WORLD. **48.**

## துதி மிகுந்த சுதன் மனிதனானார்.

வெண்பா.

பெதுகலேசேம் ஊரின் பிரபலமாய்த் தாவீதின
வித்தின் ஒளிவாய் விளங்கியே,—முற்றும்
அதம்சூழ்ந்த வாழ்வை அளிப்பதற்குத் தேவ
சுதன் பிறந்தார்; நெஞ்சே! துதி.

ராகம், சகாணு. ஆதிதாளம்.

பல்லவி.

சுதன் பிறந்தார், சுதன் பிறந்தார்;
துதியிரு தேவ சுதன் பிறந்தார்—

சரணங்கள்.

௧

சருவ தயாப சகாய பிர தாப
கிருபைப் பிதாவின் தற்சுபாவ—தேவா!— துதி

௨

சரீரம் இல்லாத சதாபதி விஞ்ஞை
பர சொருவக் குணு தீத[1]—தேவா!— துதி

௩

பிரமாபிஷேக பட்ச சிநேக
பெருமான் மகத்வத் திரியேக—தேவா!— துதி

௪

மனுடரை மீட்க, மறுபிறப்பாக்க,
கனிவினை யாவையும் தீர்க்க,—தேவா!— துதி

௫

இர்ஙிலத்தை நாடி, முன்னணையைத் தேடி,
கன்னியாஸ்திரி யிடம் கீடி,—தேவா!— துதி

௬

பெத்தலேகம் ஊரில் மெய்த்தவீதின் வேரில்
பத்தர்களுக்காக இப்பாரில்—தேவா!— துதி

௭

தேவர்கள் போற்ற, சோபனங்கள் சாற்ற,
மூவரசர்கள் பணிந் தேத்த—தேவா!— துதி

வே.—சா.

[1] கடவுள் தன்மை.



௪௯. (௪௯) GOOD NEWS TO MEN. 49.

*The Birth of Christ and its benefits.*

## கிறிஸ்துவின் பிறப்பு என்னும் நல்ல விசேஷம்.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

நல்ல விசேஷங் கேளுங்கோ,—ஏசு
நாதன் திரு அவதாரம் செய்த மகா
நல்ல விசேஷங் கேளுங்கோ.

அநுபல்லவி.

நல்ல விசேடம் இதுவாம், உலகில் சமஸ்த
நரர்க்கும் சுரர்க்கும் பரத்தினில்
வல்லமை ஆதி[1] தன் மைந்தனைத் தந்து,
மனிதரை ரட்சிக்க மா அருள் கூர்ந்த இந்,— நல்ல

சரணங்கள்.

௧

சொல்ல முடியா அன்பிதே!—தம்
தொண்டரைப்[2] போல் பகையாளர் தம்பால் வைத்த—
சொல்ல முடியா அன்பிதே;
துல்லல் அகற்றி, அறிவில்லா எங்களின்
ஆத்தும நேசர் குழந்தையதாக,
இல்லம் இல்லாமலே காவிகள் கொட்டிலி
லே நரர் ரூபமதாய்,
எல்லை இல்லான் தந்தையாக இருக்க, மா
ஏழை மனிதர் அன்னையுடன் தந்தையாய்
தொல்லை அறக்க என் றிங்கெழுந்தான்; மகா
சூட்சமதாகிய மாட்சிமையாம் ஒரு— நல்ல

[1] தேவன். [2] அடியார்.

உ

மாந்தர்க்கு நல்ல கால—மாம்
மரண சாபத்துள் அடைபட்டொடுங்கும்—மாந்தர்க்கு—
சாந்தம், பொறுமை, சுகுணம் அநேகம்,
சாற்றெளிதாமோ? கிருபைப் பிரவாகம்
வாய்ந்த[1] நரர் மீதில் அன்பு சொலவென்றால்,
வானவர்க்கும் அரிதே;
சேர்ந்து, பணிந்து, முழந்தாள்ப்படி இட்டு,
செப்புவோம்; நம் ஏசு நாதர் பெரும் தயை
ஆய்ந்தவர்[2] சொற்படியே நாம் நடந்திடில்,
அன்பும், அருளும் அனைத்தும் உடன் உண்டாம்;— நல்ல

ங

சருவ சிருட்டிகர் அவர்—தேவ சாயலுடன் நரர் ரூபம்
ஒன்றாகிய—சருவ—
தரும் உலகில் அஞ்ஞானம் கெட நம்மைத்
தானே ரட்சிப்புக் குரியவர் ஆக்கவே,
புரை[3] இலாத தயை ஆழங் கொண்டு மூப்
பூமி புரப்ப வராம்;
இரங்கும் தன்மையோ டுண்மை மிகுந்த நல்
இன்ப ஆசாரியன் தீர்க்கன் இறை யென
பெருங் கருணை, மேலாந் தொழில் செய்தருள்
பிதாவிற் கொன்றான குமாரன் பிறந்த மா— நல்ல

கா.—உப.

---

## ருo. (சரு) SIMEON BLESSES THE INFANT SAVIOUR. 50.

# சிமியோன் அடைந்த பாக்கியம்.

### விருத்தம்.

க

குற்றமும், துணையும் இல்லாத் தூயவன் எட்டாம் நாளில்,
பத்தனும் யோசேப் போடு பாரி யாம் மரியம் மாளும்
பெத்தலேம் பதியை விட்டு, பெருசலேம் என்னும்
நற்றவர்[4] முனிவர் வாழும் நகர்தனைக் கெழுந்திட்டாரே.

[1] பெற்ற.
[2] ஆராய்ந்து + அவர்.
[3] குற்றம்.
[4] நல்தவர்.



உ

பேதகம் இல்லா ஏசு பிள்ளையும் கொண்டு சாலேம்
போதகர் உறையும் ஆல யம்புகுந் திருக்குங் காலை,
நீதறு பாலன் தன்னைச் செங்கரந் தன்னில் ஏந்தி
மாதவச்[1] சிமே யோனும், மனம்மகிழ்ந் துரைசெய்வானே.

---

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

### பல்லவி.

என்ன பாக்கியம்; எவருக்குண்
டிந்தச் சிலாக்கியம்?

---

### அனுபல்லவி.

விண்ணவரும், புவிமேவும் முனிவர்களும்,
மன்னருங் காணா மகிபனை யான் கண்டேன்;— என்

---

### சரணங்கள்.

க

[illegible]னகந் தானோ,—அல்லதிது—வையகந் தானோ?
[illegible]ய்[2] சென்று எழுந்த அரும்பொருள்
கா[illegible]ம்[3] தன்னில் என் கையில் அமர்ந்தது;— என்

உ

போதும், இவ்வாது—பாகதி—போவேன், இப்போது;
ஏதேன் என்ற பரதீசம் வந்திட்டது;
எண்ணில்லாத செல்வம் என்கையில் கிட்டுது;— என்

ங

சாமி[illegible]யக் கண்டேன்;—மகானந்தம்—சாலவுங்[4] கொண்டேன்,
காமரு தேங்கனி[5] வாய்கள் துடிப்பதும்,
[illegible]ண்ணும் மனமும் களிக்க விழிப்பதும்;— என்

[1] மாதவ = மகத்தவமுள்ள.
[2] மாட்டுக்கொட்டம்.
[3] கட்டு.
[4] மிகவும்.
[5] அழகும் இனிமையுமுள்ள கனிபோன்ற.

௪

வெல்லையில் வந்தாய்;—அடியேன்—விண்ணப்பம் உவந்தாய்;
கல்லுங் கடலும் பணிசெய் உயர்பரன்
பல்லுயிர் வாழப் படியில்[1] உதித்தது;— என்

௫

அன்னமும் நீயே;—கிடைக்கருஞ்—சொர்ணமும்,[2] நீயே;
மின்னுறு மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ?— என்

கா.—உப.

## ௫௧. (௪௭) CHRIST'S ADVENT AND ITS BENEFITS. 51.

# கிறிஸ்துவின் பிறப்பால் உண்டான நன்மைகள்.

வெண்பா.

பேய்இனங்க ளோடப், பெரும்பவவேர் வாட, நித்தன்
செய் இனங்கள் கூடிச் செயம்பாட,—தியர்இனம்
மால்அடைய, பத்தர் மகிழ்வடைய, தேவசுதன்
மேல்உலகை விட்டுவந்த னர்.

இராகம், டப்பா. ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧

மேலோகத்தை விட்டு,—கெடு—பூலோகத்துன் பட்டு,—நமை
மீட்க ஏழையானார்,—உயர்—மோக்ஷ லோகக் கோனே.

௨

மோக்ஷ லோக வாழ்வில்-நமைச்—சேர்க்க மகா தாழ்வில்—ஒரு
முன்னணை உவந்தார்;—உயர்—மன்னர் நிலை தந்தார்.

[1] பூமி. [2] தங்கம்.



௩

தந்தார், நீதி ஆடை-தரக்-கந்தை போர்த்தெம்பீடை—எலாம்
தாமே ஏற்று நட்டார்[1]-களைத்-தாமே ஆற்றிவிட்டார்.

௪

ஆற்றல் கெருபீன்கள்-காவல்-மாற்றவே, தேன் தீன்கள்-அவர்
அன்றே மீண்டு தந்தார்;—அதற்-கென்றே ஈண்டு வந்தார்.

௫

வந்தார்; தூதர் பாட-உடன்-விந்தை ஆயர் தேட,—அவர்
மாட்டகத் தெழுந்தார்;-பேயின்-கூட்டத்தார் அதிர்ந்தார்.

௬

பேய்க்கணங்கள் ஓட-அவர்-சேய்க்கணங்கள் பாட,—எந்தப்
பேதமையு மாள,-வேத-போதமது வாழ.

௭

வாழு, ஏக நாதா!-நீ இவ்-ஏழைகளின் தாதா!—தேவ
வரங் கொண்டு வாராய்;-எங்கள்-உரங்களைச்[2] சேராய்.

தே.—மு.

## ௫௨ (௪௯) THE HUMILIATION OF THE SON OF GOD. 52.

[An address to the infant Jesus.]

# தேவகுமாரனின் தாழ்ந்த நிலைமை.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

திருவாய் திறந்தினை தயவாய் வசனித்தால்,
கிருபாளித்தானே.

[1] அன்பர்க்கே. [2] இருதயம்.

அநுபல்லவி.

சுரர் லோகம் அதனிலும் சுகமோ, முன்னணை?
சொல்லும், மனுவேலரே! நல்ல மன துள்ளவரே!— திரு

சரணங்கள்.

௧

மா லோக பதங்கள் மனிதர் தமக்களிக்க,
மண் உலகினில் நீர் தான் வரலாமோ?
பூலோகமும், சுவர்க்க புரியும் படைத்தோய்; இந்த
புல்லணைச் சுதந்தரம் பெறலாமோ?
தேவ லோகத்தின் உம்பர் திவ்ய சபை நடுவில்,
தேவரீர்க்கிந்த அழும் குரல் ஆமோ?
சால உலகமைத்த சுவாமி! உமக்கிந்த
சதி ஏரோதே ஓர் சிறு விரலாமோ?— திரு

௨

சேயர் உருவெடுக்கத் தேய்த்திடமில்லாமல்,
செல்லே வனத்தினில் அல்லல்படுவானேன்?
பாயும் பசுவும், கன்றும், நீரும், அன்னையும் ஒன்றாய்,
பசிய முன்னணைதனில் இடைவானேன்?
ஆயர்[1] குழாங்கள் எல்லாம் தோயும் சுகந்தமொடு
அரிய பொன் தூபம் உமக் கிடுவானேன்?
தேயத் தரசனுக்காய், மா எகிப்பத்திலோடி,
செல்லேக் குடிலும் விட்டு விடுவானேன்?— திரு

௩

எத்திசையரும் தொழும் எங்கள் ரட்சகனே நீர்,
எந்த விதமும் அதைச் சொலவேணும்;
சுத்தர் பரிசுத்தர் எல்லாம் தொன்றுமுதல் காத்திருந்த
திவ்ய ரட்சகன் என் றெப்படித் தோணும்?
பத்தர் எழுதிவைத்தார், கர்த்தர் பிறப்பார் என்றே,
பாக்யம் நீர் தானே சொல்லும்; சீர் பூணும்
மூத்தொழிலுக்கும் வல்ல சத்ய பராபரன் ச
மூகத் தூதனும் நீர் தானோ? என காணும்— திரு

ச.—உப.

[1] இடையர் கூட்டம்.



௫. (ருய) HE HUMBLED HIMSELF TO BE BORN AMONG THE LOWLY. 53.

## கிறிஸ்துவின் தாழ்மை.

பல்லவி.

யார் இவர் ஆரோ? யார் இவர்; ஆரோ?
யார் இவர்? பரன் வார்த்தை, மாமிசம்
ஆயினர் இவரோ?

சரணங்கள்.

௧

சீர் ஐந்து குணம் இல்லாதோர் போலே,
பாரினில் ஓர் எளிய கன்னிகையின் யாரி
பாலர் ஆனரோ?—

௨

ஊரில் ஓர் இடமும் உதவிட இல்லையோ?
சீர் அல்லாக் குடியில் பிறந்தார் அதி யாரி
சயம் ஆனவரோ?—

௩

கர்த்தத்துவமோ காணுது, தோள்மேல்;
சுற்றிவைக்கப் பழந்துணியோ? இவர், யாரி
தூங்கப், புல் அணையோ?—

௪

சேனை தூதர் இதோ சிறப்புடன் பாட,
கானகக் கோனர் காண வர, இவர் யாரி
கர்த்தர் ஆவாரோ?—

௫

மூந்து தீர்க்கர் பிதா மொழிந்த தெதிர் பார்த்த
சொந்தமான சனம் இஸ்ரவேலின் யாரி
சூரியன் இவரோ?—

௬

பாவியான என் மேல் பட்சமே மிகவாய்
சீவனைக் கொடுக்கப் பிறந்த என்றன் யாரி
சீவ நாயகனோ?—

வே.—சா.

## ௫௪. (௫௧) HE WHOM ANGELS PRAISE WAS BORN A LOWLY MAN. 54.

# கிறிஸ்துவின் தாழ்மை.

விருத்தம்.

சுடர்விரி பரம நாட்டில் சுயம்புவாகிய அநாதிக்
கடவுளே! ஏசு நாதா! கன்னியின் வயிற்றில் மாந்தர்
சடம்புகுந் துலகம் மேவி தாழ்மையில் உதித்ததேனோ?
விடம்உள கனியை ஏவை விரும்பி உண்டதினால் அன்றோ?

இராகம், நாட்டை. சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧

சுந்தரப்பராபரனே!—பரி—சுத்தன் கிறிஸ்தெனும் சித்தியனே!
மைந்தனாய்ப் பிறந்தீரோ?—சுவாமி!
மாங்கிஷத்தில் உருவானீரோ?

௨

வானதூதர் போற்றிடவே,—உம்மை—வாழ்த்திப் புகழ்ந்து
கொண்டேத்திடவே,
கானத்தொனி ஏற்றிருந்த—சுவாமி!
காட்டு மடத்தில் உதித்ததென்ன?

௩

ஆசை மிகும் ஆபிரகாம்—உரு—வாகும் முன், விண்தல மீதிருந்தும்,
நேசமுடன் பிள்ளை தந்தும்,—அந்த
நீதிமான் வங்கிஷம் ஆனதென்ன?

௪

ராசன் தவீ தாண்டவனும்,—அவன்—நன்னும்[1] பல நிமையில் மீண்டவனும்,
தாசன் மகன் ஆனதும் ஏன்?—சுவாமி!
தாவீதின் சந்ததி மேவினதேன்?

[1] அவனுக்கு வந்த.



௫

ஏதன் வனக் காவினிலே,—அன்—றெட்டிப் பறித்த பழத்தினிலே
மாது வினைத் தீதகல,—சுவாமி!
மா நிலத்தில் மனுவானீரோ?

௬

பொங்கு[1] பவ நாசனனே!—விண்ணோர்—போற்றிப் புகழுஞ் சிம்மாசனனே!
தங்குதற் கிடம் இல்லையோ?—சுவாமி!
தாபரிக்க[2] ஒரு வூர் இல்லையோ?

ஏ.—உவா.

## ௫௫. (௪௮) THE SOUL RELENTING IN VIEW OF THE CONDESCENSION OF CHRIST. 55.

# இயேசு காட்டிய இரக்கத்தால் மனதுருகுதல்.

வெண்பா.

தந்தை அருளுந் தனையன் உயிர் சகிக்க
வந்த தயவை மறவாதே;—சிந்தனைசெய்
தான் உடலும் அழியா திருப்பதற்குப்
பாவி! மனதுருகிப் பார்.

இராகம், ஆனந்தபைரவி. ஏகதாளம்.

பல்லவி.

பாவி! மனதுருகே.

அநுபல்லவி.

ஆ[3] வீட்டில் ஏர்[4] சுட்டு தேவாட்டுக் குட்டிக்கு— பாவி!

[1] பெருகிய.
[2] தங்கித்தரிக்க.
[3] பசு.
[4] அழகு.

சரணங்கள்.

௧

மாது தின்ற கனிவினை போக, மனுடர் வடிவமாக—நம்
வல்லமைப் பிதாவின் மைந்தன் புல்லதில் பிறந்தார்; அந்தோ!
—பாவி!

௨

வேத வாசகப்படி நெறிகாட்ட, வேதாளக்குடி ஓட்ட,—இதோ!
வித்தக திரித்துவ ஏக தத்துவ சொரூபன் வந்தார்,— பாவி!

௩

விந்தைத் திருமுதல் நரர் உரு வுவந்தார்,
கந்தைத் துணி அணிந்தார்;— இப்படி
மெத்தனவ ராகக் கரி சித்துனைப் புரக்க வந்தார்;— பாவி!

௪

மோட்டிமையைத் துறந்தார்,[1] காட்டினிடை சிறந்தார்,
மேன்மை அனைத்தும் மறந்தார்;—இந்த
விந்தைக் கோலத் துன்னைக் கண்டு சந்திக்க வந்திருக்கிறார்.—
பாவி!

௫

எரிந்தகாணலை மூறியார், பொரிந்த திரியை அவியார்,
நிர்ப்பந்தர் தமைப் பிரியார்;— இவர்
நீதிமான்களை அல்ல, உனைப்போல் பாதகரைத் தாங் தேடி
வந்தார்.—
பாவி!

வே.—சா.

௫௬. (௫௨) THE HISTORY OF CHRIST. 56.

## ஏசுகிறிஸ்துவின் விருத்தாந்தம்.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧

தேவ சுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க,—மனு
ஜென்மமாக வன்மையுள்ளோன் தன்மையாய் வந்தார்,

1 விட்டார்.



௨

வந்த பின் தன் தந்தையர்க்கு கந்தபடியே—பர
மண்டலன் பூ மண்டலத்தோர் தொண்டன்போல் ஆனார்.

௩

தொண்டனாகி, அண்டர்[1] கோமான் விண்ட மறையே[2]—பரி
சுத்தம், மகா சத்யம், மிகு புத்திக்கும் ஊற்றே.

௪

புத்தி மிகு வித்தமறை யைத் துலக்கவே,—பல
போதகன்மார் பூதலத்தின் மீதில் தெரிந்தார்.

௫

பூதலத்தில் வேதமுறை ஓதி நரர்க்குள்—அற்
புதங்கள் செய்து சிதங்கள் ஓதிக் கதங்களை[3] வென்றார்.

௬

வென்றனர் பேயின் திரமும், பொன்றும்[4] வையமும்—பவ
வேரும் சாவின் கூரும் அழித் தார், ஏசுநாதர்.

௭

ஏசு உலக ஆசைகளின் மாசறுக்கவும்,—மாந்தர்க்
கேடேற்றத்தைத் தேடவும் மிகு பாடுகள் பட்டார்.

௮

பாடுபட்டோர் சிலுவையி னூடிறந்தே ஓர்—சிறு
பாதலங்[5] கண்டே திரு ஊர்க் காதிபன் சென்றார்.

௯

ஆதிபனைக் காதலித்தேப் போதும் நடந்தால்—திவ்விய
ஆவிவரமும் பரம வாழ்வும் பெறுவாய்.

தே.—மு.

1 வானவர், அரசன். 3 பிசாசு, பாம்பு. 5 பாதாளம்.
2 வேதம். 4 அழியும்.

## ௫எ. (௫௩) THE HISTORY OF CHRIST. 57.

# கிறிஸ்துவின்
# அதிசயிக்கப்படத்தக்க சரித்திரம்.

### வெண்பா.

வானுலகோர் மாந்தர் மனோவாக்குக் கெட்டாத
ஞானம்அனு காத சருவேசன்—ஞானத்
திதமுறையில் பாடுபட்டி ரட்சித்த தன்றோ?
அதிசய மானபுண்ணி யம்.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

### பல்லவி.

அதிசயமான புண்ணியம்,—நமைப் படைத்த
ஆண்டவர் பாடுபட்டு, மீண்டிரட்சித்த செயல்,
அதிசயமான புண்ணியம்.

### அநுபல்லவி.

சதி வினை அலகை சொலியபடி, விலக்கிய
தரு மிசை கனிநுகர் அதம் வகை பவம் அற,
மதி மிகு தேவ குமாரன் இப் பூமியில்
வந்ததும், சீவனைத் தந்தெமைப் புரந்ததும்,— அதி

### சரணங்கள்.

க

வானம் புவி படைத்த நாதன்,—மனுவதாக
மாட்டுக் கொட்டிற்குள் வந்து மதலையாய்ப் பிறந்ததும்,
வறுமையதாய்த் திரிந்ததும்,—மறுதேசத்துக்
கீனமதாய் எழுந்ததும்,—எட்டாவது நாள்
இரத்தம் சிந்தி விருத்த சேதனம்பண்ணப்பட்டு
எளிமையதாய் வளர்ந்ததும்,—யோவானிடத்தில்
ஸ்நானமதடைந்ததும், கானகமதனிடை
சத்துரு சோதனை முற்றிலும் செயித்ததும்,
ஞானத்தைப் போதித்தற் புதமிகப் புரிந்ததும்,
நாயகன் பாடுறு நேயம தடைந்ததும்,— அதி



உ

பாங்காக சீடர் தமது—பதம் விளக்கி
பரிசுத்த நற்கருணை பக்ஷமாக அருளி,
பல பல புத்தி சொன்னதும்,—பரிந்திரவில்
பூங்கா வனத்தில் சென்றதும்,—பொறுமையாக
புண்ணியன் ஆத்துமத்தில் புகலருங் கஸ்தி வாதை
பூண்டு திகிலடைந்ததும்,—புவி அனைத்தும்
தாங்கினன் அழுதுகொண் டேங்கி, பிரலாபித்து;
தரையில் மும்முறை முகம் பட விழுந்ததும், அவர்
ஓங்கிய செபங்களும், தபங்களும் அவஸ்தையில்
உதிரப் பிரவாக வேர் வைகள் பெருக்கானதும்,— அதி

ந

ஆத்துமப் பாடுபட்ட பின்—ஆகாத யூதாஸ்
அண்ணலை முத்தியினால் எண்ணம் அறவே காட்டி,
ஆங்காரமாய்க் கொடுத்ததும்,—அடர்ந்து யூதர்
தோற்றி வந்தே வளைந்ததும்,—சுற்றிலும் நின்று,
துன்னிய கயிற்றினால் உன்னி வரிந்து கட்டி,
துடிக்கப் பிடித்திழுத்ததும்,—துடுக்காக
மாற்றம துரைத்திழுத் தேகி அன்று முன்னும்
வஞ்சகனை காய் பா முனும் விட, அவர்
சாற்றிய தூஷணம், நிந்தைகள், துப்புதல்
சகலமுஞ் சகித்து, உத் தரித்ததும், பொறுத்ததும்,— அதி

௪

பொங்குங் குருக்கள் கூட்டம்—பொறாமையினால்
பொந்திப் பிலாத்துவின்பால் எந்தை சுதனைக் கட்டிப்
போய், அவர்க் கொப்புவித்ததும்,—பொல்லாத மன்னன்
வங்கையர்க் கிஷ்டமாக,—மரணத் தீர்ப்பு
வழுத்த, கற்றூணில் சேர்த்து, அழுத்தமாய்ச் சேர்வை எல்லாம்
வாரினாலே அடித்ததும்,—வசைகள் சொல்லி,
பங்கமதாக முண் முடி தலைக் கறைந்ததும்,
பயித்தியன் எனப் பல சோரணி புரிந்ததும்,
அங்கொரு சிலுவையைத் தோள்மிசை சுமந்துகொண்
டற்புதன் கொலைக்களத் தொப்புடன் நடந்ததும்,— அதி

௫

தேவன் இக்கோலமாகவே—செருக்களத்தில்
சென்று கொல்கதா என்னும் குன்றிற் கெழுந்தின்பின்

திருடர் இருவர் நடுவே,—சிலுவைதனில்
பாவிகள் தான் அறைந்ததும்,—பரிகாசங்கள்
பண்ணவும், நிருவாணமாய் அண்ணல் தொங்கினதுவும்
பாய்ந்த குருதி வெள்ளமும்,—பயங்கரமாய்
ஆவி விட்டிறந்ததும், சீவனைக் கொடுத்ததும்,
அயல் விலாத் திறந்ததும், அடக்கப்பட்டதும், அப்பால்
மேவி அங் குயிர்த்ததும், எழுந்ததும், நடுவிட
மீள்வதும், ஏசுநா யகர் அருள் செய்வதும்.— அதி

வே.—சா.

௫அ. (௫௪) THE LIFE OF CHRIST. 58.

## இரட்சகருடைய சரித்திரம்.

இராகம், தன்யாசி. ஆதிதாளம்.

பல்லவி.

ஜெகநாதா! குருபர்நாதா! திரு
அருள் நாதா! ஏசுபிரசாத நாதா!

அனுபல்லவி.

திகழுறுங்[1] தாதா! புகழுறும் பாதா!
தீதறும் வேத போதா!— ஜெக

சரணங்கள்.

௧

முற்காலம் ஆதிமைந்தர் மோசப் பிசாசு தந்த்ர
மொய்[2] கொண்டு கனியுண்ட பழியாலோ?
நற்காலம் நீ தெரிந்து, நவின்ற[3] வண்ணம் பரிந்து,
நரதேவனாக வந்தாய் மொழியாலோ?— ஜெக

௨

பொருள், புகழ் இன்பம், என்னும் புன்மையை விட்டு மன்னும்
பொறுமை, தாழ்ச்சி தரித்திரங் கொண்டாயே;

[1] பிரகாசம். [2] பெருமை. [3] சொல்லிய.



தெருள்[1] சுரந் தயராது, செறிதுன்பம், துயர் ஏதும்
தெவிட்டாத பால் என்ன உண்டாயே.— ஜெக

௩

எளிய வேஷந் தரித்தே, இங் கவதரித்தாலும்,
இமையோர் வந் திறைஞ்சிடத்[2] தெரிந்தாயே;
ஒளிசெய்யும் மணிமுடி உயர்மன்னர் தொழும்படி,
உடு[3] வழி காட்டிடப் புரிந்தாயே.— ஜெக

௪

அரும் தவன் கையில் தங்கி, அன்பின்பக் கடல் பொங்கி,
ஆலயத்தில் துதிக்கக் களித்தாயே;
வருந் தவ மதியால் முன் மற[4] மன்னன் தேடிட, உன்
மலர் முகங் காட்டாமல், ஒளித்தாயே.— ஜெக

௫

மக்கள் உளக் களங்கம்[5] மாசற்றொளி விளங்க,
மதுரப்ரசங்கம் யார்க்கும் உரைத்தாயே;
சிக் கடர் துன் மனத்தைத் திருத்தி, அறத்தின் வித்தை
திருத் தயை கூர்ந் தெவர்க்கும் விதைத்தாயே.— ஜெக

௬

பேரருள் கொண்டல்[6] என்னப் பேருலகெங்கும் துன்ன[7]
பெருமிதமாக[8] நின்று பெய்தாயே;
நேருற மக்கள் உயிர் நிலமதில் நன்மைப் பயிர்
நித்தியமாய் வளரச் செய்தாயே.— ஜெக

௭

இஷ்டமுடன் நேசித்தும், எமக்குபதேசித்தும்,
இணையில் பேரின்பக் கண்ணால் பார்த்தாயே;
துஷ்டப் பேயைக் கடிந்தும், துஞ்சினர்க் குயிர் தந்தும்
துன்பப் பிணி பலவுந் தீர்த்தாயே.— ஜெக

## இரண்டாம் பங்கு.

அ

அரிய நவம்[9] பரப்பி, அன்பின் தயை நிரப்பி,
ஆன்ம சீவனமாக வருத்தாயே;

[1] ஞானம். [2] வணங்கிட. [3] நட்சத்திரம். [4] கோபமுள்ள. [5] கறை. [6] மேகம். [7] நெருங்க. [8] எக்களிப்பு. [9] சிநேகம்.

உரிய கருணை வீதம் ஓங்கும் இஷ்ட பிரசாதம்
உணவெனவே, உன்னைப் பகுத்தாயே.— ஜெக

௯

நிகராய் இப் பெரு நன்றி நீ இயற்றினதன்றி,
நீதிக்கும் பலியாகப் பரிந்தாயே;
புகர்கொள்[1] எமை நினைந்து, பூங்காவில் மிக நொந்து,
பொருவில்[2] உதிர வேர்வை சொரிந்தாயே.— ஜெக

௰

தனையர்[3] வல் நோயைக் கண்ட தாயார் மருந்துட் கொண்ட
தகமை[4] எனப் பேரன்பு கூர்ந்தாயே;
வினையர் வெம் பாவக் கேடு விலக, அரிய பாடு
மேவி அனுபவிக்க நேர்ந்தாயே.— ஜெக

௰௧

விமல[5] திருச்சரீரம் மேற்கொண்ட துக்க஘ோரம்[6]
விளம்பக்கூடுமோ, எம்மால்? நொந்தாயே;
அமல திருக் குருதி அதனால் அருள் சுருதி[7]
அங்கப்பட[8] எழுதித் தந்தாயே. ஜெக

௰௨

சயிலம்[9] பிளந்திடவும், தபனன்[10] வில்[11] மங்கிடவும்
சாமி! எமைப் புரக்க மரித்தாயே;
உயிரோடு செஞ்சுடர்போல் உயிர்த்து, திருவுடல்மேல்
உற்ற ஐந்து காயங்கள் தரித்தாயே.— ஜெக

௰௩

மாதவர் எங்கும் செல்ல, மறை உபதேசஞ் சொல்ல,
வரங்கள் அளவில்லாது பொழிந்தாயே;
ஓத ஒண்ணாத துங்க[12] உன்னதமான அங்கம்
உலகில் அமைத்து, முத்திக் கெழுந்தாயே.— ஜெக

௰௪

அச்சுதா! பரஞ்சோதி! அனந்த ஞானி! அநாதி!
அருட்கடலாய் விளங்கும் முதலோனே!
சச்சிதானந்த நித்தா! சயம்பு பூரணா! அத்தா!
தற்பரமாய் ஒளிரும் பகலோனே!— ஜெக

1 குற்றம். 2 ஒப்பில்லாத 3 மகன். 4 விதம். 5 பரிசுத்த. 6 அகோரம். 7 வேதம். 8 ஒழுங்குபட. 9 மலை. 10 சூரியன். 11 ஒளி. 12 மேன்மையுள்ள.



௰௫

அமரர்[1] முற்றும் அறியார், அடிகள்[2] சற்றும் அறியார்,
ஆர் உன் திறல்[3] அறிவார்? கர்த்தாவே!
எமது பவம் பொறுத்தே, இரக்கம் எம்மேல் உகுத்தே,
எமைப் புரந்தாளும்; மானப்[4] பர்த்தாவே!— ஜெக

வீர.

௫௯. (௯௨) THE TRIAL AND CONDEMNATION OF CHRIST. 59.

# கிறிஸ்துவின் பாடுகள்.

விருத்தம்.

பாதகக்கொடிய யூதர் சங்கமிலச பார்த்தி பன்றனை நிறுத்தியே,
நீதி யற்றாடு வாய திட்டு, நிஸ் காரர்[5] நிந்தனைகள் சொல்லியே,
மோதி டக்கனம் மீத றைந்து முக் காட திட்டு முழு ராவெல்லாம்,
நாதனைச் சிறையில் வைத்து, மாகொடுமையாய் நடத்தினர், வியாழமே.

இராகம், இங்கிலீஷ். ஆதிதாளம்.

பல்லவி.

கனம், கனம் பராபரன் கருணையின் குமாரனே,
தினம் தினங் கீர்த்தனம், செயம், செயம் ஸ்தோத்திரம்.

சரணங்கள்.

௧

வனந்தனிலே மானிடர் வருந்தின பாதகம் அற,
கனிந்து நம தாண்டவர் கடுந் துயரம் பூண்டனர்.— கன

1 வானோர். 2 முனிவர்கள். 3 வல்லமை. 4 மகிமையுள்ள. 5 நிந்தை.

௨

கங்குல்,[1] அங்கு யூதர்கள் கடினமாக இறைவனின்
செங்கரங்கள் கட்டியே, செருசலேக்குள் ஏகினர்.— கன

௩

அன்னாவும், காய்பாவுமாய் அடர்ந்த சங்கம் யாவரும்
இன்னா[2] ஞாயங் கூறியே, எதிர்த்து, தீர்ப்பிட்டனர்.— கன

௪

ஞாய சங்க மீதிலே நாதனைச் சினந்தொரு
தீய பாவிதான் அவர் திரு முகத்தறைந்தனன்.— கன

௫

ஆகடியமாக முக்காடிட்டிராவெல்லாம்
ஏகனைப் பரிகாசமாய் ஈனர் குட்டவும் செய்தார்.— கன

௬

கைச்சரசம் பண்ணினார், காவல் மீதிருத்தினார்,
அச்சமற்ற நிந்தையாய் அநேக தூஷணஞ் சொன்னார்.— கன

௭

கோட்டி கொண்டிடும்பதாய்க் கொடிய பாவிகள் விளை
யாட்டினால் அநீதியை அடாமையாய் நடத்தினர்.— கன

௮

சங்க மீதிரண்டு பொய்ச் சாட்சிகள் எழுந்துமே,
பங்கமான[3] தோதினும், பரிந்து கேட்டிருந்தனர்.— கன

௯

பெத்தரிக்கமாகவே[4] பேதுரு அப்போஸ்தலன்
சத்தியங்கள் பண்ணியே தான் மறுதலித்தனன்.— கன

௰

கஸ்தியுறச் சொல்லி, கனன்[5]றெழுந்து, ஆரியன்[6]
வஸ்திரம் கிழித்துமே, மரணத் தீர்ப்பியற்றினன்.— கன

௰௧

தேவசுதன் என்றுதான் செப்பின சொற்காகவே,
பாவிகள் கொடுங் கொலைப் படுத்துதற்கிசைந்தனர்.— கன

[1] இரவு. [2] இமையான. [3] வெட்கமானது. [4] பெருமையாகவே. [5] கோபித்து. [6] ஆசாரியன்.



௰௨

கட்டின கட்டாகவே கர்த்தனைக் கொண்டேகியே,
துட்டர்கள் பிலாத்தெனும் துரைக் களித்துவிட்டனர்.— கன

வே.—சா.

௬௰. ([illegible]) THE SUFFERINGS OF CHRIST. 60.

[Gethsemane.]

## கிறிஸ்து பட்ட பாடுகள்.

விருத்தம்.

காவினில் ஆதம் ஏவை கற்பனை தவிர்த்த பொல்லாத்
தீவினைக் காக எந்தன் செய்வினைக் காக வேறோர்
காவினில் சென்ற தேவே! கருணையின் வாழ்வே! கோவே!
பாவிபோல் உமக்கேன், இந்தப் பாடெல்லாம் வந்ததையா!

இராகம், இயால். ஆதிதாளம்.

பல்லவி.

ஏன் இந்தப் பாடையா?—நான்
என்ன தருவேன் இதற் கீடையா?

அநுபல்லவி.

ஆனந்த நேமியே![1]—எனை ஆளவந்த குரு சுவாமியே!— ஏன்

௧

சரணங்கள்.

கெத்செமனே யிடம் ஏகவும்,—அதின்
கெழு[2] மலர்க் காவிடை போகவும்,
அச்சயனே! மனம் நோகவும்,—சொல்
அளவில்லாத் துயரமாகவும்,— ஏன்

[1] சமுத்திரம். [2] நிறம்பொருந்திய.

௨

முழந்தாள் படியிட்டுத் தாழவும்,—மும்
முறை முகம் தரைபட வீழவும்,
மழுங்கச் சினம் உமைச் சூழவும்,—கொடு
மரண வாதையினில் மூழ்கவும்,— என்

௩

அப்பா! பிதாவே! என்றேத்தவும்,—துயர்
அகலச் செய்யும், எனச் சாற்றவும்,
செப்பும் சித்தமாக என்று போற்றவும்,—ஒரு
தேவதூதன் வந்து தேற்றவும்,— என்

௪

ஆத்துமத் துயர் மிக நீடவும்,—குழம்
பாக உதிர வேர்வை ஓடவும்,
சாத்திர மொழிகள் ஒத்தாடவும்,—உந்தன்
தாசரும் பதந்தனை நாடவும்,— என்

ஏ.—அ.

## ௬௧. (௬௪) CHRIST'S REPLIES TO HIS INQUIRING CHURCH CONCERNING HIS SUFFERINGS. 61.

# கிறிஸ்துவின் பாடுகள்.

தரு.

௧

பொற்பு[1] மிகும் வானுலகும்
பூவுலகும் படைத்த பரப்பொருளே!—இங்கே
பொங்கிப்பிலாத் தரண்மனையில்
வந்து நிற்கும் காரணமென்? கோவே!

௨

தற்பரனார் மொழி மறந்து,
தரு[2]வின் கனி புசித்த நரர் பவத்தால்—வந்த
சங்கடம் எல்லாந் தொலைக்க,
இங்கெழுந்தோம்; சீயோனின் மாதே!

1 அழகு. 2 மரம்.

48



௩

அற்புத வேதாகமத்தின்
சொற் பழுதில்லாத ஒரு தேவே!—நீர்
அடிமையைப்போல் கற்றூணில்
கொடுமையில் கட்டுண்டதென்ன? கோவே!

௪

கற்பனை மீறிய பவத்தால்
கடின நரகாக்கினைப் படாமல்—உம்மை
காப்பதற் கிங்கே ஞாய
தீர்ப்பில் உற்றோம்; சீயோனின் மாதே!

௫

தூய்ய திரு மேனி எல்லாம்
நொய்ய உழுத நிலம்போல் ஆகி,—கன
சோரி[1] சிந்த வாரதினால்
நீர் அடிக்கப்பட்டதென்ன? கோவே!

௬

வையகத்தின் பாதகத்தால்
பெய்யும் கடுந்தீர்வையெல்லாம் ஆற்ற,—இந்த
வாதை எல்லாம் பட்டிறக்க,
யோத[2] மனம் சம்மதித்தோம்; மாதே!

௭

செய்ய கண்கள் உறச் சிவந்து,
திருக் கன்னங்கள் தடித்து, மிக வீங்கி,—முழுச்
சென்னியின் ரோமங்கள் எல்லாம்
வின்னமுற்றிங் கிருப்பதென்ன? கோவே!

௮

மையிருளில் குருக்களுடை
மாளிகையில் படுத்தின பாடெல்லாம்—இங்கே
வன் கொலைஞரால் அடிக்க,
பங்கமுற்ற கோலம் இது; மாதே!

௯

சேர்வை எல்லாம் சேர்ந்து பற்றி,
சினந்து வஸ்திரங்களைக் களைந்தே,—சதை

1 இரத்தம். 2 பூரணமாய்.

தெறித்திட, கற்றூணில் சேர்த்து
அடித்திட நீர் பொறுத்ததென்ன? கோவே!

௰

தோர்வையுடனே ஞாய
தீர்வையினில் பாவிகள் ஆனோர்கள்—கொடும்
திட்டலகை கையில் அகப்
பட்டிடர் படாமல் வந்தோம்; மாதே!

௰௧

வஸ்திரம் எல்லாம் களைந்து,
கஸ்திஉறச் செய்த பொழுதையா!—அவ
மான மிக நீர் அடைந்திங்
கீனமுற்ற காரணம் என்? தேவே!

௰௨

சித்திரப்பெண் ஏவையுடன்
ஒத்து திருவாணி என்றுதாமும்—காவில்
செப்பினதால் நீதி என்ற
பொற்புடைக் காதரவிதெல்லாம்; மாதே!

௰௩

மிகையாகத்[1] தூஷணித்து,
சகலாத்து மேல் சட்டை ஒன்றிட்டு,—யூதர்
வேந்தன் எனச் சேவகர்தாம்
காய்ந்திசைத்த கோரணியென்? தேவே!

௰௪

பகைகாரப் பாவிகளைத்
தொகையாக வானுலகில் சேர்த்து,—அங்கே
பார்த்திபராய்ச்[2] சமுகத்தினில்
ஏற்றிவைக்க வேண்டி அன்றோ? மாதே!

௰௫

முள்ளின் ஒரு முடி சமைத்து,
வள்ளல்[3] உந்தன் சிரத்தழுத்தி வைத்தே—கணு
மூங்கில் தடியால் அடிக்க
ஓங்கு துயர் அடைந்தீரோ? கோவே!

1 அதிகமாய். 2 அரசர்களாய். 3 இராசா.



௰௬

தெள்ளி முகம் மினுக்கி, மிகச்
சிரத்தை அலங்கரித்து, கந்தை தீர்த்து,—நித்திய
சீவன் முடி உன் தலையில்
ஓவியமாய்ச் சூட்ட அன்றோ? மாதே!

௰௭

பரிகாச அசங்கதங்கள்
பண்ணி, வலு தூஷணங்கள் பேசி,—யூதர்
பார்த்திபன்[1] என்றுரைத்த மொழி
எற்றதுவோ! திருச்செவிக்கு, தேவே!

௰௮

சரியாய் நம் ஆசனத்தில்
சம்மனசோ டூழியுள்ள காலம்—நீர்
சங்கையுடன் வாழ்ந்திருக்க
பங்கமுற்றோம்; சீயோனின் மாதே!

௰௯

மகிமையின் ராசா உமது
மாசதில்லா திருமுகத்தின் மீது—கொடும்
வஞ்சர் துப்பும் உமிழ்நீரால்
சஞ்சலப்பட்டிருந்தீரோ? தேவே!

௨௰

ஜெகதலத்தின் வெகுவான
சிற்றின்ப உல்லாசங்களால் மயங்கி,—தங்கள்
சிந்தை கெட்டோர்க்காக வந்த
நிந்தை எல்லாம் உத்தரித்தோம்; மாதே!

௨௧

முன்னாகத் தெண்டனிட்டு,
முழந்தாளிலே இருந்து வணங்கி,—கன
மூர்க்கமுடன் கன்னமதில்
ஆக்ரமத்தோடே அறைந்தார்; கோவே!

௨௨

உன்னதத்திலே இருக்கும்
தன்னிகர் இல்லாதானோ டொப்ப,—நீ

1 இராசா.

உன்னின பாவப் பொருட்டால்
சின்னமுற்றோம்; ஏவை என்ற மாதே!

உரு

நன்னயஞ்சேர் என்னாத்ம
நாயகமே! மெய்க்கிறிஸ்து வேந்தே!—நீர்செய்
நன்றி குன்றாதே ஒழுக
என்றும் எனக்கருள் புரியும்; தேவே!

உசு

கன்னியரே! சீயோனின்
மின்னரசே! ஞானமடமானே!—உன்னை
காத்தருள்வோம், மணவீடு
சேர்த்தருள்வோம், கலங்காதே; மாதே!

வே.—சா.

சா௨. (கூரு) WHITHER, WHITHER, BEARING THY CROSS? 62.

## கிறிஸ்து பட்ட பாடுகள்.

கலித்துறை.

மங்காப் பரகதி ஆனந்த வாழ்வினில் மானிடர்கள்
பங்கே அடைய, மிகக்கொடும் பாடுகள் பட்டும், இன்னம்
சிங்கார மான எருசலே நீத்து,[1] சிலுவைதனை
எங்கே சுமந்து கொடு போகி றீர்? என் இறையவனே!

பல்லவி.

எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

சரணங்கள்.

க

எங்கே சுமந்து போறீர்? இந்தக் கானலில் உம
தங்கம் முழுதும் நோக, ஐயா! என் ஏசுநாதா!— என்

1 விட்டு.



உ

பாவியினாலே வந்த பாரச் சுமையோ? இதை
ஆவலுடன் எடுத்து ஆவி துடிக்கவும், நீர்— என்

௩

தோளில் பாரம் அழுந்த, தூக்கப் பெலம் இல்லாமல்,
தாளுந்[1] தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர்— என்

ச

கைகள் அயர, இரு கண்கள் இருள, திரு
மெய்யுஞ்[2] கருக, நாவும் மெத்த வறண்டு போக,— என்

ரு

வஞ்சத் துரோகிகளால் வாதைப் பட்டது மகா
கொஞ்சம் என்றோ? இதையும் கூட எடுத்துக்கொண்டு,— என்

சு

வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக,
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர,— என்

எ

தாயார் அழுதுவர, சார்ந்தவர் பின் தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர,— என்

அ

வல்ல பேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்,
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும்,— என்

கூ

வண்டக் கள்ளர் நடுவில் மரத்தில் தொங்குவதற்கோ?
சண்டாளர்களைத் தூக்கும் தலையோட்டு மேட்டுக்கோ?— என்

௰

மாசணுகாத சத்திய வாசகனே! உமது
தாசனைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்— தெங்

ஏ.—அ.

1 கால்கள். 2 சரீரம்.

சாஙு. COME, BEHOLD HIM ON THE CROSS. **63.**

## சிலுவைக் காட்சி.

கலித்துறை.

நரர் பாதகத்தின் கொடுமை அளவும்! ஞாயப்படியாய்[1]
பரனார் கடுஞ்சினத்தோடே பவத்தைப் பகைப்பதுவும்
சுரலோக வள மனுவோ ரடைகின்ற சூட்சமதும்
திரமாய் விளங்கத் தெரிசி கிறிஸ்தின் சிலுவையையே.

பல்லவி.

மாட்சிமை யான தோர் காட்சியைப் பார்க்கலாம்,
வா!—ஆ! கல்
வாரிச் சிலுவையில் வானவன் தொங்கிற
மாட்சிமையானதோர் காட்சியைப் பார்க்கலாம் வா!

அனுபல்லவி.

சூட்சமுறு தேவ சாட்சியாங் கற்பனை
தூய்யத்தை[2] நரர்மீறி—மகா
துர்க்குணப் பேயின் தந்திரத்தினால்
தூய்மை விட்டனர், வாய்மை கெட்டனர்;
சுத்த கிறிஸ்தரசன்,—தேவனுட
சித்தன் அமை சிரசன், மாந்தர்களின்
துன்பத்தைப் போக்கவும், இன்பத்தைச் சேர்க்கவும்,
தோஷஞ் செய்பாதகன் வேஷமாய்த் தொங்கின்ற—மாட்

சரணங்கள்.

க

எருசலே நகர் மருவுங்[3] கல்வாரி
என்னப்பட்ட ஒரு மேடு;—அதில்
ஏசுக்கிறிஸ் தெனும் நேசமகத்துவன்
எங்களுக்காய்ப்படும் பாடு—மரக்

1 நியாயப்படி. 2 பரிசுத்தத்தை. 3 சேர்ந்த.



குருசில் எறியே சிரசில் முண்முடி
கொண்டதும் நொந்ததும் நீடு;—அப்போ
கொற்றவன்[1] தன்முகம் சற்றேனுங் காட்டாத
குறையதும் ஒரு பீடு;[2]
குருதி[3] வடியவே, சுருதி[4] முடியவே,
பருதி[5] மறையவே, திரையும் கிழியவே,
கொலைஞர் அலமதிக்க,—[illegible]
அலகை[6] மனங்கொதிக்க, அன்புடன்
கோனே![7] என்னை நீர் ஏனோ கைவிட்டீர்;
கொடுக்கிறேன் ஜீவனை எடுத்திடும் என்றதும்— மாட்

உ

பூலோகத்தாரே! இம்மேலான காட்சியின்
புண்ணியத்தை வந்து பாரும்;—தேவ
புத்திரன் பக்கத்தில் குத்துண்டு பாய்கின்ற
புனித ரத்தமும் நீரும்—நமை
மேலோகஞ் சேர்க்கின்ற சாலக்கிருபையின்
விஸ்தார ஊற்றென்று சேரும்,—அதில்
விழுந்து ஆத்துமம் முழுகிப் பாவந் தீ
வினை அகன்றிட வாரும்;
சீலமற்ற[8] மாந்தர் கோல[9] முற்ற வேந்தர்,
ஜீவனதிபதி சாவினாலே நம்மை
தெய்வ லோகஞ் சேர்க்க—நித்யமாய்
உய்யும்[10] சுத்தோராக்க,
செல்வக்கிறிஸ்தந்தக் கல்வாரி மேட்டினில்
ஜீவன் துடிக்கத்தம் ஆவி விடுகின்ற— மாட்

T—யோ.

1 தேவன். 6 பிசாசு.
2 துன்பம். 7 இராசாவே.
3 இரத்தம். 8 மேன்மை.
4 வேதம். 9 அலங்காரம்.
5 சூரியன். 10 பிழைக்கும்.

௬௪. (௬௯) THE SUFFERINGS OF CHRIST. 64.

[*The Story of Christ's Sufferings.*

# கிறிஸ்துவின் பாடுகள்.

## விருத்தம்.

கடின மானகற் றூணில் எந்தையை கட்டியே, மிகுசினத்துடன் கொடிய சேர்வைகள் எலாந் திரண்டுறி கோர மாகலா ரதுமே அடி அடித்து; முண் முடிதரித் தினம் அநேக நிந்தைகள் பண்ணியே, நெடிய வன்குருசில் அறைய வும்பொலா நிருப னும்[1] பிலாத் தருளி னன்.

இராகம், சங்கராபரணம். ஏகதாளம்.

## பல்லவி.

சரணம், சரணம், அனந்தா! சச்சிதானந்தா!
தாவீதின் மைந்தா! ஓசன்னா; சரணபதந்தா.

## சரணங்கள்.

௧

ஆதிசரு வேஸ்பரனே! ஞான பரனே! திரு
பாகரனே! பாவி எனை ஆளும்; ஐயனே!— சர

௨

தேவசுதன் பொங்கியுப் பிலாத்தினிடமே
சென்று பல பாடுபடவும் தயவானார்.— சர

௩

ஆசாரிமார் முறைப்பா டானது சொல்ல
ஆண்டவனார் மா பொறுமை யாகவே நின்றார்.— சர

௪

சத்துருக்கள் சொன்ன குற்றஞ் சாட்டுதற்கெல்லாம்
தற்பரனார் பேசாமல் சாதுவாய் நின்றார்.— சர

1 அரசன்.



௫

பித்தன் என்று வெள்ளை அரைச் சட்டை அணிந்து,
பேதக ஏரோதே பரி காசம்பண்ணினான்.— சர

௬

பரபாவோ டதிபதியைப் பணிய நிறுத்தி,
பாதகனை யோ, இறையை[1] யோ? விட என்றான்.— சர

௭

சீவனுட அதிபதியைச் சிலு வையில் கொன்று,
திருடனையே விட்டுவிடத் தீயவர் கேட்டார்.— சர

௮

அடிமையைப்போல் ஆண்டகையை[2] ஆக்கினைத்தீர்ப்பிட்
டாளுந கள்ளனையே விடுதலை செய்தான்.— சர

௯

கற்றூணில் சேர்த்திறுகக் கட்டி, வலுவாய்
காவலன்[3] தன் சேர்வை எல்லாம் கூடி அடித்தார்.— சர

௰

சேர்வைகள் எல்லாம் திரண்டு கூடி, முடிக்க,
தேசிகர்[4] கைக்கூலி கொடுத் தார்கள், அடிக்க.— சர

௰௧

வஸ்திரம் எல்லாம் களைந்து, கஸ்தி உறவே
வாரதினாலும், சவுக்கினாலும் அடித்தார்.— சர

௰௨

நிந்தை, பரிகாசம், மிக தந்தைகள் சொல்லி,
நிஷ்டூரர் சகலாத்துச் சட்டையுமிட்டார்.— சர

௰௩

முள்ளின் முடி செய்தழுத்தி, மன்னவன்[5] எனவே,
மூர்க்க முடனே தடி கொண்டார்க்க[6] அடித்தார்.— சர

௰௪

கையினில் செங்கோலதென்று மூங்கில் நன்றிட்டு,
காவலன் நீ யூதருக்கென் றேவியஞ் சொன்னார்.— சர

1 இராசா.
2 ஆண்டவனை, அரசனை.
3 இராசன்.
4 ஆசாரிகள்.
5 இராசா.
6 சத்தமெழும்ப.

௰௫

துப்பினர், முகத்தினில் அதிக்கிரமமாய்
துன்னிய கைக்கோலை வாங்கி, சென்னியில்[1] போட்டார்.— சர

௰௬

முழங்காலிலே இருந்து தெண்டன் பண்ணியே,
முன்னவனைத்தான் இறைஞ்சி,[2] கன்னத்தறைந்தார்.— சர

௰௭

தந்துசெய்து, பொந்தியுப் பிலாத்து துரை தான்
தற்பரனை விட்டுவிட, தன்னுள் எண்ணினான்.— சா

௰௮

எந்தவித எத்தனம் செய்தாலும் கடவா
தீற்றினில்[3] தண்ணீர் எடுத்துக் கரம் விளக்கினான்.— சர

௰௯

தண்ணீர் தனை எடுத்து, கை கழுவியே,
தற்பரனைக் கொல்வதற்கங் கொப்புக்கொடுத்தான்.— சர

௨௰

கள்ளனையே விட்டு விட்டு, யூதர்கட்காக
காவலனைக் குருசறையப் பாவியும் தீர்த்தான்.— சர

வே.—சா.

---

௬௫. (௭௨) CALLING TO REMEMBRANCE THE PARTICULARS 65.

OF CHRIST'S PASSION.

## கிறிஸ்துவின் பாடுகளைப்பற்றி.

இராகம், தோடி. சாப்புத்தாளம்.

பல்லவி.

துக்கமுற்றார்; இம்மானுவேல் துக்கமுற்றார்.

---

[1] தலை. [2] வணங்கி. [3] கடைசியில்.



சரணங்கள்.

௧

அக்கிரமத்தால் அழல்[1] ஆழியில்[2] வீழ்ந்து,
அலறி அருண்டு, வெருண்ட பூவோர்போல்,
எக்குலத்தீயர் பவக்கடனை நினைந்
தேங்கி, அருந்துயர் ஓங்கி, பிரலாபித்து;— துக்க

௨

நாவும் வறள, விழிகள் இருள,
நரம் பென்பு[3] நைய, நடுங்கி, ஒடுங்கி,
மூவுலகேந்து, தனி முதலார் முகம்
மோதி இம் [illegible] னி[4] மீதினில் வீழ்ந்து, மா— துக்க

௩

தீயர் பெருந்தி [illegible] ளாய், தீக்கடலில்
சிதையும் வித [illegible] தை தியானத்தில் கண்டு,
ஆயன்[5] உ [illegible] வெயர்வைகள் சிந்தி,
அலறி, உ [illegible] ம், உயிரும் உலறி,[6] மா— துக்க

௪

மூன்றொரு[7] முன்னோன் தந்த மா வேதை[8]
மூடிய ஓர் தூதன் இடையில் வந்தாற்ற,
என் ஆதி நேசர் திரு உள்ளம் ஆர்த்து,
இடைந்தும்,[9] இடைந்தும், உடைந்தும், உடைந்துமா—துக்க

௫

வல்ல வனசரன்[10] நாடித் தொடர்ந்தபெண்
மான்போல இருண்ட வனத்தில் அடர்ந்து,
கல்லும் மலையும் உருக இருவிழி
கண்ணீர் ததும்பி, மா மண்மீதில் வீழ்ந்து, மா— துக்க

௬

ஏவாள் குலத்தவர்தன் மீதலகைக்
கிருக்கின்ற ஆளுகையை நினைந்தந்த
பாவாட்களுடை சீர்மாற்ற நினைந்து, மா
தேவ பிதா நந்தன்[11] ஆவிதுடித் திங்கே;— துக்க

---

[1, 2] அக்கினிக்கடலில். [7] தேவாதிதேவன்.
[3] எலும்பு. [8] துன்பம்.
[4] பூமி, தரையில். [9] மெலிந்து.
[5] மேய்ப்பன். [10] காட்டியானை.
[6] சிதைந்து. [11] நந்தனன், குமாரன்.

௭

ஞாயப்ரமாணம் தனக்கெதிராய் மண்ணோர்
நாடிச்செய் தீமை அனைத்தையும் காட்ட,
காயும் நரக சுவாலை எழுந்து, நம்
கர்த்தாதி கர்த்தர் கதிர் முகத்தில் வீச— தூக்க

௮

கோடாநு கோடி கடன்பட்ட தீனன்[1]
கொடுக்க வகை அற் றொடுக்க வணக்கமாய்த்
தாடாண்மையாய்க் கடன் ஈந்தோன் முன் நின்று,
தரையில் விழுதல்போல் தாதைமுன் வீழ்ந்து, மா— தூக்க

௯

விண் ஆர்ந்த[2] வெள்ளம் உலகில் முன் நாளில்
விரைந்துறைந்த விதம் போலே உலகில்
எண்ணூர்ந்த பாவத்திரள்கள் இறங்கி, நம்
ஏசுநச நேச நேசரை ஆத்தமா— தூக்க

ச—உப.

---

## ௬௬. (௬௬) GRATEFUL REMEMBRANCE OF CHRIST'S SUFFERINGS. 66.

## கிறிஸ்து இரட்சிப்புக்காகப் பட்ட பாடுகள்.

விருத்தம்.

இலகும்அ நீதித் தீர்ப்புக் கேற்கையாய்க் கருணை ஓங்கி,
உலகினில் உதித்த மாந்தர்க் குற்றபா வத்தை நீக்க,
அலகிலா ஆத்து மத்தில் அருந்துயர் அடைந்த தன்றி
பலநா சரீரப் பாடும் பட்டதற் பரனே! ஸ்தோத்ரம்.

கண்ணிகள்.

௧

பரனே! பரப்பொருளே!—நித்திய—பாக்கியனே! சத்திய
வாக்கியனே!
நரரான பாவிகட்காய்—இந்த—நானிலத்தில் வந்த வானவனே!



௨

காவில் அதம் ஏவை—தேவ—கற்பனை மீறினதால் உலகில்
மேவிய பாவம் அற,—பொல்லா—வெஞ்சினக் கூளியின்[1]
வஞ்சம் அற,

௩

கூடி அநீதியினில்—செய்த—கோப்பின்படி அந்தத் தீர்ப்
பின்படி
நீடுங் கருணை கொண்ட—எங்கள்—நேயகனே! ஏசு நாயக
னே!

௪

வேறோர் யலர்க்காவில்—சென்று,—வேதனைப் போற்றி,
மனம் நொறுங்கி,
ஆறுங் கொடுந் துயரம்—உந்தன்—ஆத்துமத்தில் வரலானது
வோ?

௫

ஈராறு சீடர்களில்—பண—இச்சை மிகுத்த ஒரு சீடன்
பேர் [illegible]ாரி யோத்தாம்—அவன்—பேசின தின்படி காசு
[illegible]ற்று,

௬

ஒன்னாரின்[2] கும்புகளை—அழைத்—தோடிவந்தே, உம்மை
நாடி வந்தே,
கன்னத்தில் முத்தமிட்டே,—உம்மை—காட்டிக்கொடுக்கத்
துணிந்தானோ?

௭

காட்டிக் கொடுத்திடவும்,—அந்தக்—காதகராகிய[3] பாதகர் கை
போட்டே பிடித்திடவும்,—பின்னும்—பொற்கரங் கட்டி
இழுத்திடவும்,

௮

செம்புருவையைப் போலே—கூடச்—சென்றிடக் காய்பா
முன் நின்றிடவும்,
அம்பரனே! உந்தனுக்கு—இந்த—ஆபத்து வந்த தென் பாவம்
அல்லோ?

வே.—சா.

---

Left page footnotes: 1 எளிஞன். 2 நிறைந்த.

Right page footnotes: 1 பிசாசு. 2 பகைவர். 3 கொலைபாதகர்.

## ௪௭. (௬௭) CALLING TO REMEMBRANCE THE EVENTS OF CHRIST'S PASSION. 67.

# கிறிஸ்து பட்ட பாடுகள்.

விருத்தம்.

பாவபுண் ணியமிரண் டிற்கும் பாங்குடன் நீதிசெய்யும்
தேவனே! உமையே கட்டிச் சென்றுமுன் அன்னாவின் பால்
மேவலர் விடவும், அன்னோன் விரைந்துகாய் பாவின் பக்கல்
ஆவலாய் அனுப்ப நின்ற அப்பனே! உமக்கின்தோத்திரம்.

கண்ணிகள்.

௧

அப்பா! தயாள குணாநந்த மோனந்த வேதா!—பொல்லா
இப்பாரில் காய்பா முன் ஏகினீரோ? ஏசுநாதா!

௨

வஞ்சகர்; மூப்பர், ஆசாரியர், பாரகர் கூடி,—உம்மை
நெஞ்செரிப்பாய் நடு கேட்கவும் நின்றீரோ வாடி?

௩

குற்றஞ் சுமத்தப் பொய்ச் சாட்சிகளைத் தேடினாரோ?—அந்த
செற்றலர்[1] எல்லாம் திரண்டேகமாய்க் கூடினாரோ?

௪

ஆசாரியன் கேள்விக் கான மறுமொழி கூற,—இது
வோசரி என்றொரு சேவகன் சொல்லியே சீற,

௫

சீறிக்கொதித்து, குதித்து, சினந்தும்மைக் கூவி,—அழகு
கூடிய கன்னத்தில் ஓங்கி அறைந்தானோ, பாவி?

௬

கன்னம் அதைத்ததோ? கண்கள் சிவந்ததோ? சுவாமி!—பொறி
மின்னிக் கலங்கி, விசனம் உற்றீரோ? கன்னேமி!

[1] பகைவர்.



௭

மெய்யான சாட்சி இட்டையனே! சொன்ன உன் மீதே—தீயர்
பொய்யான சாட்சி இட்டையோ! சுமத்தினார், தீதே.

௮

குற்றஞ் சுமத்தி, கொலைக்கேதுவாக்கினார், ஐயோ!—நீர்
சற்றும் பேசாமல், தவித்தங்கு நின்றதும் பொய்யோ?

௯

உந்தன் முகத்தில் உமிழ்ந் தறைந்திட்டனன்றோ—பல
நிந்தையும், தூஷணையும் கொடிதாகச் சொன்னாரோ?

௰

கட்டியே, உன் திருக் கண்ணை மறைத்தடித்தாரோ?–பின்னும்
குட்டினதார் சொல் என்றே தலைமேல் அடித்தாரோ?

௰௧

பரிகாசஞ் செய்யவும், பகிடிகள் பண்ணவும் ஆச்சோ?—சொண்ட
பிரியத்தினால் உந்தன் பேசரும் வல்லமை போச்சோ?

௰௨

என் கட்டை நீக்கி, ஈடேற்ற வதைக்குள்ளானீரோ?–உம்மை
பின் கட்டாய்க் கட்டிப், பிலாத்திடங்கொண்டு போனாரோ?

௰௩

இத்தனை பாடுகள் நீர் பட்ட தென்கொடும் பாவமே!–என்றன்
கர்த்தனே! உன் மீதில் வந்ததையோ! தேவ கோபமே.

௰௪

நீர் பட்ட பாட்டைப்போல், ஆர் பட்டுத் தாங்குவார்? தேவே!—பல
கார்பட்ட[1] நெஞ்சமும் சீர்பட்டுப் போகுமே; கோவே!

௰௫

இந்தப் பலனில் எனக்கும் பங்குண்டல்லோ? தூய்யனே!—என்றும்
உந்தனின் தாசன் என்றே பேருங்கொண்டேனே; ஐயனே!

ஏ.—அ.

[1] பாவத்தால் இருளடைந்த.

சா அ. BEFORE CHRIST'S SEPULCHRE. 68.

# கிறிஸ்துவின் கல்லறைப் பாடுகள்.

பல்லவி.

பாருங்கள் தொடர்ந்து வாருங்கள் கொல்கதா
பாதையிற் கோதையரே.

அநுபல்லவி.

ஆருங் காணவே ஆட்டுவாசல் கடந்து மலை
மேட்டில் நடந்தனந்தங் கோட்டிகள் படுகின்றார்.— பா

சரணங்கள்.

க

பொன்னு யொளிரு மேனி மண்ணாய் மடியுதே
புங்க உடலெல்லாம் புழுதிகள் படியுதே
நன்னய மலர் கண்கள் கண்ணீர்கள் வடிக்குதே
நாவும் அஸ்தியும் காய்ந்து சாவுமே பிடிக்குதே.— பா

உ

பாவியைத் தேடி வந்த பாதங்கள் பொரியுதே
பட்சத்தினால் விரித்த கைகளும் நெரியுதே
நாபிக்கமலம் பற்றிச் சோபித்துக் கரியுதே
நடையு முடையுந் தொய்ந்து சதைகளும் சரியுதே.— பா

ந

திருமுக அருள் ஒன்றும் தெரியாதடைந்ததே
செங்குரு திகளெல்லாம் பொங்கி வடிந்ததே
சருவ வல்லபம் குன்றித்திரையும் நிறைந்ததே
சகமும் பரமுந் துக்க சாகரத்தழுந்ததே.— பா

ச

துன்ப துரிதத்திலும் அன்பையே பொழிகின்றார்
துட்டர்கள் அதற்காகத் திட்டுகள் மொழிகின்றார்
அன்பாய் பிழைக்கத் தமதாவியைக் கொடுக்கின்றார்
அந்தோ நாசரேத்தையர் நொந்தடி எடுக்கின்றார்.— பா





சா கூ. RECOUNTING THE SUFFERINGS OF CHRIST. 69.

# கிறிஸ்துவின் பாடுகள்.

வெண்பா.

பாவ மனுவோர்களுக்காய் பாடுபட்டுத் தேவ சுதன்
சீவன் விட்ட மா துயரந் தீராதே,—பாவி மனந்
தாங்குதில்லை இப்போது தற்பரா! நின்துயர் கண்
டேங்குதே கண்ணீரோ டிசைந்து.

பல்லவி.

ஏங்குதே என்னகந்தான் துயர்
தாங்குதில்லை முகந்தான்.

அநுபல்லவி.

பூங்காவிலே கனிந்தேங்கி நீர் மன்றாட
ஓங்கியே உதிரங்கள்
தேங்கியே துயர் கண்டு— ஏங்குதே

சரணங்கள்.

க

மேசியா வென்றுரைத்து, யூத
ராசனென்றே நகைத்து,
ஆதசணித்தேயடித்து, நினைக்குட்டி
மாசுகளை சுமத்தி
ஆசாரமின்றியே ஆசாரியனெரிடம்
நீசர்கள் செய் கொடும், தோஷமது கண்டு— ஏங்குதே

உ

யூதாஸ் காட்டிக்கொடுக்க, சீமோன்
பேதுரு மறுதலிக்க
சூதா யெரோதே மெய்க்க, வெகு
தீதாயுடை தரிக்க
நாதனே இவ்விதம் நீதமொன்றில்லாமல்
சோதனையாய்ச் செய்யும் வேதனையைக் கண்டு—ஏங்குதே

௩

முள்ளின் முடியணிந்து, வேந்தனென
வெள்ளைத் துயிலணிந்து
தள்ளி மிக முனைந்து சுற்றாரோடே
தானே கட்டி வரிந்து
கள்ளனைப் போலவே வல்லலை வாரினால்
துள்ள அடிக்கவும், வெள்ளத் திரட்சி கண்— டேங்குதே

௪

நீண்ட குருசெடுத்து எருசலேம்
தாண்டி மலையடுத்து
ஈண்டல் பின்னே தொடுத்து அவரின்மேல்
வேண்டும் வசை கொடுத்து
ஆண்டவர் கை காலில் பூண்டிடும் ஆணியால்
மாண்டதினால் நரர் மீண்ட தென்றாலுமே.— எங்குதே

———

௭௦. (௯௨) LORD! SO MUCH SUFFERING ON MY ACCOUNT? 70.

## கிறிஸ்து பட்ட பாடுகள்.

பல்லவி.

இத்தனை பாடேன்பட்டீர்!—இறையே![1] என்னாலே
இத்தனை பாடேன்பட்டீர்!

அநுபல்லவி.

சித்தம் மகிழ்ந்தே, நாடி,
சத்துருப் பாவியைத் தேடி,— இத்

சரணங்கள்.

௧

தந்தை பிதாச் சேயனே![2] சருவாதி நாயனே!
பொந்தியுப் பிலாத்தின் கீழாய், நிந்தனைத் துயருக்காளாய்,
—இத்

1 சுவாமி. 2 குமாரன்.



௨

முள்ளின் முடி சூடியே, மூர்க்கர் வசை பாடியே,
வள்ளலே[1] மகா உரத்த கள்ளனுடனே நிறுத்த,— இத்

௩

குருதி[2] சிந்தி ஓடவே, சொலைக்களம் நீடவே,
பருதி[3] இருண்டு போக, கரம்[4] கழல்[5] ஆணி நோக,— இத்

௪

எந்தை[6] மனு வேலனே! தந்தை அனு கூலனே!
உந்தன் ஐந்து காயத் தாலே எந்தன் வினை தீர், அன்பாலே.
—இத்

தே.—றை.

———

௭௧. (௭௰) DIDST THOU GIVE UP THY LIFE FOR ME? 71.

## கிறிஸ்து பாவிகளுக்காக பட்ட பாடுகள்.

வெண்பா.

காயம் ஏன்? வாரடி ஏன்? கட்டேன்? தழும்புகள் ஏன்?
மாய்வதேன்? எண்ணிறந்த வாதை ஏன்?—ஞாயமேன்?
பொன்னாட் டதிபதியே! பூலோக ரட்சகா!
என்னாலோ சீவன் விட்டது.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னாலே சீவன் விடுத்தீரோ?—சாமி!
இத்தனை பாட்டுக்கிங்கே அடுத்தீரோ!

1 இராசனே. 3 சூரியன். 5 கால்.
2 இரத்தம். 4 கை. 6 என் பிதா.

அனுபல்லவி.

பொன்னாட்டதிபதி பரமன்[1] ஆட்டுக்குட்டியே!
பொறுமைக் களவிலாத இருபைத் திருக்குமாரா!
பூண்டு பொற் குருசினில் அறையுண்டெனை
மீண்டனுக்ரக மிட நெறி கொண்டதோ?— என்

---

சரணங்கள்.

௧

கள்ளனைப்போல் கட்டுண்ட பரதாபம்,—மெய்ப்பூங்
காவில் ஆத்துமத்துற்ற மனஸ்தாபம்,—வேர்த்து
வெள்ளமாய் ரத்தம் புரண்ட சோபம்,—ஆரால்
விபரித்து முடியும், உன் பிரஸ்தாபம்?
என்னத்தனை அன்பிலா உள்ளத் துரோகி நானே;
எனால் உமக்கென லாபம்? எசு
மனா[2] பரப்ரம திரு வுளமோ, இது?— என்

௨

கற்றூணில் சேர்த் திசைத்த[3] சோரம்,[4]—வாரால்,
கசையால்[5] அடித்த கன பாரம்,—முண்முடி
சுற்றிச் சிரத்தழுத்தும் கொடூரம்,—பாவி
சொல்லியும், தொலையாதே, இந்நேரம்;
கொற்றவனே![2] இத்தூரங் கொண்ட துயர் விஸ்தாரம்;
கொலையுண்டெனை விடுதலை புரியவும்,
நிலைகண்டிவு லகமுழுதறியவும்,— என்

௩

சிலுவை மரத்தில் கைகால் நீட்டி,—தேவரீர்
திருவிலாவைத் துளைத்த ஈட்டி, காயம்
வலிய அன்பின் கடைக்கண் காட்டி,—இன்னம்
வரவழைக்கிறீர், தயை பாராட்டி;
விலைமுறிஎனைக் கூட்டி, மிக்க சலாக்யம் சூட்டி,
மீண்டசாதித மிக்க விலாசமே,
ஆண்டவா! அதி பக்திநேசமே.— என்

வே.—சா.

1 தேவனுடைய. 3 கட்டின. 5 சவுக்கு.
2 இராசனே. 4 கொடுமை.



௭௨. (௭௧) OH, GOD MY LIFE! WHERE EAREST THOU THY CROSS? **72.**

---

## கிறிஸ்து பட்ட பாடுகள்.

---

வெண்பா.

பாதை தொலையிலையோ? பாரச் சுமைகொடிதோ
வாதை முடியும் வருத்தமோ?—மாதொருத்தி
தந்த விலையோ? தயங்கிச் சிலுவைசுமந்
தேந்தையே! போவதெங்ஙனம்?[1]

---

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

எதனாகி தேவனே!—சிலுவை சுமந்
தெங்கே போகிறீர்! என் ஜீவனே!

---

அனுபல்லவி.

ஆதி பிதாவின் மைந்தா! அருமைக் கிறிஸ்தானந்தா!
அஞ்சாததம் எவை அருந்திய நஞ்சார்[2] கனியாலே விளைந்த எத
தோ?—

---

சரணங்கள்.

௧

முந்து மனுடர் தம்மால் வந்த வினையை மாற்றி,
முழுதும் உலகை ஆற்றி, எழுதும் வேதத்தைச் சாற்றி,
சந்தலகையைத் தாழ்த்தி, மைந்தரைக் கரையேற்றி,
தப்பா துயிர் விடுத்து மெய்ப்பாய் ரட்சிக்கத் தோற்றி,— எத

௨

ஆகம்[3] எல்லாம் புண்ணாகி, அடிபட்டிரங்கி நோக,
ஆத்தும வாதைகள் மேவி, வேர்த்து முகங் குருவி,

1 எவ்விடம். 2 நஞ்சுநிறைந்த. 3 சரீரம்.

சாகத் தீர்க்கப்பட்டெரு சாலேம் பட்டணம் விட்டு,
தளர்கி, தளர்கி நின்று, மறுகி மறுகிச் சென்று,— ஏத

௩

மெத்த நின்முகம் வாடி, ரத்த வெள்ளங்கள் ஓடி,
மெலிந்து, முள்முடி சூடி, நலிந்து,[1] நடை தள்ளாடி
சத்துருக்களை நாடி, சித்தம் உருகித், தேடி,
சாவைத் தொடர்ந்து கொல்ல தாவுக் கடர்ந்து கூடி,— ஏத

௪

பாவியைக் கைதாக்கவோ? தீவினையை நீக்கவோ?
பரமகதி சேர்க்கவோ? பரனேறுற வாக்கவோ?
மேவித் தற்காக்கவோ? சாவின் துயர் போக்கவோ?
வெற்பனைக்[2] கடாட்சித்தாப்போல் எப்போதும் எனைக் கண்
ணேக்கவோ?— ஏத

வே.—சா.

---

## ௭௩. (௭௩) WHAT WERE THY SUFFERINGS TO SAVE ME! 73.

# கிறிஸ்துவின் பாடுகள்.

### வெண்பா.

தேவத் துரோகிகளாம் தியரார் மேற்பொறுத்த
பாவச் சுமை அகற்றி பாலிக்கப்—பூ உலகில்
ஏன்னயமாய் எம் ஏக நாதா! உரங்கலங்க
என்ன பாடுற்றீர் இசைந்து.

இராகம், ஜங்களா. ஆதிதாளம்.

### பல்லவி.

என்ன பாடுபட்டீர், ஐயா! என் ஏசு நாதா!
என்ன பாடுபட்டீர், ஐயா! எனை ரட்சிக்க
என்ன பாடுபட்டீர், ஐயா!

---

[1] வருத்தமுற்று. [2] மகேயன்=பேதுரு.



### அனுபல்லவி.

பொன் உலகத் தும்பர்கள் போற்றிப் பணியும் நாதா!
இந்நிலத்தோரை மீட்க, எளியன் ஆகப் பிறந்து,— என்

### சரணங்கள்.

௧

தீயர் உம்மேல் பற்கடிக்க,—உமை அவர்கள்
தேடி வளைந்து பிடிக்க,
காயமதிலும் திருக் கன்னத்திலும் அடிக்க,
நேயம் உற்றெமக்காய் நன் நெறியை நீரே முடிக்க,— என்

௨

நன் மலர் போல் முகம் வாட,—இரத்த வேர்வை
நனை மெய்யில் வழிந்து ஓட,
அன்ன வேதனை நீங்க ஆதிபனை மன்றாட,
சென்னிதனிலே யூதர் செறி முள்ளால் முடி சூட,— என்

௩

பாவச் சுமையைத் தரிக்க,—பகைஞர் உமை
பழித்துத் துணிந்து சிரிக்க,
தேவா! நீ துயர் உற்று, சிலுவையிலே மரிக்க,
யோவானுங் கண்டதை இவ் உலகினிலே விரிக்க,— என்

ஜா.—பா.

---

## ௭௪. (௱௰௬) MEDITATION ON THE SUFFERINGS AND DEATH OF CHRIST. 74.

# கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் தியானித்தல்.

இராகம், சங்கராபரணம். திரிபுடதாளம்.

### பல்லவி.

பாவி நான் என்ன செய்வேன்?—கோவே!
சீவன் நீர் விட்டதற்காய்.

அநுபல்லவி.

தேவ கோபத்தினால் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு, சீவித்ததென் கொலோ?— பாவி

---

சரணங்கள்.

௧

நாடி எனைத் தயவாய்—மணஞ் செய்ய—தேடி வந்தீர்; அரசே!
ஆடுகளுக்காக நீடி உயிர் தர,
பாடு பட்டுக் குரு சூடிறந்தீர்; அன்றோ?— பாவி

௨

பொன்னால காதிபனே!—தேவரீர்—என்ன செய்தீர்? ஐயனே!
பின்னப் படுத்தவும், கன்னத்தடிக்கவும்,
சென்னியில் முண்முடி தன்னை அழுத்தவும்,— பாவி

௩

வாரால் அடிக்கப்பட்டு,—குட்டுண்டு — வாதைப்பட்டெண்
ணம் அற்றீர்;
தீரா![1] மனுடவதாரா! சருவாதி
காரா! பரம குமாரா! ஓலோலமே.— பாவி

௪

வாதை உமக்கெதினால்-உண்டாயிற்று!-பாதகி பாவத்தினால்;
வேதம் நிறைவுற, ஆதி பவம் அற,
நீதி தரும் ஏசு நாத சுவாமியே!— பாவி

௫

ஆச்சரியஞ் சாக—வருகிறார்—ஆதிபன் அன்பாக;
தாழ்ச்சி யுடன் மெய்ப்பர் காட்சியாய் மந்தைக்கு
தம் சீவனைத் தாறார்; அஞ்சல், அவையமே.— பாவி

௬

குற்றமற்ற மீட்பர்,—பவக்கடன்—முற்றும் அறத் தீர்ப்பர்;
கொற்றவர்க்கும்,[2] கல்வி கற்றவர்க்கும், சுரர்
மற்றவர்க்கும் அளவற்ற கிருபையே.— பாவி

---

[1] மேன்மை சிறந்தோனே. [2] இராசாக்களுக்கும்.



௭

சன்மார்க்கர் ஆக்கினைக்குள்—மரித்தார்,—துன்மார்க்கர்க் காவி
உண்டு
நன்மார்க்கம் கெட்டு நலங்கெட்ட நங்கெட்டு,
பன்மார்க்கமாகி, பரிதபித் தேங்கிறேன்.— பாவி

வே.—சா.

---

௭௫. (௭௪) THE RESURRECTION OF CHRIST. 75.

---

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

---

இராகம், லாவி. சாப்புத்தாளம்.

பல்லவி.

எழுந்தருளும், ஏசு சுவாமி!

---

அநுபல்லவி.

விழுந்தலகை அழிந்தொழிய,
தொழுஞ் சாரும்[1] வரல் ஆச்சே;— எழுந்

---

சரணங்கள்.

௧

இஸ்திரிகள் சுகந்தவர்க்கம் எடுத் தேந்தி, பிரேதலங்கா
ரத்தின் முறை நாடி இதோ ஆசரிக்க வந்தாரே;— எழுந்

௨

மகதலா ஊர் மரியாள் மகிழ்ந்து தெரிசித் தேற்ற,
அகமகிழ்ந்தப் போஸ்தலர்கள் அதிசயித்துப் போற்ற,— எழுந்

௩

பாடு பட்டு மரித்தடக்கப் பட்ட தினம் மூன்றாச்சே;
ஏடு முட்ட வரைந்த[2] தெல்லாம் நிறைவேறி முடிந்தாச்சே.
—எழுந்

---

[1] தேவதூதர். [2] எழுதிய.

௪

முத்திரையும், காவல்களும், மூடிய கல்லதும் நீங்கி,
சத்துருக்கள் நடுநடுங்கி, தயங்கி மனங்கலங்க,— எழுந்

௫

வேதாளம் நடுங்கி விழ, விண்ணோர்கள் திரண்டு தொழ,
பாதாளம் இடிந்து விழ, பராபரனே! எழுந்தருளும்;— எழுந்

௬

விஸ்தார உலகமதில், மெய்யான திருச்சபையில்,
இஸ்தோத்ர சங்கீர்த்தனம் எந்நாளும் உண்டாக,— எழுந்

வே.—சா.

---

௭௬. (௭௫) THE RESURRECTION OF CHRIST. 76.

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து.

---

விருத்தம்.

சேவகரும் பொருந்தி, ஒன்றாய் வாள் பிடித்து,
தீர்க்கமுடன் கல்லறையைக் காக்கல் உற்றார்;
பூவுலகில் சுதன்நரர்க்குச் செய்வ தெல்லாம்.
புகழ் பெறவே, முடித்தான்; ஆ துவலா நோக்கி,
தாவும் என்று பரன் உரைத்தார்; தரணி அஞ்ச,
தாண்டி வந்து, கல்லறையின் கல்லைப் பேர்த்தார்;
பாவிகளின் ரட்சகனே சாவை வென்று,
பகுதி கிளம் பியது போல், எழும்பி னானே.

---

இராகம், அசாவேரி. அடதாளசாப்பு.

பல்லவி.

ஏசுநாதன் சாவை வென்று, எழுந்திருந்தானே;



அனுபல்லவி.

மாசில்லாத தூதர் பனீர் எனவே மின்ன,
வையகத் தூதர் விழுந்துயிரே கன்ன;
நீசமுள்ள மரணம் பயந்தினி மேல் என்ன?
நிலை என்ன? தலை என்ன? உலைகிறேன், எனப்பன்ன[1]— ஏசு

---

சரணங்கள்.

௧

வென்றேன், எதிரி இல்லை, என்று துணிவு கொண்ட
வேதாளமும் பயந்தோட,
அன்றே அதின் தலை நைந்து ரத்த வெள்ளம்
அவனி[2] எங்கும் பாய்ந்து சாட,
நன்றாகக் காவல் செய்வோம் என்ற சேவகர்களும்
நடக்கக் கூடாமலே, தள்ளாட,
ஒன்று கூடியே யூதர் ஓகோ! என்செய்வோம் என்று,
ஓதாமல் சேவகர் வாய் மூட,
நன்றி அறிதலுள்ள பெண்கள் கல்லறை காண,
நாதன் எழுந்தான் எனச் சொல்லித் தூதர்கள் தோண,
கொன்றிடச் செய்தவர்கள் மனம் வெந்து, வெட்கம் பூண,
கோமான் பிலாத்து பின்னே கேட்டு முகங்கோண,— ஏசு

௨

ஓடி ஒளித்த சீஷர் கூடி, தேவ குமாரன்
ஓதின முன் உரையைப் படிக்க,
தேடின பொருள் சற்றுக்காலம் இழந்து, பின்னும்
திரும்ப அடைந்தவர் போல் நடிக்க,[3]
கூடி, ஏசுவைப்பற்றி இருந்தது வீணாச்சென்ற
குடியைக் கெடுக்கும் ஐயம் ஒடிக்க,
வாடின மருதல மரியாள் கண்டு வணங்கி,
மனுவேலே! என்று களி துடிக்க,
பீடையாம் காவல் நீங்கி, யோசேப்பு வந்தாப்போல,
பிரிய தானியேல் சிங்கக் குகையை விடுத்தாப் போல
கூடாம் இருளில்ச் சென்ற பானு[4] உதித்துச் சாலக்
குவலயத்திற்[2] காந்தி கொடுப்பது போல, வால— ஏசு

---

1 என்றுசொல்ல.
2 பூமி.
3 ஆட.
4 சூரியன்.

௩.

நானே தேவ குமாரன் என்று போதித்ததை
நரர்கள் அறிந்திடவே, காட்ட,
வானவனுக்கும், மனுவுக்கும் குறைவில்லாத
மத்தியஸ்தன் என்று நாட்ட,
போன காலத்திற் சொன்ன அடையாளப் பலி எல்லாம்
போகலாம் என்றவற்றை ஓட்ட,
தானலோகம் செல்ல, எவ்வகைப் பாவியும்
தளர்ச்சி இன்றித் தலை நீட்ட,
ஈனம் இன்றித் தீர்க்கதரிசனம் நிறைவேற்ற,
இயம்பிய யோனாவின் அடையாளமே தோற்ற,
ஊன மனுடர்களை நீதிமான்களாய் ஏற்ற,
யூத கோத்திர சிங்கம் என்றுலகோர் போற்ற— ஏசு

ஆ.—உப.

———»»««———

## ௭௭. (௭௬) THE RESURRECTION OF CHRIST. 77.

[*Suitable for opening Service on Sabbath morning.*]

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

வெண்பா.

பாடேற் றதிரம்விட்டுப் பாவிகட்காய் எத்தனித்த
ஈடேற்றத் தின்கிரியைக் [1]இறுசெய்து,—கேடான
ஏவாளின் மக்களுய்ய வேஉயிர்த்தார் இன்றேசு
தேவாதி தேவன் சிறந்து.

இராகம், பைரவி. (இயல்மெட்டு.) ஆதிதாளம்.

பல்லவி.

தேவாதி தேவன் இன்றுயிர்த்தார்.

சரணங்கள்.

௧

தேவாதி தேவன்றன் நேய குமாரன்,
ஜீவரட்சணிய உபகாரன், ஏசு— தேவாதி

[1] இறுதி—முடிவு.



௨

அதிமகிமையொடு கண சுரர் துதிபாட,
அடியார்களும் மகிழ் கொண்டாட, ஏசு— தேவாதி

௩

சீறும் அலகை[1] சிரமுடைத்ததி திடமாய்
தீயர் சதியடைய இடமாய், ஏசு— தேவாதி

௪

சாபம் அற்றிடவே, சீவன் உற்றிடவே,
சாவதின் கூரொடிந்திடவே, ஏசு— தேவாதி

௫

எரி நரகடைத்து பரவழி[2] திறந்தே
இலக[3] அதி மகிமை சிறந்தே ஏசு— தேவாதி

௬

சேஷணை யாற்றி, மாசறத் தேற்றி
தேவ நெறியை நிறைவேற்றி, ஏசு— தேவாதி

௭

மனத்துயர் தரித்தோர், மரத்தினில் மரித்தோர்
மாஜெய அதிபனானார், ஏசு— தேவாதி

ஜா.—பா.

———oooooooo———

## ௭௮. (௭௭) THE RESURRECTION OF CHRIST. 78.

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

வெண்பா.

மோட்ச கபாடம்[4] திறக்க மூவுலகுந் தான்பணிய
மாட்சியொடு சாவின் வலுவழித்து,—காட்சியுடன்
எக்காலுந் தேவா சனத்திருக்க ஏசுபரன்
இக்காலி லேயுயிர்த்தா ரே.

[1] பிசாசு.
[2] மோட்சவழி.
[3] பிரகாசிக்க.
[4] கதவு.

இராகம், இங்கிலீஷ். திரிபுடைதாளம்.

க

இந்நாளில் ஏசு நாதர் உயிர்த்தார், கம்பீரமாய்,
இகல்[1] என்பவை யாவும் வென்றதிக வீரமாய்
மகிழ்கொண்டாடுவோம், மகிழ்—வோம்.
வாருமெல்லாருங்கூடி, மா மகத்வநாதர் பேரிலே
சங்கீதம் பாடுவோம், சங்—வோம்.
தராதலத்தினின்றே[2] பரத்தெழுந் தவரை நாடுவோம்.

உ

போர்ச்சேவகர் சமாதி சூழ்ந்து, காவலிருக்க,
புகழார்ந்[3]தெழுந் தனர், தூதன்வந்து கல்மூடி பிரிக்க,— மகிழ்

௩

அதி காலையில் சீமோனொடு யோவானும் ஓடிட,
அக்கல்லறையினின் றேகினர் இவர் ஆய்ந்து தேடிட,— மகிழ்

௪

பரி சுத்தனை அழிவுகாண வொட்டேர் என்று, முன்
பகர்[4]வேதசொற்படி, பேதமற்றெழுந்தார், திருச்சுதன்,— மகிழ்

௫

இப்பாரதில்[5] உறைந்த சாவின் கூரொடியவே,
இதமாய் எழுந்தனர் நீதியாவு மன்றே முடியவே,— மகிழ்

௬

அதி மூர்க்கமான பேய் ஒடுங்கி, ஊக்கம் அறவே,
ஆதிக்க[6] முற்றெழுந்தார் தொழும்பர்கள்[7] மோக்கமுறவே,
—மகிழ்

எ

விசுவாச முற்றுரிமையான சீஷர் களிக்க,
மிக வெற்றியாய் எழுந்தார், பகைஞர் கின்றே தத்தளிக்க,—மகிழ்

1 பகை. 2 பூமி. 3 நிறைந்து. 4 சொல்லிய. 5 இவ்வுலகில். 6 முதன்மை. 7 அடியார்.



அ

இவ்வண்ணமாய்ப் பரன் செயலை எண்ணி நாடுவோம்;
எல்லாருமே களி கூர்ந்தினிதுடன் சேர்ந்து பாடுவோம்;—மகிழ்

ஜா.—பா.

---

௭௯. (௭௮) THE ASCENSION OF CHRIST. 79.

# கிறிஸ்து பரத்துக்கேறினதைப்பற்றி.

விருத்தம்.

விழுந்திட அலகை தாழ வெய்யதாம் பவமும் சாவும்
ஒழிந்திட மரித்துயிர்த்திங் குன்னத ஜெய கோமானும்க்[1]
தொழுந்தவத்தோராஞ் சீஷர் சூழ்ந்துவிண் ணோக்கி நிற்க
எழுந்தனன் தேவ புத்ரன் எழில்[2] மேகம் மீதில் தானே.

இராகம், அடாணா. ஆதிதாளம்.

பல்லவி.

எழுந்தானே, தேவ புத்ரன், மேகம் மீதேறி,
எழுந்தானே, தேவ புத்ரன்.

சரணங்கள்.

க

எழுந்தானே தேவ புத்ரன், ஈனப் பாவிகள் மித்ரன்[3]
தொழும் தாசரைக் கைதூக்கி துஷ்டப் பேயைக் கீழாக்கி,—
எழுந்

உ

பரன் உறு சினம் ஆற்றி, பாவ உக்கிரம் மாற்றி,
திருவாக் குணரச்சாற்றி, சீஷருக் காவி ஊற்றி,— எழுந்

௩

சாவின் கூரை ஒடித்து, சத்ராதியைப் பிடித்து,
தாவி மடங்கடித்து, ஜயமாய் ரட்சை முடித்து,— எழுந்

1 அரசன். 2 அழகு. 3 சிநேகிதர்.

௪

விண்ணுலகத்திலுள்ள விபுதர்[1] வந்தெதிர் கொள்ள,
நண்ணித்[2] துதிகள் விள்ள நயமாய்ப் பண்[3] பாடித் துள்ள,— எழுந்

௫

தேவாசீர்வாதம் பெய்ய, ஜீவகனிகள் கொய்ய,
பாவிகள் என்றும் உய்ய, பரிந்து வேண்டுதல் செய்ய,— எழுந்

ஜா.—பா.

## ௮௰. THE ASCENSION OF CHRIST. 80.

# கிறிஸ்து பரமண்டலத்துக் கேறினதைப்பற்றி.

விருத்தம்.

மறையுரைப் படிமரித்து வன்மையாய் மூன்றும் நாள்கல்
அறையினின் றுயிர்த்துச் சீஷர்க் கதிசயக் காட்சி காட்டி,
பொறையுடன் சிலநாள் தங்கிப் போதித்தே அவர்கள் முன்னே
இறைவனோர் முகில்மேல்ஏறி எழுந்தனன் விசும்பிற்றானே.

இராகம், சுருட்டி. முறிஅடந்தை

பல்லவி.

எழுந்தனன் முகில் மேலே விண்ணதில்
இறைவன் இம்மனுவேலே.

அனுபல்லவி.

விழுந்தலகை அதிர, வெருண்டு, மரணம் சாபம்
ஒழிந்து போகவே, மரித்துயிர்த்ததி
உரம தாமிகை எதையுமே ஜெயித்— தெழுந்

1 வானோர். 2 சமீபித்து. 3 பாட்டு.



சரணங்கள்.

௧

கனிக்க அதிக வீரமாய்,—எக்காளங்கள்
தொனிக்க வதி கம்பீரமாய்,
துணித்து, வலு சர்ப்பத்தை மிதித்துத் தலை நெரித்து,
சுரர் சூழாம் எதிர் கொடு வந்தேத்தவும்,
சுருதி பாடவு மிகவுமே சிறந்— தெழுந்

௨

தொண்டர்கட் கதிபதியாய்,—சர்வவன்மை
கொண்டருட் கடல் நிதியாய்,
மண்டலங்களுக்கு மேல் மண்டலத்தி லுந்தன்
வலது பாரிச மேவியே, எழில்
மகத்வ மா முடி சூடவே, மகிழ்ந்— தெழுந்

௩

திருச்சபை யகங்களிக்க,—திவ்விய ஜீவ
விருட்சக் கனியை அளிக்க,
பரத்தில் நிய நரரை உரித்துளோர்கள் ஆக்க,
பரமன் முன் உறு நடுவன் ஆகவே
பரிந்து பேசி நல் வரங்களீந்திட,— எழுந்

ஜா.—பா.

## ௮௧. CHRIST RISEN AGAIN TO MAKE INTERCESSION FOR US. Rom. 8. 34. 81.

# கிறிஸ்து பரத்துக்கேறினது.

ரோம. 8. 34.

இராகம், மணிரங்கு. ஆதிதாளம்.

பல்லவி.

தேவன் மரித்தே இவ்வுலகில் உயிர்த்தே
விண்ணுக் கெழுந்தார்! ஜெயம்! ஜெயம்!

அ னு ப ல் ல வி.

பாதகர்க்காகப் பரிந்தவர் பேச
  பரத்துக்கெழுந்தார், நயம்! நயம்!-கிறிஸ்து— பர

---

## ச ர ண ங் க ள்.

க

பன்னிரு சீடரும் பகைவருங் காண
  பதியதற் கேகினார், ஜெயம், ஜெயம்,-கிறிஸ்து—பதி
உன்னத சுவிசேஷம் உலகினில் கூறியே,
  உம்பர ே ஆளுகினார், நயம், நயம்,-கிறிஸ்து—உம்

உ

ஆதமகத்தை, அனைத்தையு மறுத்தே,
  அம்பரமேறினர், ஜெயம், ஜெயம்,-கிறிஸ்து—அம்
நீதப்படியே நிமலனின் இடமாய்,
  நின்றே பேசுறார், நயம், நயம்,-கிறிஸ்து—நின்

௩

காயங்களனைத்தையுங் காட்டி கர்த்தர்முன்
  கருத்தாயுரைக்கிறார், ஜெயம், ஜெயம்,-கிறிஸ்து—கரு
சேயனார் தேவ சிம்மாசன மேறி,
  செபமதைச் செய்கிறார், நயம், நயம்,—கிறிஸ்து—செ

௪

ஆகமப் படியே அவனியில் வந்தே,
  அனைத்தையுமுடித்தார், ஜெயம், ஜெயம்,-கிறிஸ்து-அ
மேகமீதேறி, மிகப்புவியோர்க்காய்
  வேண்டல்புரிகிறார், நயம், நயம்,-கிறிஸ்து—வேண்

௫

மோசே முனிவர்கள், முன்னுரை தீர்க்கர்கள்,
  முதல்வனைத் தொழுகிறார், ஜெயம், ஜெயம்,-கிறிஸ்து
—முதல்
ஆசைகொண்டெல்லா அரூபிகள் கூடி,
  அமலனைப் பணிகிறார், நயம், நயம்,-கிறிஸ்து—அம



௬

பாவியே உனக்காய், பரிந்தவர் பேச
  பரமதற்கெழுந்தார், ஜெயம், ஜெயம்,-கிறிஸ்து— பர
சாவில் நின்றுன்னை மீட்டவர் மோட்ச
  தலமதைத் தருவார், நயம், நயம்,-கிறிஸ்து-தல—தேவ
ஜா.—பா.

---

அ௨. (அ௰) THE OBJECT OF CHRIST'S ASCENSION. 82.

---

# கிறிஸ்து பரலோகத்துக்கு எழுந்து போன நோக்கம்.

---

## வி ரு த் த ம்.

மனுவேலன் உயிர்த்தெழுந்து, சீஷ ரோடு
மண்டலத்தில் இருந்தவர்க்கு வேத நூலாம்
இனிமையுள்ள போதகத்தை முன்னாள் தீர்க்கர்
இசைத்திருந்த தரிசனத்தோ டிசையக் காட்டி,
கனிவுடனே சுவிசேஷம் பிரசங் கிக்க
கட்டளைதான் தந்தொலிவ மலையில் நின்று,
தினமதோர் இனட்டில் சீஷர் காண,
சென்றிட்டான், பரலோகஞ் சென்றிட்டானே.

---

இராகம், மத்தியமாவதி. அடதானசாப்பு.

## ப ல் ல வி.

சென்றான், சென்றான், மனுவேல்—பரலோகம்
சென்றான், சென்றான், மனுவேல்.

---

## அ னு ப ல் ல வி.

சென்றான், சென்றான், சீஷர் குன்றின் மீதில் நின்று,
என்று காண்போம் என்று, ஒன்றி, வானம் நோக்க,— சென்

சரணங்கள்.

௧

வானலோகம் துறந்து,—இகழ்ச்சிக்குள்—ஈன லோகம் பிறந்து,
தானம் நீதி நிறைந்து,—வளர்ந்திட—ஞானமதனில் உறைந்து,[1]
தீனா[2] உலகை வென்று, பீனக்குருசை[3] நேர்ந்து,
தேனரோட[4] மாய்ந்து, ஈனக்கல்லறை சேர்ந்து,
ஊனம் இன்றி மின்னி, பானுபோலத்[5] தேர்ந்து,
தானலோகம் செல்ல, மானமேகஞ்[6] சார்ந்து,— சென்

௨

தேவ தூதர் தொழுவே,—மகாத்மாக்கள்—பாவநாசன் எனவே,
தாவி அவரும் எழுவே,—அவர் துதி—ஓவல்[7] இன்றி விழவே,
பாவம் போக்கும் ரத்தம் பாத்திரமதனில் மொண்டு,
மேவும் ஆசாரியர் மிக சுத்த தலம் கண்டு,
தேவ கிருபைக்காகச் செபித்தார்களே பண்டு;
ஆவலாய்க் காயங்கொண்டு, அவ்விதம் செய்யத் தொண்டு
—சென்

௩

அலகை பயந்து ஓட,—பாவங்களும்—அலறி, நரகில்ச் சாட,
உலகில் சீஷர்கள் வாட,—ஆனால் அவர்க் குயர்ந்த வீடுதேட,[8]
நிலையாய் எல்லாம் ஆள, நேர்மை செங்கோல் பிடிக்க,
வலுவாம் சர்ப்பக்கொடி மண்ணில் விழ, ஒடிக்க,
பலமாய்ச் சீஷருக்குப் பகர்ந்த சொல் முடிக்க,
மலைவில்லாது தொண்டர் மங்களம் படிக்க,— சென்

ஆ.—உப.

---

[1] தங்கி. [2] குரூரம். [3] பருத்த. [4] இருட்டு. [5] சூரியன். [6] மகிமையான. [7] ஓய்தல். [8] தேட.



## ௮௩. (௮௧) THE VICTORY OBTAINED BY CHRIST. 83.

# கிறிஸ்து அடைந்த ஜெயம்.

இராகம்; இங்கிலீஷ். ஆதிதாளம்.

பல்லவி.

ஆமன் அல்லெலூயா, மகத்துவத் தம்பராபரா!
ஆமன் அல்லெலூயா, செயஞ் செயம் அனந்த ஸ்தோத்
திரா!

அநுபல்லவி.

ஆம் ஆறுதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே;— ஆமன்

சரணங்கள்.

௧

வெற்றிகொண்டார்ப்பரித்து,—கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,—முரித்து,
பத்ராசனக் கிறிஸ்து—மரித்து
பாடுபட்டுத்தரித்து, முடித்தார்.— ஆமன்

௨

வேதம் நிறைவேற்றி,—மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றி,—பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி,—கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி, வாழ்வித்தார்.— ஆமன்

௩

சாவின் கூர் ஒடிந்து,—மடிந்து,
தடுப்புச் சுவர் இடிந்து,—விழுந்து,
சீக்கிரமே விடிந்து,—தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து, ஒழிந்தது.— ஆமன்

௬

தேவ கோபந் தீர்ந்து,—அலகையின்
தீமை எலாஞ் சோர்ந்து,—முடிந்தது;
ஆவலுடன் சேர்ந்து,—பணிந்துகொண்
டாடும், களிகூர்ந்து, மகிழ்ந்து,— ஆமக

வே.—சா.

———»❦«———

௮௪. (௭௨) "I HAVE FINISHED THE WORK THOU GAVEST ME TO DO." **84.**

# கிறிஸ்து தமக்கு ஏற்படுத்திய கிரியையை முடித்தது.

### விருத்தம்.

இவ்வாறு விண் ஏறி, சுதனும் போனன்;
இசைவான பல வித இன் னிசைக ளோடே
செல்வாய் எக் காளமதும் முழக்கி, தூதர்
திரண்டு வர பிதா எதிரே சென்று, தாங்கி,
அவ்வாறு வலப் பக்கம் இருத்தி, முன் நான்
அகற்றிவைத்த மணி[1] மகுடம்[2] சிரத்தில் வைத்தான்;
ஒவ்வவே உமது சித்தம் முடித்தேன், என்று
ஓதுவான், மனுவேலன் ஓது வானே.

இராகம், கலியாணி. ஆதிதாளம்.

### பல்லவி.

முடித்தேன் உமது சித்தம், ஐயா!—உலகில் நான்போய்,
முடித்தேன், உமது சித்தம் ஐயா!

### அனுபல்லவி.

முடித்தேன் உமது சித்தம், விடுத்தேன் எனின் மகிமை;
அடுத்தேன் கன்னி வயிற்றில்;
படுத்தேன் மனு உருவாய்;— முடித்

1, 2 மாணிக்க கிரீடம்.



### சரணங்கள்.

௧

தாவீதின் ஊரில் பல
ஆவுகள்[1] சென்றடையுங் கொட்டில்,—அதற்குட் கன்னி
மேவி [illegible]னையே பெற்று,
தாவித் தொட்டி[illegible] வைத்த கட்டில்—அவள் பால் உண்டேன்;
கோவாம்[2] ஏரோது எந்தன்
ஜீவனைப் போக்க உன்னி கிட்டில்—அவன் கை தப்பத்
தேவா! எகிப்பத்துக்குப்
போவாய், என நீர் சொன்ன மட்டில்—நடந்தே, அந்தக்
காவலன்[2] சாக வந்து நாவலர்கள்[3] பழிக்கும்
கேவல நாசரேத்தில் தேவை என வசித்து,— முடித்

௨

தாதா! நீ முன் கொடுத்த
[illegible]தப் பிர மாணங்கள் பத்தே—நிறைவேற்ற
மாதா, பிதா அவர்க்கு
நீதமாய்க் கீழ்ப்படியல் உற்றேன்;—பின்னும் என் ஐயா!
நாதன் யோவான் கொடுத்த
கோதில்லா[4] ஞானஸ்நானம் பெற்றேன்;—வனத்துக்கேகி,
தீதன்[5] என் [illegible]ன்னை வைத்த
சோதனைகளெ[illegible]ல்லாம் அற்றேன்;—உலகுள்ளோர்க்கு
போதனை செய்யும்படி, பேதைகள் ஆனவரை,
வேதபாரகர் சீற, நூதன சீஷராக்கி,— முடித்

௩

மேசையா என்று தோன்ற
ஓசையாய் அற்புதங்கள் செய்தேன்;—போதகஞ்செய்யில்
நீசன் அல நான் தேவ
பாச மகன் என்றுரை பெய்தேன்;—ஆனாலும் யூதர்,
பேசாதே, சத்தன் என்று,
கூசாமல், எந்தனையும் வைதே,—வன்மங்கள் கொண்டு,
தேசாதி பதி இடம்
வாசால மாகக் குற்றம் செய்தே,—எனை ஒப்பிக்க,
சீஷர் பயந் தொளிக்க, நாசர்கள் சூழ நின்றேன்;
தூஷணர் கோலம் செய்ய, நீசச் சிலுவை ஏறி,— முடித்

1 பசுக்கள். 3 கல்வியுடையோர். 5 தீயோன், பிசாசு.
2 இராசன். 4 குற்றமில்லாத.

௪

இப்படியே, சாத்தான் எனைச்
சற்பனை செய்யச் சண்டைசெய்தான்;—வேத எழுத்தின்
சொற்படி யூதாசை அவன்
மெய்ப்புடன் சிறைபிடித்துக் கொய்தான்;—என் குதிகாலிக்
அற்பமுள்ள காயம்பட—
மப்புடைய பாணம்[1] ஒன்றை எய்தான்;—ஆனாலும் அவன்
கைப்பிடித்த சிஷன் சோரன்[2]
தப்பவே பறித்துக்கொண்டேன் மெய்தான்—இதோ அச்சோரன்
அப்புறம்அலகை தலை குப்புற விழ கசுக்கி,
நிர்ப்பந்தப் பவத்தை நீக்கி, ஒப்பில்லா என் சிவன் விட்டு,
—முடித்

௫

மண்ணாய் அழிய, ஆதாம்
முன்னால் அடைந்த சாபம் நீக்கி,—வெளியில் ஏற
எண்ணமுடைய யோனா
வின் அடையாளத்தைத் தாக்கி,—கல்லறை சென்றேன்;
நண்ணிய மூன்றாம் நாளில்
விண்ணவர் மரணத்தைத் தாக்கி,—உயிர்த்தெழுந்து,
புண்ணாக நோவடைந்து,
ஒண்ணிய சிஷர் துயர் போக்கி,—சந்தேகந் தீ
இந்நாளில் இங்கெழுந்தேன்; உன்னை நான் மீட்டதற்கு
முன் நாள் நான் ஒப்புக்கொண்டு, சொன்ன வாக்குத் தப்பா
மல்,— முடித்
ஆ.—உப

௮௫. CHRIST WORTHY OF ALL PRAISE. **85.**

## ஏசுவே துதிக்கப்படத்தக்கவர்.

பல்லவி.

ஏசுவே சர்வ துதி வணக்கங்கள்
பெறப் பாத்திரர், பாத்திரர்.

[1] அம்பு. [2] ஆட்டுக்குட்டி.



சரணங்கள்.

௧

நீச அலகை[1] மரண நரகையும் ஜெயித்து
ஆசனத்தேறி, மூத்திரை அனைத்தையுமுடைத்த, நம்— ஏசு

௨

அக்கிரமம் புரி யாலகாலத்தையும்[1] சிதைத்து
விக்கிரமத்தால்[2] அழித்து நிக்கிரகஞ்செய்த கிறிஸ்து— ஏசு

௩

காசினியில்[3] வந்திறந்து உயிர்த்து மனு மக்கள் பெற்ற
நீசமகற்றி விசேஷ நேசமொடு கரிசித்த— ஏசு

௪

தொண்டர்கள் தமையும் பரமண்டலத்தில் தருவிக்க,
நின் றிறைஞ்சி[4] கொண்டிருக்கும் மண்டலீகப் பிரதாப—ஏசு

௮௬. (௱௨௧) THE GOSPEL PROCLAMATION. 2 COR. VI: 2. **86.**

## இரட்சிப்பின் தூது.

இராகம், ஆனந்தபைரவி. சாப்புத்தாளம்.

பல்லவி.

இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்;
ஏற்ற நல் நாள்; ஏற்ற நல் நாள்.

அநுபல்லவி.

சொன்னார், கிறிஸ்துனக்குக் கிருபையைச் சொரிந்து,— இக்

[1] பிசாசு. [2] பிருந்த பெலம். [3] பூமி. [4] தொழுதல்.

சரணங்கள்.

௧

சந்தோஷந் தனைச் சொல்ல வந்தேன்;—தேவ
சமாதான வார்த்தையைப் பெலனாகத் தந்தேன்;— இந்

௨

வாடித், திகைத்துப், புலம்பாதே;—உந்தன்
மனதில் அவிசுவாசம் வைத்துக், கலங்காதே;— இந்

௩

பாடுபட்ட கிறிஸ்தைப் பாரு;—உந்தன்
பாவங்கள் நீங்க அவர் உதிரத்தைச் சேரு;— இந்

௪

பொய்யான மாயைதனை நம்பி,—வரும்
பூரண கிருபையைப் போக்கடியாதே வெம்பி;— இந்

௫

இன்றுன் இரட்சகரிடம் திரும்பு;—அவர்
இயற்றுஞ் சம்பூரணச் சீவனை விரும்பு;— இந்

௬

உலகச் சிநேகம் வெகு கேடு;—அதற்
குடந்தைப் படாமல், சீவ மார்க்கத்தைத் தேடு;— இந்

௭

இனிமேலாகட்டும், என்றெண்ணாதே;—பாவ
இச்சைக்குட்பட்டால், திரும்ப ஒண்ணாதே;— இந்

௮

கிறிஸ்தேசுவை உற்றுப் பாரு;—அவர்
கிருபையாய்ச் சிந்தின ரத்தத்தைச் சேரு;— இந்

௯

திரு ரத்தம் வீணில் விடாது;—உனைத்
தேடி ரட்சிக்கும் ஒருபோதும் கெடாது;— இந்

௰

பாவங்கள் அறச் சுத்திகரிக்கும்,—உனைப்
பரிசுத்த வஸ்திரத்தாலே அலங்கரிக்கும்;— இந்



௰௧

நேர்மையாய்க் கிறிஸ்தின் பின்னே நில்லு;—தேவ
நீதியைப் பிடித் தவர்க்குப் பின்னாகச் செல்லு;— இந்

௰௨

இதுவே தகுதியான காலம்;—இதை
இழந்துவிடாமல் பற்றிக்கொண்டால், அனுகூலம்;— இந்

௰௩

சீவ நற் காலம் இதைப் பற்று;—உந்தன்
சிருட்டிகர் கிருபைச் சீர் பாதத்தை நத்து;— இந்

௰௪

வருவர் கிறிஸ்து மக ராசன்,—அவர்
வந்துனக்கு இன்பமது தருவார், நன் னேசன்;— இந்

௰௫

மகிமை நிறைந்த கிரீடஞ் சூடி,—நித்திய
வாழ்வை அருள்வார், உனக்கின்பங் கொண்டாடி;— இந்

௰௬

ஏசுக்கிறிஸ்தை நீ தான் நம்பு;—அவர்
என்றென்றைக்கும் உனக் கிரட்சிப்பின் கொம்பு;— இந்

மரி.—௨ப.

## ௮௭. (௯௪) ADORATION TO CHRIST AS THE GROUND OF SALVATION. 87.

[*Suitable for an opening Hymn.*]

## கிறிஸ்துவே பாவிகளால் நம்பப்படத் தக்கவர்.

வெண்பா.

ஆதாரம் நீயே, அடைக்கலமும் நீ அலது
பாதாள மே கதியாம் பாவிகட்கு,—தாதாவே!
மாசில்லா தேவன் ஒரு மைந்தா! கிறிஸ்தேசு
நேசனே! நீயே கதி.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

நீயே நிலே, உனதருள் புரிவாயே;—ஏசு!

சரணங்கள்.

௧

தூய அர்ச்சயர்கள் சூழ சீயோன் மாமலையில் ஆளும்
சுந்தரக் கிருபை வாரியே![1] மைந்தர்கட்கனு சாரியே!
சோபனை[2] சீலி!—மகிமைப்ர—தாப அரூபி! சொரூபி!
சோதி! ஆதி நீதி ஓதி சுயவல்லமையில் நரர் திரு உருவான வந்த— நீயே

௨

நன்மை நிறை வாகரமே! ஞானப் பிரபாகரமே!
வன்மைத் தன்ம சாகரமே! வான சுரர் சேகரமே!
மகிமை வந்தனமே,—உயர்—துதி கடாந்தனமே, கனமே;
வாச நேச ஏசு ராசயூதர்களுடைகதி தின அருச்சனை[3] துதி— நீயே

௩

வானும் இகமும் படைத்த, வலுசர்ப்பம் வினை துடைத்த,
ஞான நன்மைகள் உடைத்த, நரர்க்குக் கிருபை கிடைத்த,
நய கிருபாலி![1]—உலகின்—பவம் அறு சூலி! செங்கோலி!
நாடி, நீடி, தேடி, கூடி நயம் அருள் அரசன் நீ, தயவுடன் பரி சனி!— நீயே

வே.—சா.



## (௮௧) SALVATION BY FAITH IN CHRIST. 88.

## கிரியைகளால் இரட்சிப்பு வராது என்பது.

வெண்பா.

சலியாதே, மெத்தத் தவியாதே, ஓடி
ஆலையாதே, அஞ்சாதே, யார்க்கும்;—மலையாதே,
நெஞ்சமே! இப்படி நம்மை வருத்தவனே
தஞ்சமே; சஞ்சலம்வேண் டாம்.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

மலையாதே, நெஞ்சமே!—இப்படி நம்மை
வருத்தவனே தஞ்சமே.

அநுபல்லவி.

அலையாதருள் மந்த்ர கலையாகம்[1] சுந்த்ர
அருத்தப் பண்[2] கருத்தர்க்கென்
றுரித்தல் கொண் டிருக்கிக்கொள்,— மலை

சரணங்கள்.

௧

கருத்தர் கட்டுவதல்லோ வீடு,—நரர்
கட்டுங் கிரியைகள் வீண் பாடு,
வருத்தப்படுவதென்ன? கேடு,—பேயின்
மயக்கமெல்லாம் விட்டுப்போடு;
தரித்திரத்திரள் இக்கட்டு, பெருத்த கவலைப்பட்டு,
சலியாதிரு, நலியாதிரு,
தந்தையார் சுதன் வந்த நாள் இது.— மலை

௨

எண்ணத்தினால் என்ன கூடும்?—தெய்வம்
இட்டதல்லோ வந்து நீடும்;

1 கல்வி. 2 பாட்டு.

மண்ணைச் சதம் என்றெண்ணி, வாடும்—மக்கள்
மனதில் துயரம் வந்து மூடும்;
கண்ணைத் திறந்து நோக்கு, விண்ணைச் சிறந்துள்ளாக்கு,
கருத்தாய் இரு, உரித்தாய் இரு;
கருத்தானவர் ஒருத்தரே துணை.— மனை

௨

என்ன கவலைப்பட்டும் நஷ்டமே,—கிறிஸ்
தேசு பிறந்ததுன் அதிஷ்டமே;
உன்னதன் பண்ணின இஷ்டமே,—உனக்
கொழுங்கு ப்ரமாணத்தின் சட்டமே;
பின்னப்பட் டலையாதே, சின்னப்பட் டலையாதே;
பெருத்தகாள் இது, கருத்தர்நாள் இது,
பெலப்பாய் இரு, கெலிப்பாய் இரு.— மனை

௩

காலம் நிறைவேறினபோது,—ச்ச
கருத்தர் வந்தார், உண்மை ஈது;
ஆலக்கொடுஞ்[1] சர்ப்பத்தின் தீது—முற்றும்
அழிந்த தழிந்ததின் சூது;
சாலத்தவத்தில் செல்லு, மூலப்பொருளைச் சொல்லு
சத்தியத்திரி தத்துவத்திவ்ய
நித்தியப் பரம வஸ்துவைத் துதி.— மனை

வே.—சா.

## ௮௯. (௮௮) MAN'S RUINED STATE, AND SALVATION BY CHRIST ALONE. 89.

# கிறிஸ்துவினால் வந்த இரட்சிப்பு.

வெண்பா.

கூடாதென் றெம்மூர் குருவில் அறையுண்டு,
பாடாய் மரித்தடக்கப் பட்டுமே,—ஓடாகி,
எப்படியும் பாவிகளை ஒப்புரவாக் கிக்கொளவே,
அற்புதன்வந் தார்; இதஷ் யின்.

1 நஞ்சன்ன.



இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக்கொள்வதற்
கிப்புவியிலே உதித்தார்; அற்புதன்தானே.

அநுபல்லவி.

மெய்ப்பரம் புவியுந் தந்த தற்பரன் அநாதி பிதா
நற்புதல்வனான[1] ஏக காத கிருபாகரனோர்.— எப்படி

சரணங்கள்.

௧

மட்டில்லாப்பொருள் அனைத்தும் இட்டமாகவே படைத்து
இட்டமாய் அனுக்கிரகித்த சிஷ்டிகன் தானே;
கட்டளையிட்ட கற்பனை விட்டொரு சர்ப்பத்தின் வாயில்
பட்டு, நரகத்துக்கானாய்க் கெட்டழிந்த பேர் என்றாலும்,
—எப்படி

௨

அச்சயன்[2] மோசேயைக் கொண்டன் றெச்சரித் தெழுதித்தந்த
உச்சித கற்பனை கடந் திச்சையினாலே
துர்ச்சனப் பசாசைக் கூடி, மிச்சமாய்ப் பாவங்கள் செய்து,
நிச்சயங் கெட்டுப் போனார்கள்; ரட்சிக்கக் கூடாதென்றா
லும்,— எப்படி

௩

நாற்றிசை உலகம் எங்கும் ஏத்திய மானிடர் எல்லாம்
வேற்றுமைப் பசாசின் கையில் ஆத்துமத்தையே
தோற்றனந் தானந்த காலம் தேற்றுதல் அற்றே கிடந்து,
சாற்றருந் தயாபரர்க்கு மாற்றலர்[3] ஆனார் என்றாலும்,— எப்படி

1 நல்லகுமாரன். 2 அழியாதவன்=தேவன். 3 பகைவர்.

௩

தாக்கிய பராபரன் உண்டாக்கிய அனந்த செல்வப்
பாக்கியங்கள் அனைத்தையும் போக்கடித்துமே;
யோக்கியம் தெய்வ புத்ர சிலாக்கியம் எல்லாம் இழந்து,
பேய்க்கடிமை ஆட்கள் கேட்டை நீக்குதற் கேலாதென்று
னும்,— எப்படி

௪

பத்தியு தெல்லா மயங்கி, மூன்றிலும் இருளடைந்து,
சத்துருவான சாத்தானின் கொத்தடிமையாய்
நித்திய வாதைக்குள் நிரயத்தில்[1] விழுவோர்க்குங்கூட
ரத்தத்தைச் சிந்தி ஆனாலும், செத்துயிர் விடுத்தென்றாலும்,—
எப்படி

௫

மேட்டிமை எல்லாந் துறந்து, காட்டுக்குள் இருக்கும் சிந்த
மாட்டுக்கொட்டிலில் பிறந்தோர் ஆட்டுக்குட்டி போல்
பாட்டுக்கிடமாய் உலகை மீட்டுக்கொண்டனந்த மோட்ச
வீட்டுக்குட்படுத்த வெல்லை நாட்டுக்குள் மரித்துயிர்த்து,—
எப்படி

வே.—சா.

———

௯௦. (௩௧) SALVATION BY CHRIST ALONE. ௯௦.

*[Thy wounds are my Refuge.]*

## கிறிஸ்துவினால்மாத்திரம் இரட்சிப்பு கிடைக்கும் என்பது.

வெண்பா.

பொங்கிப் பிலாத்துவின்கீழ் பாடுபட்டுப், பொறநூறில்
ஐந்துகாயத்தை அடைந்தோனே!—எந்தனுக்கு
சீரும், பொருளும், செயலும், பல உறவும்
ஆருந் துணை இங்கிலை யார்!

[1] நரகம்.



இராகம், முகாரி. அடதாளசாப்பு.

பல்லவி.

ஆருந் துணை இல்லையே எனக்
காதியான் திருப்பாலா!—உந்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலங்கொடுத்
தாளுவாய்; ஏசுநாதா!

———

அனுபல்லவி.

சீர் உலாவு பூங்காவில் ஓர் கனி
தின்ற பாதகம் மாற்றவே,
சிலுவை மீதினிலே உயிர்விடும்
தேவனே! என் சுவாமி!— ஆரும்

———

சரணங்கள்.

௧

மூந்து மானிடர் தந்த திவினை முழுவதும் அறவேண்டியே
முன்முடியுடன் குருசில் ஏறிய முன்னவா![1] கிர்பை கூர்வையே!
இந்தும் உன் உதிரத்தில் என் வினை தீர்த்திரட்சியும், ஐயனே!
தீய பாவி எனக்கு வேறொரு செயலிடந் துணை இல்லையே.—
ஆரும்

௨

தந்தை, தாயரும், மைந்தர், மாதரும், சகலரும் உதவார்களே;
சாகும் நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும் உண்டுமோ?
சொந்தம் நீ எனக் கன்றி, வேறொரு சொந்தமானவர் இல்லையே;
சுற்றமும், பொருள், அந்தமும், முழு[2] பத்தமே, என தத்தனே!
—ஆரும்

௩

கள்ளனையினும், வெள்ளனையினும்பிள்ளை நான் உனக்கல்லவோ?
கார்த்தனே! வலப் பக்கமேவிய கள்ளனுக் கருள் செய்தையே;

[1] தேவனே! [2] முழு அபத்தமே.

தள்ளி என்னை விடாமல், உன்னடி தந்து, காத்தருள், அப்பனே!
தயவாய் ஒரு குருசில் ஏறிய சருவ சீவ தயா பரா!— ஆரும்

௪

நன்றி அற்றவனாகிலும், எனைக் கொன்று போடுவதாகுமோ?
நட்டமே படுங் கெட்ட மைந்தனின் கிட்ட ஓடினதில்லையோ?
கொன்றவர்க் கருள் செய்ய என்று பிதாவை நோக்கிய கொற்
றவா![1]
குற்றம் ஏது செய்தாலும், நீ எனைப் பெற்றவா! பொறுத்தாள்
வையே.—
ஆரும்

௫

பத்தியேதும் இலாது மாய சுகத்தை நாடிய பித்தனாய்
பாழிலே என்றன் நாள் எலாங் கெடுத் தேழையாகினேன்;
என்செய்வேன்?
சத்துருவான பிசாசினால் வரும் தந்திரங் கொடிதல்லவோ?
தஞ்சம் அற்றவன் ஆகினேன், உன தஞ்சல்[2] கூறும் அரு
ளியே!—
ஆரும்

௬

அறிவிலாதொரு மிருகமாக நான் அலைந்த பாதகன் ஆயினும்,
அருமை ரட்சகனே! திரு, மனம் உருகுமே, மிக உருகுமே;
மறுதலித்த பேதுருவைக் கைவிட மனது வந்ததும் உண்டுமோ?
மகதலா மரியாளின் மேல் அருள் வைத்தவா! உனின் சித்த
மே.—
ஆரும்

வே.—சா.

---

[1] அரசனே! [2] அஞ்சாதேயென்று திருவாக்கருளும்.



௯௧. (௯௧) BESIDE HIM THERE IS NO SAVIOUR: KNOW AND TRUST HIM. **91.**

## இயேசுவை அன்றி வேறு ரட்சகர் இல்லை.

இராகம், மணிரங்கு. ஆதிதாளம்.

பல்லவி.

ஏசுவை அன்றி, வேறொரு ரட்சகர்
காசினி தனிலுண்டோ? மனமே!—அவர்
நேசமறிந்து, விசுவாசம் இல்லாமலே,
மோசம் போவதேன்? மனமே!

சரணங்கள்.

௧

ஆதம் ஏவை செய்த பாதகம் தொலைத்திட
பூதலம் வந்தார் மனமே!—கொடும்
பூதர்களால் பல வாதைகள் கொண்டு திவ்ய
போதகம் செய்தார், மனமே!— ஏசு

௨

இந்த வாழ்வு கன விந்தை என்றுனது
சிந்தை தெளிந்திருந்து, மனமே!—ஐயோ!
பந்த பாசமதில் நொந்து நாள் தோறும் அ
லைந்து திரிவதேன்? மனமே!— ஏசு

௩

படியினில்[1] எடுத்த கொடிய தேகம் இதின்
முடிவினைப் பார், நீ மனமே!—ஆற்றின்
இடிகரை தனில் வளர் நெடிய விருட்சம்போல்,
நொடியில் விழுந்துபோம், மனமே!— ஏசு

௪

பூதல மீதினில் ஓதரி தாம் பர
சோதியைப் போற்றிசெய், மனமே!—செய்தால்,
பாதகம் போய் மோட்ச சாதகம் ஆமென்று
வேதமுறைக்குதல்லோ? மனமே!— ஏசு

ச.—உப.

---

[1] உலகம்.

௯௨. THERE IS NONE OTHER NAME UNDER HEAVEN WHEREBY WE MUST BE SAVED. **92.**

# இயேசுவின் நாமமல்லாமல் மனிதர் ரட்சிக்கப்பட வேறு நாமமில்லை.

இராகம், வனஸ்பதி. ஆதிதாளம்.

பல்லவி.

யேசு நாமமல்லால்—உலகினில்
வேறு நாமமில்லை—கிறிஸ்து.

அநுபல்லவி.

தேசுலாவிய கேருபீம்பணி
திவ்ய வானவர் முனிவர் கண்மணி,
மாசில்லாத மெய்ஞ்ஞான சிகாமணி,
மதிக்குஞ் சத்திய வேத சிரோமணி,— யேசு

சரணங்கள்.

க

வானமும், புவியும்,—கதி—ரோன், மதி, உடுவும்,
கானல், வரை, கடலும்,—சர—ரான எவ்வுயிரும்,
தானே படைத்தருள் ஆதி காரணன்;
சர்வ ஜீவ தயாபர பூரணன்;
ஈனர் வாக்குக் கெட்டாத மெய்யாரணன்;
இலங்கும் வேத சங்கீத பாராயணன்;— யேசு

உ

காவிலாத மேவை—செய்—தீவினையதனால்
பூவின் மாந்தர் படுர்—துயர்—தேவ கோபமற,
பாவிகளைப் பரனோடுறவாக்கப்,
பரம எருசலேம் நகர் சேர்க்க,
மேவுமலகை அரணைத் தூளாக்க,
மேதினியில் சமாதானமுண்டாக்க;— யேசு



௩

பண்டு வேதியர்கள்—கைக்—கொண்ட மாமறையில்
விண்ட நாமமல்லால்,—உயர்—அண்ட மீதினிலும்,
மண்டலத்திலும், ஆழி கீழிலும்,
மாருதஞ் செலும் அட்ட திக்கிலும்,
தொண்டர் கூக்குரல் எட்டுந் தூரத்திலும்,
துஷ்டப்பேய்கள் சுற்றுத இடத்திலும்;— யேசு

௪

முத்தர்[1], தேசிகர், தே—வதா—பத்தர், அன்பரினை
யத்தில், நீதி தவறும்—பரி—சுத்தர் சிற்சபையில்,
சித்ரச் சீயோன் குமாரி செபத்தில்,
சீவ தண்ணீர் துறை கண்டவர் அகத்தில்,
சத்திய வேத நற் சமய்வாகமத்தில்,
தாசர் நாவலர் பாட்டுகள் பதத்தில்,— யேசு

ச—உ.ப.

௯௩. CHRIST ALONE OUR SAVIOUR. **93.**

# இயேசுகிறிஸ்துவினால் மாத்திரம் ரட்சிப்பு கிடைக்கும்.

வெண்பா.

எங்கும் நிறைபரமாய் எவ்வுலகோருந் துதிக்கப்
பொங்கி அருளைப் பொழி நாமம்—எங்கணுமே
பேசவொரு நாமம் பிறிதில்லை; நம்புவீர்
மேசியா ஏசு நாமம்.

இராகம், கமாசு. ஆதிதாளம்.

பல்லவி.

ஏசு நாமம் ஒன்றை நம்புவீர்,
பூலோகத்தாரே.

---

1 பாவத்தினின்று நீங்கினோர்.

சரணங்கள்.

௧

ஏசு நாமம் ஒன்றை நம்பும்;
ரட்சணியத்துக் கிதுவே ஸ்தம்பம்;
பேசும் வேறே நாமமெல்லாம்
பேயின் வம்பும் தும்புமாகும்.— ஏசு

௨

மூவரிலொருவருமாய்
முத்தொழில் புரிவோருமாய்,
ஆவியாய் அநாதியாய்
அரூப ரூப வஸ்துவான— ஏசு

௩

ஐயன் ஏசையா வுரைத்து,
ஆரணத் தெழுதிவைத்து;
வையகம் புரக்கும் நாயன்,
தையல்[1] தரும் தூய சேயன்,— ஏசு

௪

பார்த்திபன் தவீது குல
கோத்திர கன்னிமரியாள்,
சேத்திரம் போலே உதித்துத்
தாத்திரி[2] ரட்சகனான— ஏசு

௫

பூதலத் தஞ்ஞான இருள்
போக்கவே மெய்ஞ்ஞான பெருஞ்
சோதியாய் விளங்கி நிற்கும்
நீதியின் சூரியனான— ஏசு

௬

பாவிகளீடேற மோட்ச
பாக்கியம் பெறுவதற்காய்ச்
சீவன் விட்டுயிர்த்தெழுந்து
சேணுலகுக்[3] கேறிச் சென்ற— ஏசு

௭

விண்டலத்தவர்கள் சூழ,
கண்டவர்கள் பதறி வீழ,
மண்டலத்தைத் தீர்வைசெய்யக்
கொண்டல்[4] மிசை வரும் இராசன்— ஏசு

ஈ.—உ.ப.

[1] பெண். [2] பூமி. [3] வானுலகம். [4] மேகம்.



# கிறிஸ்துநாதரே ஜீவமருந்து.

வெண்பா.

ஆரும் அறியா அருமருந்தை நாளுண்டு
கூரும்படியே குவலயத்தில்[1]—பாரும்
குருமருந்தாய் வந்த குருதியினால்[2] மீண்ட
அருமருந்தாம் ஏசு உலகில்.

இராகம், மோகனம். ஏகதாளம்.

பல்லவி.

ஒரு மருந்தரும் குருமருந்தே,
உம்பரத்தில் கண்டேனே.

அனுபல்லவி.

அருள் மருந்துடன்;—ஆனந்த மருந்து,
ஆதியிற்றானாய்—முளைத்த மருந்து,
வரும் வினைகளை—மாற்றும் மருந்து,
உறுமையுள்ளோர்க்கே—வாய்த்த மருந்து;— ஒரு

சரணங்கள்.

௧

சிங்கார வனத்தில்—செழித்த மருந்து,
ஜீவகனி மீதில்—படர்ந்த மருந்து,
மங்கை ஏவை பவம்—மாற்றும் மருந்து,
வல்ல சர்ப்பம் விஷம்—மாய்த்த மருந்து;— ஒரு

௨

மோசே முதல் முன்னோர்—காணும் மருந்து,
மோட்ச மகிமையைக்—காட்டும் மருந்து,
தேசத்தோர் பிணியைத்—தீர்த்த மருந்து,
தீர்க்கதரிசிகள்—செப்பிய[3] மருந்து;— ஒரு

[1] பூமி. [2] இரத்தம். [3] சொல்லிய.

௩

தீராத குஷ்டத்தைத்–தீர்த்த மருந்து,
செவிடு குருடுமை– தின்ற மருந்து,
மாறு[1] திரித்துவ–மான மருந்து,
மனுவாயுலகினில்–வந்த மருந்து;— ஒரு

௪

செத்தோர் உயிர்த்தே–எழுந்த மருந்து,
சீவன் தவறுதருளும் மருந்து,
பத்தரைச் சுத்திகரித்திடும் மருந்து,
பரம வாழ்வினிற்– சேர்க்கும் மருந்து;— ஒரு

ஜே.—யா.

---

௯௫. (௯௪) CHRIST THE FOUNDATION OF LIFE TO DYING MEN. 95.

## உயிர் இழந்தவர்களை உயிர்ப்பிக்கிற இயேசுவின்பேரிலே.

வெண்பா.

நாவிற் கடங்காத ஞானமே! உன்னதமே!
பாவிற்கும் எட்டாப் பராபரமே!—கா, வரவே!
காவில் விளைந்த கனிவிளையைத் தீர்க்கவந்த
சீவனே! நித்யசீவனே!

இராகம், வனம்பதி. ஆதிதாளம்.

பல்லவி.

சீவனே! நித்திய சீவனே!
சீவனே! பரமானந்த திவ்வியபாலனாகவந்த
சீவனே! நித்திய சீவனே!

அநுபல்லவி.

காவதில் விளைந்த ஆதி எவை வினை தீரவந்த— சீவ

[1] மகிமையுள்ள.



சரணங்கள்.

௧

வல்லமைத்தி ரித்துவ தேவன், சொல்லருங் கிருபைப் பிரதா பன்,[1]
துல்லியத்தின்[2] ஞான தீபன், நல்லவர்க்கருள் தயாபன்,
அல்[3]லிருள் போதே–அடர்–புல்லதின் மீதே–வர
லான வரன மோன ஞான நேசமே!— சீவ

௨

நித்திய கிருபைப் பிரகாசன், அத்தனார்க் கொரே சுமேசன
சத்திய வேதத்தின் வாசன், ஸ்துத்திய மிகுஞ் சருவேசன்
சித்திரச் சுதனே!–திரி–தத்வ அற்புதனே!–பர
தேச வாச நேச மேசியா வேந்தே!— சீவ

௩

வானத்தைப் படைத்த கர்த்தர், ஞானத்தை உடைத்த நித்தர்,
மேன்மை தேவத்துவ பரிசுத்தர், கானத்துற் றெமைக் கரிசித்தர்,
மட்டளவற்றோர்,–மாட்டுக்–கொட்டிலிலுற்றோர்–இன்று
வாழ்த்தி, ஏற்றி, போற்றி, ஸ்தோத்திரஞ் சொல்வோம்.— சீவ

௪

முத்தியின் வழியைக் காட்ட, சத்துருப் பிசாசை ஓட்ட,
பத்தனைப் பரிந்து நாட்ட, மெத்தவும் அன்பு பாராட்ட,
பெத்தலேம் பதியே–வந்த–உத்தம கதியே!–அருள்
பேசும் நேசர் ஏசு மேசியா வேந்தே!— சீவ

௫

மண்டலம் மகிழ்ச்சி கூற எண்டிசையோருங் கரையேற,
பண்டை வினை யாவும் மாற, தொண்டர் இருதயந் தேற,
கண்டு வந்தவனே!–அருள்–கொண்டு வந்தவனே!–கிருபை
காட்சி, ஆட்சி சூட்சி மாட்சிமை தேவே!— சீவ

வே.—சா.

[1] பிரஸ்தாபம் பொருந்தியவன். [2] சுத்தம். [3] இரா.

௯௬. (௬௬) CHRIST THE GOOD SHEPHERD. **96.**

## நல்மேய்ப்பராகிய கிறிஸ்துவை மன்றாடல்.

வெண்பா.

தேயன், உபாயன், நியாயன், திருக்காயன்,
தாயன், சகாயன் தயைவாயன்,—நாயன், ஒரே
வல்லாயன், தாவீதின் வங்கிஷச்செங் கோல் ஓச்சும்
நல்லாயன் ஏசு சாமீ.

இராகம், பியாகடை. ஆதிதாளம்.

பல்லவி.

நல்லாயன் ஏசு சாமி, ஈசதாவீதுடைமகவு,
ஒரே மகவு, ஆட்டுக்காய் உயிர்தாரார்.

சரணங்கள்.

௧

எல்லார்க்கும் பெரியான், எம்பிரான் தம்பிரான்,
ஏகவஸ்தோரே ஏகோவா!—மா
தேவ கிறிஸ்து! நீ கா, வா, வா.— நல்

௨

மன்னர்[1] மன்னர் கொண்டாடிய, நீடிய
வானப் பரமகு மாரா வோ!—அதி
ஞானத் திறம் மிகும் வீராவோ!— நல்

௩

விண்ணுடர் முழங்க, மண்ணுடர் விளங்க,
மேவி வந்தமே சையாவே!—படு
பாவி சொந்தம் ஏ சையாவே!— நல்

௪

சீராட்டுக் காட்டி, எந்தையார், தந்தையார்
திருக்கடைக் கண்ணால் பார்த்தாரே,—வந்து
திரும்பத் திரும்ப எனைச் சேர்த்தாரே.— நல்

[1] அரசர்.



௫

விருத்தசேதன முறைமையை அடுத்தார்,
கிறிஸ்து ஏசெனப் பெயர் எடுத்தார்,—எமை
மீட்க இந்த வேஷந் தொடுத்தார்.— நல்

௬

ஆட்டைக் கூட்டி, ஓர் தொழுவத்தில் அடைப்பார்,
அரிய நல்ல மேய்ச்சல் கொடுப்பார்,—அன்
பாகத் தோளினி லே எடுப்பார்.— நல்

வே.—சா.

௯௭. (௱) I AM THE WAY, THE TRUTH, AND THE LIFE. **97.**

## கிறிஸ்துவே வழியும் சத்தியமும் சீவனுமானவர்.

வெண்பா.

என் செயலால் நன்றேதும் இன்றே எனக்குதவி
உன் செயல்தான் ஒன்றே உளதாமால்,—நன்குபெற
நல்வழி மெய் சீவனெனும், நாமதே யா! உனையான்
ஒல்கி அண்டினேன்; சேர், உவந்து.

இராகம், புன்னாகவராளி. அடதாளசாப்பு.

பல்லவி.

நல்வழி, மெய், சீவன் எனும் நாம தேயனே!— உனை
நம்பினேன் ஏழைக்கிரங்கி, ஆள், என் நாயனே!

அனுபல்லவி.

செல்வழி விலகு தீயர் சீவனிற் சேர,—நர
ஜென்மமாய் மரித்துயிர்த்தாயே, வினை தீர;
திருமறை வேதா! அருள் நிறை போதா!
கருணை மெய்த் தாதா! உரிமையுள்ளெம் ஏசுநாதா!—நல்

சரணங்கள்.

௧

சத்தியத்தையே போதிக்கும் சத்தியம் நீயே;—அந்த
சத்தியத்தில் நான் நடக்கச் சக்தி ஈவாயே;
சுத்தமறையாஞ் சுவிசே டத்தை ஈந்தாயே—அதின்
சுத்தாங்க மெய்மை உணர்த்து வித்தருளாயே;
தொழுதகம் சேர்ந்தேன்; அழுதகம் ஓர்ந்தேன்;[1]
எளியனுட் சேர்ந்தேன்; முழுதுமே சார்ந்தேன் உனதடி;—நல்

௨

செத்த பிரேதம்போற் செயல் அற்றவன் நானே,—நல்ல
சீவனைக் கொடுக்கும் நித்ய சீவன் நீ தானே,
முத்தி நெறி காட்டும் மார்க்கம், சுத்த நல் தேனே,—அதின்
மூலம் நான் உயிர்க்க உனதாவி ஈ கோனே!
முடவியல் மாற, மடையது தேற,
அடமது மாற,[2] இடமனதாய்க் கரையேற,— நல்

௩

ஐயனே! உனை அல்லால், நான் உய்யுமாறேது;—என்றன்
அங்கமும் ஆவியும் முழுப் பங்கம் மா தீது;
தெய்வ கோபம் தீர்க்க என்றன் செய்கை ஒவ்வாது,—இந்த
தீயனுக்கு வேண்டும் உன் சகாயம் இப்போது;
சிறியனை நோக்கி, உறுதுயர் போக்கி,
இறுதி[3]யைத்தாக்கி, நிறையுளதாக்கி; அருள் என்றும்,— நல்

ஜா.—பா.

௯௮. WORSHIP CHRIST AND LIVE. 98.

## ஏசு நாயகனை வணங்கு.

பல்லவி.

ஏசு நாயகனைத் துதி செய், செய்,
செய், செய், செய், ஏசு நாயகனை.

[1] ஆராய்ந்தேன். [2] இடை. [3] கடைசி.



சரணங்கள்.

௧

பாசந்தனிலுழலும் பேய் மதியே,[1] ஐயன்
பாதத்தை அன்றி உனக்கார் கதியே
பூசும் மாங்கிஷத மோசீ புவி[2] நிதியே[3] வெறும்
பொய், பொய், பொய், பொய், பொய்;— ஏசு

௨

ஆணுவ மெனும் பேயினை முடுக்கும் பர
மானந்த சுக கிரக[4] பதங் கொடுக்கும்
வேண அபீஷ்டங்கள்[5] வந்தடுக்கும் இது
மெய், மெய், மெய், மெய், மெய்;— ஏசு

௩

தகை பெறும் விண்டலந் தனிலுதயஞ் செயும்
சசி,[6] கதிர்,[7] மீன்[8] முதல் பொருளெதையும்
வகையுடன் அருள் கடவுளை இருதயந்தனில்
வை, வை, வை, வை, வை;— ஏசு

௪

நாதமுத பௌதிக ஸ்தாபகனை வேத
நாவலர் நீதியென்றும் ஞாபகனை
ஓதரிதான சர்வ வியாபகனைப் பணிந்
துய், உய், உய், உய், உய்;— ஏசு

தே.—மு.

௯௯. (௯௯) COMING TO CHRIST BY FAITH. 99.

## கிறிஸ்துவை நம்பி அவரண்டை சேருதல்.

வெண்பா.

பாரும் திருக்கண்ணால் பார்த்திரங்கி, துன்பம் எல்லாம்
தீரும் அருள் கூரும்; திரு உளமே!—சீர் அருளும்,
தம்பமே; திவ்ய சரணம், சரணமே;
நம்பிவந் தேன் மேசையா!

[1] புத்தி. [2] பூமி. [3] திரவியம். [4] வீடு. [5] மிகவிரும்பப்பட்டது. [6] சந்திரன். [7] சூரியன். [8] நட்சத்திரம்.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

நம்பிவந்தேன், மேசையா! நான் நம்பிவந்தேனே;—திவ்ய
சரணம், சரணம், சரண் ஐயா! நான் நம்பிவந்தேனே!

சரணங்கள்.

௧

தம்பிரான் ஒருவனே! தம்பமே தருவனே!—வரு
தவிது குமர குரு பரமனுவேலே! நம்பிவந்தேனே.— நான்

௨

நின்பாத தெரிசனம் அன்பான கரிசனம்;—நித
நிதசரி தொழுவ நிதம் எனவும் உறுதியில் நம்பிவந்தேனே.—
நான்

௩

நாதனே! கிருபைகூர், வேதனே! சிறுமைதீர்;—அதி
நலம் மிகும் உன இரு[1] திரு அடி அருளே நம்பிவந்தேனே.—
நான்

௪

அட்சயத் தைங்காயம் அற்புத திவ்ய தேயம்;—நினை
வறிவுடன் இருதயம் மகிழவும் முழுவதும் நம்பிவந்தேனே.—
நான்

௫

தேடினேன் பாதமே, நாடினேன் வேதமே;—நேசா
திரு உளமே! கைவிடாதேயும், ஐயா! நம்பிவந்தேனே;—நான்

௬

பாவியில் பாவியே, கோவியில் கோவியே;—கன
பரிவுடன் அருள் புரி, அகல விடாதே; நம்பிவந்தேனே.—
நான்

௭

ஆதி ஓலோலமே, பாதுகா காலமே;—உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த நம்பிவந்தேனே.—நான்
வே.—சா.

[1] இரண்டு.



௧௦௦. COMING TO JESUS. 100.

## இயேசுவினிடத்துக்கு வருதல்.

இராகம், மலையாமி. திரிசுரதாளம்.

பல்லவி.

ஐயையா! நான் வந்தேன்,—தேவ
ஆட்டுக்குட்டி! வந்தேன்;

சரணங்கள்.

௧

துய்யன் நீர் சோரி பலி எனக்காய்ச் சிந்தி
துஷ்டன் எனை அழைத்தீர்,—தயை
செய்வோம் என்றே, இதை அல்லாது போக்கில்லை;
தேவாட்டுக்குட்டி! வந்தேன்;— ஐயையா!

௨

உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன் என்று,—நில்லேன்,
தென் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்;
தேவாட்டுக்குட்டி! வந்தேன்;— ஐயையா!

௩

எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை எத்தனையோ!—இவை
திண்ணம் அகற்றி எளிதனை ரட்சியும்;
தேவாட்டுக்குட்டி! வந்தேன்;— ஐயையா!

௪

அந்தகன், ஏழை, நிர்ப்பந்தன் யான், பார்வையும்
ஆஸ்தி மனச்சுகமும்,—நீர்
சிந்தை மகிழ்ந்தீயும், எந்தெந்த நன்மையும்;
தேவாட்டுக்குட்டி! வந்தேன்;— ஐயையா!

௫

ஏற்றுக்கொண்டு, மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும்—மனம்
தேற்றிக்கொண்டேன் உந்தன் வாக்குத்தத்தங்களால்
தேவாட்டுக்குட்டி! வந்தேன்;— ஐயையா!

௬

மட்டற்ற உம் அன்பினாலே தடை எதும்
மாறி அகன்றதுவே,—இனி
திட்டமே உந்தன் உடைமை யான் என்றென்றும்
தேவாட்டுக்குட்டி! வந்தேன்;— ஐயையா!

A.—வே.

---

௧௦௧. THOU REMOVEST MY CARES. **101.**

## என் கவலையை மாற்றியருளும்.

இராகம், சங்கராபரணம். ஏகதாளம்.

பல்லவி.

மாற்றீரென் கவலை: அருள்பெற—மிக
மாற்றியே கலி தீர்த்தீர் உமது மகிமையை
நிறைவேற்றி.

சரணங்கள்.

௧

சமானவரசே, நீ! தந்தை
சமானவரசே, நீ!—ஒரு
சந்திர பதம் போல் சுடரே விடுத்தீர்
தாசனுரு வெடுத்தீர்.— மாற்

௨

குதலைகளை நீக்கி, அழலின்
குதலைகளை நீக்கி,—என் கை
தூக்கி, உலகிடர் போக்கி, மையே,
திதிக்கவும் மயலாக்கி;— மாற்



௩

சடலமுலகஞ் சூது, பொல்லாச்
சடலமுலகஞ் சூது;—இது
தகாததின் மடவாது கொடியது
சஞ்சலமினி யேது.— மாற்

௪

கலங்கடலை வழுவி, சுகிர்தன்
கலங்கடலை வழுவி,—வழி
நழுவி விழுமெனைக் கழுவி, அழகாய்
நலமாக்கவே வருவாய்;— மாற்

வே.—சா.

---

௧௦௨. (௬௬) CHRIST A REFUGE IN TIME OF TROUBLE. **102.**

## இயேசு துன்பத்தில் தஞ்சம்.

கலித்துறை.

அஞ்சு மூடன்பல ஆபத் துன்பத் தடிக்கடியே
சஞ்சல மாய்உனைச் சார்ந்திடி னும்,சற் குருகிறிஸ்து
தஞ்சம் இருக்க, சலிப்புனக் கேனோ இச் சகத்தில் என்றன்
நெஞ்சமே! தள்ளாடி நீ கலங் காதே,என் நேசமுமே.

இராகம், சஹானா. மிசிரதாளம்.

பல்லவி.

நெஞ்சமே! தள்ளாடி நொந்து,
நீ கலங்காதே:—கிறிஸ்
தேசுவே உனக்கு நல்ல
நேச துணையே.

சரணங்கள்.

௧

நேசமான தோழர்களும் மோசமாக,—சற்றும்
நேரப் பகைஞராக நின்றபோதிலும்;— நெஞ்

௨
அன்னை தந்தை ஆனவரும் பின்ன பேதமாய்,—உனை
அங்கலாய்க்க விட்டெழிருன் ஆன போதிலும்;— நெஞ்

௩
சீவனம் இழந்து, துன்பம் மேவினாலும்,—மா
சிறுமையாய்ச் சகிக்கொணு வறுமை கொண்டாலும்;— நெஞ்

௪
உற்ற சகோதரர்களும், மற்றுள்ளோரும், போ,—என்
றோட்டியே, பழி உன்மேலே சாற்றினாலும்;— நெஞ்

௫
பஞ்சமும் பசியும் வந்து, கெஞ்ச வைத்தாலும்,—மிகு
பாரமாய்ச் சுமை உன்மேலே பற்றி நின்றாலும்;— நெஞ்

௬
பட்ட கடன்காரர் வந் தலட்டினாலும்,—நடை
பாதையில் மறிப்பிருந்து வாதை செய்தாலும்;— நெஞ்

௭
கெட்ட நோயிலும் நீ அகப் பட்டுழன்றாலும்,—எந்த
கேடுகள் உன் மேலே வந்து மூடினாலும்;— நெஞ்

௮
ஆன வீடு தானும் கொள்ளை ஆன போதிலும்,—கிறிஸ்
தண்ணலே[1] உனக் கெல்லாம் என் றெண்ணி நிறைவாய்;— நெஞ்

ஞா.—பா.

௧௦௩. THOU ART MY HOPE, THOU MY REFUGE. 103

# இயேசுவே என் அடைக்கலம்.

இராகம், நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

தீபனூத கன்னிகள்.

௧
ஆத்தும அடைக்கலம் அன்புள்ள யேசுவே!
ஐயா! புகலிடம் தாரும்;

[1] இராசன்.



காற்று, பெருவெள்ளம்போல் சீற்றம்கொள்ளுது துன்பம்
கைகொடுத் தெனை ஆற்ற வாரும்.

௨
சீவ புயல் இடர் யாவும் கடக்கு மட்டும்
தேவே எனைக் கைவிடாதேயும்;
சாவில் என் ஆவியை மேவிக்கை ஏந்தியே
தயவாய் அக்கரை சேரும்.

௩
பற்று என் ஆவிக்கு மற்றொன்று மே இல்லை;
பாவிக் கடைக்கலம் நீரே;
சற்றும் தனியே விடாதிரும் ஆற்றியே
தயவாய்க் காத்தருள் வீரே.

௪
நீரே என் நம்பிக்கை நீரே என் தஞ்சம்
நீசன் எனக்கு வேறார் ஐயா!
சாரும் நிராயுதன் யான் போரில் விழாப்படி
தாங்கும் உன் மறைவினில் ஐயா!

௫
ஏழைக்கு வேண்டிய யாவும் நீர் தாமே,
எதிலும் அதிகம் நீர் என் ஆஸ்தி;
வீழ்வுற்ற[1] மெலிந்து விழிகெட்டுப் பிணிகொண்ட
வெறும் பதர் எனக் களி[2] பூர்த்தி.

௬
நீதம் கெட்ட பாவியான்; நீதி பரிசுத்தமும்
நிறைந்த நீர் எனக்குத்தா வாதி;
பாதகத்தால் நிறைந்த பேதையான்; கிருபை சத்தியம்
பரிபூரணம் உள்ளோன் நீர் சோதி.

௭
எந்தப் பாவமும் மூடும் விந்தைக் கிருபை உண்டுன்னில்,
என் பாவம் தீர்த்தருளும், கோவே!
நொந்த எனை நீர் ஆற்றிச், சிந்தையைப் புதுப்பித்து
நோக்கும் அதைத் தூய்யதாய்; தேவே!

[1] மனம். [2] தாரும்.

௪

ஜீவ ஊற்றோடும் உன்னில் யான் தெளிந்து குடிப்பேனாக
தீராத தாகமுந் தீரும்,
ஓவா[1] நித்யமட்டாகப் பாவி என் நெஞ்சில் ஊறும்
உன்னத அன்பன் யேசு வாரும்!

A.—வே.

---

௧0௪. "ROCK OF AGES, CLEFT FOR ME." **104.**

## எனக்காகப் பிளவுண்ட நித்திய கன்மலை.

வெண்பா.

தாங்கா கடும்வெயிலில் தாகமாய் நான் வருந்தி
காங்கையுறும் வனத்தின் கானலில்—தாங்க
திருமலையே, தஞ்சமே, தேன்வடிதெரல் வெற்பே,
தருவாய் குளிர்நிழல், சாமி!

இராகம், இயால். ஏகதாளம்.

பல்லவி.

ஏசையா! பிளந்த ஆதி மலையே!
மோசநாளில் உன்னில் ஒளிப்பேனே.

சரணங்கள்.

௧

மோசமுள்ள பாவ நோய், முழுதும் என்னில் தீரையா,
நோவதும் தீரும் இரு மருந்தாமே—சொரிந்த உதிரம் நீருமே.—
ஏசையா!

௨

இகத்தில் என்னென் செய்தாலும் ஏற்காதே உன் நீதிக்கு,
மிகவாய் நொந்தழுதும் தீராதே—மீளாப் பாவ ரோகமே—ஏசை!

௩

அறம் அருந்தவம் பெருமிதமாய் செய்திடினும்
நேரஸ்தரின் பாவம் நீங்குமோ?—நீங்காதே உன்னாலல்லால்;—
ஏசையா!

1 ஓயாத.



௪

வெறுங்கையோடி வந்தோடு, வினை நாசன் பேரருள் கெஞ்சி,
திருச் சிலுவை தஞ்சம் புகுந்து—தியங்கி அணைத்தே நிற்பேன்;—
ஏசையா!

௫

அருளிலிருளோன் ஆனாலும், அபயமுந்தன் நீதிக்கே,
கருணை ஊற்றில் கழுவமாட்டாயோ?—கழுவாயாகில் சாவே
னே;— ஏசையா!

௬

ஜீவனோடே தங்கிலும், தெளிகண் சாவில் மங்கிலும்,
தேவாசனமுன் அஞ்சி நிற்க—தேவலோக மேறிலும்;— ஏசை!

B.—C.

---

௧0௫. CHRIST THE RESORT OF BELIEVERS IN AFFLICTION. **105.**

## கிறிஸ்துவே துன்பவேளையில் அடைக்கலம்.

வெண்பா.

அற்றவர்க்கு நற்றுணையாய் ஆதரிக்க வேகிறிஸ்து
கொற்றவனும் நல்ல குருவுமாய்—உற்றிருக்க,
வாரா வினைசூழ்ந்து வந்தே தொடர்ந்தாலும்
சோராதே நெஞ்சே, துணி.

இராகம், இயால். அடதாளசாப்பு.

பல்லவி.

வாரா வினை வந்தாலும், சோராதே, மனமே!
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.[1]

1 ஆதரவு.

சரணங்கள்.

௧

அலகை சதித்துன் மீது வலை வீசினலும்,
அஞ்சாதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே;— வாரா

௨

உலகம் எதிர்த்துனக்கு மலைவுசெய்தாலும்,
உறுதிவிட்டயராதே, நெறி தவறாதே;— வாரா

௩

தேகம் மோகம் மிஞ்சி, வேகங்கொண்டாலும்,
திடமனதாயிருந் தடல்[1] புரிவாயே;— வாரா

௪

பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணுரே;
பின்னை ஆகில் அவர் தள்ளிவிடாரே;— வாரா

௫

எத்தனை தீதுனைப் பற்றி நின்றாலும்,
இறைவனே[2] தஞ்சமென் றுறு, மன்னிப்பாரே;— வாரா

௬

தன் உயிர் ஈந்திட்ட உன் ஏசுநாதர்
தள்ளுவரோ? அன்புகொள்ளவர் மீதே;— வாரா

௭

மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே;— வாரா

௮

வையகமே உனக் குய்ய[3] ஓர் நிலையோ?
வானவனை முற்றும் தான் அடைவாயே;— வாரா

ஜா.—பா.

௧0௬. "JUST AS I AM." 106.

## பாவிகளுடைய அடைக்கலம்.

இராகம், மோகனம். அடதாளசாப்பு.

பல்லவி.

பாவியாகவே வாறேன் பாவம் போக்கும்
பலியாம் என் ஏசுவே! வாறேன்.

1 போர். 2 கடவுள். 3 பிழைக்க.

83



சரணங்கள்.

௧

நீயா உன் பாவம் என்னால் நீங்கும் என்று சொன்னீரே,
தேவா! உன் வாக்கை நம்பி, சீர்கேடன் நீசனும் நான்,—பாவி

௨

பாவக்கறை நீங்குமோ, என் பாடாய் உன் பாட்டாலன்றிப்
போவதில்லை என்றே பொல்லாத பாவியே நான்,— பாவி

௩

பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான்,— பாவி

௪

[illegible] செல்வ ஞான சீல சுகங்கள் அற்றேன்
தாவென்று வேண்டியே; சாவில் சஞ்சரித்த நான்,— பாவி

௫

துன்பங்கள் நீக்கி உன்னைத் தூக்கி அணைப்பேன் என்றீர்
இன்ப வாக்கதை இன்றைக்கே நம்பியே நான்;— பாவி

௬

உன்னைச் சேர ஒட்டாமல் ஊன்றிய தடை யாவும்
உன்னன்பால் நீங்கி நல் உயிர் அடைந்தோங்கவே நான்,—பா

E. W.

௧0௭. UNTO YOU WHO BELIEVE, HE IS PRECIOUS. 107.

## இயேசுவின் நாம மதுரம்.

இராகம், லாவணி. ஆதிதாளம்.

பல்லவி.

தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்ய மதுரமா
மே;—அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர், திருச்சபையாரே!

### சரணங்கள்.

௧

காசினிதனிலே நேசமதாக கஷ்டத்தை உத்தரித்தே—பாவக்
கசட்டை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார் கண்டுணர், நீ
மனமே!— தேன்

௨

பாவியை மீட்கத் தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம்—பின்
னும்
நேயமாம் கருணை நிலைவரமுண்டு நிதம் துதி என் மனமே!—
தேன்

௩

மேலான மகிபன், மேன்மையின் ராசன், விரும்பும் கருணை
யாளன்,—மிக்க
சாலவே உவந்து தயவுகள் பெறவே சார்ந்துகொள் நீ மன
மே!— தேன்

௪

காலையில் பனிபோல் மாயமாய் உலகம் உபாயமாய் நீங்கி
விடும்—என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ மனமே!— தேன்

௫

உற்றார் பெற்றோரை நற்றுணைகொண்டு உழல்வதில் என்ன சப
லம்—பார்
மட்டற்ற கிருபை யேசுவின் வசமே மகிழாய் நீ மனமே!—தேன்

௬

துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல துணைவரும் நேச
ரிடம்—நீ
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்துனைக் காப்பார் ஆசைகொள்
நீ மனமே!— தேன்

௭

பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்று நாமம்—
அதைப்
பிடித்துக்கொண்டால் தான் பேரின்ப வாழ்க்கைப் பெறுவாய்
நீ மனமே!— தேன்

84



௧௦௮. INVOCATION ADDRESSED TO CHRIST. **108.**

## கிறிஸ்துவை நோக்கிப் பிரார்த்தித்தல்.

### வெண்பா.

அன்னை மரியால் அவதார மாய்ப்பிறந்த
உன்னதப்பி தாவின் ஒரு மைந்தா!—நின் அபயம்,
வெய்யோன் கீழ்க்கண்டதெல்லாம் மாயையே, மெய்யாம், ஐ
யையா! உனதருள்பு ரி.

இராகம், மாஞ்ஜி. ஆதிதாளம்.

### பல்லவி.

ஐயா! உனதருள் புரி அருமை மேசையா!

### அநுபல்லவி.

பொய்யா மருள்வினை செய்யா துலகதில்
கையாதடிமைகொள்; தூய்யா! மெய்யா!— ஐயா!

### சரணங்கள்.

௧

ஆதா ரமும் நீயலதார் திருப் பாதா!
சாதா [illegible] வேத விநோத சங்கீதா!
காதா ரவிலவு[1] நீ தா! எனின் குறை
தாதா! பர குரு நாதா! போதா!— ஐயா!

௨

அந்த தி, அனாதி, பிதா! ஒரு மைந்தா!
சிந்தா[2] குலமே தவிர், நீடு சுகம்தா;
உந்தா பரம் அருள் எந்தா! ஞானபர
பந்தா! வரு சதா னந்தா! நந்தா!— ஐயா!

1 கேளும். 2 மனவியாகுலம், மிகுவியாகுலம்.

௩

ஈசா! நசராபுரி மேவிய வாசா!
பூசா விதி மாமறை புகழுபதேசா!
மாசா[1] மிகு பவ நாசா! எருசலே
ராசா! ஒரு சரு வேசா! நேசா!— ஐயா!

வே.—சா.

---

௧0௯. ADORING PRAYER TO CHRIST. **109.**

[*In gracious love look upon me.*]

## மத்தியஸ்தராகிய கிறிஸ்துவை பிரார்த்தித்தல்.

இராகம், ஆனந்தபைரவி.

பல்லவி.

பாரும், பாரும் ஐயா!—எனை அன்பாக
பாரும், பாரும் ஐயா!—திருக்கண்கொண்டு,

அனுபல்லவி.

பாரில் மகிழ் வெல்லைப் பதி மேவிய பரா!
பாவ விமோசனு! தீவினை நாசனு! மூ உலகாசனு! சீவனே!
ஓசனு.— பாரும்

சரணங்கள்.

௧

பாவநரர் பிணையே!—பரி பூரண—மேவும் உயர் துணையே!—
விணையை எய்யும்
தேவ திருக் கணையே![2]—உலகில் உள்ள—யாவர் உனக்கிணை
யே!
பூவில் இவ்வாண்டெமைப் புனிதநெறியில் காவும்;
போதக நாயனே! மாதவ தூயனே! கோதறும்[3] ஆயனே! ஆதி
யின்[4] சேயனே— பாரும்

[1] பெருமரணம் நிறைந்த பவத்தை நசித்தவனே, குற்றமாகிய மிகுந்த பாவத்தை அழித்தவனே.
[2] அம்பு. [3] குற்றமற்ற. [4] தேவகுமாரனே.



௨

தாலந்தனில்[1] இருளே—அகற்றி மிக—சீலந்தரும் அருளே!—
அடியர்கட்கனு
கூலம் நிறைதெருளே![2]—மனுடர்களின்—கோலம் உறும்
பொருளே!
காலத்தை எண்ணி, மெய்க் கருத்தைத் எனக்களியும்;
காரண நேசனே! ஆரண[3] வாசனே! பூரண ராசனே! தாரணி[4]
ஈசனே!— பாரும்

தே.—ஸ்ற.

---

௧௧0. THOU SUPREME SOVEREIGN! HAVE MERCY UPON ME A SINNER. **110.**

## ஒத்தாசை விண்ணப்பம்.

இராகம், கலியாணி. செம்படைதாளம்.

பல்லவி.

இறைவன்[5] நீயே,—எளியனுக்
கிரங்குவாயே.

அனுபல்லவி.

மறை[6] விளக்கி இந்நரரை மீட்க,—இம்
மானுவேல் எனும் நாமம் மேவியே,
தரையில் வந்தவ தரித்த எனழகன்
தாதா! ஏகநாதா! என்— இறை

சரணங்கள்.

௧

அண்டர்கள்[7] போற்றும் விண்ணோனே!—எங்கள்
ஆதரவாய் உற்ற கோனே![8]—நல்ல
தொண்டர்களுக் கருள் புரியும், நன்மனத்
தூயா! அன்பர் நேயா! என்— இறை

[1] பூமி. [2] ஞானம். [3] வேதம். [4] பூமி. [5] கடவுள். [6] வேதத்தை. [7] மேலுலகோர். [8] இராசனே.

௨

நன்று திகழ்[1] பெரியோனே!—திவ்ய
ஞானம் எனும் பெயரோனே!—இயல்
அன்றும் இன்றும் என்றும் ஒன்றுபோலே உறும்
ஐயா! ஒளிர் மெய்யா! என்— இறை

௩

எங்கும் நிறைந்த வல்லோனே!—அன்பர்க்
கின்பு செய்கின்ற நல்லோனே!—மிகு
இங்கிதமாய்[2] உனை ஏத்தித்[3]தொழ அருள்
ஈவாய்; க்ருபை ஆவாய் என்— இறை

ஜா.—பா.

---

௧௧௧. THE SINNER LOOKING TO CHRIST. 111.

## இயேசு ரட்சகனை நோக்கி பாவி பிரார்த்தித்தல்.

இராகம், பந்துவராளி. ரூபகதாளம்.

பல்லவி.

ஏசு தேவா! தயை புரிந்தே எனைக் கா, வா.

அநுபல்லவி.

காசினியில் எனக்கு வேறோர் துணை
காண்கிலேன் எனைத் தாங்கி இங் காள,— ஏசு

சரணங்கள்.

௧

ஆதி மூலா! நரர் உரு வான நற் பாலா! கெடுதி செய்
தீதினை அகற்றி, அன்பர்க்கு நித்திய
சீவனை ஈயத் திரு உளமான— ஏசு

1 பிரகாசிக்கிற. 2 இனிமையாய். 3 துதித்து வணங்க.



௨

ஞாலமோடு, அலகையும் கல்லுமே, கேடு; அறிவென்று
ஆல்[1] கனல் நிகர் உடல் ஆசையும்
ஆவி இதைய அடம்புரியாமல்,— ஏசு

௩

ஏழையேன், தஞ்சம் நீ என்றே அடைந்தேனே!
நிலைத்து நான்
வாழ ஓர் பதி இங்கில்லையே ஐயோ!
வான் கதி சென்று வளம் பெறவே என்,— ஏசு

ஜா.—பா.

---

௧௧௨. A PENITENT PLEADING WITH CHRIST FOR FORGIVENESS. 112.

## வேத உதாரணங்களைக் காட்டி பாவமன்னிப்புக்காக வேண்டுதல்.

இராகம், இந்துஸ்தான், டப்பா. ஆதிதாளம்.

பல்லவி.

சேர், ஐயா! எளியேன் செய் பவ வினை
தீர், ஐயா!

சரணங்கள்.

௧

பார், ஐயா! உன் பதமே கதி;—ஏழைப்
பாவிமேல் கண் பார்த்திரங்கி,—எனை— சே

௨

தீவினை உணர்ந்த சோரனைப்[2]—பர
தீசிலே அன்று சேர்க்கலையோ?—எனை— சே

௩

மாநிலா திறல் தேசபரா!—உனை
வந்தடைந்தனன், தஞ்சம் என்றே,—எனை— சே

1 விஷம். 2 கள்ளனை.

௪

தஞ்சம் என்றுனைத் தான் அடைந்தோர்—தமை
தள்ளிடேன் என்று சாற்றினையே,—எனை— சே

௫

பாவம் மா சிவப்பாயினும்,—அதை
பஞ்செனச் செய்வேன் என்றனையே,—எனை— சே

௬

தீயர்க்காய்ப் பிணையாய் மரித்த—ஏசு
தேவனே கருணாகரனே!—எனை சே

௭

இன்பதாய் முன் இயம்பலையோ?[1]—வானில்
ஏறில், யாரையும் சேர்ப்பன் என்றே,—எனை— சே

ஜா.—பா.

---

௱௰௩. HAVE MERCY, HAVE MERCY UPON ME, JESUS SAVIOUR! 113.

## கிறிஸ்துவை பாவி கெஞ்சுதல்.

வெண்பா.

மூக்குற்றத் தாலும் முழுப்பாவி யாமடியேன்
திக்கற்று நின்று திகைக்கின்றேன்—தக்க
திரங்கொண் டிகமீண்ட நேச நாதா!
இரங்கும் இரங்குமென் மேல்.

இராகம் பைரவி. திரிசாதானம்.

பல்லவி.

இரங்கும், இரங்கும், கருணைவாரி!
ஏசு ராசனே!—பவ—நாச நேசனே!

---

[1] சொல்லவில்லையோ?



சரணங்கள்.

௧

இரங்கொண்டாவி வரங்கொண்டுய்யச்
சிறுமை பாரய்யா!—ஏழை—வறுமை தீரய்யா!— இர

௨

அடியன் பாவக் கடல் மிகுத்தால்
அயர்ந்து போகின்றேன்,—மிகப்—பயந்து சாகின்றேன்.— இர

௩

நெஞ்சரும் எனை வஞ்சன் என்ன
நெருக்குதே ஐயா!—மிகக்—கருக்குதே துய்யா!— இர

௪

பேயும் என்னை மாயை பண்ண, உ
பாயம் தேடுதே;—ஏழைக் காயம் வாடுதே.— இர

௫

நித்தம் என்னைச் சேதம் செய்ய
நினைக்குதே ஐயா!—விஷம்—முளைக்குதே மெய்யாய்;— இர

௬

எரிநரகும் பெருநரகாய்
இரையுதே என்மேல்;—மனம்—விரையுதே நின்மேல்.— இர

௭

நேமம் அன்றி வாய்மை செய்யத்
தெரிகிலேன் ஐயா!—தெரிவை[1]—புரிகிலேன் ஐயா!— இர

௮

பாவி ஏற்றும் கவி மன்றாட்டை
பரிந்து கேளய்யா!—தயை—புரிந்து மீளய்யா!— இர

ஃ.—வே.

---

[1] தெரிந்தவை.

௧௧௪. PLEADING WITH CHRIST FOR DELIVERANCE FROM SIN. **114**

## பாவமீட்பினால் உண்டான நன்மைகள்.

வெண்பா.

செய்வதெல்லாம் தீமையே; சிந்திப்ப துங்கவடம்;
மெய்ம்மைஅல்ல, சொல்வதெல்லாம் வீண்மொழியே;—ஐயோ!
நரனும் எளியேன்உன் நற்கதியை அற்றேன்;
பரனே! அருள்புரி என் பால்.

இராகம், சகானா. ஆதிதாளம்.

தீபதை—கண்ணிகள்.

௧

நரனும் எளியேன், நற்கதி சேர
பரனே! உன் அருள் செய், என் பவவினை தீர்;

௨

தரணியோர்க் காக நரர் உருத் தரித்தாய்,
தரு நெறி விளக்கிட மிகவும் சஞ் சரித்தாய்;

௩

இக பரம் அனைத்தும் வகையுடன் படைத்தாய்;
எளி யோர்க்கென் றுவின் கொட்டில் வழி வரத் தொடுத்தாய்;

௪

பாவிகள் உயிர்த்து, சிவனைக் கூட
பரிவுடன் பாடடைந்தீர், திரு ரத்தம் சிட;

௫

இந்நிலத் தவர்க்காய் நல்நெறி முடிக்க
இழியரத் தறையுண்டீர் எழில்[1] உடல் அடிக்க;

[1] அழகான.



௬

பாதகன் ஒருவன் நீதுணர்ந் துருக
பரதீசில் அமைத்தீரே, அருள்மிகப் பெருக;

௭

மன் உயிர் மீட்க நின் உயிர் கொடுத்தாய்;
வலிமைசெய் அலகை தன் நிலையறக் கெடுத்தாய்;

௮

மரணத்தின் கூர்போய், நரர் என்றும் நேரே
வாழ்ந்து பரத்துறவே ஆழ்ந்துயிர்த் தீரே.

ஞா.—பா.

௧௧௫. THE BELIEVER IMPLORING CHRIST TO SANCTIFY AND SAVE US. **115.**

## தேவ ஒத்தாசைக்காக விண்ணப்பம்.

கட்டளைக்கலிப்பா.

இச்சித் தான் அன்னை; அக்கனி தீர்க்கவே இரங்கி, மாநிலத் தெண்
 ணரும் பாடுபட்
டச்சிற் றழ்வுறச் சித்தம்வைத் தாய்; உன தன்புக் கேட்டதை யான்
 சொல்லு வேன்ஐயா!
பட்சித் தாழ்குழிக் காணாக்கப் பார்க்குதென் பாவம், பேய்உல கிம்
 மூன்றும் ஏகமாய்;
ரட்சித்தான்வது நின்னருட் பாசமே, யேசு நாசரை யம்பதி ராசனே!

இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

ஏசு நசரையி னதிபதியே!—பவ நரர் பிணையென வரும்.

அநுபல்லவி.

தேசுறு[1] பரதல[2] வாசப் பிரகாசனே! சிவனே!
அமரர்[3] பாவனே![4] மகத்துவ— ஏசு

---

சரணங்கள்.

௧

என்னை ரட்சிக்க வென்று பொன்னுலக இகந்தாயே;[5]
எளிய மனுவடிவும் எற்கவும் மகிழ்ந்தாயே;
சென்னி[6] யழுந்தி நோக முண்முடி புனைந்தாயே;[7]
சிலுவை மரத்தில் இரு கள்வரு டிறந்தாயே;— ஏசு

௨

இந்த உலகு அலகை தந்து, போராடுதே;
எனதுடல் உமதோ டிசைந்து, சீராடுதே;
தந்த்ர அலகை சூழ நின்று வாதாடுதே;
சுவாமி! பாவியகம் நோயினில் வாடுதே;— ஏசு

௩

நின் சுய பெலனல்லால் என் பெலனேது?
நினைவு, செயல், வசனம், முழுதும் பொல்லாது;
தஞ்சம் உனை அடைந்தேன்; தவற விடாது;
தாங்கி ஆள், கருணை ஓங்கி, எப்போதும்;— ஏசு

௪

கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும்;
கேடு பாவங்களெல் லாத்தையும் தீரும்;
பொறுமை, நம்பிக்கை, அன்பு போதவே தாரும்;
பொன்னுலோகமதி லென்னையும் சேரும்;— ஏசு

ச—உவா.

---

1 ஒளி. 2 பரலோக. 3 வானோர். 4 மகானுபாவன். 5 விட்டாயே. 6 தலை. 7 அணிந்தாயே.



## ௧௧௬. PRAYER TO CHRIST AS THE ONLY REDEEMER, TO SAVE THE SUPPLIANT. 116.

### தேவகுமாரன் நமக்கு மீட்பர்.

கொச்சகம்.

தேசிலங்கு கைவல்ய செல்வமதைத் தாண் இழந்த
நீசர்கள் எரிநரகில் நித்தியமும் வேகாமல்
மாசகற்றி யே, பரம வாழ்வளிக்க இங்கெழுந்த
ஏசுவே! இரங்கி, இழிஞன் எனைமீட்டருளே.

---

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

ஏசுவே! கிருபாசனப்பதியே! கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்;
ஏசுவே! கிருபாசனப்பதியே!

---

சரணங்கள்.

௧

காசினியில்[1] உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன்; சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து,
நித்தனே! எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி,— ஏசு.

௨

பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட தூர்க் கன்மி[2] ஆயினேன்;
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே! எனைக் கண் நோக்கி, தீவினை அனைத்தும் நீக்கி,—ஏசு

---

1 உலகில். 2 கருமி.

௩.

சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள[1] எங்கள் உபகார வள்ளலே![2]
குறை எதனை அண்டினோர்க் கிறைவா! எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் காப்பார்த்து,—எக

௪.

பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை;
புண்ணியனே உன் சரணம் நண்ணி[3] அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி
இந்நாள் அருள் புரிந்து, உன் ஆவியைச் சொரிந்து,— எக

ஐ.—பா.

---

௱௧௭. IMPLORING THE SAVING AND SANCTIFYING AID OF CHRIST. 117.

# தேவனிடத்தில் அடைக்கலம் புகுதல்.

இராகம், ஆனந்தபைரவி. சம்பைதாளம்

பல்லவி.

நித்தி யானந்தனே! சித்தம் வைத் திரங்குவாய்,
நித்தி யானந்தனே!

அநுபல்லவி.

சத்திய திரித்துவ தேவ நித்திய கர்த்தாவே!
முற்றும் இரட்சித்து நடத்தும், கிறிஸ்தையாவே!— நித்

சரணங்கள்.

௧.

உன்னை அன்றித் தஞ்சம் இல்லையே,—நாசமில்லையே
உலகம் அனைத்தும் தொல்லையே,

[1] வல்லமை. [2] இராசசவே. [3] விரும்பி.



என்னுயிர்க் குயிரதான மன்னவா! நின் தேவ திருச்
சன்னதித் தயையும், எந்தன் முன் எழுந்தருளச் செய்வாய்.—
நித்

௨.

கருணைப்ர வாக நேசியே!—நான் காசியே
தயை வாரும், என் சுவாமியே!
ஆறும் ஜெயமும் நீயே, திரணம் இலங்கும் ஆயா!
தருணம், கைவிடாதேயும்; சரணம் சரணம் ஐயா!— நித்

௩.

ஞானப்பிர காசசுந்தரா!—சவுந்தரா!
ஞாய இஷ்டார்த்த தந்திரா!
என் இத்தனை கஸ்தி? வானத்திருந்து வந்த
மேன்மைத் தயாப கல் வி தானத் திருக்குமாரா!— நித்

௪.

ஆதி சர்ப்பம் பொரியுதே,—எரியுதே
அகிலம்[1] எல்லாம் திரியுதே,
ஏது செய்வேன்? இரங்கி, பாதுகாத்தருள் செய்யும்!
ஓத அடங்கா ஞான தீபா வா!— நித்

வே.—சா.

---

௱௧௮. PRAYER TO CHRIST FOR SALVATION. 118.

# இரட்சிப்புக்காக கிறிஸ்துவை நோக்கி மன்றாடல்.

வெண்பா.

உன்னத வஸ்துவே! ஒசியன்று, சீவனே!
என்னையாட் கொள்ளவந்த எந்தையே!—மன்று!
பயமாகி, பாவி பாதசேத் தின்றேன்,
தயை கூர், ஐயா! நின் சரண்.

[1] பூமி.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

தயை கூர், ஐயா! என் சாமி! பாவி நான்;
தயை கூர், ஐயா! நின்தாசன்; ஏசையா!
தயை கூர், ஐயா!

சரணங்கள்.

௧

ஜெய மனுவேலன், நய அனுகூலன்,
வீரா! தீரா! அதிகாரா! திருக்குமாரா!
தேவர்கள் பணிவிடை மேவிய நேச வி-
லாச கிருபாசன ஏக சுரேந்திரா![1]— தயை

௨

வானத்திருந்து வந்து, ஞானத் துரு வுவந்து,[2]
வளமை[3] கொண்டு, இருமை விண்டு, குடில் கண்டு,
மாட்டை வீட்டி னூடு புல் மேடையில்
நீடின யோதினி மோடியதாமோ?— தயை

௩

தந்தை பிதாவின் மைந்தன் மைந்தர் வடிவாகி,
தாரதல்[4] மேவி வா பாவி எனக் கூவி,
சாங்கமதாய்[5] அருள் ஓங்கி, மகா பெரு
சங்கிலையாய் உயிர் நீங்கினதாலே நீ— தயை

௪

தேவ ரட்சிப்பனைத்தும் பாவிக்காய் விளைத்தும்,
சிலுவையில் மாண்டும், துயர் பூண்டும், சிறை மீண்டும்,
சிவனோடாதி பராபரனார் வல
பாரிசமே அரசாளும் இக்கோரம், நீ— தயை

வே.—சா.

1 இராசனே! 2 விரும்பி. 3 மென்மை. 4 பூமி. 5 ஏகமாய்.



## ௧௧௯. PRAYER FOR HELP TO WALK UPRIGHTLY. 119.

# சன்மார்க்க நடக்கைக்குக் கெஞ்சல்.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

இரங்காய், இரங்காய், என் ஏசுவே! இப்போ
திரங்காய், இரங்காயே.

அனுபல்லவி.

அருங் கானகம்[1] போன்ற அகிலத்[2] தென் மனம் உன்மேல்
பெருங் காதலை[3] அடைந்து பேரின்பம் பெற என்மேல்—இரங்

சரணங்கள்.

௧

தீய வழி கடந்துன் தூய வழி செல்ல,
சிற்றின்ப ஆசையை முற்றும் நான் கொல்ல,
பேய் வந்தெதிர்க்கில், உன் சகாயத்தால் வெல்ல,
பெரியோர், சிறியோர்க்கும் உன் உரிமையைச் சொல்ல,-இரங்

௨

பத்தர்கள் கூட்டத்தை நித்தம் யான் சேர,
பாரில்[4] வீண் புகழ் வேட்கை[5] வேர் அற்றுப் போ,
அத்தியாபகர்[6] சொல்லும் புத்திகள் ஓர,[7]
ஆசா பாசம் விட்டுன்மேல் நேசமே கூர,— இரங்

௩

பூவுலக சந்தோட ஆவல்கள் வீழ,
பூரண சற்குணச் சீர் எனை யாள,
தேவ வரத்தினால் என் தீவினை மாள,
செல்வம் நிறைந்த மோட்சத்தில் என்றும் வாழ,— இரங்

தே.—மு.

1 காடு. 2 பூமி. 3 ஆசை. 4 பூமியில். 5 விருப்பம். 6 போதகர். 7 உணர.

## ௧௨௰. THE BELIEVER IMPLORING THE PRESENCE OF CHRIST TO EXPEL SIN. 120.

# பாவியானவன் தேவனை தன்னிடத்தில் வரக் கெஞ்சுதல்.

வெண்பா.

நாவலர்போற் றுஙிபனே! நல் வினையி லே முயன்று,
தீவினையைச் சின்னபின்னஞ் செய்தோங்க,—பூவில்எனைச்
சாருமெந்தத் தீங்கினின்றுந் தாபரித்தாட் கொள்ள எனைச்
சேரும், கிறிஸ்தேசுவே.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

சேரும், கிறிஸ்தேசுவே! எனைச் சேரும், கிறிஸ்தேசுவே!
சிறியேன் தனைக் கை நெகிழாமல், நீர் சேரும் கிறிஸ்
தேசுவே.

சரணங்கள்.

௧

சாருந் துணை நீர் அல்லால், பாரின் மிசை வேறிலே;
தயை மல்கிய[1] உம்மிடத்தே எனைச்— சேரும்

௨

திட்ட மைந்தனை பிதா விட்டதில்லை; என்றுரைத்
திட்ட வசனப்படியே, எனைச்— சேரும்

௩

வஞ்சமதில் நீங்கி உன் தஞ்சமதில் ஓங்க, என்
நெஞ்சிலும் கிருபை செய் தெளிவெனை நீர்— சேரும்

௪

துர்க் குணத்தைத் தாக்கவும், நற்குணத்தைக் காக்கவும்,
சற் குணத்தா ரோடுறவாகவும்,— சேரும்

[1] நிறைந்த.



௫

வன் மனம் உருகவும், நன் மனம் வருகவும்,
தன் மனத்தோர்க் காம் வழி பகரவும்,— சேரும்

௬

பாவ மனம் போக்கவும், தேவ அருள் ஏற்கவும்,
ஆவியார்க்கும் உரியவன் ஆக்கவும்,— சேரும்

தே.—மு.

## ௧௨௧. THE BELIEVER LONGING FOR CHRIST. 121.

# கிறிஸ்துவையே வாஞ்சித்தல்.

வெண்பா.

பூலோகம் என்ன? புகலிடம் நீர் ஆய் இருக்க,
மேலோகம் ஆள்வேந்தா! விண்ணுலகில்—சிலம்
உடையாரோ டெனக்கும் ஒப்பில்நன்மை ஈய,
அடியேன் தனக்கிரங்கை யா!

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

௧

அடியேன் மனது, வாக்கும், கொடிய நடத்தையுமே,
ஆவியால் சீர்ப்படுத்தும்; சாமி!

௨

உமக்கே யான் சொந்தம்; தீயோர் தமக் கந்நியனாய்ப்போக,
உதவும் எளியேனுக்கென் சாமி!

௩

திவ்ய துணையாற்றி, கவலைகளை அகற்றி,
சேரும் உம் இடத்தில், என் சாமி!

௪

அன்பின் வடிவே! பாவத் துன்பம் இல்லாமல், வாழ
அடைந்தேன் உமை யான், சேரும், சாமி!

௫

பொன்னகர் தன்னை ஆளும் என் எசமானனே! இப்
புல்லனைத் தள்ளா தாளும், சாமி!

[1] அற்பனை.

௬

நீரே எனக்கு வேண்டும்; தாரணி[1] முற்றும் வேண்டாம்;
நீரெனை ஆள் கொள்ளும்; என் சாமி!

௭

பூமியில் வசித்தும், நீர் தாமே எனது வாஞ்சை;
புகலிடம் அளியும், என் சாமி!

௮

சஞ்சல மேதெனக்கு? பஞ்சம் படைகளேது!
தஞ்சம் நீர் தாம் எனக்கென் சாமி!

௯

விண்ணி லோரிடமும், யான் மண்ணுலகை வெறுக்க,
மெய்த் தவமுந் தாரும், என் சாமி!

௰

பாவ வெறுப்பதிலும், தேவவரத்திலும், என்
பங்குண்டே, அதைத் தாரும்; சாமி!

தே.—மு.

௧௨௨. LOVE TO CHRIST. 122.

## கிறிஸ்துவை வாஞ்சித்தல்.

வெண்பா.

ஆத்தும நேசா! அருமைமணவாளா! எனை இ
டேற்றவந்த பூலோக ரட்சகா!—போற்றிநின்றுன்
வாகை, அழகை, மகிமையைக் கண்டாசை
யாகினனே, கோவே! யான்.

இராகம், யமுனாகல்யாணி. ரூபகதாளம்.

பல்லவி.

ஆசையாகினன், கோவே!—உமக்
கனந்த ஸ்தோத்திரம், தேவே!



அநுபல்லவி.

ஏசுகிறிஸ்து மாசத்துவத்து ரட்சகா! ஒரே தட்சகா![1]— ஆசை

சரணங்கள்.

௧

வேதா! ஞானப் பர்த்தா![2]—என்—தாதா! நீயே கர்த்தா,
மாதாரகம் நீ என்றே பரமானந்தா! சச்சிதானந்தா!— ஆசை

௨

சீயோன் நாட்டுக் கரசே!—உயர்—வான் நாட்டார் தொழும் சிரசே!
நானாட்ட[3] முடன் தேடி, தேடி நாடி, பதம் பாடி,—ஆசை

௩

வீணாய்க் காலம் கழித்தேன்,—சற்றும்—தோணாமல் நின்று விழித்தேன்;
காணா தாட்டைத் தேடிச் சுமந்த கருத்தே! எனைத் திருத்தே,— ஆசை

௪

வந்தனம், வந்தனம் யோவா!—நீ—சந்ததம், சந்ததங்கா, வா;
விந்தையாய் உனைப் பணிந்தேன்; சத்ய வேதா! ஏசுநாதா!— ஆசை

வே.—சா.

௧௨௩. LONGING TO SEE AND BE WITH CHRIST. 123.

## கிறிஸ்துவை வாஞ்சித்தல்.

இராகம், இயால்.

பல்லவி:

என்றைக்குக் காண்பேனோ? என் ஏசு தேவா.

[1] தாங்குவோன். [2] ஞான கணவன். [3] நான் நாட்டமுடன்.

அனுபல்லவி.

குன்றாத தேவ குமாரனைத் தானே நான்— என

சரணங்கள்.

க

திரிலோக நாதன், ஜெகபரி பாலன்,
மரி அனை ஈன்றருள் மாஜெய சீலனை— என

உ

பரகதி திறந்து, பாரினில் பிறந்து,
நரர் வடிவாய் வந்த ராச உல்லாசனை— என்

ந

ஐந்தப்பங் கொண்டு அநேகர்க்குப் பகிர்ந்து,
சிந்தையில் உவந்தவ சீகர நேசனை— என்

ச

மாசில்லா நாதன், மாமறை நூலன்,
ஏசுவின் திருமுக தரிசனம் நோக்கி, நான்— என்

வே.—சா.

கஉச. DESIRE TO BEHOLD THE SAVIOUR. **124.**

## கிறிஸ்துவைப் பார்க்க வாஞ்சித்தல்.

வெண்பா.

எட்டி நடந் தின்றைக்கே, தாவீதின் ஊர்மாட்டுக்
கொட்டிலுக்குள் முன்னணைக்குள் கூசாமல்,—கிட்டநின்று
பார்க்க மனம்வருவேன்; பாதகரைக் கைதூக்கிக்
காக்கவந்த மெய்க்கடவுளை.

இராகம், உசேனி. திரிசரதாளம்

பல்லவி.

பார்க்க மனம் வருவேன்;—நெருக்கத்தில்
பத்ராமாகக் கரிசித்த மேசியாவை.



அனுபல்லவி.

ஆர்க்கும் இரங்கும் பராபரனின் சுதன்
அன்பின் மனுடவதாரத்தைச் சிந்தித்து,— பார்

சரணங்கள்.

க

நிச்சய சாதாரண சத்திய வேதனை,
அச்சய[1] ஞான வரப் பிரசாதனை,
உச்சித வாக்ய சுவிசேட போதனை,
ரட்சகர் எங்கள் கிறிஸ்தேசு நாதனை— பார்

உ

இரித்து வத்தின் மகத்துவ வேதம்,
பொறுத்த உண்மை, பரிசுத்த போதம்,
மறுத்தவர்க்கு வழங்கிய நீதம்,
கிறிஸ்து நாதர் தம் தேவ பொற் பாதம்— பார்

ந

மூற் பிதாக்கள் விரும்பிய தேட்டம்,
செப்பும் ஆதி பிதாவின் நோட்டம்,
எப்புவிக்கும் எவர்க்கும் கொண்டாட்டம்,
ஒப்பிலான் சுதன் மேல் என்றன் நாட்டம்— பார்

ச

ஆசைக் கிறிஸ்துண்மை யான நல் ஆயனை,[2]
ஆத்தும நாயகர் ஆன என் நேயனை,
பாச வலையில் கை தூக்கின நாயனை,
பக்ஷமொடு காத்த முக்ய சகாயனை— பார்

ரு

ஆச்சரிய மான நேசத்தை; பாசத்தை,
அன்பின் திருமுகத் தை ஐந்து காயத்தை,
காட்சி தரும் இரு பாதத்தை, பாவியைக்
கைதூக்கி விட்ட கரத்தை, உரித்தாக— பார்

வே.—சா.

[1] அழியாத. [2] மேய்ப்பனை.

## க௨௫. GRATEFUL REMEMBRANCE OF CHRIST'S MERCY. 125.

*(A Christmas or Anniversary Hymn.)*

## கிறிஸ்து பாவிகளுக்குச் செய்த நன்மைகள்.

வெண்பா.

ஆண்டாண்டு தோறும்மகா அற்புதமாய்க் காப்பாற்றி,
மீண்டா தரித்திரக்க வெள்ளமே—நீண்டதிறல்,
மாலையிலும், காலையிலும் மன்னன் எம் ஏசுமனு
வேலைமனமே! மறவாதே.

இராகம், காம்போதி. சாப்புத்தாளம்.

பல்லவி.

மறவாதே, மனமே!—தேவசுதனை
மறவாதே, மனமே!—ஒருபொழுதும்.

சரணங்கள்.

க

திறமதாக உனைத் தேடி, புவியில் வந்து,
அறமதாகச் செய்த ஆதி சுதன் தயவை— மற.

௨

விண்ணின் வாழ்வும், அதின் மேன்மை அனைத்தும் விட்டு,
மண்ணில் ஏழையாக வந்த மானுவேலை— மற

௩

கெட்ட மாந்தர் பின்னும் கிருபை பெற்று வாழ,
மட்டில்லாத பரன் மனுவானன தயவை— மற

௪

ஆள் பொருள் அனைத்தும் அமைத்துக் காத்தருளும்
வான ராசன் மண்ணில் வந்த நேசத்தை— மற



௫

வல்ல பரமன் சுதன் மாட்டுக் கொட்டிலுக்குள்
புல்லின் மீது பிறந்த புதுமை தனை எந்நாளும்— மற

௬

கந்தைத் துணியால் சுற்றி, கடவுள் முன்னணைக்குள்
நிந்தையாக வைக்கப் பட்ட நிலைமை தன்னை— மற

௭

அடிமை வேஷங் கொண்டனாதிக்கும், நரருக்கும்,
நடுவில் நின்ற ஏசு ராச நேசந் தன்னை— மற

௮

தேவ கோபம், நடுத் தீர்வை, சாபம் நித்ய
சாவு நரகத்தையும் தவிர்த்த கிறிஸ்து வேந்தை— மற

௯

ஆவலாகப் பேயின் அடிமைத் தனத்தினின்று
பாவிகளை ரட்சிக்கப் பரம சுதன் வந்ததை— மற

௰

காவில் மனுடர் செய்த கன்ம வினையை நீக்கி,
சீவன் அளிக்க வந்த தேவ பாலகனை— மற

௰க

கெட்ட பாவி உனைக் கிறிஸ்து மீட்டுக் கொண்ட
மட்டில்லாத் தயவை மரண கால மட்டும்— மற

௰௨

நீண்ட தீமை யாவும் நீக்கி, சுகம் அளித்திவ்
ஆண்டு முழுதும் காத்த ஆண்டவனை எந்நாளும்— மற

௰௩

நித்தம் நித்தம் செய்த நிந்தனை, பாவங்கள்
அத்தனையும் பொறுத்த அருமை ரட்சகனை—

௰௪

வருஷம் வருஷம் தோறும் மாறாத் தமதிரக்கம்
பெருகப் பெருகச் செய்யும் பிதாவின் அனுக்ரகத்தை— மற

வே.—சா.

௧௨௬. PRAISE FOR MERCIES RECEIVED. **126.**

## மேசியா பஜனை.

இராகம், உசேனி. ரூபகதாளம்.

பல்லவி.

பஜனைசெய்[1] மனமே, மேசையா
பஜனைசெய் மனமே, தினம் தினம்.

அநுபல்லவி.

நிச மனதுடன் குரு ஏசு நாமம் நினை;
நல்ல சுகத்தைக் கொடுக்கும்;— பஜ

சரணங்கள்.

௧

பாச வினை யெல்லாம் போக்கும்—திவ்ய
பாதமலர்க்கதி சேர்க்கும்—மகா
தோஷமென்பதையும் நீக்கும்—பரி
சுத்த இருதயமாக்கும்;— பஜ

௨

பாவச் சுமையெல்லாம் பறக்கும்;—தெய்வ
பக்தி வர வரச் சிறக்கும்;—தூய
ஆவிக்கிதயமும் திறக்கும்;—ஞான
அறிவு வந்தங்கே பிறக்கும்;— பஜ

௩

துன்பம் கவலைகள் நீங்கும்;—மனம்
சோர்வு கொள்ளாமலே தாங்கும்;—தேவ
அன்பும் சுசீலமும்[2] ஓங்கும்;—இருள்
அந்தகாரம் வெளி வாங்கும்;— பஜ

௪

ஆசாபாசந் தனை அறுக்கும்;—பொல்லா
ஆணவ மென்பதை நொறுக்கும்;—இந்த
நீச உலகத்தை வெறுக்கும்;—வீண்
நினைவு கொள்ளாம லுறக்கும்;— பஜ

[1] பாடித் துதித்தல். [2] நற்குணம்.



௫

மனதை யோர் வழி கூட்டும்;—சன்
மார்க்க நெறியில் ஓட்டும்;—அநு
தினம் மகிமையைக் காட்டும்;—நித்ய
சீவ முடியங்கு சூட்டும்;— பஜ

ரு.—உப.

௧௨௭. GRATITUDE TO CHRIST THE SAVIOUR. **127.**

## கிறிஸ்துவாகிய மீட்பருக்கு நன்றி செலுத்தல்.

இராகம், பரசு. ஆதிதாளம்.

பல்லவி.

நினையேன், மனம்; நினையேன் தினம்
உனை மீட்ட ஏசுவையே.

அநுபல்லவி.

கன மேவிய மனு வேலனைக் கன காசன சுதனை—நினை

சரணங்கள்.

௧

கவன முடன் நீடி, உனக் காக அருள் தேடி,
புவன மதில் பிறந்து திவ்ய புதுமை மிகச் சிறந்து,
தவன முறு ஆத்மா சீவ தண்ணீர் உண, சும்மா
பவம் நீக்கிய வானுசன பதியை, சுரர்[1] கதியை— நினை

௨

நரக அழலாலே[2]கெடு நாசம் வந்த சாலே
உருகி, மனம் இரங்கி, தொலைத் துன்மையுடன் இணங்கி,
பரமனோடு உறவாக்கி, மெய்ப்பலனும் பொறுத்தாக்கி,
பெருக நலம் புரிந்தோன், மறை[3] பேதம் இன்றி அறைந்
தோன்— நினை

[1] வானோர். [2] அக்கினி. [3] வேதம்.

௫

செயமும், புத்ர சுவிகாரமும், சிறந்த நீதியும், மகா
நயந்த பரிசுத்தம், தேவ ஞானமுடன் மீட்பும்,
சுயமாச்சியும், அளித்தும், தன துயிரைப் பலிகொடுத்தும்,
பயன் எலவே, தூய ஆவியைப் பரிந்தோனையே கனிந்தே—
நினை

ஆ—அ.

---

௧௨௮. LONGING FOR THE COMING AND PRESENCE OF CHRIST. **128.**

## கிறிஸ்துவின் வருகையை வாஞ்சித்தல்.

இராகம், இராமமனோகரி. ஆதிதாளம்.

பல்லவி.

வர வேணும், என தரசே!
மனுவேல் இஸரேல் சிரசே!

அநுபல்லவி.

அருணோ[1]தயம் ஒளிர் பிரகாசா!
அசரீரி ஒரே சரு வேசா!— வர

சரணங்கள்.

௧

வேதா! கருணை கரா! மெய்யான பரா பரா!
ஆதார நிராதரா! அன்பான சகோ தரா!
தாதாவும் தாய் சகலமும் நீயே;
நாதா! உன் தாபரம் நல்குவாயே,[2]— வர

௨

படியோர்[3] பவ மோசனா! பரலோக சிம்மாசனா!
முடியா தருள் போசனா! மூதன் மா மறை வாசனா!

[1] சூரிய உதயம். [2] அருளுவாய். [3] உலகோர்.



இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்; — வர
இமையவர்[1] அடி தொழு மேன்மையின் எந்தாய்!—

௪

வானோர் தொழும் நாதனே! மறையாகம போதனே!
காருணிய அதீதனே![2] கலிலேய வினோதனே!
ஞானாகரமே! நடு நிலை யோர்வா! — வர
நண்பா! உனத நன்மையின் மகா தேவா!—

வே—சா.

---

௧௨௯. THE SINNER COMMENDING CHRIST. **129.**

## கிறிஸ்துவைப் பாவி புகழ்தல்.

இராகம், இயால். ஏகதாளம்.

பல்லவி.

ஆண்டவா! மோட்சகதி நாயனே!
மீண்டவா! பாவிக் கிரங்குவாயே.

சரணங்கள்.

௧

நீண்ட ஆயுளுள்ளவா! நெறிமறை கொடுத்தவா!
தாண்டி யுலகில் வந்தாயே; தயாளமுள்ள ஏகவே!— ஆண்

௨

பெத்தலேக ஊரிலே பிள்ளையாய்ப் பிறந்தையே,
சித்தம் வைத்திரங்க மாட்டாயோ தேவ சீல மைந்தனே!—ஆண்

௩

பாவவினை நீக்கவே பாடு மிகப் பட்டையே,
கோபமின்றி என்னை நோக்காயோ? குருசில் அறையுண்டவா!—
ஆண்

௪

கொல்கதா மலையிலே குருசினில் தொங்கையிலே
பொல்லாருக் கிரங்கவில்லையோ? பொறுமையுள்ள தேவனே!—
ஆண்

[1] வானோர். [2] இராசன்.

௫

பேதலித்த சீமோனைப் பேணி முகம் பார்த்தாயே,
ஆதரவு நீ தானல்லவோ அருமையுள்ள அப்பனே!— ஆண்

௬

பாவியான ஸ்திரி உன் பாதமுத்தி செய்திட
சீவ வாக்குரைக்கவில்லையோ? தேற்றல் செய்யு மீட்பரே!-ஆண்

௭

பொய், வஞ்சம், காமம், கர்மம், பொறுமை மெத்த வுண்டுமே,
துய்ய குணம் நீ அருளாயோ துயரம் நீக்கும் கர்த்தனே!— ஆண்

௮

கெட்ட சாத்தானவன், கெடுக்க வகை பார்க்கிறான்,
திட்டமாகக் காவல் பண்ணாயோ, திரியேக வஸ்துவே!—ஆண்

P.

---

௧௩௦. PRAYER FOR THE HOLY SPIRIT. **130.**

---

## பரிசுத்த ஆவிக்கு ஸ்தோத்திரம்.

---

கலித்துறை.

அருள் சேரும் தாதை படைத்தார், சமஸ்தமும்; அன்புடன் நீ
குருவாக வந்துதித் தாய்; கும்பிட்டேன், கண் குளிரக் கண்டேன்,
திருமா மறைதந்த தேவாவியும் இங்கு தீவிரம்வந்
தருகேயின் றெந்தனை ஆளாத தேன்கிறிஸ் தாதிபனே!

---

இராகம், தோடி. ரூபகதாளம்.

பல்லவி.

அருகில் நில்லாரோ? எந்தனை வந்
தாண்டு கொள்ளாரோ?



அனுபல்லவி.

மறுவில்லா திரித்துவத்தன் மேவிய வல்ல பிதாச் சுதனின்று
புறப்படும்
பொருவில்[1] நல் வரம் அனைத்தும் நல்கிய புண்ணியரூபன், அருகில்
நண்ணும் தயாளன்—

---

சரணங்கள்.

௧

தேவ பரிசுத்தாவி,—ஐயனை அபிஷேகம் செய் அரூபி!
மாபவங்கள் துடைத் தெங்களைத் தேற்றியே;
மாமறைத் தீபம் இதயத்துள் ஏற்றியே;
பூவுலகில் சுவிசேஷ வார்த்தை சொல்லப்
போமவரால் தன்புகழ் எங்கெங்கும் சொல்ல— அருகில்

௨

வேதம் எங்கும் துலங்க,—அஞ்ஞியானவீண வேடம் எல்லாம்
மழுங்க,
தீது செய் கடிபா தாளம் புகுந் தொளிக்க,
திங்கள் நிகர்த்த சபை மங்கைத் திருச் சொலிக்க,
நாத கீத மங்களம் உன்னதத் தொலிக்க,
தானிலத்தில் எல்லா வாழ்வும் உண்டாய்ச் செழிக்க,—அருகில்

௩

புத்தி அற்றுப் போகுதே;—உலகம் பொல்லாங்கன் வசம்
ஆகுதே;
உத்தம கிறிஸ்தோர் இங்கோகோ? மகாகொஞ்சம்
உயர் சுவிசேஷம் உணர்வில்லை பாழ் நெஞ்சம்;
பத்தரையும் கூட எத்து தல்லை வஞ்சம்;
பாவியெனுக்கவர் பாதம் அலவோ, தஞ்சம்,— அருகில்

௪

இன்ப வழியைக் காட்டும்—அவர் முகம் என் இதயக்கவலை
ஓட்டும்;
அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், பொறுமை தரும்;
ஆற்றல், உண்மை, தயை அருயப் பெருகி வரும்;
துன்பம் செய்யும் அசுத்தம்[2] பகைக்கும் அந்தத்
தூய புறவம்[3] காண, காயம் பிழைக்கும் வந்தேன்—அருகில்

---

1 ஒப்பில்லாத. 2 அசுத்தத்தை. 3 புறா.

௫

ஆதிசர்ப்பம் மீறுதே;—அதனைக் கண்ட அடிமை மனம் வேசா
   றுதே;
வாதை கொண்டு மனச் சாட்சி செய்யுது, பகை
மாற்ற என்றால், எங்கும் இல்லை, வேறு வகை;
பாதை காட்டும் ஏ கோவா பரிசுத்தாவி
பட்ச மாய் எனக்கு ரட்சிப்பாக வந்தேன்—        அருகில்
                                                        கா.—உப.

—— ❧ ——

## ௧௩௧. PRAYER ADDRESSED TO THE HOLY SPIRIT. 131.

## பரிசுத்தஆவியை நோக்கி வேண்டுதல்.

வெண்பா.

பெந்தெகோஸ் தாவின் பெருநாளில் சீடர்சிரத்
தந்தாதி அக்கினிரூ பாகினன்;—சந்தோஷம்
ஞானம் தரும் பரிசுத் தாவி! கல் நேசம்வைத்தே
ஆனந்த சேர்விழிபா ராய்.

இராகம், ஆனந்தபைரவி.        ஆதிதாளம்.

பல்லவி.

நேசம் வைத்தானந்த சேர்விழி பாராயோ?-தேவதிரித்வ
நித்ய பரிசுத்தாவி!—கதி—உற்ற நன்மைப்பிரதாபி!

அநுபல்லவி.

மாசற்ற பிர காச முச்சுடர்க்கு
பாசமுத்திர சரு வீச தற்பரர் கி
றிஸ்து நித்திய வேந்தருள் இஸ்பிரீத்துச் சாந்தவே!—நேசம்

சரணங்கள்.

௧

அதத்தின் இடர்வினை கதித்த உலகிருள் அறுத்த ஞானதனி
   யே!—பல
விதத்தில் கார் இருதயத்தை முழுவதும் விளக்கும் பரம கெனி
   யே!—மகிழ்வுடன்



உதித்த பரம ஞானி! ஒரு நிதானி! அருள்செய் மானி![1]
இதத்தின் நற்குண உச் சிதத்தில் எமைப் புரக்கும்[2]
இஸ்பிரீத்தே! விஸ்தரிப்புப் பொஸ்தக சமஸ்த தேவே—நேசம்

௨

உரத்த தவம் மிகும் விரத்தர் அறம் உறும் உளத்தில் உயர்ந்த
   வாழ்வே!—கன
திரத்தின்[3] வசனம் தூரத்தில் உலவிய செபத்தில் மகிழ்ந்த
   கோவே!—இரு
வரத்தின் கருணைப் பனியே! சீவனின் கனியே! அமரர்[4] தொ
   னியே!
பரத்தில் இருந்து சீடர் சிரத்தில் எழுந்துவந்த
பாக்கியமே! மோக்ஷ சிலாக்கிய மனோக்கியமே!—        நேசம்

௩

விடத் தாவினுடை படத்தலை மிதித்த வேதன் மகிழ் புரு
   வே!—கன
திடப் பரம பிதா இடத்திலும் இருந்து ஜெகத்தில் வளரும்
   தேவே!—ஞான
தடத்தின்[5] பரம சொரூபி! திவ்ய அரூபி! அற்புத ரூபி!
அடத்தன்[6] தூர்க் குணத்தை உடைத்து, சுகப்படுத்தும்
அம்பரமே![7] உம்பர்[8] நிரம்பர[9] பரம்பரமே![10]—        நேசம்
                                                        வே.—சா.

## ௧௩௨. PRAYER TO THE HOLY SPIRIT. 132.

## பரிசுத்தஆவியை மன்றாடுதல்.

வெண்பா.

அக்கினியின் நாவாய் அருந்தவர்மேல் வந்திருந்த
முக்கியதி ரித்துவத்தின் மூற்பொருளே!—மிக்க
அருப சொரூபியே! ஆண்ட பரிசுத்
தரூபியே! ஸ்தோத்திரம், ஐயா!

---

1 கனவான்.
2 காக்கும்.
3 பெலமுள்ள.
4 வானோர்.
5 தடாகம்.
6 துஷ்டன்.
7 கடவுளே!
8 ஆகாய வாசமான.
9 நிர் ஆகாயம்.
10 தெய்வ தெய்வமே.

இராகம், சேனாவதி. ரூபகதாளம்.

பல்லவி.

அரூபியே! அரூப சொரூபியே—எமை ஆளும் பரிசுத்
தரூபியே அரூப சொரூபியே!

அநுபல்லவி.

திருவிநாடு[1] உறை நிதான கருணையாதிபதி மோன[2]
சுரநரர் வணங்கும் வான ஒரு பராபர மெய்ஞ்ஞான— அரூ

சரணங்கள்.

௧

ஆதி காரண அரூபியே!—அசரீரி சத்ய
நீதி ஆரண[3] சொரூபியே!
வேத வாசக சமுத்திர ஓதும் வாய்மைகள்[4] சமுத்திர
நீதி லாதுயர் விசித்திர சாதி யாருட பவித்திர— அரூ

௨

சீரு லாவிய தெய்வீகமே!—திரி முதல் ஒரு பொருள்
ஏரு[5] லாவிய சிநேகமே!
பாருளோர்[6] பணிந்து போற்றும் ஆரியா![7] அடியர் சாற்றும்
சேரமே புகழை ஏற்றும் வீரமாய் மனதை ஆற்றும்— அரூ

௩

பத்தர் பாதகம் அடாமலே,—பசாசு உலகுடல்
சத்ரு சோதனை படாமலே,
அத்தனார் தேவ கோபம், நித்ய வேதனைகள் சாபம்,
முற்றும் மாறிடத் தயாபம் வைத்து நீடுன் பிரதாபம்— அரூ

வே.—சா.

[1] திரு+விண்+நாடு=பரிசுத்த ஆகாய நாடு.
[2] மௌன.
[3] வேதம்.
[4] சொல்லுகள்.
[5] அழகு.
[6] உலகோர்.
[7] குருவே!



௧௩௩. A PENITENT PRAYER TO THE HOLY SPIRIT. 133.

பரிசுத்த ஆவியின் பேரில்.

இராகம், சயிந்தவி. ஆதிதாளம்.

பல்லவி.

ஐயையா! நான் ஒரு மா பாவி,—என்னை
ஆண்டு நடத்துவீர் தேவாவி.

சரணங்கள்.

114978

௧

மெய்யையா இது தருணமய்யா—எந்தன்
மீதிலிரங்கச் சமயமய்யா
ஐயையா! இப்போ தென்மேலிரங்கி—வெகு
அவசியம் வரவேணும் தேவாவி!— ஐயையா

௨

என திருதயம் பாழ்நிலமாம்—ஏழை
என்னைத் திருத்தி நீர் அன்பாக
தினமும் வந்து வழி நடத்தும்—ஞான
தீபமே! உன்னத தேவாவி!— ஐயையா

௩

ஆகாத லோகத்தின் வாழ்வை யெல்லாம்—தினம்
அருவருத்து நான் தள்ளுதற்கு
வாகான சுத்த மனம் தருவீர்—நீர்
வல்லவராகிய தேவாவி!— ஐயையா

௪

பத்தியின் பாதை விலகாமல்—கெட்ட
பாவத்தில் ஆசைகள் வையாமல்
சத்திய வேதப்படி நடக்க—என்னைத்
தாங்கி நடத்திடும் தேவாவி!— ஐயையா

௫

அன்பு, பொறுமை, நற் சந்தோஷம்—என்
ஆண்டவரின் மேல் விசுவாசம்
இன்ப மிகு மெய்ச் சமாதானம்—இவை
யாவும் தருவீரே தேவாவி!— ஐயையா

௬

ஏசுகிறிஸ்துவில் நான் சார்ந்து—அவ
ரிடத்திலேயே நம்பிக்கை வைக்க
மாசில்லாத் தூய்யனே! வந்துதவும்—நீர்
வாராமல் தீராதே தேவாவி!— ஐயையா

P.—பா.

---

௧௩௪. PRAYER FOR THE HOLY SPIRIT. 134.

## பரிசுத்த ஆவிக்காக விண்ணப்பம்.

வெண்பா.

நின் அடியார்க் காறுதலும் நெஞ்சுரமும் உண்டாக
தின்னரகப் பேயைத் துரத்தினையே;—உன்னதனே!
பொல்லாரைக் கீழ்ப்படுத்திப் பொன்னுலகுக் கேறிவா
நல்லாவி என் அகத்தில் நாட்டு.

இராகம், மோகனம். ஏகதாளம்.

பல்லவி.

உந்தன் ஆவியே, சுவாமி! எந்தன் மீதினில்
வந்து சேரவே, அருள் தந்து காவுமே.

அனுபல்லவி.

மூந்து மானிடர் வினை தந்த சாபமும்,
நிந்தை யாவுமே பட வந்த ஏசுவே!— உந்தன்

சரணங்கள்.

௧

மதி மயக்குதே; பேயும் மன தியக்குதே;[1]
அதிகமாய்க் கடல் அலை அறைந்து பாயுதே;— உந்தன்

௨

சத்ய ஆவியைச் சீடர்க் கித்தரை[2] விட,
சித்தமாய் உரை புரி நித்ய தேவனே!— உந்தன்

[1] அசைக்குதே. [2] இத்தரையில்.



௩

பெந்தெ கோஸ் தெனும் மா சிறந்த நாளிலே,
விந்தை ஆவியின் அருள் தந்த நேர்மையே;— உந்தன்

௪

தாசன் யானுமே பாழ் வீசம் வாய்மையே![1]
வாச மாகவே அருள், நேச தேவனே!— உந்தன்

சடகோ.

---

௧௩௫. PRAYER FOR THE HELP OF THE HOLY SPIRIT. 135.

## தேவ ஆவியின் உதவிக்காக மன்றாடல்.

வெண்பா.

துர்க்குணத்தை நீக்கி, இந்தத் தொல்புவியி லே எனக்கு
நற்குணத்தை இலதற்கும் நன்மறையின்—சொற்கள் நன்றென
றோர்விருப்போ டாராய, உட்கொள்ள, செய்வதற்கும்
வாரும், என்கண்; தேற்றரவ ரே!

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

வாரும், தேற்றரவரே! வாரும்;—எனைச்
சேரும்; வினையறுத் தெனைச் சேரும்.

அனுபல்லவி.

ஆரும் மாற்றுதற் கரிதான பவம் திரும்படி, செய்யும், இறைவா
னே!— வாரும்

சரணங்கள்.

௧

மிகவும் பாழ் நிலம் என்னுள்ளமே!—அதில்
விதைக்கும் திரு வசனத்தையும் தள்ளவே,

[1] சொல், பெலம்.

சகமும்[1] மாமிச ஆசைகளும், மெள்ளவே,—செய்யும்
சதியை அகற்றி எனையாட் கொள்ளவே,
அக மீதா நந்தம் கொண்டுன் புகழ் விள்ளவே,—செஞ்சொல்
அடியன் நான் உனைப் பாடி மகிழ் கொள்ளவே,— வாரும்

௨

வாடும் மனதினை ஆற்றுதற்கும்,—வேத
மார்க்கத் தொழுகி, உனைப் போற்றுதற்கும்,
கூடென் கெட்ட குணத்தை மாற்றுதற்கும்,—சற்று
துலங்கும் தீபத்திற் கெண்ணெய் ஊற்றுதற்கும்,
நாடும் கதியில் கரை ஏற்றுதற்கும்,—நித்ய
நன்மைகளினால் எனைத் தேற்றுதற்கும்,— வாரும்

௩

தேவ வாக்கால் எனைக் காத்திட வாரும்,—என்றும்
தேவ வரம் ஈந் தெளியனைப் பாரும்,
பாவச் சுபாவமும் துர்க்குண வேரும்—அற
பத்தி, நற் புத்தியைத் தந் தகப்போரும்,[2]
சாவு வருமேல் மரணத்தின் கூரும்—நீங்கி,
சந்தோடம் ஓங்கிட மோட்ச மதில் சேரும்,— வாரும்

தே.—மு.

௧௩௬. PRAYER TO THE HOLY SPIRIT. **136.**

*Come and abide with us.*

## பரிசுத்த ஆவிக்காக விண்ணப்பம்.

இராகம், கௌளிபந்து.

தரு.

௧

இந்த வேளையினில் வந்தருளும் தேவ ஆவியே!—இப்போ
எங்கள் மீதிரங்கி, தங்கி வரம் தாரும் ஆவியே!

௨

அந்தணர் தன்னிடம், விந்தைசெய்த சத்ய ஆவியே!—முன்
ஆச்சரியமாகக் காட்சி தந்த ஞான ஆவியே!

---

[1] உலகம். [2] உள்ளப் போராட்டம்.

102



௩

அர்ச்சியர்க் கற்காளி லற்புதஞ் செய்தாண்ட ஆவியே!—இந்த
ஆதிரை மீதினில், தீதகற்றியாளும் ஆவியே!

௪

ஆருமறியாத ஆறுதல் செய்திடும் ஆவியே!—இங்கு
அஞ்ஞானமகற்றி, மெய்ஞ்ஞானம் புகட்டும் ஆவியே!

௫

சித்தம் இரங்காயோ, நித்தியராகிய ஆவியே!—அருள்
சீவ வழி காட்டி பாவமகற்றிடும் ஆவியே!

௬

வாரும் வாரும், கண் பாரும் பரிசுத்தாவியே!—இன்று
வந்து சபை மீதில், தந்து வரம் அருள் ஆவியே!

௭

தேற்றரவாளன் என்றேற்றிப் புகழ்ந்திடும் ஆவியே!—நிதம்
சித்தம் வைத்தென் மீதில், முற்றும் காத்திடும் ஆவியே!

C.—யோ.

௧௩௭. PRAYER FOR THE SANCTIFYING POWER OF THE SPIRIT. **137.**

## தேவ ஆவியின் உதவிக்காக கெஞ்சுதல்.

வெண்பா.

துர்க்குணத்தி லே உருவாய்த் தொல்புவியி லே பிறந்து
சற்குணமி லாதலைந்தேன் தற்பரனே!—நற்குண நற்
பத்தி எனக் குண்டாகப் பத்தர்பரி சுத்தனே!
சுத்திகரி ஆவிதுலங்க.

இராகம், செஞ்சுருட்டி. ரூபகதாளம்.

பல்லவி.

சுத்திகரியாயோ, துர்க்குணம் நீங்க என்னைச்
சுத்திகரியாயோ.

சரணங்கள்.

௧

மத்தியஸ்தர் பிரசாதனே! பரிசுத்தாவி எனும் நாதனே!
பத்தி தரும் போதனே! உயர் முத்தி தரும் நீதனே!— சுத்

௨

பெந்தெகோஸ்து முருகிலே,[1] அங்கு வந்தே சீஷருகிலே
உந்திய[2] கருணை வாரியே! அருள் தந்திடு நல் உதாரியே!—சுத்

௩

துன்று[3] தீவினை ஒன்றிற்றே அயர்ந் தென்றன் உறுதி குன்றிற்றே,
நின்று பொருமி அழுகிறேன்; துணை என்றிங் குனைக் கைத்தொழுகிறேன்:— சுத்

௪

அந்தகாரம் விலகவே, ஒளி சந்ததமும் இலகவே;
சுந்தரப்பிரகாசனே! தேவ மைந்தர் போற்றும் நல் நேசனே!— சுத்

௫

சத்திய நெறியில் ஏறவே, நற் பத்தியில் தினம் தேறவே,
புத்தியைத் தரும் ஆவியே! இதயத்தை யுன்னருள் மேவியே,— சுத்

௬

தேவ நல் வர மானவா! எங்கு மேவு மூன்றில் ஒன்றானவா!
பாவ மாசினைப் போக்குவோய், நித்ய சாபம் யாவையும் நீக்குவோய்.— சுத்

ஜா.—பா.

கநஅ. PRAYER TO THE HOLY SPIRIT TO DO HIS WORK IN US. **138.**

## பரிசுத்த ஆவிக்கு விண்ணப்பம்.

இராகம், பைரவி. திரிபுடதாளம்.

பல்லவி.

தீய மனதை மாற்ற வாரும், தூய ஆவியே!—கன
நேய மேவியே.

1 பண்டிகை. 2 உயர்ந்த. 3 உவந்து, பிரியமாய்.



சரணங்கள்.

௧

மாய பாசத் தழுந்தி, வாடி, மாளும் சாவிதால்;—மிக
மாயும் பாவி நான்.— தீய

௨

தீமை செய்ய நாடுமென்றன் திருக்கு நெஞ்சமே;—மருள்
தீர்க்கும் தஞ்சமே!— தீய

௩

பரத்தை நோக்க மனம் அற்றேனே, பதடிதான்[1] ஐயா!—ஒரு
பாவி நான் ஐயா!— தீய

௪

புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே—அதை
புகழ்ந்து காக்கவே— தீய

௫

துக்கத்தோடென் மீட்பைத் தேடி, இரந்து கெஞ்சவே—தினம்,
இதயம் அஞ்சவே— தீய

௬

கிறிஸ்து மீது நாட்டம் கொண்டு, கீதம் பாடவே—அவர்
கிருபை தேடவே— தீய

௭

தேவ வசனப் பாலின்மீது தேட்டம் உன்னவே—மிகு
தெளிவு துன்னவே— தீய

௮

செபத்தின் தாகம் அகத்தில் ஊறி செபித்துப் போற்றவே—மிக
சிறப்பாய் ஏற்றவே.— தீய

ச.—உ.

கநகூ. THE DESCENT OF THE SPIRIT ON THE DAY OF PENTECOST. **139.**

## பெந்தெகோஸ்து நாளில் பரிசுத்த ஆவி சீஷர்மேல் இறங்கினதைப்பற்றி.

இராகம், நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாரே, ஆவி;—சீஷர்கள் மேலே
வந்தாரே, ஆவி.

1 பதர்.

அநுபல்லவி.

வர்தனர், அக்கினிச் சுந்தர நாவெனு,
நிந்தை அடைந்துளம் நொந்தவர் மேலே;— வந்

சரணங்கள்.

௧

விண்ணொடு பூமியும் எண் இல்லாச் சிஷ்டி உண்டு
பண்ணி, அலங்கரித்து, எண்ணமுடனே காத்து,
நண்ணி,[1] மனுடருக்குள் நன்னய சாட்சி தந்து,
பொன்னுலகத்துக் கேற்றும் அண்ணலாய்[2] தேவ ஆவி— வந்

௨

எல்லாரும் ஒருமனம் அல்லாது, வேறில்லாமல்,
செல்லாமல், வீடுவிட்டு, புல்லர்கள் தமக்கஞ்சி,
வல்லவனான ஏசு நல் அடியை வணங்கி,
அல்லும் பகலும் ஏற்றும் மெல்லிய சீஷர் மேலே— வந்

௩

அண்டம் அகன்று, பூ மண்டலந்தனில் ஆவி
எண்டிசையும் முழக்கம் கொண்டிட்டவே, பலத்த
சண்டமாருதம்[3] போலக் கண்டவர் பிரமிக்க
தொண்டர் இருந்த வீட்டை மண்டல் செய்து, நிரப்பி,— வந்

௪

கூடிய சனங்களும் நாடி, கலிலேயர்
தேடிப் பிடிக்கினும் ஓடி ஒளிப்பவர்
பாடி, எம் பாஷையிலே நீடிய பிரசங்கம்
ஆடிய தேதென சாடி, அதிசயிக்க,— வந்

ஆ.—உப.

1 கிட்டி. 2 மகிமையுள்ள. 3 பெருங்காற்று.

105



## ௧௪௦. THE RUIN OF THE FALL AND THE WAY OF ESCAPE. 140.

## உலகத்தில் பாவம் உண்டானதைப்பற்றி.

இராகம், புன்னாகவராளி. அடதாளசாப்பு.

பல்லவி.

பாவம் வந்ததையோ!—உலகுக்கு
பாவம் வந்ததையோ!

அநுபல்லவி.

பாவத்தினால் தேவ கோபம் வந்தது;
கோபத்தினால் பல சாபம் வந்தது;— பாவம்

சரணங்கள்.

௧

குலத்தையும் கெடுத்தானே;—ஆதாம் பெற்ற
பலத்தை வீண் விடுத்தானே;
தலைப்பலன் இழந்தானே;—பின்னும் பல
அலக்கணும்[1] உழந்தானே;[2]
விலக்கின கனி தின்று, மெல்லியல்[3] சொல்கொண்டு,
கலக்கம் உற்றான் என்று கண்டிலீரோ, பண்டு?— பாவம்

௨

ஆபிரகாமைக் கொண்டே,—இருட்கோர்
தீபம் தந்ததுவும் கண்டே,
கோபத்தை மூட்டுகின்றீர்;—அஞ்ஞானத்தி
லே பத்தி காட்டுகின்றீர்;
பாவம் செய்தீர்; ஏசு பரன் இன்றிப் போமோ?
கூபத்தில் வீழ்ந்தால், கொடி இன்றி ஆமோ?— பாவம்

௩

மலை வனம் சென்றாலும்;—சமாதியில்
சிலர் துன்றி, நின்றாலும்,
புலன் ஐந்தும் வென்றாலும்,—சன்யாச
நிலைகள் பயின்றாலும்,
அலைவதல்லால் உமக் காமோ, கடாட்சம்?
பலியான தேவனைப் பற்றினால், மோட்சம்.— பாவம்

Jaffna.

1 துன்பம். 2 அநுபவித்தல். 3 பெண்ணின்.

## ௧௪௧. LIVING OR DYING, ALL THE WICKED ARE UNDONE—A LAMENT. 141.

# மனிதர் செய்கிற பாவங்களுக்காகப் பிரலாபித்தல்.

வெண்பா.

கர்த்தர் அருளிச்செய்த கற்பனைகளைத்தவறி,
பத்தி இலாதொழுகும் பாவகரர்—முற்றும்
பிறந்தும் வியர்த்தமே, பேதையர் ஜென்மம்
இறந்தும் வருத்தமே ஆம்.

இராகம், தன்யாசி. ஆதிதாளம்

பல்லவி.

பிறந்தும் வியர்த்தம்[1] ஆச்சே,—புவியில் ஜென்மம்
இறந்தும் வருத்தம் ஆச்சே.

அநுபல்லவி.

சிறந்த சத்திய வேதம் அறிந்தும், நரக வழி
திறந்து, பராபரனை மறந்து திரியும் ஜென்மம்— பிற

சரணங்கள்.

௧

கர்த்தர் உரைத்த பத்துக் கற்பனைகளை மீறி,
மெத்தக் கெருவம் கொண்டு, விழுந்து கிடக்கும் ஜென்மம்— பிற

௨

உலகம் படைத்த கர்த்தன் ஒருவன் எனச் சொல்லியும்
பல பல தேவர்களைப் பணிந்து திரியும் ஜென்மம்— பிற

௩

வானத்தின் சேனைகளை, மண்ணில் உள்ள வஸ்துக்களை,
ஈனப் பசாசுகளை ஏத்தி வணங்கும் ஜென்மம்— பிற

1 வீண்.



௪

ஆணை சத்தியங்கள் பண்ணி, அச்சயன் தேவ நாமத்தை
வேண விதங்களாக வீணில் வழங்கும் ஜென்மம்— பிற

௫

கருத்தரின் ஓய்வுநாளைப் பரிசுத்தம் பண்ணாமல்,
விருத்தமாக்கி,[1] பல வேலைகள் செய்யும் ஜென்மம்— பிற

௬

தகப்பனை மாதாவை சங்கித்து வாழாமல்,
அகத்தில் கெருவங்கொண்டு, அசட்டை செய்யும் ஜென்மம்— பிற

௭

உலையு மனுடரின் உதிரம் சிந்தப்பட
கொலை செய்யும் பொல்லாத கொடும் பாதக ஜென்மம்— பிற

௮

அபசாரத்தில் அயலான் மனையைத் தழுவும்
விபசாரத் தனத்தின் வேசித்தன ஜென்மம்— பிற

௯

உளவு செய்து, பிறர் உடைமைகளைத் திருடி,
களவு செய்யும் பொல்லாக் கடை கெட்ட பவ ஜென்மம்— பிற

௰

மெய்ச் சாட்சிகள் சொல்லவேண்டும் பிறனுக்கெதிர்
பொய்ச் சாட்சிகள் சொல்லிப், பொரியும் புலையர் ஜென்மம்— பிற

௰௧

தடுத்துத் தடுத்து மறை சாற்றுதெனச் சொல்லியும்,
அடுத்தவன் வீட்டை இச்சித் தலையும் கொடிய ஜென்மம்—பிற

௰௨

அயல் மனை, சேடன்,[2] சேடி,[3] எருது, கழுதை, மற்றும்
மயல் பிடித் திச்சித்து, மயங்கித் திரியும் ஜென்மம்— பிற

௰௩

எல்லாத்திலும் அதிக்க எந்தை பராபரனை
நல்லாய்ச் சிநேகியாத பொல்லாத வீண் ஜென்மம்— பிற

1 வேறுபாடாக்கி. 2 வேலைக்காரன். 3 வேலைக்காரி.

௰௪
தன்னைப்போல் தன் பிறனைத் தக்கபடி நேசியாமல்,
பின்ன பேதகம் செய்து, வின்னமாய்ப் பேசும் ஜென்மம்— பிற
வே.—சா.

## ௧௪௨. THE FOLLY OF IRRELIGION. 142.

## அவபக்தி அபத்தம் எனல்.

வெண்பா.

ஞானிகளே! வேதம் எல்லாம் நன்றாய் அறிந்தஅவ
தானிகளே! ஓர் வசனம் சாற்றுங்கள்;—வான் அளிக்கும்
நன்மைப்ப ராபரனை நாடிச் செபஞ்செய்யாச்
சென்மம் எதுக்கு? திறம்.

இராகம், பைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

சென்மம் எதுக்கு,—செபம் செய்யா?
சென்மம் எதுக்கு,—தபம்[1] செய்யா?

சரணங்கள்.

௧
நன்மை ப்ரவாகர ஞானச் சொரூபத்தை
உண்மையினாலே உணர்ந்து, வணங்காத— சென்

௨
வானம் புவியும் மகிழ்ந்து படைத்த மெய்ஞ்
ஞானப்ர காசத்தின் நன்றி அறியாத— சென்

௩
தேடிப் பராபரன் பாதத்தைச் சிந்தித்து,
நாடித், தினம் தினம் பாடித் துதியாத— சென்

௪
எங்கும் நிறைந்த பராபரன் இல்லை என்
றங் ககங் கொண்டெங்கும் அலைந்து, திரிகின்ற—சென்

[1] உபவாசம்.



௫
யாவும் அறிந்து, நடத்திர்க்க வல்ல ஓர்
தேவன் உண் டென்றுளம் சிந்தனை செய்யாத— சென்

௬
தன்னைப் படைத்த சருவேசுரன் தனை
உன்னி உணர்ந்து, உவந்து கொண்டாடாத— சென்

௭
மோசப் பிசாசை முழுவதும் நம்பியே,
ஏசுவின் நாமத்தில் ஈடேற மாட்டாத— சென்

௮
ஆவியினால் உண்மை யாவும் அரூபியாம்
சீவப் பிரானைத் தியானித்துப் போற்றாத— சென்

௯
மோகக் கடலில் முழுகி மயங்கியே,
ஏக பராபர வஸ்துவை ஏத்தாத— சென்

௰
உத்தம சத்திய வேதத்தின் உண்மையைப்
புத்தியினால் கண்டு, போற்றி, கைக்கொள்ளாத— சென்

௰௧
எத்தனை நீதிகள், வேதங்கள் கற்றாலும்,
பத்தியும், தேவ பயமும் இலாத வீண்— சென்

௰௨
மாயப் பிசாசின் மருள் அற, அன்பர்க்கு
தாயகனும் ஏசு தாதாவைத் தேடாத— சென்
வே.—சா.

## ௧௪௩. IF THE LORD BE GOD, SERVE HIM: WHY HESITATE? 143.

## விக்கிரக வணக்கத்தையும் அவிசுவாசத்தையும் மறுத்தல்.

வெண்பா.

சிந்தை தடுமாறி, தீவினைகட் குள்ளாகி,
எந்தவித புத்தியையும் எண்ணாமல்,—அந்தந்தோ!
மான் மயங்கா தாளும்ஒரு வல்ல பிதாஇருக்க,
என்மயங்கி னாய்? மனமே!

இராகம், செஞ்சுருட்டி. ஏகதாளம்.

பல்லவி.

ஏன் மயங்கிறாய்?—மனமே!—ஏன் மயங்கிறாய்?-கான
மான் மயங்கிறாப் போல்—ஏன் மயங்கிறாய்?

சரணங்கள்.

௧

அந்தர வான் புவி தந்த பராபரன்
ஆரென் றறிவால் அறியாமல்— ஏன்

௨

கல்லையும், செம்பையும், மரக் கட்டைகளையும்
கருதி, உருகி, தடுமாறி— ஏன்

௩

பராபரனோ? பாகாலோ? தெய்வம்
எனப் பகுத் தறிந் தேத்தாமல்— ஏன்

௪

பராபரன் தெய்வம் ஆனால், அவனைப்
பணி, பசாசானால் அதைச் சேவி— ஏன்

௫

மனுடவ தாரஞ்செய்த பராபர
வஸ்துவே கிறிஸ்து என்றறியாமல்— ஏன்

௬

எந்த விதத்திலும் ஏசு கிறிஸ்துவால்
இரட்சிப் படைவதைத் தேடாமல்— ஏன்

வே.—சா.

## ௧௪௪. GOOD COUNSEL. 144.

# நன்னெறியைக் கற்பித்தல்.

வெண்பா.

சத்தியத்தைப் பேசு, தரும வழிசெல்லு,
பத்தியினால் தாழ்ந்துசெபம் பண்ணு;—சற்றெனினும்
ஆலமகள் வாழ்வை, அநித்தியத்தை நாடி, மனு
வேலர்திரு நாமம்இக ழேல்.



இராகம், பைரவி. அடதாளசாப்பு

பல்லவி.

மனு வேலர் திரு நாமம் இகழாதே, மனமே!—சாகும்
மனுடர் தமை மகிழ்ந்து, புகழாதே.

அனுபல்லவி.

கனமும் சங்கையும் அங்கு திகழாதே;—நித்ய
காட்சி தருபர மாச்சரிய வான
ராச்ய வலமையின் மோட்சா தனபதி— மனு

சரணங்கள்.

௧

அழியும் உலக வாழ்வை மதியாதே,-அதில்—அறிவுகெட மனதைப் பதியாதே,
பழிகொள் பாகாலின் வீட்டை மிதியாதே,—கன
பாதகமாய் மன வாதைகளே படு
சோதனை மேவியும், நீதி கெடாதே.— மனு

௨

பாவிகளின் வழியில் நில்லாதே,-தீயர்—பண்ணும் யோசனைகளில் செல்லாதே,
கோவிகள் ஆசனமும் பொல்லாதே,—சற்
குருவை வந்தனை செய், சரசகந்தையில் ஓர்
தனையும் நிந்தனைகள் படிறு சொல்லாதே.— மனு

வே.—சா.

## ௧௪௫. THE NECESSITY OF IMMEDIATE REPENTANCE. 145.

# குணப்படுவதைப்பற்றி.

இராகம், சௌராஷ்டிரம். ஏகதாளம்.

பல்லவி.

சீர் அடை நீ உடனே,
சாவது தான் திடனே.

அநுபல்லவி.

பார் உலகே உனக்கோர் தாரகம் என்றே
சாரும் நரனே! சாவின் கூரதையே உணர்ந்து— சீர் அடை

சரணங்கள்.

க

ஆவி பிரிகின்ற போது மேவு துணை தான் இங்கேது?
தாவரமாக எண்ணித் தயங்கிறாய் ஐயோ!
சந்தைத் துணை அறியாய் இந்த லோக உறவு.— சீர் அடை

உ

தேகமது தான் முகில் போல் ஏகி மறை வாகுவதால்,
மாகவன மோடிகத்தின் வாழ்வை நம்பாதே;
மாறிடா மோட்ச வாழ்வே பேறெனவே தொடர்ந்து,— சீர் அடை

௩

தந்தை தாயாரும் மற்றப் பந்துக்களோடு பெற்ற
மைந்தரும் சூழ்ந்தழ, பின் வாங்குவாய், ஐயோ!
வான்கதி தன்னையே, நீ தான் கருத்தாகத் தேடி,— சீர் அடை

ஜா.—பா.

௧௪௬. THE PREACHING OF JOHN THE BAPTIST. **146.**

## யோவான்ஸ்நானன் பிரசங்கம்.

இராகம், பைரவி. அடதாளசாப்பு.

பல்லவி.

வான ராச்சியம் வந்த தோகோகோ!
மாந்தரே! தவஞ்செய்யும்; ஓகோகோ!

அநுபல்லவி.

ஆன சாட்சி, தியான சூட்சி, மெய்ஞ்
ஞான காட்சியர் தோன்றினார்.— வான



சரணங்கள்.

க

மன்னவன் கிறிஸ்தாதிபன் வந்தார்,
வாகுறப் பவமே ஒழிந்திடவே குணப்படுவீர்களே,
என்னிலும் பெரியார் வலியார் அவர்
இங்கிலத் திடை மேவினார்; உயர் உன்னதக் கிருபை ஆழமே— வான

உ

பிந்தி வந்தவர், முந்திஇருந்தவர்,
பேசரும் பொருளார், பரம்பர நேசர், நம் கருணைம்பரர்,
சுந்தரப் பரிபூரணர், காரணர்,
சோதி சொந்த அனாதி மைந்தன் இம் மாதிரந்தனில் மேவினார்.— வான

௩

அண்ணலார் பாத ரட்சையின் வாரையே
அவிழ்க்க, வாய்மையில் எடுக்க அல்லது சுமக்கப் பாத்திரன் அல்ல நான்;
திண்ணமீ என் முழுக்கோ சலத்தீர்த்தமே,
தீயினாலும், அரூபியாலும், இஸ்நானமே அவர் ஈகுவார்,— வான

௪

வேதமார், பரிசேயர், சதுக்கேயரே!
வீம்புத் துட்டமுறு தீம்புக் கெட்டகுண பாம்புக்குட்டி விரியன்களே!
போதவே வரும் கோபத்துக்குத் தப்பி
போவதைத் திடமாய் உமக்கிது போதித்தெவர் காட்டினார்?— வான

௫

தவசுக்கான பலன் தருவீர்களே,
தாதை ஆபிரகாம் எமக்கெனவே உளத்தில் எணாதேயும்,
கவ்மதாய் ஆபிரகாமுக்கிக் கற்களில்
நாதனார் மகரே தரத் திறலோர் உமக்கிதை ஓதினேன்.— வான

௬

மரத்தின் வேர் அருகே முன் கோடாலியும்
வைத்திருக்குது, பத்திரத்துடன் எச்சரிக்கை விடாதேயும்,
வரத்தில் நற்கனி தான் தருகாத் தரு
வைத்திடக் கிட வெட்டி மிக்கழல் அக்கினிக் கிரையாக்குவார்,— வான

௭

தூற்றுக்கூடை கரத்தில் இருக்குது,
துறையினில் தமதுரிய கற்களம் அற விளக்கி, அறுதியிலே
தேற்றக் கோதுமை கேயத்தில் சேர்த்திடுமே,
தீய துர்ப்பதர் ஆனதைத் தழலால் எரிப்பர் இந்நேரமே.—வான

வே.—சா.

——»»««——

௧௪௭. BEHOLD! NOW IS THE DAY OF SALVATION. **147.**

## இன்றைக்கே மனந்திரும்பு.

இராகம், அங்குன்தானி. ஆதிதாளம்.

பல்லவி.

இன்றைக்கே மனந்திரும்புவாய்,
இல்லையானால் கெடுவாய்.

அநுபல்லவி.

பின்னைக்கென்று நீ பின்னிடுவது
பிசாசின் தந்திரப் பேச்சென்றே நினை.— இன்

சரணங்கள்.

௧

நீதி வெட்டக் கை ஓங்குதே, நீடிய சாந்தமோ தாங்குதே,
மாதயவோடு ஏசு ரட்சகர் வருந்திப் பாவி உனை அழைக்கி
றார்.— இன்

௨

நாளை பிழைப்பதசாத்தியம் நரகப்பாடுன் சம்பாத்தியம்,
வேளை இதுவே பரிசுத்தாவியும், வெகுவாய்த் தூண்ட பிகு
செய்யாதே.— இன்

௩

அந்திய காலம் பார்க்கலாம் அதுவரை தனஞ் சேர்க்கலாம்,
முந்திப் போகாதெனச் சிந்தைகொள்வது மோசடியாய் முடி
யும், முடியும்.— இன்

ஆ.—அ.



௧௪௮. SINNER PLEADING FOR PARDON. **148.**

## பாவமன்னிப்பைப்பற்றி.

இராகம், ஆனந்தபைரவி. ஏகதாளம்.

பல்லவி.

பாதகன் என் வினைதீர் ஐயா! கிருபாகரா! நின்
பாடு நினைந் தெனைச் சேர் ஐயா!

அநுபல்லவி.

தீதகற்றவே சிறந்த
சேணுலகினிமை விட்டு,
பூதலத் துகந்து வந்த
புண்ணியனே! ஏசு தேவா!— பாதக

சரணங்கள்.

௧

வந்திடும் எப்பாவிகளையும்—அங்கீகரிக்கும்
மாறில்லாத ஏசு நாதனே!
உந்தன் இடம் வந்தனமே, உருகி அழுது, மாது
முந்தி மிகச் செய்த பாவம், முழுதும் பொறுத்தாய் அன்றோ— பாதக

௨

சிந்தின உன் உதிரம் அதே—தீயோன் மறத்தை
சின்னபின்னம் செய்ய வல்லதே;
பந்தம் உற உந்தன் வலப் பாகமுற்ற கள்வனையே
விந்தையுற வேரட்சித்த வேதனே! அவ்விதமாயே— பாதக

௩

அற்பவிசுவாசமுளன் ஆம்—அடியேனை இனி
ஆதரிப்பதார்? உன் தஞ்சமே;
தற்பரா! உனைத் தரிசித் தன்றி நம்பிடேன், எனவே
செப்பின தோமாவுக்குப்போல், திரு உருக்காட்டி தந்து— பாதக

௩

ஓங்கும் உன் தயை எத்தனையும்—உணர்ந்திடாமல்,
உண்மையற்ற பாவி ஆயினேன்;
தீங்கு செய்யவே சவுல் சென்ற வழியில் அவனைத்
தாங்கி உந்தன் தாசனாய்ச் செய் தயையின்படியே ஸ்வாமி—
பாதக

௪

பொன், அரிவை, மண்ணிலாசையே—புனைந்தன் அன்பு
போக்கின நிர்ப்பாக்கிய பாவியான்
கன்னயமதாய் யோவான், தன் நாள்களில் எல்லாம் நிலைத்து,
நின்னிடத்தில் நேசம்வைத்த நேர்மையாய் எளியேன் உய்ய—
பாதக

ஜா.—பா.

———•———

௧௪௯. SINNERS CALLED TO REPENTANCE. **149.**

# பாவிகள் மனந்திரும்பும்படியான
# தேவ அழைப்பு.

———•———

## விருத்தம்.

நெறி கடந்தபவச் சேற்றின் உள்ளே
நெடுங்காலம் அலைந்தழுன்று கிடந்த மாறு
வேதனைக்குப் பாத்திரனாய் வெருளும் பாவி
மீட்டுனைக்கை தூக்கிரட்சித் தாள உத்த
ராதிஎன வையகத்தில் எழுந்து வந்த
மனுவேலன் தனையன்றி, வறியன் உன்னை
ஆதரிக்க வல்லர் இல்லை அறிந்து, நீதான்
அஞ்சாதென் சரண்புகுந்தி றைஞ்ச வாயே.

———•———

இராகம், கலியாணி. ஆதிதாளம்.

## பல்லவி.

எதற்காய் அஞ்சுகின்றனை பாவி! மனுவேல்நான் இருக்க
எதற்காய் அஞ்சுகின்றனை பாவி!



## அநுபல்லவி.

சதைக்கவும் பேய்ச் சிரத்தைச்
சிதைக்கவும், சீவ வித்தை
விதைக்கவும், பவம் அறப்
புதைக்கவும், விதம் உண்டிங்— எதற்

———•———

## சரணங்கள்.

௧

பண்டுனது முன்னோர்கள்
கொண்ட திவினை புவி மேலே,—பரந்தே இப்பூ
மண்டலத் தோர்கள் நித்ய
தண்டனைக்குள் அமைந்த தாலே,—அவரை மீட்க
விண்டலஸ்திதி விட்டிம்
மண்டலத் தினில் ஏழை போலே,—எழுந்து வந்தேன்;
அண்டர்க ளோடெனது
தொண்டர் களும் களிக்க சாலே,—எதிர்த்து வந்த
வண்ட அலகையதின் மண்டை உடைய வெற்றி
கொண்ட வல்ல அசண்டா கண்டன் உனக்கிருக்க—எதற்

௨

கடுத்த பரன் சினத்தை
அடக்க உத்தரவாதி ஆனேன்;—தேவ சித்தத்தைத்
தொடுத்து, மீறுமல் அதை
முடித்து வரப்ரசாதி ஆனேன்;—தஞ்சம் என்றென்னை
அடுத்தவரை அப்புறப்
படுத்தாமல், அவர் நீதி ஆனேன்;—பின் என் அழைப்பைத்
தடுத்துத் தடுத் தனையே
கெடுத்துக் கெடுத் தசலுமானேன்!—விசுவாசித்தென்
னிடத்தில் உரிமையுடன் அடுத்துவரில், உனைக் கைப்
பிடித்து நல் ஆறுதலைக் கொடுப்பேன் என்றால் ஆகாதோ?—
எதற்

௩

கேட்டின் வழி விட்டு, விண்
காட்டின் நெறியைத் தொடர்ந்தேக,—செல்லும் முறையைக்
காட்டி, உரிமை பா
ராட்டி, பவத்தின் பலியாக,—மரித்த தேவ
ஆட்டுக் குட்டி நான் அன்றோ;

மீட்டுயிர்த் ததி ஜெயமாக—வென்று பரம
வீட்டில் இருப்பிடங்கள்
காட்டித் தினிசு தினிசாக—வைத் திருக்கையில்,
வாட்டம் அடையவே [1]திண்டாட்டமேன், உனை ஏற்க
மாட்டேனே, யாரைத் தள்ளிப்போட்டேன், அண்டினபே
ரில்,— எதற்

ஜா.—பா.

# கருo. CALL TO IMMEDIATE REPENTANCE. 150.

## மனந்திரும்புதலைப்பற்றி.

கலித்துறை.

பேர்அடங் கொண்டு பிரபஞ்ச மாய்கையைப் பின்தொடரில்
பாரிட மீது பரன்சினம் மூளும்என் பாழ்நெஞ்சமே!
ஆர்இடை நிற்பர் அதிதேவ கோபாக் கினியின்முன்னர்
சீரடை, நீஇது வேதரு ணம்சிதை வாகுமுன்னே.

இராகம், தமாசு. ஆதிதாளம்.

பல்லவி.

சீர் அடை தருணம் இதறி, மனமே!
சிதைவு படும் முனமே;
சீர் அடை தருணம் இதறி, மனமே!

அநுபல்லவி.

பார் உடலொடு வலு போர் இடும் அலகையும்—(நீ)
ஆரவாரம் எடுத் தழிக்கும் உனைச் சணத்தில்— சீர் அடை

சரணங்கள்.

க

நொடியதில் அழிவடை புடவியில் கணுகுதல் நலமோ,
பேதாய்!
நோய் துயர் உறும் இது மேலுல கிற்கினை பங்கோ?

[1] கலக்கம்.



கடினப்படுத்து வலு மறம் அது நிலை அற—(நீ)
காதலோடு நல் வேத நெறி தொடர்ந்து;— சீர் அடை

உ

பொருள் அதில் உறு விருப் பதி சிதை வுளதென அறியாய்;—
ஓகோ!
போர் இடு பல பல தீதுகளுக் கது வேரே;
மருளைத் தவிர்க்கும் இறை அருளைக் கருதி எளி—(நீ)
மாசிலாத தெய் வீகன் அடி பணிந்து;— சீர் அடை

ஜா.—பா.

# கருக. LOOK TO CHRIST AND BE SAVED. 151.

## கிறிஸ்து உனக்காக மரித்ததைப் பார்.

இராகம், இந்துஸ்தானி. ஆதிதாளம்.

பல்லவி.

மரித்தாரே கிறிஸ்தேசு
உனக்காகப் பாவி!

சரணங்கள்.

க

திரித்துவத் துதித்தோர், தெய்வீக சேயே,
தீன தயாளத்வ மனுவேலே, பாராய்;— மரி

உ

லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமந்தே,
லோலாயமாய் சிலுவையிலே, பாராய்;— மரி

ந

மகத்தான தண்டனை நிவிர்த்திப்பதற்கே,
மாபாடுபட்டுத்தரித்ததே பாராய்;— மரி

ச

மன்னிப்புண்டாக்கவே மத்திஸ்தராக,
வாதைக்குள்ளானார் தாமே நீ பாராய்;— மரி

சா.—உப.

## ௧௫௨. SINNERS CALLED BY GOD TO REPENT. 152.

# பாவிகள் மனந்திரும்பும்படி தேவன் அழைத்தல்.

வெண்பா.

பாவச் சுமைசுமந்து, பாரத்தால் சோர்பவரே!
ஆவலுடனேவாரும்; ஆதரிப்பேன்;—சாவாமல்
ஆற்றுவேன்; போற்றி, அடுவேன், அவகுணங்கள்;
ஏற்றுவேன் விண்ணிலத்திலே.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

உலகில் பவப் பாரத்தால் சோரும்—இளைப்
பூர்ந்த நரரே! வந்து சேரும்.

அனுபல்லவி.

அலைசடிப் பட்டவரே! வாரும்;—என்றன்
ஆறுதலால் அவற்றைத் தீரும்;—பொல்லா— உலகில்

சரணங்கள்.

௧

பாவி என்றெண்ணி திகைப் போரும்,—எந்தன்
பாவம் தீராதென் றிருப் போரும்,
ஆவலாய் ஓடி வந்து, சேரும்;—நான்
ஆசாமியர்க்காக வந்த தோரும்—பொல்லா— உலகில்

௨

மாறுதல் எம் மனதில் லாமல்,—கெட்ட
மாயம் இருக்கிறதல்லாமல்,
ஆறுதலை உறச் செல்லாமல்,—நின்
றலைவேனு? என்பரே! நில்லாமல்;—பொல்லா— உலகில்

௩

காலம் கடந்த கிழ வோரே!—வீணாய்க்
காலம் கழித்தே உழல் வோரே!
காலமே தேட மறந்தோரே!—உங்கள்
கவலையைத் தீர்ப்பேன்; அறிவீரே:—பொல்லா— உலகில்



௪

வாலிபப் பிராய மிதில் நாளும்—இன்ப
வாழ்வு சுகிக்க வென்று மாளும்
சிலரே! இன்றென் னுரை கேளும்;—அலை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும்;—பொல்லா— உலகில்

௫

இளமை என்றே எண்ணி, நில்லாதே,—சாவும்
இளமை என்று சொல்லி, செல்லாதே;
வளமாய் வருவதைத் தள்ளாதே;—கெட்ட
வழக்க மதையே கைக் கொள்ளாதே;—பொல்லா— உலகில்

ஏ.—ச.

## ௧௫௩. INVITATION TO SINNERS TO COME TO CHRIST. 153.

# கிறிஸ்து பாவிகளைத் தம்மண்டையில் வர அழைத்தல்.

இராகம், தோடி. ரூபகதாளம்.

பல்லவி.

வாரும், வாரும்;—என தடி—வந்து சேரும்.

அனுபல்லவி.

ஆராகிலும், துர்ப் பாவியனாயினும்,
அச்சம் இல்லாமலே, இச்சணமேவியே— வாரும்

சரணங்கள்.

௧

பாரஞ் சுமந்து தவிப்பவரே!—கன—பாடுகள் நிறைந்திருப்ப
வரே!
ஆறுதல், தேறுதல் அளிக்கிறேன் என்று
அன்புடன் சொல்ல யான், பின்னுந் தடை ஏது?— வாரும்

௨

தாகம் மிகுந்தவரே! வாரும்,—பதில்—தரவும் பணம் இன்றி
வாரும்,
தாகந்தீர்த்துக்கொளும், தடை இல்லாமலே,
சந்தோடமே பெற இந்தத் தருணமே.— வாரும்

௩

தீவிதிராட்ச ரசமும் கொளும்,—மிக—திருத்திசெய்யும் அமுதும்
கொளும்,
தாவீதின் நிச்சயக்கிருபை யாவையும்
சந்தத உடன் படிக் கையே செய்வோம்.— வாரும்

௪

ஆகாத பாவி! உன் வழியை விட்டு,—மா—அக்ரமக்காரா! உன்
நினைவை விட்டு,
ஆண்டவன் என்னண்டை வந்தாலுன்னுடைய
அக்ரமம் யாவையும் நிக்ரகம் பண்ணுவன்.— வாரும்

௫

மன நொறுங்கி, மனம் கசந்து,—மிக—மன துடைந்து, நடு
நடுங்கி,
கன தயை மிகும் எனதிடம் வரில்,
மன மிரங்கி, யான் மன்னிப் பளிப்பேனே,— வாரும்

௬

செபதபத்தொடு சேர வாரும்,—வெகு—திட* நம்பிக்கையோ
டேகி வாரும்,
உவமை ஏதும் இலாத தயாள நல்
உருக்க மேவிய கிறிஸ்துவச நான்.— வாரும்

ச.—ஞா.

௧௫௪. MY SON! GIVE ME THY HEART. 154.

# தேவன் பாவியின் இருதயத்தை ஆசித்தல்.

நீதிமொழி. 23. 26.

கலிப்பா.

ஜென்மமுதல் பாவமதை செய்துவந்த பாதகனே!
நன்மைஇன்றி இக்குவலை நாட்கழித்தாய்; ஐயகோ நீ!
தின்மை இல்லா மோட்சமதில் சேர்ந்து நிதம் வாழ்ந்திருக்க
என்மகனே! உன்அகத்தை எந்தனுக்கிப் போதருள்வாய்.



இராகம், கௌசிகை. ஆதிதாளம்.

பல்லவி.

மகனே! உன் நெஞ்செனக்குத் தாராயோ?—மோட்ச
வாழ்வைத் தருவேன் இது பாராயோ?

சரணங்கள்.

௧

அகத்தின் அசுத்தமெல்லாம் தொடைப்பேனே,—பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே,— மகனே!

௨

உந்தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே,—அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே,— மகனே!

௩

பாவம் அனைத்துமே விட் டோடாயோ?—நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ?— மகனே!

௪

உந்தன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே,—அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே,— மகனே!

௫

உலக வாழ்வினை விட் டகல்வாயே,—மகா
உவப்பாய் கதி ஈவேன் மகிழ்வாயே, மகனே!

C.—யோ.

௧௫௫. THE PRODIGAL SON. 155.

# கெட்ட குமாரன் உவமை.

இராகம், கீலாம்புரி. ரூபகதாளம்.

பல்லவி.

சந்துஷ்டி கொண் டாடினேனே,
தனை உணர்ந் துறு புதல் வனைத் தாதை நோக்கி.

அனுபல்லவி.

மைந்தன் கிட்டி வரு முன்னே;
மனதே உருகி எதிரோடி அணைத் தவனை மருவியே— சந்

* * *

சரணங்கள்.

௧

வந்த பிள்ளை ஆனவன் தான்
வதுகளை உற மன தொடு வாய் குளறி,
எந்தையே! நான் மா துரோகி,
எனை ஓர் தொழும்பாக வைத்தாளும் என்றிட உளம் இளகியே— சந்

௨

மாண் ஏதம் இல்லாத மைந்தன்
வழுத்திய மிகு சலிப் புள வார்த்தை கேட்டு;
காணாமல் போன குமாரன்
கண்டேல உற மேவினனே! என உரை துளக் களிவொடு— சந்

௩

காய்ந்த மன தோடிருந்து
கருதிய புதல்வனின் மிகு காதல் கொண்டு,
மாய்ந்தவன் போல் சென்ற மைந்தன்
மனை மேவினன் ஆவி உளோன், என இசைத் ததி மகிழொடு— சந்

௪

மெய்க் கோர் அலங் காரம் அற்று
வெறுமை யொடுறு புதல் வனின்மேல் இரங்கி,
கைக் காழியும், பாத காப்பும்
கனமாக நல் ஆடையும் மேவிட அளித் ததி களிப்பொடு— சந்

௫

ஊற்றமாக வே தகப்பன்
உடன் அகத் தினில் பல வகை உண்டி யோடு
ஏற்ற கன்றும் தான் அடித்து,
இதமாக விருந்துசெய் தாடலுடன் நடத்தி இனிதுற— சந்

௬

வாத்தி யமும், கீர்த்த னமும்,
மட மடென் றிட, வெளி சென்று மாறி வந்த
மூத்த மைந்தன் கேட்டி தெல்லாம்
முனிந்தே குறை கூறிடச், சாந்தி வருத்தி மிகு மூழக்கொடு— சந்



௭

இந்த விதமாகத் தந்தை
இனம் அய லவரையும் வரவே அழைக்க
வந்த நண்பர் யாவரோடும்
வளமாய்க் களிகூர எல்லார்க்கும் திருத்திஉற வருத்தி— சந்

ஜா.—பா.

* * *

௧௱௫௰௬. THE CONVINCED SINNER CRYING FOR HELP. 156.

# பாவ உணர்ச்சியால் பாரமுற்ற பாவியின் விண்ணப்பம்.

* * *

வெண்பா.

குன்றாத் தயைக்கடலே! கும்பிட்டுன் தாள்பணிந்து,
மன்றாடி மிக்க வருந்துகின்றேன்;—துன்றும்
பெருவினையால் ஏழை பிரலாபிக் கின்ற
தருணம் இதி லே இரங்குந் தான்.

* * *

இராகம், ஆனந்தபைரவி. செம்படைதாளம்.

பல்லவி.

தருணம் இதில் அருள் செய் ஏசு பரனே! பாவச் சுமையானது
தாங்க ஏழையாலே அரி தேங்கல் உற லானேன்.

* * *

அனுபல்லவி.

மரண மதின் உரமே ஒழித் தலகை திறம் அறவே செய்து,
வதையே விளைத் திடு தீவினை சிதைய வகை புரி, பரனே!—தரு

* * *

சரணங்கள்.

௧

உலகர் உறு பவமானதைத் தலைமேல் சுமந் ததனை அற
ஒழிக்க, நண்பர் செழிக்க, மனம் தெளிக்க வந்த பரப் பொருளே!
பல காலம் இத் தலமே ஒரு கிலையே எனப் புலமீ துன்னி,
பாழில் அழி ஏழை தனை ஆளவே இவ் வேளை வர.— தரு

௨

வருத்த முடன் அசப்பாரமே தரித்தோர் தமை விருப்போடு, நீர்
வாரும், எனைச்சேரும், என்ற சீரை அறிந்தே ஏழையேன்
திருத்த முடன் எனைக் காத்து, நற்கருத்தை அளித்திருத்த அருள்
செய்ய நானும் உய்யக் கருணை பெய்யக் கெஞ்சினேன், ஐயனே!— தரு

௩

கொடிய பாத கரையும் முற்றும் முடிய ரட்சித்திடமேவிய
கோனே! கிருபை யோனே! உனை நானே நம்பினேனே; இனி
கொடியில் அழி புவியோ? வானுக் கிடைநேர் சொல்லத்தகும் அன்றெனை
நோக்க எனை யே உன் அன்பன் ஆக்க, வினை நீக்க நல்ல—தரு

ஞா.—பா.

---

க௫எ. PENITENT CONFESSION AND PRAYER. **157.**

# பாவ அறிக்கை.

வெண்பா.

நின்னை மறந்தேன், நினதருளைப் போக்கடித்தேன்;
பொன்னைச் சதம் என்று போற்றினேன்;—இன்னம் என்ன?
மெய்யா! இப் பாவியைக்கை விட்டுவிடாதே; என்
ஐயா! நான் பாவி அருள்.

இராகம், மங்யாமி. திரிசர்தானம்.

பல்லவி.

ஐயையா! நான் பாவி,—என்னை— ஆளும்
தயாபரனே!

சரணங்கள்.

௧

பொய்யாம் உலக உல்லாசத்தினால் மனம் போன வழி நடந்தேன்,—ஏ
சையா, அபையம், அபையம் இரங்கும்; மேசையா! என் தாதாவே!— ஐயை



௨

எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள், எத்தனை தீதுகளோ?—என
தத்தனே! என் பிழை அத்தனையும் பொறுத் தாண்டருளும், கோவே!— ஐயை

௩

வஞ்சகமோ, கரவோ, கவடோ, மாய் மாலமோ, ரண்டகமோ,—மனச்
சஞ்சலம் நீக்கி, எனக்கருள் செய்யும்; சமஸ்த நன்மைக் கடலே!— ஐயை

௪

பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும், பொறாமையும், ஆணவமும்—விட்
டுய்யும்படி அருள் செய்யும்; அனாதி ஓர் ஏகதிரித்துவனே!— ஐயை

௫

உன்னை எல்லாத்திலும் பார்க்கச் சிநேகித் துனதடியார்களையும்,—நான்
என்னைச் சிநேகிக்கிறாப்போல் சிநேகிக்க ஏவும்; பராபரனே!— ஐயை

வே.—சா.

---

க௫அ. PENITENCE. **158.**

# மனஸ்தாபப் புலம்பல்.

கட்டளைக்கலிப்பா.

மனுஷ சாதியை மீட்பதற் கெங்களின்
மகிமை ரட்சகர் தேவ ராபரன்
அநேய ஞாயபத் திராசனத் தில்தம
தாத்த மப்பெலி யைப்படைத் தானபின்
வினைமி கும்பவ உத்தரிப் புக்கென
மீண்டும் எம்பினை யாளிமெய் யாகவே
நினைவ தாய்ச்சரீ ரத்திலும் பாடுற
நீடி யேமன தாகினர் நேசமே.

நேசத் தாலுனி லப்பொழில் விட்டபின்,
நீதி அற்றமக ராளகையில் பட்டுமே,
பாசத்தால் தலைக் கட்டகிஷ் ரேமாய்
பாதக கத்தாக டத்தவும், இவ்விதம்
ஆசித் தேஅடி மைச்சொரு பத்தேம
தாண்ட வர்தலைத் தாழ்த்தும் துயரையே
வாசித் தேகவ லத்துடன் போற்றுவோம்;
வளமை மேவுதி ருச்சபை யோர்களே!

---

இராகம், ஆகிரி. அடதாளசாப்பு.

## புலம்பல்.

௧

ஆதி பராபரனின் சுதனே! கிறிஸ்தேசுநாதா!—எனக்
காகவே இத்தனை பாடுகள் பட்டீரோ? ஏசுநாதா!
நீதனுகாத பராபரன் சேய் அல்லோ? ஏசுநாதா!—நீர்
செய்த குற்றம் அணுவாகிலும்தான் உண்டோ? ஏசுநாதா!
பாதகன் நான் அல்லோ கட்டுண்ண வேண்டிய தேசுநாதா!—
சற்றும்
பாவம் இல்லாத நீர் கட்டுண்ணப்பட்டதேன்? ஏசுநாதா!
வாதை எனக்கு வரத் தகும் அல்லவோ? ஏசுநாதா!—சற்றும்
மாசணுகாத நீர் வாதைக்குள் ஆனீரோ? ஏசுநாதா!

௨

தோட்டத்தில் நான் அல்லோ பாதகம் செய்தது? ஏசுநாதா!—பரி
சுத்த பராபரன் மைந்தன் நீர் என் செய்தீர்? ஏசுநாதா!
மேட்டிமையாகிய பாவி நான் ஆருமே, ஏசுநாதா!—நீர்
மெத்தவும் நீசனைப் போல் கட்டப்பட்டீரோ? ஏசுநாதா!
காட்டிக்கொடுத்த துரோகி நான் அல்லவோ? ஏசுநாதா!—இந்த
கர்ம சண்டாளன்மேல் இத்தனை அன்பாச்சோ? ஏசுநாதா!
நீட்டும் பெருமைப்ப சாசின் அடிமை நான், ஏசுநாதா!—இந்த
நீசனைக் கட்டாமல் நீர் கட்டப்பட்டீரோ? ஏசுநாதா!

௩

கள்ளனைப் போல் கட்டப்பட்டதென் பாவமோ? ஏசுநாதா!—
அந்த
காவில் கனியைக் கை நீட்டிப் பறித்ததார்? ஏசுநாதா!



எள்ளளவேனும் பழுதாக்கில்லையே, ஏசுநாதா!—இந்த
ஈனன் அல்லோ பெரும் மோசத்தைச் செய்தது? ஏசுநாதா!
தள்ளி எனைக் கைவிட்டால் அங்கு சேதமோ? ஏசுநாதா!—
இந்த
சத்துரு தப்பிப் பிழைத்திடவேணுமோ? ஏசுநாதா!
பிள்ளை உமக்கு நான் செய்த குற்றம் எல்லாம் ஏசுநாதா!—
எனைப்
பெற்றவா! நீர் பொறு தார் பொறுப்பார்? சொலும், ஏசுநாதா!

௪

கட்டுப்பட்டென்றும் கிடக்க நான் வேணுமோ? ஏசுநாதா!—
இந்த
கர்ம சண்டாளனைக் கட்டினால் ஒண்ணாதோ? ஏசுநாதா!
கெட்டகுமாரனைப் போல் கெட்ட பாவி நான், ஏசுநாதா!—
உம்மை
தேடாமல், பேயை நான் கேட்டுத் திரிந்தவன், ஏசுநாதா!
துட்டன் நான் செய்த துரோகங்கள் கொஞ்சமோ? ஏசுநாதா!—
அதை
சொல்லத் தொலையுமோ? எண்ணத் தொலையுமோ? ஏசுநாதா!
மட்டளவற்ற துரோகி நான் அல்லவோ? ஏசுநாதா!—ஆற்று
மணலிலும் என் பவம் எண்ணத்தொலையாதே, ஏசுநாதா!

௫

அற்ப விலைக்கு நீர் விற்கவும் பட்டீரோ? ஏசுநாதா—புவி
யாவும் செய்தோன் விலை முப்பது காசதோ? ஏசுநாதா!
சொற்பப் பசாசின் அடிமை நான் அல்லவோ? ஏசுநாதா!—
இந்த
துரோகி பெறும் விலை என்ன உண்டப்புறம்? ஏசுநாதா!
தற்பரன் உன் விலை இப்படி ஆச்சுதோ? ஏசுநாதா!—இந்த
சண்டாளன் ஓர் சல்லிக் காசும் பெறுவானோ? ஏசுநாதா!
பற்பல பாவத்தைச் செய்தவன் நான் அல்லோ? ஏசுநாதா!—
இந்த
பாவியை மீட்டுவிட விலைப்பட்டீரோ? ஏசுநாதா!

௬

உன்னைப்போலாக என்றெண்ணிக் கருதினீர், ஏசுநாதா!—நீர்
ஓதின வார்த்தையை மீறிக் கனி தின்றேன், ஏசுநாதா!

என்னைப்போலாக நீர் வந்தவிதம் என்ன? ஏசுநாதா!—இந்த
ஈனனுக்காய் வேண்டி இக்கோலம் ஆனீரோ? ஏசுநாதா!
உன்னதமான பராபர வஸ்து நீர், ஏசுநாதா!—ஒன்றும்
ஒப்பதில்லா உமக் கிப்படி ஆச்சுதோ? ஏசுநாதா!
பின்னையும் பாவிபோல் நீர் கட்டப்பட்டதேன்? ஏசுநாதா!—கெட்ட
பேதகன் நான் உமக் கென்ன பதில் செய்வேன்? ஏசுநாதா!

௭

ஆர் உம்மை விற்றவன்? நான் அல்லோ விற்றவன்? ஏசுநாதா!—இந்த
ஆகாத பாவிஅல்லோ உமைக் காட்டினேன், ஏசுநாதா!
பாரில் உமைக் கட்டச் செய்தவன் நான்அல்லோ? ஏசுநாதா—எந்தன்
பாவம் அல்லோ உமைக் கட்டின கட்டெல்லாம், ஏசுநாதா!
கோரமாய்ப் பாடு படுத்தினேன் நான் அல்லோ?—ஏசுநாதா!—உம்மைக்
கொன்ற கொலைகார வஞ்சனும் நான்தானே, ஏசுநாதா!
தூர நின்றஞ்சி, புலம்பி அழுகிறேன், ஏசுநாதா!—கெட்ட
தோஷிக்கிரங்கும் என் றெப்படிக் கேட்பேன், நான்? ஏசுநாதா!

௮

அண்ணலின் கற்பனை மீறினதல்லவோ? ஏசுநாதா!—பேய்க்
கடிமையுமாய் மூறிச் சீட்டனும் ஆகினேன், ஏசுநாதா!
எண்ணிக்கை இல்லாத காலத்தடிமை நான், ஏசுநாதா!—முறி
யட்டைக் கிழித்தெனை மீட்டு விடுவதார்? ஏசுநாதா!
மண்ணில் உமை அன்றி ஆராலும் கூடுமோ? ஏசுநாதா! விண்ணில்
வானவர், பூதலர், யாவரும் என் செய்வார்? ஏசுநாதா!
புண்ணியன் நீர் செய்த சிஷ்டி நான் அல்லவோ? ஏசுநாதா!—இந்தப்
பொல்லாத பாவிக் குமை அன்றிச் சொந்தம் ஆர்? ஏசுநாதா!

௯

மத்தியஸ்தனாய் எனக் காக வந்தீர் அல்லோ? ஏசுநாதா!—இந்த
வஞ்சகன் சொந்தப் பிணையாளி நீர் அல்லோ? ஏசுநாதா!



எத்தனை பாதகம் செய்தவனாகிலும், ஏசுநாதா!—எனை
ரட்சிப்பதுன் கடன் அல்லாமல், ஆர் கடன்? ஏசுநாதா!
சத்துரு நான் என் றறிந்தும் இருந்தீரே, ஏசுநாதா!—கெட்ட
சண்டாளன் சிந்தையை முற்றும் அறிவீரே, ஏசுநாதா!
சித்தம் இரங்கி, எனை முகம் பார்க்கவே, ஏசுநாதா!—என்னை
தேடி, வலிய வரத் தயவானீரே, ஏசுநாதா!

௰

பத்தம் இல்லாத துரோகி நான் அல்லவோ? ஏசுநாதா!—உமை
பாடுபடுத்தின பாதகன் நான் அல்லோ? ஏசுநாதா!
பெத்தரிக்க மான பெருமையினாலே நான் ஏசுநாதா!—கெட்ட
பேயைச் சிநேகித்து, இக்கோலம் ஆகினேன், ஏசுநாதா!
புத்தி இல்லாத மிருகம்போல் ஆனேனே, ஏசுநாதா!—மனம்
போன வழியெல்லாம் போய் அலைந்தேங்கினேன், ஏசுநாதா!
சித்தம் வைத் தென் பேரில் திருக்கடைக் கண்ணோக்கி, ஏசுநாதா!—உந்தன்
சிர்பதம் சாஸ்வதம் சேவை புரியச்செய் ஏசுநாதா!

வே—சா.

---

௧௫௯. PENITENCE AND PRAYER FOR MERCY. 159.

# இரக்க விண்ணப்பம்.

வெண்பா.

பாவத்தி னாலே பலகவலைக் குள்ளானேன்,
ஆபத் ததிகரித்த தையனே!—சோபித்தேன்,
ஓகோ! பராபரமே! ஓலம், உமக் கோலமே;
கோகோ! கிருபைகூ ரும்.

இராகம், மோகனம். ஆதிதாளம்.

பல்லவி.

கிருபை கூரும், ஐயனே!—பாவி என்
சிறுமை தீரும்; மெய்யனே!

அநுபல்லவி.

பொறுமையே மிகுந்த அருமை தேவனே! நீர்— கிரு

சரணங்கள்.

௧

ஆறுலட்சண தேவா!—அடியர்க்கு
தேறுதல் அருள், தாவா,—திருமறை
கூறும் கருணை காவா!—குறை அற
பேறு பெறச் செய் சீவா!—பெரியவா!
ஈறிலா[1] துயர்ந்த மாறிலா வஸ்துவே! நீர்— கிரு

௨

பத்தர் தொழும் சருவேசா!—பரிகருண்
வைத்த சத்திய வாசா!—மகா பரி
சுத்த க்ருபையின் நேசா!—சுவாதிப
முத்தொழில் தரும் ஈசா!—முழுதும் என்
மத்தியஸ்தனுன நித்ய கிறிஸ்துவே! நீர்— கிரு

௩

பாவத்தின் வழி நடந்தேன்,—பசாசுடன்
சாபத்திலே கிடந்தேன்,—சதா நித்ய
கோபத்தையே அடைந்தேன்,—கொடுமையின்
ஆபத்தால் மனம் உடைந்தேன்,—அடிமையை
மா பத்திரத் தோடென் பரி தாபத்தைப் பார்த்திரங்கி—கிரு

௪

சரணம், சரணம் நாதா!—தவிக்கிற
தருணம், தருணம் வேதா!—தயாபர
கிரணம் இலங்கும் பாதா!—கிலேசங்கள்
திரணம்[2] உறாத நீதா!—திடுக்கிடும்
மரண வேளையிலும் கரணம்[3] மயங்கும் போதும்—கிரு

வே.—சா.

1 முடிவில்லா 2 கொஞ்சமும். 3 புத்தி.



௧௬௦. A SINNER SEEKING MERCY. 160.

# பாவி தன் பாவத்தை அறிக்கையிட்டு கெஞ்சுதல்.

விருத்தம்.

காவில் ஆதம் ஏவைசெய்த வினையி னாலே
கருத்தன் அருள் இழந்துமிகு கடிய தான
சாவில் அமிழ்ந் தனைவரும்பா தாளம் புக்கி,
தவித்திடா திரட்சைசெய்யத் தரணி மீது
மேவி அவ் தரித்தவர்கள் தமக்கு வேண்டி
வெகுதுயர்உற் றிறந்துயிர்த்த வெற்றி வேந்தா!
பாவியாம் எந்தனைக்கண் பார்த்திரங்கி,
பட்சமாய் வினை தீர்த்தி ரட்சிப் பாயே.

இராகம், வசந்தபைரவி. ஆதிதாளம்.

திபதை—கண்ணிகள்.

௧

பாவியாம் எனை மேவிப்பார் ஐயா!—ஏசுநாதா, ஸ்வாமி!
பட்சமாய் என் பாவம் தீர் ஐயா!

௨

தேவத்ரோகி பாவி நான் அன்றோ,—ஏசுநாதா, ஸ்வாமி!
சேர்பதற் குனையன்றி வேறுண்டோ?

௩

தீவினைஉறு சாவுமேவிற்றே,—ஏசுநாதா, ஸ்வாமி!
சித்தம் வைத்திரட்சித்தாள், ஏழையை;

௪

சஞ்சல மிகுந்தஞ்சல் ஆயினேன்,—ஏசுநாதா, ஸ்வாமி!
தஞ்சம் உனை விட்டெங்கே ஏகுவேன்?

௫

மன்னுயிர்க் கெனத் தன்னுயிர் விட்ட,—ஏசுநாதா, ஸ்வாமி!
வந்தேனுன் நிர்ப்பந்தம் பார், ஐயா!

௬

மனது, வாக்கு, வினைகளில் எல்லாம்,—ஏசுநாதா, ஸ்வாமி!
மாசுளோனாய்க் கூசினேன் ஐயா!

௭

எந்தன் நீதி ஓர் கந்தை அல்லவோ,—ஏசுநாதா, ஸ்வாமி!
என்செய்வேன் மறு தஞ்சம் இல்லையே.

௮

அலைகையோடெனை உலகம் எய்க்குமே,— ஏசுநாதா, ஸ்வாமி!
ஆதரவில்லை, பாதுகா ஐயா!

ஜா.—பா.

௧௱௬௧. PRAYER FOR MERCY. **161.**

## விண்ணப்பம்.

இராகம், பந்துவராளி. ஆதிதாளம்.

பல்லவி.

வேதா! தயை நிறை தாதா!—ஏசு
நாதா! அருள் தா.

அநுபல்லவி.

போதா! மனுடர்கள் புரி பவம் அற, நரனாய்த் தீயன்
போலே துயர் அடைந்தமா தயை
யாலே மரித் தெழுந்த தேவனே!* வேதா!

சரணங்கள்.

௧

எந்தன் நீதி ஓர் கந்தை அல்லவோ, பரனே!—ஏழைக்
கேது துணை உந்தன் தாரகம்[1] அன்றி, தற்பரனே!
வந்தடைந்தனன் உந்தனை அன்ப
தந்தாவனைத் தெந்தனைத் தய
வாக உறு பவம் அடங்கலும்,
போகத் தூய்யன் ஆகவே என்றும்,— வேதா!

* தகிட ஜெம் தரித்த ஜெம்
நாதிரிதிரி தில்லானா, தானா தன்னா திரிதிரி,—வேதா!

1 ஆதரவு.



௨

பாவம தெந்தனை மேவிக் கெடுத்ததே, தேவா!—உந்தன்
பற்று தல்லா லினி உற்றதுணை இல்லை, கா, வா;
சாவு வரில் என் ஆவி கலங்கி,
தவித்திடாமலே, களித்து, நன்மன
தாகப் பர கதியை நோக்கி, அங்
கேக நித்திய பாகம் அடைய,— வேதா!

௩

இங்கிலம் ஒரு நிலையென்றறிலும் யானே,—உறும்
எனைப் பொருள்கள் வெறுத்தும் அன்புவைத்தேனே,,
நன்னய மதாக உந்தனில்
நட்புறும் பரிசுத்தரும் அன்ப
னாக எந்தன் ஆவி தேகம் விட்
டேகும் வரை ஓர் மனதாகவே,— வேதா!

ஜா.—பா.

௧௱௬௨. PRAYER FOR PARDON. **162**

## பாவமன்னிப்பைக் கெஞ்சுதல்.

வெண்பா.

எங்கள் சிறத்தால் எடுக்கஅரி தாம்பாரம்
தம்கருணை யால்சுமந்த தற்பரனே!—இங்கெளியேன்
தீயன்ஆய் உற்றேன்என் ஜென்மவினை செய்வினையும்
நாயன்நின் மேல் வைத்தேன், நயந்து.

இராகம், கலியாணி. செம்படைதாளம்.

பல்லவி.

தீயன் ஆயினேன், ஐயா! எளியேன் உற்ற
தீவினை அனைத்தும் தீரும்;
தேவரீர் மேலே என் பாரம்
தீயன் ஆயினேன் ஐயா!

அநுபல்லவி.

மாயவலை வீசுவனு பேயின் வினை தீர,
நேயமுடனே உறு சகாயனாய் எமக்கென்றிக்கு

நிச்சயித்தெழுந்த எங்கள்
அச்சயா![1] திருக்குமாரா!— தீய

சரணங்கள்.

௧

நன்மை செய்யவே நான் நினைத்தாலும், என்
தன்மை வேறதாய்ப் பின்னம் ஆகுமே;
என்ன எந்தன் நீதி கந்தை
அன்ன,[2] அருவருப்பாமே;
எத்தனை ஆனாலும், உந்தன்
சித்தம் வைத்தனுக்கிரகிப்பாய்.— தீய

௨

பாவமீறி, என் ஆவி தள்ளாடி நற்
சீவ பாதையைத் தாவி, ஓடியே,
ஆவலாய் அழிவுறும் தீர்ச்
சாவின் வழியே தொடர்ந்து,
அக்கிரமச் செய்கைகளில்
சிக்கினேன், ஐயா! உன்தஞ்சம்.— தீய

௩

தீதுசெய்பவன் தேவன் முன்னே உத்ர
வாதி ாய் உறு நீதம் உண்டென,
போத உற் வேத நெறி
ஓதிய ஏசு நாதர்! உன்
புண்ணியத்தால் என்னை உய்யப்
பண்ணிடக் கிருபை செய்வாய்.— தீய

ஜா.—பா.

## ௧௬௩. PRAYER FOR PARDON. 163.

# மனஸ்தாப விண்ணப்பம்.

வெண்பா.

திரியேக னே! ஐயனே! தேசிகனே! ஞான
நெறியானே! நீதி நிறையானே!—கிருபா
சரனே! வரனே! சுனத்தோனே! தேவ
பரனே! திருக்கடைக்கண் பார்.

1 தேவனே. 2 ஒத்த.



இராகம், கௌசிகை. ஆதிதாளம்.

பல்லவி.

பரனே! திருக்கடைக்கண் பாராயோ?—என்றன்
பாவத்துயர் அனைத்தும் தீராயோ?

சரணங்கள்.

௧

திறம் இலாத எனை முனையாமல்,[1]—யான்
செய்த குற்றம் ஒன்றும் நினையாமல்,— பா

௨

மாய வலையில் பட்டுச் சிக்காமல்,—லோக
வாழ்வில் மயங்கி, மனம் புக்காமல்,— பா

௩

அடியேனுக் கருள் செய் இப்போது,—உன
தடிமைக் குன்னை அன்றிக் கெதி எது?— பா

௪

வஞ்சகக் கவலை கெடுத் தோட்டாயோ?—என்றன்
மனது களிக்க வர மாட்டாயோ?— பா

௫

ஏசுவின் முகத்துக் காய் மாத்ரம்,—எனக்
கிரக்கம் செய்யும், உமக்கே தோத்ரம்.— பா

வே.—சா.

## ௧௬௪. PENITENTIAL PRAYER. 164.

# மனஸ்தாப விண்ணப்பம்.

வெண்பா.

தேவே! பிதாவே! திரித்துவ கோவாவே!
காவே, குமாரவே! ஓர் கர்த்தாவே!—கோவே!
உயவே, சருவே சுரா! ஏழைப் பாவி,
தயவாய் இரும், சுவா மி!

1 கோபியாமல்.

இராகம், மோகனம். அடதாளசாப்பு.

பல்லவி.

சருவேசுரா! ஏழைப்பாவி—என் பேரிலே
தயவாய் இரும், சுவாமி!

அநுபல்லவி.

திரியேக பரதேவா! நெறி மேவும் ஒரு யோவா!
சித்தம் இரங்கிக் காத்து, கிறிஸ்தின் முகத்தைப் பார்த்து—சரு

சரணங்கள்.

க

ஒன்றும் இல்லாத காலத் தன்றுலகம் அனைத்தும் உண்டு செய்த
வல்லவனே!—பல
நன்று கோடி எனக் கென்று படைத்து நிதம், நல்கும்[1] ஒரு
நல்லவனே!
வென்றி[2] மறந்துன் தயை குன்றும் துரோகி எனை
பன்றி என நினைந்து, கொன்றிடாய் சினந்து— சரு

உ

தந்தை நின் ஒன்றான மைந்தன் தனைக் கொடுத்தித் தகமை[3]
உலகை நேசித்தாய்,—நின்
சொந்தக் கிருபை தனைச் சிந்தித்துணர மறை[4] தொகுத் தெனக்
குபதேசித்தாய்,
இந்தப் பெரிய நேசம் புந்திக்[5] கொளியதாக்கும்,
எந்தப் படியும் என் நிர்ப் பந்தம் அனைத்தும் போக்கும்— சரு

௩

தேவரீர்க் கேற்காத தீவினைகளைச் செய்தும் தெண்டியாமல்
பொறுத்தீர்,—நீர்
யாவும் அறிந்திருந்தும், கோபித்துக் கைவிடாதென் நன்றி
கேட்டை மறுத்தீர்,
ஜீவனே! உமக்குப் பாவி பதில் என் செய்வேன்?
மேவி அடி தொழாமல், ஆவி எங்ஙனம் உய்வேன்?[6]— சரு

[1] தரும். [2] வெற்றி. [3] இவ்விதமாய். [4] வேதம்.
[5] புத்திக்குத் தெளிவாய்த் தெரியப்பண்ணும்.
[6] எப்படிப் பிழைப்பேன்.



௪

நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்சமேனும் இலாமல், நீதி வழி
யைக் கடந்தேன்,—கெட்ட
வஞ்ச உலக வாழ்வை மிஞ்சத் தேடி, பேயின் மனதுக்கேற்க
நடந்தேன்,
பஞ்ச பாவி கூவி, கெஞ்சும் செபத்தைக் கேளும்;
தஞ்சம் என்றேன் உனக்கே அஞ்சல் என்றெனை ஆளும்.—சரு
வே.—சா.

கசாரு. PENITENTIAL PRAYER. 165.

## இரக்கவிண்ணப்பம்.

வெண்பா.

ஜீவனே! மெய்யான தேவனே! ஒன்றான
மூவனே! ஏக முதல்வனே!—தேவரீர்,
தீவினையி னால் மெலிந்து, நிகரதுக் கானான
பாவினெனைச் சற்றேகண் பார்.

இராகம், சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

பாவி எனைச் சற்றே கண்பாரும், சுவாமி!

அநுபல்லவி.

தேவதிருப் பாலனான ஜீவனின் மன்னவே!
சிந்தை விசாலா! மகேசுலா! குணாலா!
தேசு[1]லாவு திவ்ய நேசா! ஏக சர்வேசா!— பாவி

சரணங்கள்.

க

இந்த லோக வாழ்வை நாடி, எந்தன் மனம் வாடுதே;
தந்திரப் பசாசது நிர்ப் பந்தம் உறச் சாடுதே;
இடுக்கண் மிகுதுயர் படுத்துதெனையே;
நிடத்த உனதுயிர் விடுத்ததிலையோ?— பாவி

[1] ஒளி.

௨

பந்தினம் திரண்டு கூடி, கொந்தளித்துப் பேசுதே;
அந்தியும் சந்தியுமாக நிந்தனைசெய் தேசுதே;
பினும் உடல் அடமொ டெனொடு சமர்[1] இடுதே;
நினைவு தவறிடவும் மனது பதறுதே.— பாவி

௩

பத்தனை மறுத்து, பேயின் எத்தினில் போனேனே;
குத்திரத் துரோகத்தினால் சத்துருவானேனே;
பதைக்க மனமது கொதிக்குதலகொடு
கதிக்க அலகையும் வதைக்குதையோ?— பாவி

௪

அங்கு நின் பாடுகள் நல்லோர் தங்களுக்குப் பேறே?
செங்குருதி[2] பாவிகளின் பங்கதல்லால் வேறே?
ஆ! இது தன்மம் அல தீவினை வளருதே,
தேவரீர் அடிமையைச் சேர்ப்பது கடனே. பாவி

வே.—சா.

——»»««——

## ௧௬௬. THE SINNER HUMBLY CONFESSING AND LAMENTING HIS SINFUL STATE. 166.

## மனிதன் தன் பாவநிலைமையை உணர்ந்தது.

விருத்தம்.

ஜென்மமதால் நாதாவுன் திருவுளத் துரோகி ஆனேன்;
கன்மமதால் அசங்க்ய கன்மி ஆனேன் ஐயோ! நான்;
தன்மம தெண்ணாத் தோஷி தனை அழி யாதப் போதே,
உன்மன திரங்கி, என்னை உணர்த்தி ஆள்கொள்ளுவாயே.

இராகம், நீலாம்புரி. ஆதிதாளம்.

பல்லவி—கண்ணிகள்.

௧

ஐயோ, நான் ஒரு பாவ ஜென்மி ஆனேனே;
ஆண்டு ரட்சித் தருளாய்,—பரப்பொருளே!
உய்யும்படி, தெய்வமே! உன்னை யல்லால் எனக்கோர்
ஒதுக்கிட முண்டோ, வேறே;—பரப்பொருளே!

[1] போர். [2] செவ் இரத்தம்.



௨

ஆதித் தந்தை தாய் செய்த பாதகம் உலகத்தை
அடங்கலும் பிடித்ததே,—பரப்பொருளே!
மாதா வயிற்றிலே நான் தோஷியாய் உருவாகி,
மறம்[1] கொண்டு பிறந்தேனே;—பரப்பொருளே!

௩

நல் வரமாய்ப் பெற்ற நீதி, சுசி, பாக்கியம்
ஞானம் எலாம் இழந்து,—பரப்பொருளே!
சொல்ல வெட்கம் அநீதி, சுசிகேடு, நிர்ப்பாக்கியம்,
துர்ப்புத்தியும் அடைந்தேன்;—பரப்பொருளே!

௪

மாட்சி உறும் சிங்கார வனமாம் என துளத்தை
மங்கு காடாக்கினேனே;—பரப்பொருளே!
ஆட்சி கொளும் உன் சுத்த ஆலயமாம் என் நெஞ்சை
அலகைக் கிடம் ஆக்கினேன்;—பரப்பொருளே!

௫

உன்னை முழுப் பலத்தால் நேசியாமலே நெஞ்சம்
உரம் கொண்ட பாவி ஆனேன்;—பரப்பொருளே!
என்னை நிகராக என் பிறனை நேசியாமல் நான்
இகலுற்[2] றிருந்தேனே;—பரப்பொருளே!

௬

செய் கிரியை நோக்கில் உன் திருவடி சேர வகை
தேடினும் காண்கிலேனே;—பரப்பொருளே!
பொய், வஞ்சனை, திருட்டும், புரட்டும், உருட்டும் பல
பொல்லாங்கு செய் தோஷி யான்;—பரப்பொருளே!

௭

எங்கே நான் ஓடுவேன், பாதக னானேன், ஐயா!
என்னையும் ஈடேற்றவே;—பரப்பொருளே!
பங்க முறக் கொடிய பாடுற் றிறந் துயிர்த்து,
பரத்தில் எழுந்தனையே;—பரப்பொருளே!

௮

துப்பர வாம் சுத்தக் கன்னனே! உன் முன் இன்னும்
துணிகர மாய் நடந்து;—பரப்பொருளே!
இப்படி ஜென்ம கன்ம பாவத்தால் கேடடைந்த
ஏழைப் பாவிக் கிரங்காய்;—பரப்பொருளே!

ஜா.—பா.

[1] பாவம். [2] பகை.

௧௱௬௭. SIN CONFESSED AND DELIVERANCE OUT OF DISTRESS IMPLORED. **167.**

## துன்பவேளையில் மன்றாடல்.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

அன்பனே! பிரலாபம் அகற்றும் என் அன்பனே!

சரணங்கள்.

௧

இந்த வேளை வந்து நிர்ப் பந்தம் தீரும் ஐயா!
சொந்தம் என்னேசு தேவா! நிந்தை துயரம் நீக்கி— அன்

௨

மெத்தவும் பவம் செய்தேன் சத்திய மறந்து முற்றும்,
இத்தரையை நாடி, உன் சத்துருவானேன் ஐயா!— அன்

௩

நோயால் வருந்தி யானும் தீயாய் எரிகின்றேனே,
நேயா! கிறிஸ்து வெனும் தூயா! என தேசுவே!— அன்

௪

துன்பம் துயரம் நீக்கி இன்பம் அளியும் ஐயா!
உம்பர் ஒளியே! எந்தன் தம்பிரா! ஏசுநாதா!— அன்

C.—யோ.

௧௱௬௮. PRAYER FOR MERCY. **168.**

## தேவ இரக்கத்துக்காகக் கெஞ்சுதல்.

வெண்பா.

அந்தி பகலும் அருங்கவலைக் குள்ளானல்,
எந்தவிதம் நாங்கள்இப் பேறுவோம்?—சிந்தை நொந்து,
ஏவாளின் மக்கள் இரங்கிநின்று கூவுகிறோம்;
தேவா! இரக்கம்இல்லை யோ?



இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

தேவா! இரக்கம் இல்லையோ?—ஏசு
தேவா! இரக்கம் இல்லையோ?

அநுபல்லவி.

சீவா! பரப்பிரமன கோவா திரித்துவத்தின்
மூவாள் ஒன்றாக வந்த தாவீதின் மைந்தன் ஒரே—தேவா!

சரணங்கள்.

௧

எல்லாம் அறிந்த பொருளே!—எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே!—கொடும்
பொல்லா மனதுடைய கல்லான பாவிகளை
கொல்லாதருள் புரியும்; நல்லாயன் ஏசுநாதா!— தேவா!

௨

எங்கும் நிறைந்த சோதியே!—ஏழை
பங்கில் உறைந்த[1] நீதியே!—எங்கள்
சங்கடமான பாவ சங்கதங்களை[2] நீக்கும்;
துங்க இஸ்ரவேலின் வங்கிஷ கிரீடாதிபதி!— தேவா!

௩

வேதாந்த வேத முடிவே!—ஜெக
ஆதாரம் ஆன வடிவே!—ஐயா!
தாதாவும் எமைப் பெற்ற மாதாவும் நீயே, ஏசு
நாதா! ரட்சியும்; வேறே ஆதாரம் எமக்கில்லை.— தேவா!

வே.—சா.

௧௱௬௯. PENITENCE AND TRUST. **169.**

## பாவவிசாரம் உற்று இயேசுவின் துணையைத் தேடல்.

இராகம், காம்போதி. அடதாளசாப்பு

பல்லவி.

நின்பாதம் துணை அல்லால், வேறொரு துணை
இல்லை:—நித்ய பரம போதா!

[1] தங்கிய. [2] சம்பந்தம், நட்பு.

அனுபல்லவி.

என் பாவம் போக்கியே, கிருபை புரியும்; சுவாமி!
ஏக வஸ்துவான ஏசுக் கிறிஸ்துநாதா!— நின்

சரணங்கள்.

௧

ஆதி மனிதருக்கன் றோதியபடி மனு அவதாரமாய்ப் பிறந்தீர்,
சாதி அனைத்தும் உய்ய,[1] நீதிக்கென்று தலை சாய்த்து, குருசில் இறந்தீர்,
வேதம் முழுதும் நிறை வேற்றி, கடைசியிலே வெற்றி முடியும் சிறந்தீர்,
ஏதம்[2] இல்லாத அனாதி திருமகனே!
எங்கும் நிறைந்திலங்கும் ஏசுகிறிஸ்தென் தேவா!— நின்

௨

தேவரீருக் கேற்காத குற்றம் செய்திருந்தாலும், சித்தம் இரங்கி வாரும்;
மேவி எனது வினை யாவும் அகல, இந்த வேளை எனையும் காரும்;
பாவிக்குதவியாக மனுவேலே! நீர் பட்ட பாடனைத்தையும் பாரும்;
ஆவலாக உனை அடைந்து சரண் புகுந்தேன்;
ஆபத்தை நீக்கும் ஐயா! இப்போ மெய்யாய்— நின்

வே.—சா.

௧௭௦. CONSECRATION TO CHRIST. 170.

## கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புவித்தல்.

தாழிசை,

போர் இடந்தனி லே கலந்து; நல் போர் பொருதி நில் லாமலே,
சீரிடந்தனை நாடியோடுவர் தன்மையான இப்பாவியை
பாரிடந்தனில் ஆதரித்தெனைப் பாற்றுவார் இலை யான் இனி
ஆர் இடந்தனில் ஏகுவேன் எனை ஆதரித்தருள் நாயனே!

1 பிழைக்க. 2 குற்றம்.



இராகம், சாவேரி. செம்படைதாளம்

பல்லவி.

ஆர் இடத்தில் ஏகுவேன், நான்?
ஆதரி, ஐயா!

அனுபல்லவி.

தாரகமாய்,[1] நீசர் உற்ற சாபம் மாற்றிட வந்த சகாயா!—ஆர்

சரணங்கள்.

௧

அலகை[2] மடங் கவடித் தோட்டின ஜெய கிறிஸ்
தையனே! உனை நம்பினேன்;
மலைவுகொளும் எனக்குன் பாதமே கதி அல்லால்,
மற்றொரு துணை இலையே! பரனே! இனி— ஆர்

௨

அனுக ஜனரை வரவழைக்கும், மனோகரா!
அடியனை அரவணைத்தாள்;
பணிவுடன் உனதடி சேர்ந்து, சரண் புகுந்த
பாவியை நீ கைவிடாமல், அனுக்ரகி,— ஆர்

௩

முடிவு வரை நடத்தி ஆண்டு, ரட்சிக்க எனை
முழுதுமே கை அளித்தேன்;
அடி தொறும் பலவினை சூழ்ந்திடும் பொழுதெல்லாம்
ஆதரிப்பதுனது மேல் உற்ற பாரமே.— ஆர்

ஜா.—பா.

௧௭௧. THE SURRENDER OF THE SOUL TO CHRIST. 171.

## ஆத்தும நாயகருக்கு வணக்கஞ்செலுத்தல்.

விருத்தம்.

மேன்மைத்தா னவர்க ளோடு வீற்றிருப்பதற்கு வேண்டி,
ஞானஸ்நா னத்தின் யோர்தான் நதியினில் மூழ்கிச் சென்று,
வானத்தா னத்தில் நின்று வந்தநா யகனைக் கண்டு,
கோனத்தா வீது சீயோன் குமாரிகள் நிறைந்திருளே.

1 அடைக்கலம். 2 பிசாசு.

இராகம், மோகனம். அடதாள சாப்பு.

பல்லவி.

சேவித்துக் கொண்டேன், ஐயா!—சீர்பாதத்தைத்
தெரிசித்துக் கண்டேன், ஐயா!

சரணங்கள்.

௧

ஆவிக்குரிய மண வாளன் ஏசுகிறிஸ்து
சிவப்பிரான்[1] ஒரு தேவ குமாரனை நான்— சேவி

௨

சந்த க்ருபை சிறந்த சத்ய பிதாவின் ஒரு
மைந்த கிறிஸ்துவே! நின் மகத்வ ப்ரசன்னத்தை— சேவி

௩

வானக் கருணை பொங்கி, மானிடர் பவம் தீர்க்கும்
ஞானஸ்நான தீட்சை யோர்தான் நதியில் மூழ்கி— சேவி

௪

நீற்றுப்[2] பூச்சைத் துறந்து நெஞ்சம் உருகிச் சென்று,
ஆத்துமத்தாலும் உண்மை யாலும் பணிந்து நின்று,— சேவி

வே.—சா.

௧௭௨. THE SERVICE OF GOD. 172.

# கர்த்தனைச் சேவித்தல்.

வெண்பா.

மூவுலகு மேயணியும் முன்னவா! மானிடர்க்காய்
பூவுலகில் வந்துதித்த போதகா!—பாவத்தின்
வேரே அறக்களைந்து, வேண்டு சுகம் அளிக்கும்
சீரே தே வாதிதே வன்.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

தேவாதிதேவே! நீரே;—சேவிக்கில் உமை
சிவாமிர்தம் தரு வீரே.

1 எப்பொருட்கும் இறைவன். 2 சாம்பல்பூச்சு.



அனுபல்லவி.

ஈவாகிய தயவை நாவாலும், ஜெயம்பெறப்
பாவாலும் எவர்முனும் ஓவாது தறிக்கைசெய்து— தேவா

சரணங்கள்.

௧

நன்றே அருள் என்றே கொலைக்குச் சென்றாய்,—மரித்
தன்றே நீ பேயை மிக வென்றாய்;
நின்றே இவ்வுலகினில் அன்றாடகமே நம்பி,
நேசா! விசுவாசா! இராசா! சருவ சீவ— தேவா

௨

பொல்லா உலகம் அல்லோ இதனில் செல்லா—துணை
நல்லாயனே என்பேன்; வல்லாய்!
சல்லாப நூலில் அதி உல்லாச மேவி நிதம்
தாயா! மாதாயா! நன்னேயா! சுரர்கள் பதி— தேவா

௩

பண்டே மறைகைக் கொண்டே, இதயத் தொண்டே—புரிந்
தண்டே வரும் உதவி உண்டே;
விண்டே குறைகளும் தண்டே சுகிர்தமாகும்;
வேதா! என் தாதா![2] அதீதா! மகத்வமான— தேவா

ஆ.—அ.

௧௭௩. THE POWER OF FAITH. 173.

# விசுவாசத்தைப் பற்றி.

வெண்பா.

பேய் எதிர்த்து வாராது, பீடைபல சாராது,
மாய உலகும்உனை மாய்க்காது,—நேயம்உள
நெஞ்சே! விசுவாச நேர்கேடயம்பிடிக்கில்
இஞ்சிதமும் அஞ்சாதே; கேள்.

1 ஒழியாமல். 2 உபகாரா.

இராகம், எதுக்குலகாம்போதி. ஏகதாளம்.

பல்லவி.

கிஞ்சிதமும் நெஞ்சே! அஞ்சிடாதே;—நல்ல
கேடகத்தைப் பிடி நீ;—விசுவாசக்
கேடகத்தைப் பிடி நீ.

அநுபல்லவி.

வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்றனை
வன்னிக்[1] கணைதொடுத் தெய்கின்ற வேளையில்,
நெஞ்சில் படாமல், தடுக்க, அது நல்ல
நிச்சயமான பரிசை அறிந்து நீ,— கிஞ்சித

சரணங்கள்.

௧

பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்க,
பத்தியில் தெளிக்கவும்,—நித்ய
ஜீவனைப் பிடிக்க, லோகத்தைச் செயிக்க,
திறமை அளிக்கவும்,
சாவே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன்
ஜயம் எங்கே? என்று நீ கூவிக் களிக்கவும்,
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்க,
செய்யவுமே அதுதிவ்ய நல் ஆயுதம்;— கிஞ்சித

௨

பண்டையர்[2] அந்தப் பரிசையினால் அல்லோ,
கண்டடைந்தார் பேறு,[3]—நல்ல
தொண்டன் ஆபேல் முதலான வைதீகரைத்
தொகுத்து, வெவ்வேறு
விண்டுரைக்கில் பெருகும் தீ அணைத்ததும்,
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டதுமாம் பல
காரியங்களையும் பார்; இது மா ஜெயம்;— கிஞ்சித

௩

ஊற்றமுடன்[4] இப்பரிசை பிடித்திட
உன் செயல் மா பேதம்;—அதின்
தோற்றமும், முடிவும் ஏசுபரன் செயல்
துணை அவர் பாதம்;

[1] அக்கினி.
[2] முன்னுள்ளோர்.
[3] முத்திப்பேறு.
[4] பெலத்துடன்.



ஏற்றர வணைக்கவே பணிவாக
இரந்து மன்றாடி, அவர் மூலமாகவே
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவினைய மேவி, அடைந்து நீ,— கிஞ்சித

ஜா.—பா.

௱௭௪. THE DECEITFULNESS OF THE HEART. 174.

## நியமனசோடு முறையிடுதல்.

வெண்பா.

தேவனுக்கஞ் சாதிருந்து தீவினையிலே உழன்று,
பாவ வலையில் அகப்பட்டாயே—மேவி
இனித்தவறேன் என்றாலும் இனநெஞ்சே! உன்னை
அனைத்தும் நம்பேன் என்றே அறி.

இராகம், சாவேரி. ஆதிதாளம்.

பல்லவி.

இனித் தவறேன் என்றாலும், நம்பேனே;
என நெஞ்சே! நானே.

அநுபல்லவி.

தனித்துத் தனித்து நன்மை நினைத்தும், நீ தானே
சதித்துத்[1] தீமை விளைத்த துணர்த்துவன் நானே;— இனி

சரணங்கள்.

௧

தன் இதயத்தை முற்றும் தான் நம்புவோனே
தவறும் அஞ்ஞானி என்றிறை[2] சாலமோனே
சொன்னபடி, உனைப்பரி சோதித்தனன்; யானே
துணிந்து பாவத்தையே நினையாதே, நீ தானே;— இனி

௨

நன்றிது தீதென் றறிந்திடும் நீயே
நன்மை விட்டுத் தீதைப் பின்தொடர்ந்தாயே;

[1] துரோகஞ்செய்து.
[2] இராசன்.

பன்றிபோல் குளித்தும் சேற்றினில் அலைந்தாயே;
பகைத்த பாவத்தை நாய்போல நினைத்துக்கொண்டாயே;— இனி

௩

மண்ணிலும் பொன்னிலும் வைத்தாயே பாசம்;
மறவாயோ? பரத்தையின் மாசுறு நேசம்?
என்ன இருளில் இந்நேர் இருக்கிறாய் மோசம்
வந்தேதானோ என்றுமில் இறுதியில் நாசம்;— இனி

ஜா.—பா.

---

கஎரு. CONFLICT WITH SPIRITUAL FOES. **175.**

# ஞானப்போராட்டம்.

வெண்பா.

எங்கள் பரம பிதாவே! எளியோர்க்கு
தங்கும் இடம்உன் சரணமே,—பொங்கி
அதிகோரத் திங்கே அனல் கணையைத் தூர்த்தி,
சதிசெய் செயுது, துணை தா.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

சதிசெய் செயுது; துணை நீயே.

அனுபல்லவி.

முதல்வா! கிருபைசெயும், உன் மைந்தனை நினைந்து,— சதி

சரணங்கள்.

க

மயல் வலைவீசுதே, மருட்டியும் ஏசுதே;
துயரமோடனுதினம் தூறுபேசுதே,— சதி

உ

கவலை புரியுதே, கனல் போல் எரியுதே;
எவரை விழுங்கலாம் என்று திரியுதே,— சதி



௩

பிசாசு[1] வலி மூட்டுதே, மிகப் பயங்காட்டுதே;
அகலக் கெடுத்துவிட் டீடையோ! குற்றம் சாட்டுதே,— சதி

௪

சிங்கமாய்க் கெர்ச்சிக்குதே; சீறி, எதிர் நிற்குதே,
கங்குல்,[2] பகல் என்மேல் கனல்கணை[3] இறைக்குதே,— சதி

வே.—சா.

---

கஎ௬. MOURNING THE ASSAULTS OF SATAN, AND POWER OF SIN. **176.**

# பாவத்தைப்பற்றி பிரலாபித்தல்.

வெண்பா.

கோடி உல கப்பகையால்; கூளிசெய்யும் தந்திரத்தால்,
சாடிப் பொருதும் சடலத்தால்—வாடி, மன
வாதை அடைந்தகன பாதகன்றன் வஞ்சம் அற
ஆதரவு கூர்; மேசை யா!

இராகம், ஆனந்தபைரவி. அடதாளசாய்பு.

பல்லவி.

மனவாதை அடைந்த கனபாதகன் வஞ்சம்
அறவே கிருபை கூர், ஐயா!

அனுபல்லவி.

சனவானவர் சங்கம் அனைவோரும் வணங்கும்
தவிராச[4] சுதந்தரா! திவ்ய ஏசு நாதேந்திரா!— மன

சரணங்கள்.

க

பாவிக்குந்தன்மேல் விசுவாசமே,—திருப்
பாதம் துணை தரும் விலாசமே,
ஜீவனே! நீர் எனக்கதி நேசமே,—தேவரீர்
சித்தத்தின்படி நடக்கச் செய்யும், ப்ரகாசமே!— மன

---

1 அதிகம், துன்பம். 3 அக்கினி அம்பு.
2 இரவு. 4 தவிராச.

௨

கடியும்[1] கொடுமையாகச் சீறுதே;—மாய
கலக உலகும் பழி கூறுதே;
சடமும் திடம் இல்லாமல் மாறுதே;—மிகத்
தயங்கி, மனதெல்லாம் வே சாறுதே; சுவாமி!— மன

௩

நியாயப்பிரமாணம் குற்றம் சாற்றுதே;—என்றன்
நடக்கை எலாம் பொல்லாப்பில் மாட்டுதே;
மாயப் பிரபஞ்சம் இச்சை காட்டுதே;—பாவ
வழியில் என்னை இழுத் தாட்டுதே; சுவாமி!— மன

௪

கங்குல் பகலும் கண்ணீர் ஓட்டமே,—நித்தம்
கவலை பிடித்தென் முகம் வாட்டமே;
எங்கே பார்த்தாலும் மா போராட்டமே,—கெட்ட
ஏழைக்குன் பதத்தில் மன்றாட்டமே, சுவாமி!— மன

வே.—சா.

---

௧௭௭. RESISTING THE DEVIL. 177.

## ஆவிக்குரிய போராட்டம்.

வெண்பா.

தூய நெறிகடந்து துன்மார்க்கன் ஆசஇங்கே
மாய வலைக்குள் எனை மாட்டுகின்ற—பேயே உன்
நாணு வினைஅறுக்க நற்கூர்மை யான ஒரு
ஞான யுதம் எடுப்பன் நான்.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்

பல்லவி.

ஞான ஆயுதம் உண்டு, பேயே! நீ உன்னால்
ஆனதைப் பாரு.

அநுபல்லவி.

தினம் பாவச் சுமையை ஏற்றி,
எனில் மேவு நற்குணம் மாற்றி,—உரத்
தாள எத்தனம் பார்த்தும், நினை, யான்
மாளச் செய்யவே.— ஞான

1 பிசாசு.



சரணங்கள்.

௧

நின்னால் வந்த பாவச்சுமையை
நீக்கித் தள்ளவும்,—வல்ல
உன் ஆளுகையைக் குலைத்திங் கென்னை
உறுதி கொள்ளவும்,—நல்ல
விண்ணோர் தலத்தை விட்டு—பொல்லா
மண்ணோர் தலத்தின் மட்டும்—வந்தங்
கெண் இலாப் பாடு பட் டிறந் துயிர்த்த
ஏசுவினுடைய— ஞான

௨

ஏசுநாதர் எந்தனுக்காக வந்தன
ரே, அறியாயோ?—ஏசு
தாசன் முன் உன் உபாயம் வீண் எனத்
தான் குறியாயோ?—பின்னும்
ஆசித்தனுகத் துணிந்து,—பல
வேஷ மாயங்கள் அணிந்து,—எனை
மோசப்படுத்த வோ, வருகிறாய்;
மொக்கை கெடுவையே.— ஞான

௩

அக்கினி அம்பினால் நித்தம் எனை எய்ய
அலைந்து திரிகிறாய்;—மெத்த
உக்கிரமாக என் சித்த மயங்க, நீ
உருவப் பாய்கிறாய்,—ஆ! உன்
அக்கினி அம்பையும் அவிப்பேன்—உனைத்
திக்கெனத் தள்ளியே வதைப்பேன்,—பின்னும்
மிக்குரம் கொள்ளாமல் சிதைப்பேன் எந்தன்
மீட்பரின் செயலால்.— ஞான

௪

சிங்கம்போல் கெர்ச்சித்தெங்கும் புகுமாறதாய்
இங்குற என் துணிந்தாய்—உல
கெங்கும் நிறைந்தோனை தாங்க மனதுடன்
இங்கிதமாய் அடைந்தால்,—நீ
எங்கே எனைக் கிட்டிச் சேர்வாய்,—ஒரு
பங்கும் எனில் என்றும் காணாய்;—பின்னும்
அங்குமிங்கும் மகா ஆவலுடன் என்
அலைந்து திரிகிறாய்?— ஞான

ஜா.—பா.

## ௧௱௭௮. THE BELIEVER'S CONFESSION OF SIN; AND EXPRESSIONS OF REPENTANCE. 178.

### மனந்திரும்புதல்.

விருத்தம்.

பெருவினை களினால் இந்தப் பிரபஞ்ச மயலுள் சிக்கி,
இருமையும் பேறிழக்க இயல்கெட்ட துரோகி ஆனேன்!
திருமுகத் தொளிவு கன்ற தீயன் என் மனதுள் நேரே
ஒருமுக மாய்த்திரும்ப உதவிசெய் தருள் வல்லோனே.

இராகம், காம்போதி. அடந்தைதாளம்.

திபதை—கண்ணிகள்.

௧

திருமுகத் தொளிவற்று, பெருவினைகளில் உற்று
சீர் கெட்ட பாவி ஆனேன்;—நான்
ஒரு முகமாய் உனதிடம் மனந்திரும்பிட,
ஊக்கம் அருள்; பரனே!

௨

கானகம் போன்ற இப் பூதல மீதில் என்
கன்ம வினை பெரிதே;—சுத்த
ஞான உயிர் என்னுள் மேவ, மறு ஜென்மம்
நல்கி[1] அருள், குருவே!

௩

கருத்துக் குலைந்து, நல் உணர்ச்சி இழந்து, மா
கல் நெஞ்சன் ஆனேனே;—மனம்
திருத்தி, மிருதுறப் படுத்தி உன் இல்லதாய்
செய்தருள்; தற்பரனே!

௪

துரிச்சையினால் உள் அசுத்தம் நிறைந்து, நல்
சோபிதம் தான் இழந்தேன்;—பேய்ப்
பரிட்சையினாலும் மயக்கம் அடையும் இப்
பாவிக் கிரங் கையனே!

[1] தந்தருள்.



௫

பாதகர் மீதில் பரிதபியாமலும்,
பாவம் பொறாமலும் நீ;—சுத்த
நீதியை நோக்கில், உனது சமுகத்தில்
நிற்பவர் ஆர்? துய்யனே!

௬

தன் புண்ணியத்தால் எவனும் மன்னிப்புறத்
தக்கவன் இல்லை மெய்யாய்;—எந்தை!
உன் தயையால் உன் திருச்சுதன் மூலமாய்
உண்டு பொறுப் பெனக்கே.

௭

மண்ணையே நோக்கி, உழன்று, தவிக்கும் என்
வஞ்சக நெஞ்சதனை,—நேராய்
விண்ணையே நோக்கிடப் பண், இறைவா! உனை
வேண்டி மன்றாடுகின்றேன்.

௮

மாறுபாடான இவ் ஏழைக்கிரங்கி, நீ
மன்னிப்பருள் வதன்றி,—எனக்
காறுதலாக உனது நல் ஆவி
அனுக்கிரகித் தாள்; பரனே!

ஜா.—பா.

## ௧௱௭௯. PRAYER FOR DIVINE PROTECTION. 179.

### ஆதரவுக்காக மன்றாடுதல்.

இராகம், தன்யாசி. ஆதிதாளம்.

பல்லவி.

ஆதரி ஐயா! இந்த அவனியில்[1] பேய் எனை
மதியை மயக்குதே.

சரணங்கள்.

௧

சாதாரண சத்திய வேதா! சம்பூரண சகலலங்காரா!
சங்கை இலங்கியே எங்கும் நிறைந்திடும்
சார்ந்த நயகுண சிங்காரா!— ஆதரி

[1] பூமியில்.

௨

வையகர்த்தனே நடுத்தீர்க்க வரும், வல்லமை அற்புத நய
குணனே!
மழைபோல் இரங்கியே சதிசெய்யும் பாதகர்க்
காறுதல் அளிக்கும் நயகுணனே!— ஆதரி

௩

கேருபின் செட்டைகள் மீதினில்ஏறிக் களிப்புடனே வரும்
நாயகனே!—
கேட்டின் அலகை மாய்கைக்குள் இருக்கும்
கிஞ்சனர்[1] கைதூக்கும் நாயகனே!— ஆதரி

௪

சத்திய வேதத் திருச்சபையோரும் சம்பிரமமுடன் தழைத்
தோங்கிடவே,
தாரணியோ ரனைவோரும் சேர்ந்து
சாமி யேசு பதந் தேடிடவே,— ஆதரி

## ௧௮௰. GOD A REFUGE AND HELP IN TIME OF TROUBLE. 180.

### துன்பகாலத்து அபயம்.

இராகம், இயால். ஏகதாளம்.

பல்லவி.

நல்லனே! வேண்டல் கேள் என் நாயனே!
வல்லனே! அமிர்த சொல்லின் வாயனே!

சரணங்கள்.

௧

அல்லலால் என் உள்ளமே!—தில்லப்பட்டு வெள்ளமாம்,
தொல்லையில் அமிழ்ந்திக் கெஞ்சுங்கால்
தூக்கிவை கன் மேட்டிலே.— நல்

௨

சத்துருக்கு நீங்க நீர்—கொத்தளம தாகினீர்;
பத்திரமாய் உந்தன் செட்டையில்
பாய்ந்தோதுங்குவேன்.— நல்

[1] தரித்திரர்.



௩

கோரிக்கை ஈடேற்றினை;—பாரித்தவைய ஊற்றினை;
சிருடன் பிழைக்க என்றுமே
திவ்ய வரம் தாருமே.— நல்

௪

கிருபை உண்மை காண்பியும், உறுப்பாய் எனை ஸ்தாபியும்;
பெரிய உன்றன் பெயரைப் பாடியே
பிரசுரிப்பேன் நித்தமே.— நல்

T.—யோ.

## ௧௮௧. WHY CAST DOWN? HOPE THOU IN GOD. 181.

### தேவனிடத்தில் திடநம்பிக்கை வைத்தல்.

வெண்பா.

வான் இருண்டு, பூமிநிலை மாறி, கடல்சுவறி,
ஆனபொருள் எல்லாம் அழிந்தாலும்,—ஞானபரன்
அஞ்சகா யத்தின் அடைக்கலம்உண் டானதினால்,
நெஞ்சே! கலங்காதே, நீ.

இராகம், தன்சாசி. ஆதிதாளம்.

பல்லவி.

நெஞ்சே! நீ கலங்காதே,—சீயோன் மலையின்
இரட்சகனை மறவாதே;—நான் என் செய்வேன் என்று

அநுபல்லவி.

வஞ்சர் பகை செய்தாலும், வாரா வினை பெய்தாலும்,— நெஞ்

சரணங்கள்.

௧

வினைமேல் வினைவந்தாலும்,—பெண்சாதி, பிள்ளை
மித்ரு[1] சத்ரு ஆனாலும்,
மனையொடு கொள்ளை போனாலும், வானம் இடிந்து வீழ்ந்
தாலும்,— நெஞ்

[1] சிநேகிதன்.

௨

கவலைகள் மிகக் கொண்டாலும்,—பசாசுகளை
கண்ணின் முன்னே கண்டாலும்,
எவர்கள் துன்பம் செய்தாலும், எதிரிகள் எல்லாம் வைதாலும்,— நெஞ்

௩

ஆதி சர்ப்பம் பொரிந்தாலும்,—பொல்லாத பேர்கள்
அக்கினிபோல் எரிந்தாலும்,
பாதி உடல் மெலிந்தாலும், பட்டினியாய்க் கிடந்தாலும்,— நெஞ்

௪

பட்டயம், பஞ்சம் வந்தாலும்,—அதிகமான
பாடு நோவு மிகுந்தாலும்,
மட்டிலா வறுமைப் பட்டாலும், மனுஷர் எல்லாம் கைவிட்டாலும்,— நெஞ்

௫

சின்னத்தனம் எண்ணினாலும்,—நீ நன்மை செய்ய
தீமை பிறர் பண்ணினாலும்,
பின்னபேதகம் சொன்னாலும், பிசாசு வந்தணைப்பினாலும்,— நெஞ்

௬

கள்ளன் என்று பிடித்தாலும்,—விலங்கு போட்டு,
காவலில் வைத் தடித்தாலும்,
வெள்ளம் புரண்டு தலை மீதில் அலைமோதினாலும்,— நெஞ்

வே.—சா.

௧அ௨. THE CHRISTIAN IN DISTRESS BESEECHES GOD'S PRESENCE. 182.

## நம்பிக்கை விண்ணப்பம்.

பல்லவி.

என் ஐயா! தினம் உனை நம்பி, நான்
இருப்ப தறியாயோ?—மன
தேங்கும் என் கலி நீங்கும் படி நல்
பாங்கு புரியாயோ?



அநுபல்லவி.

அன்னை வயிற்றினில் என்னை உருவதாய்
வகுத்தவா! கிறிஸ்தையா! எனதையா!
அருள் செய்யாதது, மெய்யா யிது;— என்

சரணங்கள்.

௧

குற்றத்தால் உனைக்கிட்ட என் மனம்
கூசி, நாணுதே;—எந்தன்
கோதம்[1] நான் செய்த தீதும் மனதில்
கூடத் தோணுதே;
சுற்றும் உலகச் சத்துருப் பகை
சூழக் காணுதே;
சுருதி[2] மொழி உறுதி தனைக்
கருதி,[3] வந்தேன்; பொறுதி அருள்;— என்

௨

சிந்தை கலங்கி, நிந்தை அடைந்து,
திகைத்து வாடுதே;—பவத்
தீதினால் வெகு வாதை சுமந்து,
சிதறி ஓடுதே;
தந்தையாகிய உந்தன் பதத்தைத்
தாவித் தேடுதே;
சாற்றும், அருள் ஊற்றும், எனை
ஆற்றும், மிகத் தேற்றுமே தினம்.— என்

௩

சொந்த ரத்தத்தைச் சிந்திப் பாவியை
தூக்கி எடுத்தாயே;—இப்போ
தொல்லையும் வெகு அல்லலும் பட
சொல்லி விடுத்தாயே;
மைந்தன் நான் எந்தன் தந்தை நீ இதை
வரைந்து[4] கொடுத்தாயே;
வருவாய், உந்தன் திருவாய் மொழி
புரிவாய் நலம் தருவாய்; தினம்.— என்

௪

உன்னை அல்லாமல், பின்னை வேறெனக்
குதவி இல்லையே,—என
துற்ற சனமும், சுற்றத்தோர்களும்
உரிமை இல்லையே;

---
1 குற்றமும். 2 வேதவசனம். 3 எண்ணி. 4 எழுதி.

பின் எவரிடம் போவேன்; சொல், அது
பெரிய தொல்லையே;
பேசும் விசு வாசம் வளர்
நேசக் கதிர் வீச அருள்;— என்

௫

அத்தனே![1] உந்தன் ரத்தத்தால் எனை
ஆற்றித் தேற்றையா!—தேவ
ஆவியாகிய ஈவெனும் உன
தருளை ஊற்றையா!
நித்தனே! எந்தன் குற்றத்தை யெல்லாம்
நீக்கி, ஆற்றையா!
நேசா! பவ நாசா! மறை[2]
வாசா! ஏசு, ராசா! அருள்.— என்

மரி.—உப.

---

## ௧௮௩. PRAYER FOR DELIVERANCE FROM PERSECUTION AND TROUBLE. 183.

## தேவ துணைக்காகக் கெஞ்சுதல்.

வெண்பா.

கொஞ்சம் அல என்னாலே கூடாதென் செய்குவேன்?
வஞ்ச உலகம் மயக்குது;—தஞ்சம்
எதில் மரணம் என்றறியேன், ஏழை அடியேன்,
அதிதருணம் காத்தருள்ஐ யா!

இராகம், சயிந்தவி. ஆதிதாளம்.

பல்லவி.

தருணமே பரம சரீரி!—எனை
தாங்கி அருள், கருணை வாரி![3]

அனுபல்லவி.

உரிமை அடியர் அனு சாரி!—உயர்
எருசலே நகர் அதி காரி! அதி— தரு

[1] தேவனே. [2] வேதத்தில் வாசஞ்செய்கிறவனே. [3] சமுத்திரம்.



சரணங்கள்.

௧

வாரர்[1] அடி தொழும் வெகு மானி!—பரன்—மகிமை ஒளிர்
தேவ சமானி!
நரர் பிழை ஒரு பிரதானி!—ஏசு—நாயகன் என தேசமானி!
அதி— தரு

௨

ஆதாரம் உனை அன்றி யாரே?—எனை—அன்பாய்த் திருக்கண்
கொண்டு பாரே,
பாதாரவிந்தம் கதி சேரே—இஸ்ரேல்—பார்த்திபன் தவிது
வங்கிஷ வேரே! அதி— தரு

௩

நிர்த்த நித்த மாக என்றன் மேலே—வருவ—தெத்தனை துன்
பங்கள் ஒருக்காலே;
அத்தனையும் நீக்குதற்குன் காலே—எனக்—குத்தமதுணைதான்
மறு வேலே! அதி— தரு

௪

கங்குல்[2] பகலும் துயரம், கோவே,[3]—வரும்—கலக்கம் ஒழித்
திதனைத் தற் காவே!
பங்கி தெனக்குத் தந்த மெய் மன்னாவே!—ஏழைப்—பாவியை
ரட்சியும், ஏசு தேவே! அதி— தரு

வே.—சா.

---

## ௧௮௪. PRAISE FOR ALL THE BLESSINGS OF REDEMPTION. 184.

## ஸ்தோத்திர விண்ணப்பம்.

இராகம், ஆனந்தபைரவி. ரூபகதாளம்.

பல்லவி.

தோத்திரம், புகழ் கீர்த்தனம், ஜெய சோபனம் உமக்
கையா!—நீதி
சொல்லவும், தீமை வெல்லவும், கிருபை சூட்டுவீர்,
கிறிஸ்தையா!

[1] வானோர். [2] இரவு. [3] இராசாவே.

அநுபல்லவி.

கோத்திரந்தனில் உயர்ந்த யூத நல் கொற்றவா! தேவபாலா!
மனுவேலா! மறை நூலா! செங்கோலானு கூலா!— தோத்

—•—

சரணங்கள்.

௧

எந்தனை மீட்க நீர் இந்த உலகினில் வந்து பிறந்தீர் நன் மனு
வாய்,—மறை
எற்றித் தினம் எனை ஆற்றி; நன் மொழியால் தேற்றினீர் முற்றி
லும் தனுவாய்[1]
நிந்தை அடைந்து, மெய்ச் சொந்த உதிரத்தைச் சிந்தினீர்;
எத்தனை பரிவாய்;—தேவ
நீதிக்குத் திருத்தி செய்து, பவமனுச் சாதிக்கிரங்கி, நற்குருவாய்
நின்றீரே; நடுவராய், நின்றீரே தீதை எலாம்,
கொன்றீரே; பசாசையும்; வென்றீரே செயம் கொண்டீரே
நித்ய— தோத்

௨

சுத்த சுவிசேஷ சத்ய மொழியை விஸ்தரிக்க வரந்தாரும்;—நேய
சூரிய கிரண வீரியத்தால் எனக் காரோக்கிய அருள் கூரும்;
நித்தம் எனைத் தேவ பத்தியில் நடத்தி, சித்தம் இரங்கிக்கண்
பாரும்;—சரம்
நீட்டிக் கிருபையைச் சூட்டி, கவலையை ஓட்டி, என் துய
ரைத் தீரும்;
நில்லும், ஐயா! என் பக்கத்தில், நில்லும், ஐயா! தினம் நலம்,
சொல்லும் ஐயா! தீயோன் தனை; வெல்லும், ஐயா! தீதை
கொல்லும், ஐயா! துய்யா!— தோத்

௩

நித்திய சிவனைப் பெற்றும்மோடிருக்க, சத்தி கரித்தென்னை
ஆளும்;—பவ
நிந்தையோ டென் சுய சுந்தை அகற்றி, மெய் விந்தைக்
கிருபையால் சூழும்;

---

[1] சிறுமையாகி.



சத்திய வசன வித்தால் எனை ஜெனிப்பித் தென் மனதினில்
வாழும்;—பதம்
சாற்றி, தினம் உமைப் போற்றி, பணிந்திட, தேற்றி, எனை
அரசாளும்;
சற்குருவே! கிறிஸ்தெனும் சற்குருவே! சிவன் உள
சொற்குருவே! நித்தியானந்த நற்குருவே! பர பொற்குருவே!
தேவே!— தோத்

மரி.—உப.

௧௮௫. PRAYER FOR DELIVERANCE FROM SIN AND ASSAULTS OF SATAN.

## ஒத்தாசை விண்ணப்பம்.

—•—

வெண்பா.

சத்துருக்களாலும், சடந்தாலும், பேயாலும்
எத்தனை கோடி இடறுண்டாம்;—நித்த நித்தம்
ஏவாளின் மக்கள் இரங்கிநின்று கூவுகிறோம்;
தேவா! திருக்கடைக்கண் பார்.

—•—

இராகம், மங்யாமி. ரூபகதாளம்.

பல்லவி.

தேவா! திருக்கடைக்கண் பார், ஐயா!
வினைதீர், ஐயா! வினைதீர், ஐயா!

—•—

அநுபல்லவி.

கோவாய்[1] உலகில் வந்த யோவா! சச்சிதானந்தா![2]— தேவா!

—•—

சரணங்கள்.

௧

மேவிய தயை நிரம்பி, ஆவலுடனே விரும்பி,
பாவி எனையே திரும்பிப் பார், ஐயா! சுவாமி!— தேவா!

---

[1] இராசாவாய். [2] அழியா அறிவின்பமுடையோய்.

௨
பொல்லா உலகம் பகை, எல்லாச் செல்வமும் புகை,
வல்லா! உமின் கிருபை கூர், ஐயா! சுவாமி!— தேவா!

௩
அந்தி சந்தியும் விடாமல், தந்திரப் பசாசடாமல்,
எந்த விதமும் கெடாமல் ஆளுமே, சுவாமி!— தேவா!

௪
சர்ப்பனை யதாய் உலகம் இப்படித் துரோகம் செய்தால்,
எப்படி அடிமை கரை யேறுவேன்? சுவாமி!— தேவா!

௫
எத்தனை துயர் அடைந்தேன்! மெத்தவும் மன நுடைந்தேன்,
சித்தம் இரங்காய், என் மணவாளனே! சுவாமி!— தேவா!

௬
இந்தத் தினத்தில் எனக்குத் தந்த சுகந்தனுக்கு
வந்தனம் அனந்தனந்தம் ஸ்தோத்திரமே, சுவாமி!— தேவா!

வே.—சா.

## ௧௮௬. PRAYER FOR GOD'S GUIDING AND RESTRAINING GRACE. 186.

# கிருபைக்காக விண்ணப்பம்.

பல்லவி.

கிருபை புரிந்தென்னை ஆள்;—நீ, பரனே!
கிருபை புரிந்தென்னை ஆள்;—நிதம்.

சரணங்கள்.

௧
திரு அருள் நீடு மெய்ஞ்ஞான திரித்துவ
வரில் நாளுகிய மாதுவின் வித்து!— கிரு

௨
பண்ணின பாவமெலாம் அகல்வித்து,
திண்ணயமாய் மிகவும் தயை வைத்து,— கிரு



௩
தந்திரவான் கடியின்[1] சிறை மீட்டு,
எந்தை மகிழ்ந் துன்றன் அன்பு பாராட்டு,— கிரு

௪
தீமை உறும் பல ஆசையை நீக்கி,
சாமி! என்னை உமக் காலயம் ஆக்கி,— கிரு

௫
தொல் வினையால் வரு சாபம் ஒழித்து,
நல் வினையே செய் திராணி அளித்து,— கிரு

௬
அம்பர மீதுறை வானவர் போற்ற,
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏத்த,— கிரு

மது.—உப.

## ௧௮௭. DESIRE FOR SANCTIFICATION. 187.

# மனிதர்களுடைய ஜன்ம கன்ம பாவ நிலைமை.

இராகம், பிலஹரி. செம்படைதாளம்.

பல்லவி.

பாவப் பிணி அகல சீவ மருந் தியுமேன்.

அநுபல்லவி.

சாவின் கூரை ஒடித்த சீவ நாதா! பர்த்தாவே!— பாவ

சரணங்கள்.

௧
அன்னை வயிற்றிலே உற் றிந்நாள் வரையிலும் நான்
தின்மை தனக் கல்லால் வே றென்ன நன்மைக்கான் ஆனேன்;
—பாவ

௨
ஜன்ம பாவத்திேனாடு கன்மப் பாவமும் கூடி,
தின்னை அடையாப்படிக் கென்னை அகற்றினவே;— பாவ

[1] பிசாசு.

௯

ஞான வரங்கள் முதலான நன்மைகளைத் தி
தான கைகள் என்றெண்ணி, யானே அழிவுறாமல்,— பாவ

௰

ஐயா! நின் மார்பில் உற்ற துய்யன் யோவான் தனைப்போல்,
மெய்யாய் நின் நேசத்தை யான் உய்யும் விதம் அடைய—பாவ

ஙா.—பா.

௧௮௮. PRAYER FOR SPIRITUAL BLESSINGS. **188.**

## பல நன்மைகளுக்காக விண்ணப்பம்.

இராகம், துசாவந்தி. ஆதிதாளம்

பல்லவி.

அப்பனே! நீர் எனக்கு எப்படியும் இரங்கி,
அருளிச் செய்ய வேணும், நல் வகையை.

அனுபல்லவி.

தப்பிக் கெட்ட எனக்காய் ஒப்புடன் ரத்தம் சிந்தி,
செப்பமுடன் எனை மீட்ட நன் மெய்ப்பரனே கிறிஸ்
தரசே!— அப்

சரணங்கள்.

௧

வஞ்ச வினைக்குட்பட்டேன்; நெஞ்சம் உருகிப் புண்ணாய்
வாடி உலைந்து, பவமதினாலே—தினம்
சஞ்சலப் பட்டுழன்று, நஞ்சுண்ட தெண்டையைப்போல்
தயங்கி, மயங்கி, மிகத் தியங்குவனோ?—ஏழை
தஞ்சம் எனக்கு நீர் என் செஞ்சதனுக்கு இரங்கி,
பஞ்ச பவங்களைத் தீர்த்தருள்; மிஞ்சும் கிருபை விழிபாரும்;
மெய்— அப்

௨

காடிப் பவத்தில் விரைந் தோடி, விழுந்து, கெட்டு,
நைந்து, கரைந்து, மனம் மெலிவேனோ?—மிக



ர்டித், தவித்த என்னைத் தேடி, ரட்சிக்க நீர்தாம்
லிய வந் துதிரத்தைச் சொரிந்தீரே;—இப்போ
ாடிக் கெஞ்சும் எனக்குச் சூடிக் கிருபை அருள்;
டி, தயையினைப் புரியும, கொண்டாடி, உமக்கூழியம்
செய்ய மெய்— அப்

௩

முன்னால் நீர் ஈந்ததெல்லாம் என்னாலே நான் அழித்து,
முழுவதையும் இழந்துபோனேனே;—பாவி
ன்னாலே கெட்டவன் நான் பின் ஆரிடம் போவேன் நீர்
ாமே எனக்குப் பிணைப்பட்டீர் ஐயா!—தேவ
ன்னா மெய் மன்னா! ஓசன்னா, கிருபை செய்யும்;
ந்நாள் முதல், நான் மகிழ்ந்தினி எந்நாளும் உமக்கூழியம்
செய்ய மெய்— அப்

௪

தேவரீரைப் போல, வேறு காவல் எனக்கிருந்தால்,
தேடி உம்மிடத்தில் யான் வருவானேன்?—சொல்லும்;
ஆவலைத் தீர்த்தடக்கும் சீவ தண்ணீரை ஈயும்,
ஆறும் சம்பூரணமும் நீர் தாமே;—எந்தன்
பாவத்தினாலே மிகக் கேவலமாகி, எனைத்
ாவி, ரட்சித்தருள் செய்த நல் தேவ ஆட்டுக்குட்டியானமெய்
—அப்

௫

கையில் இல்லையோ? வகை செய்யச் செயல் இல்லையோ?
கருணையும் சமஸ்தமும் உடையோரே!—இந்த
வையகமும் வானமும் உய்யும் பொருள் பலவும்
வாழ்ந்து, நடப்பதும தருளாமே;—ஏழை
நைய மனம் மெலிந்து, தொய்ய விடுவதேது
ஐயா! கிருபைக் கையா! தொழில் செய்ய வகை எனக்கருள்
ஐயா!— அப்

௬

பொல்லாப்பிள்ளை நான் உமக் கெல்லாப்பிள்ளைகளோடும்
போற்றிப் பணிவு செய்ய வேண்டாமோ?—தேவ
நல்லாவியின் அருளும்; சல்லாப ஈவு யாவும்
நாடும் எத்தனங்களும் அருளீரோ?—முன் நாள்
எல்லாப் பொருள்களையும் சொல்லால் படைக்கலையோ?
வல்லாதிபதி நீர் எனக்கிய இல்லாதவர் போல் இருப்பா
னேன்?— அப்

௭

தங்கும் கனம் மகிமை, செங்கோல், வளம், அரசும்,
சருவ சம்பூரணமும் உடையோரே!—நீர் தாம்
எங்கும் இருந்தோர் நல்ல பங்கெனைக்குக் கொடுக்க
இரக்கமும் கிருபையும் நிறைந்தோரே!—யூத
துங்கன் தவீது வங்கிஷச் சிங்கம் எனும் கிறிஸ்தே!
பொங்கும் உமதிரக்கத்தினால் என் சங்கடம் தீர அருள் செய்
யும், மெய்— அப்

மரி.—உப.

௧௮௯. PRAYER TO GOD FOR CHRIST'S SAKE TO HAVE MERCY AND DELIVER FROM SIN. 189.

## கிறிஸ்து மூலமாய்ச் செபித்தல்.

வெண்பா.

என் அருமை நீ அறிவாய் யானும் உனை அறிவேன்,
நின்னை அல்லால், என்னை நினைப்பதார்?—பொன்னுலக
தந்தைசரு வேஸ்பரனே! உந்தன் மகன் ஏசுவுக்காய்
எந்தன்முகம் பார்த்திரங்கு வாய்.

இராகம், உசேனி. ரூபகதாளம்

பல்லவி.

தந்தைசரு வேஸ்பரனே! உந்தன்மகன் ஏசுவுக்காய்
எந்தன் முகம் பார்த்திரங்கு வாயே;—இம்மாத்திரம்
நீயே.

சரணங்கள்.

௧

அந்தமதிலா அகாரி![1] சந்ததமுமே[2] விசாரி,
விந்தை அருள் மேவும், அசரீரி! மெய்ஞ்ஞான வாரி!— தந்

௨

ஞானபரனே! ஒருத்வ மானமுதலே! திரித்வ
மேன்மை வடிவான மகத்வ மேலான தத்வ— தந்

௩

விற்பன விவேக நூலா! அற்புதமதான சீலா!
நற்பரம லோக அனுகூலா! நன்மை க்ருபாலா![3]— தந்

[1] கடவுள். [2] எப்பொழுதும். [3] கிருபை பொழிபவன்.



௪

ஆதிமுதலான நேசா! வேதமறை நீதிவாசா!
பேதகம் இலாத சத்ய வாசா! ஞான ப்ரகாசா!— தந்

௫

வந்த வினை யாவும் தீரும், நிந்தை அணுகாமல் ஆரும்;
சிந்தை மகிழ்ந்தே, கண்ணாலே பாரும்; சீர்பாதம் தாரும்,— தந்

வே.—சா.

௧௯௦. THE BELIEVER PRAYS FOR SPIRITUAL COMFORTS AND MERCIES. 190.

## விண்ணப்பம்.

இராகம், நீலாம்புரி. செம்படைதாளம்.

பல்லவி.

தேவாதி தேவா! திரு மறை அருளிய
தேவாதி தேவா!

அனுபல்லவி.

சீவா சனு! குன்றாத
திருவா! தர்ம கருணா[1] நிதி! உனை நேர் இதம்
உறுவோர் இலர் ஆதரி அருள் அளி.— தேவா

சரணங்கள்.

௧

திண்[2] புவிதனில் எழு, சீர் உறு பர வடிவே!—ஜெய
தீர குணகர மாசறு திரு மகன் என்ற சுருதி முடிவே!
கண்புறு பவர் மிக காடிய பொருளே! (நீ)
ஞானம் ஈந் தெளியன் நயம் உறவே புரி;— தேவா

௨

கானகம் நிகர் படு காசினி அதின் மேலே,—ஒரு
காலும் மனோகர காருணி உனை நிகர் கண்டிலன்; அதினாலே
ஈனன் எளியனிடை தான் எழு குருவே! (நீ)
ஈறிலாதடியன் இனிதுற வேபுரி;— தேவா

[1] கிருபைக்கடல். [2] பெருத்த.

௫

அண்ட அரிய பொருள் ஆகிய பர ஒளியே!—மன
ஆகுலம் மேவிய பாதகன் உறு துயர் அற்றிட அருள் அளியே;
மண்டலத் திறைஞ்சு நல்த் தொண்டர்கள் பதியே (நீ)
வாழ்த்தி எத்தும் எனைத் தேற்றி, நல் அருள் புரி;— தேசா

ஜா.—பா.

---

௧௯௧. SHOW ME THY WAY; LET ME TRUST THY PROMISE. **191.**

## தேவ விசாரணைக்காக விண்ணப்பம்.

இராகம், ஆனந்தபைரவி. அடதாளம்.

### பல்லவி.

காட்டும், நல் வழி காட்டும், ஐயரே!
ஏழைப் பாவிக் குமது
கருணை அருளைச் சூட்டும்; ஐயரே!

### அனுபல்லவி.

நீட்டும் கரத்தைச் சூட்டும் கிருபை
நிறைந்த நின் அருள் சிறந்த சபையில்
காட்டுவீர்; எனைத் தேற்றுவீர்; உமை
நம்பினேன், சிற்தம்பரா! என்பரா!— காட்

### சரணங்கள்.

௧

என தகத்[1] துயர் யாவையும் அறிவீர்,—மனக்கவலையோ
டெந்தன்
ஏக்கலை எல்லாம் தீர்த்தருள் புரிவீர்,
மனதில் நத்திடச்[2] சித்தத்தைத் தருவீர்;—அனுதினமும் என்
முன்
மகிழக் கிருபையோடு நீர் வருவீர்;

[1] மனத்துயர். [2] விரும்பு.



தன மகிமையும், மா புகழ்ச்சியும்,
கருணையும் திருக் காட்சியுமுள்ள
உன தின்பத்தின் நல் ஆவி அருளை
ஊற்றுவீர்; எனை ஆற்றுவீர்; தேற்றுவீர்;— காட்

௨

கிருமியே![1] நீ திகையாதே; எனவும்—நாம் எப்போதும் உந்தன்
கிட்டவே தரித்திருக்கிறோம் எனவும்,
நெருக்கத்தில் நமை கூப்பிடும், எனவும்—நாம் உன்னோ
டிருந்து,
நேச மகிமை அருள் செய்வோம் எனவும்,
வருத்தத்துடனே பாரஞ் சுமந்து,
வந்தோர்களின் நிர்ப்பந்தம் அகல,
உரித்தாய் ஆறுதல் செய்வோம் எனவும்
உரைத்த யாவையும் நினைத்துத் தேற்றும்;— காட்

௩

தேடுங்கள், கண்டடைவீர்கள் எனவும்—தட்டுங்கள், அப்
பொழுது
திறக்கப்படும் உங்களுக்கெனவும்,
நாடிப் பணிந்து கேளுங்கள் எனவும்,—அப்பொழு துங்க
ளுக்கு
நலமுடன் கொடுக்கப்படும் எனவும்,
சூடும் கிருபைத் திருவாய் மலர்ந்து,
சொன்ன உமது நல் மொழிப்படி,
பாடும் அடியேன் பலன் பெற நீர் என்
பங்கிலே தங்கும்; விளங்கிய தெய்வமே!— காட்

௪

பெரு வானும் பூவும் ஒழிந்து போயினும்,—என் திரு உரை
ஒன்றும்
பிசகிடா தென்றீர் இது மெய் எனும்,
பருவதங்கள் நிலை விலகினும்— மேடாக உயர்ந்த
பலத்த குன்றுகள் யாவும் சாயினும்,
கிருபையும், சமாதானமும் நிறைந்த
கிர்த்தியன் என துடம்படிக்கையும்,
ஒரு போதும் உனை விட்டிடாதென
உரைத்தவா! எனை நினைத்துத் தேற்றுமே;— காட்

மரி.—உப.

[1] புழுவே!

௧௱௯௨. THE LORD'S PRAYER. **192.**

## கர்த்தருடைய செபம்.

கழிநெடில்.

உன்னதப் பரமண் டலங்களில் வசிக்கும்
ஒளிர்பிதா வே! உனின் நாமம்
உயர் பரி சுத்த மாய்த்தொழப் படுக;
உனதுராச் சியமுறை வருக;
முன்னிய உனது சித்தமே; பரத்தில்
முடியுமாப் போல, இப் புவியில்
முடிவுறச் செய்யப் படுவது மாக;
முழுதும் நின் கரத்தையே நோக்கும்
நின் அடியார்க்கன் றுடக உணவு
நிரம்பவே அருள்; பிறர் இயற்றும்
நீதிக்கே டினையாம் பொறுப்பது போல
நிமலனே! எம்பவம் மனியும்;
இன்னமும் பலசோ தனைகளுட் படாமல்
இடர் தவிர்த் திரக்கமாய்க் காவும்;
இராச்சியம் வல்லமை மகிமைமற் றெவையும்
என்றும் உன் உடமையே; ஆமென்.

ச.—உ.வா.

௧௱௯௩. GRATEFUL PRAISE. **193.**

[For Morning or Evening Worship.]

## நன்றியறிதல்.

வெண்பா.

ஆதிகா லந்துவக்கி ஆச்சரிய மாகஇந்த
சோதனைகா லத்தும் துணைநின்று,—மாதயவாய்
எந்தன் பரமகுரு செய்தஉப காரத்தைச்
சிந்தித்து, வந்தனைசெய் வேன்.

இராகம், நீதிகௌளை. அடதாளசாப்பு.

பல்லவி.

எந்தன் பரம குரு செய்த உபகாரத்தை
எத்தித் துதிப்பேன்; நானே.



அநுபல்லவி.

தந்தைப் பரனிடத்தா னந்தத் தொனி விளங்க,
சத்தமாக நின்ற நித்திய வஸ்துவானை— எந்

சரணங்கள்.

௧

வானத் தமலர்[1] சேனை கிரகித்து முடியாத
மகிமைப்ர தாபம் மிகுத் தோன்,—அதி
ஞானத் துடன் உலகும், பரமும் அதில் நிறைந்த
யாவும் நெறியில் பகுத்தோன்,
மேன்மைப் பொருளதாக தேவ மகத்துவத்தின்
விளங்கும் அனந்த சுகத்தோன்,—அஞ்ஞ
யானத் திருள் அகலத் தான் இப்பு வியில் உற்ற
அந்த முடி வில்லாத சுந்தர கிறிஸ்துநாத— எந்

௨

மிக்கப் பராபரனோ டொக்க[2] ஒன்றித்திருந்த
முக்கியம் அனைத்தும் விடுத்து,—எவை
மக்கள் துயர் அகலத் துக்க உலகமதில்
மனுடாவதாரம் எடுத்து,
பக்ஷமாக அடி மைக் கோலம் கொண்டரும்
பாடு பட்டுயிர் கொடுத்து,—நரர்
அக்கிரமம் அனைத்தும் நிக்கிரகம் புரிந்து,
அந்தகாரம் அற வந்த ஏசுக்கிறிஸ்து— எந்

௩

பெத்தலேகேம் பதியில் சுத்தக் கனியிட்டத்தில்[3]
புத்திரனாகப் பிறந்து,—திருச்
சித்தமாக உலகத்தில் எங்கும் திரிந்து,
திவ்ய புதுமை சிறந்து,
மெத்த வாதையாகச் சத்துருக்கள் தமை
மீட்கக் குருசில் இறந்து,—பின்னும்
மத்தியஸ்தனாக வெற்றி கொண்டெழுந்து,
வானம் ஏறி, நடுத் தானே கேட்க வரும்— எந்

௪

பாவத் திகில் அறுத்து, சாபத்தையும் தொலைத்து,
பகைஞன் வினையை நீக்கி,—கொடும்
ஆபத்திலும், அடர்ந்த கோபத்திலும், விழுந்த
அடிமைகளைக் கை தாக்கி,

[1] பரிசுத்தர். [2] சமமாக. [3] கன்னியிடத்தில்.

தேவத்திரவியம் என்ற சீவ போசனத்தை
திருவுள மாய் உண்டாக்கி,—நித்தம்
மாபத்தி ரமாய்ப் பிர தாபித் தனுக்ர கித்து,
வைத்துக் காத்த ஒரே நித்ய திரித்வமான— எ

வே.—சா.

## ௧௯௪. GRATITUDE FOR PROVIDENTIAL MERCIES. 194.

[*For Morning or Evening Worship.*]

# தேவ பராமரிப்புக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரம்.

இராகம், இயால்.

பல்லவி.

ஆத்துமமே! என் முழு உள்ளமே!—உன்
ஆண்டவரைத் தொழு தேத்து;—இந்நாள் அள
வன்பு வைத் தாதரித்த
ஆண்டவரைத் தொழு தேத்து.

சரணங்கள்,

௧

போற்றிடும் வானோர் பூதலத் துள்ளோர்,
சாற்றுதற்[1] கரிய தன்மை யுள்ள— ஆண்

௨

தலை முறை தலை முறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத— ஆண்

௩

தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும் மேலான— ஆண்

௪

வாதை, பிணி, துன்பம் மாற்றி, அனந்த
உதவி செய் துனக்கு உயிர் தந்த— ஆண்

௫

உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும்— ஆண்

[1] சொல்லுதற்கரிதான.



௬

துதி மிகும் தேற ஸ்தோத்திரி தினமே,
இதயமே! உள்ளமே! என் மனமே!— ஆண்

தை.—றை.

## ௧௯௫. PRAISE TO GOD FOR HIS GREAT MERCY. 195.

# தேவ கிருபைக்குத் துதி.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

தேவ கிருபைக்குக் கீர்த்தனம்;—நமை அன்பாகத்
தேற்றி இக்காலம் மட்டும் ஆற்றி ரட்சித்தார் தினம்.

அனுபல்லவி.

பூவொடு வானதில் நிறை பொருள் யாவையும்,
ஜீவனையும், சுக வாழ்வையும் ஈந்தருள்
தேவனும் ஏசுக் கிறிஸ்தின் பிதாவாம் யெ
கோவாவுக்கே துதி, கனம், புகழ், வல்லமை,— தேவ

சரணம்.

தீதுறு கன்மப் பசாசு—நமைப் பிடித்து,
சிறைப்படுத்தி, மா பாவ அறைக்குள் அடைத்து, பொல்லா
தீங்கு பலவாய்ச் செய்யவும்,—நாள்தோறும் மன
தேங்கி மெலிந்து நையவும்,—வாதிக்கும்போது
பாது காத் தெமை இரட்சிக்க—தேவ குமாரன்
பாரின் மனுவாய் வந்து, சோரி ப்ரவாகம் சிந்தி,
பாடுபட்டுச் சிலுவையில் மரித்து, கல்லால்
மூடப்பட்டுக் கல்லறையிலிருந் துயிர்த்து;
ஆதி பராபரன் நீதியின் படியே, நாம்
அடைந்த தேவ கோப சாபாக் கினையாகிய
வேதனை யாவையும் அகற்றி, விண்ணினில் ஏறி,
மேன்மையின் ஆசன வல திடந் தனில் நின்று,
சோதியின் பரிசுத்த ஆவியையும் நித்திய
சுகத்தையும் வரத்தையும் பெலத்தையும் நமக்கீந்து,
போதித்து, நடத்தி, காப்பாற்றி, ஆதரிக்கின்ற
புண்ணியன் எனும் கிறிஸ் தண்ணலுக்கே கனம்,— தேவ

மரி.—உப.

## ௧௯௬. A CALL TO REMEMBRANCE OF PAST MERCIES. 196.

# புது வருஷத்தில் தேவனைப் பாடுதல்.

இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

ஞான திரி[1] முத[2]லொரு பொருளே! நரர் சுகமொடு
வர அருள்
ஞான திரி முதலொரு பொருளே!

அனுபல்லவி.

வானவர் துதி செய் அனாதி குருபரனே! ரீ ரீ ரீ ரீ
மானுவேல் எனும் நாம சங்கீதனே!— ஞான

சரணங்கள்.

௧

மாதுக் குரைத்த ஆதி வார்த்தையின் வித்தே!
மண்ணில் ஈசாயின் வேராய் வழுத்தும்[3] விண் முத்தே!
வேதப்ரமாணம் ஈந்த ஆறு லட்சண சித்தே!
விளங்கும் திருச்சபையில் இலங்கும்[4] அரூப வஸ்தே!— ஞான

௨

நித்தம் விக்கினம் வராமல் ரட்சித்த நன்னேசா!
நெஞ்சில் கவலை துயர் நீக்கும் சந்தோஷா!
சத்துருப் பசாசின் முடி தகர்த்த உல்லாசா!
சந்ததம் இச்சபையை ஆதரிப்பாய் சர்வேசா!— ஞான

௩

புவியிலநேக நரர் போயினர் முன் மாண்டு,
பூர்த்தியாய்க் காப்பாற்றி வைத்தீர் புகுத இவ்வாண்டு,
திவ்ய திருச்சபையோ சிறிய கடுகுப் பூண்டு
திரண்ட மரம்போலாகிச் செழிக்கவும் நீண்டு— ஞான

௪

தின முனதருள் புரி சீயோனனுகூலா!
தேசிகர் உளம் களிக்கச் சிறக்கும் நன்னூலா!
மண நலம் தருமொரு பரகுரு பாலா!
வருட முதலில் புது வரமருள் சீலா![5]— ஞான

௩.—உப.

---

[1] மூன்று. [2] கடவுள். [3] சொல்லப்பட்ட.
[4] பிரகாசிக்கும். [5] மேன்மைபொருந்தியவனே.



## ௧௯௭. THANKSGIVING FOR GOD'S ELECTING GRACE. 197.

# தேவன் நம்மைச் சேர்த்துக்கொண்ட அன்பை நினைத்துத் துதித்தல்.

வெண்பா.

வேதமெல்லாம் தந்தான், விளம்புதற்கு மெய்ஞ்ஞான
போதகரைத் தந்தான், புகழ்தந்தான்;—ஆதலினவ்
நீடித்த நன்மை நிறைந்த பராபரனைப்
பாடித் துதி மனமே! பண்பு.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

பாடித் துதி மனமே! பரனைக்கொண்
டாடித் துதி தினமே.

அனுபல்லவி.

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்து— பாடி

சரணங்கள்.

௧

தீர்க்கதெரிசிகளைக் கொண்டு முன்னுற
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்துத் தியானித்து,— பாடி

௨

காட்டொலிவத் தருவாம் எமை நல்ல
கனிதரும் தீவிராட்சச் செடி யோடுற
நாட்டித் தம் சொந்தச் சனமாக முற்றும்
நடத்தின நேசைத் திடத்துடன் சிந்தித்து,— பாடி

௩

சொந்தச் சனமான யூதரைத் தள்ளி,
தொலையில் கிடந்த புறச்சாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப், பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோடத்துக்காக— பாடி

௪

எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்,
எத்தனை போதகர்கள், இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்
கித்தனையாய்க் க்ருபை வைத்த நம் கர்த்தனை— பாடி

வே.—சா.

---

௧௱௯௮. ENCOURAGEMENT TO TRUST IN GOD. **198.**

## தேவனில் நம்பிக்கை வைக்க ஏவுதல்.

வெண்பா.

தேவன் உன்பிதாவும், திருச்சுதன்உன் நாயகனும்,
ஆவிஉந்தன் தோழருமே ஆயிருக்க,—கேவலமாய்,
என்னே, பலநினைவால், ஏதும்இல்லான் போல்,மனமே!
உன்னை அலைக்கழிப்பதோ?

பல்லவி.

என்னே, பல நினைவாலும் நீ உன்னை அலைக்கழிப்பாய்.

அநுபல்லவி.

மன்னர்கள் மன்னவன் ஆகிய ஏசு உன்
மன்னவராய் இருக்கையிலே,— என்னே

சரணங்கள்.

௧

அன்னை வயிற்றுருவாய், உன்னை அமைத்த தந்தை அல்ல
வோ?—பின்னும்,
ஆகாரமும் உடையும், சீவனும் அளிப்பதவர் அல்லவோ?—
என்னே

௨

மாதானவள்[1] சேயை[2] ஒரு வேளை மறந்தாலும்,—உன்னை
மறவோம், ஒருக்காலும், என வார்த்தை கொடுத்தாரே;— என்

1 மாதாவானவள். 2 பிள்ளையை.



௩

இஸரேலைக் காப்போர் உறங்கிடுவார், என நினையேல்;—
அவர்
நிசமாக உன் வல பாகத்தில் நிழல் ஆவர் என்றறிவாய்;—என்

௪

சிங்கங்கள் பட்டினியாய் இருக்கக் கண்டேன்; தேசம் எங்
கும் சுற்றிப் பார்த்தும்,—தேவ
சேயர்கள்[1] பட்டினியாகக் காணேன், என்ற திவ்ய உரையும்
பொய் ஆமோ?— என்னே

௫

தேகமும், கெட்ட உலகமும், பேயும் திரண்டு, உனைப் பொ
ருதாலும்,[2]—அதைச்
செயித்த ஏசு உன் மன்னவர்; ஆகையில் சிந்தனை வேறென்ன
உனக்கு?— என்னே

௬

தேவ பிதா உன் பிதாவும், இயேசு உன் சிநேகிதரும், சுத்
தாவி—உந்தன்
தேற்றரவாளனும் ஆவதைப் பார்க்கிலும், தேவை உனக்
கொன்றும் இல்லையே.— என்னே

ச.—உவா.

---

௧௱௯௯. THE BELIEVER ADMONISHES HIMSELF TO PATIENCE UNDER AFFLICTION. **199.**

## உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தல்.

இராகம், வசந்தா. ஆதிதாளம்.

பல்லவி.

பதறாதே, மனதே!—வீணிலே,
பதறாதே; மனதே!—வீணிலே.

அநுபல்லவி.

பதறாதே, அநுதினம் ஏசுவைப் பாடு; அவர் பதந்தனை நாடு;
சிதறாதே, ஐம்பொறி வழியினில் செல்லாதே; நிலையாது கா
யம்.— பதறா

1 பிள்ளைகள். 2 சண்டைசெய்தாலும்.

சரணங்கள்.

௧

பழி பேசும் உலகும்—பேய்களோடே—குழி யாழியில்[1] வீழ்
    கும்;
வெளி வேஷம் உதவாது, மனமே! வேளை எதுவோ? வரும்
    நாளை
விழும் நாளோ? உடல் கெடும் நாளோ? நீ இடையாதே; நிலை
    யாது, காயம்.— பதறு

௨

கொலை, காமம், களவு—நிறைந்த—புலையாளர் வளவு;
பலகாலம் கலகங்கள் புரியும்; படியாது, பகை ஒழியாது;
நிலைபெயராதே, அதை ஒட்டாதே; நில்லாதே, நிலையாது,
    காயம்.— பதறு

௩

மகுடர்[2] முடிந்தாரே,—வித்தியாதரர்[3]—மன்னர் மடிந்தாரே;
அகடம் விடுத்த சராசர பிரமம் கசரா பதி பதம் நாடு, கிரமம்
பகடெனவே[4] தீவினை புரியாதே; படி[5]மீதே நிலையாது,
    காயம்.— பதறு

ச.—உப.

## ௨௦௦. TRUST IN THE CARE OF GOD. 200.

*"The hairs of your head are all numbered."*

# தேவபராமரிப்பில் நம்பிக்கைகொள்ளுதல்.

வெண்பா.

நித்திய காலம் நினையாமல் போவானோ?
சித்தம்இரங் கித்தயவு செய்யானோ?—மெத்தமெத்த
எந்தவினை வந்தாலும், ஏசுபரன் உண்டுனக்கு,
சிந்தனைப் படாதே, நெஞ்சே!

இராகம், தசாவந்தி. ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தனைப் படாதே, நெஞ்சமே!—உனை ரட்சித்த
தேவ சுதன் இருக்கிறார்.

1 சமுத்திரம். 2 அரசர்கள். 3 கல்விமான்கள். 4 பெருமை. 5 பூமி.



அநுபல்லவி.

அந்தியும், சந்தியுமாக ஆர் பகை செய்தாலும் என்ன?
எந்த வினை வந்தும், மயிர் எண்ணைப் பட்டிருக்கையிலே—சிந்

சரணங்கள்.

௧

ஐந்து இட்டு ரண்டு காசு தாக விற்றும், அங்கதில் ஒன்
றும் தரையி லேவிழாதென் றுத்தமன் உரைத்திருக்க,
புந்தியில் விசாரமுடன் போக்கிடம் அற்றவர் போல
சந்தேகத்தினால் உழன்று, தவித்து, தவித்து நின்று,— சிந்

௨

சோங்கில் அயர் சீடரின் முன் பாங்குடன் தயவளித்து,
தாங்கினேன் உனையும் வந்து தாங்குவான், என வந்தாலும்;
ஓங்கும் இஸ் ரவேல் ராசன் தூங்கவும் இலையே, சும்மா
ஏங்கி, ஏங்கிச் சஞ்சலம் கொண்டேமாந்து, ஏமாந்து நின்று,—
    சிந்

௩

என்ன பொசிப்போம், குடிப்போம், என்ன உடுப்போம்?
    எனவே
பன்னு[1] விசா ரங்கள் கோடி பண்ணினும், எண்ணத்தினாலே
முன் அளவுக் கதிகம் ஓர் முழத்தை உண்டாக்க நீ ஆர்?
அன்னை வயிற்றில் சமைத்த ஆண்டவன் ஆதரியானோ?— சிந்

௪

எத்திசையி லும் அடர்ந்த சத்துரு எல்லாம் செயங்கொண்
டத்தனின்[2] வலத்தில் நித்ய துத்தியத் திருந் தரசாள்
கர்த்தனும் கிறிஸ்து நாதர் சித்தம தல்லாமல், வீணில்
தத்தி விழுந் தென்ன வரும்? பித்தது பித்தது கொண்டு, — சிந்

வே.—சா.

1 சொல்லத்தக்க. 2 பிதாவின்.

## ௨௦௧. TRUST IN GOD TO SAVE, SANCTIFY, AND DELIVER FROM TROUBLE. 201.

# நம்பிக்கை.

இராகம், ஆனந்தபைரவி. ரூபகதாளம்.

### பல்லவி.

நம்பினேன், உனதடிமை நான், ஐயா!—
திடப்படுத்தி, எந்தனை—
நடத்திக் காப்பதுன் கடமை தான், ஐயா!

### அனுபல்லவி.

உம்பரும்,[1] புவி நண்பரும், மற்ற
உயிர்களும், பல பொருள்களும் தொழும்
தம்பிரானே! மெய் அம்பராபரா!
தாசன் மீது நன்னேச அருள் செய்;— நம்பி

### சரணங்கள்.

௧

தீதாம் என் பவம் யாவையும் பொறுத்து,—திருக் கருணையின் அருள்
செய்து பின் வரும் இடர்களை அறுத்து,
வேதாந்தப்படி தன்னைத் தான் வெறுத்து—நான் உனைப்பின் செல்ல, உன்
மெய் அருளை என் உள்ளத்தில் நிறுத்து;
ஆதாரம் எனக்கார்? உனை அன்றி,
அம்புவியில் யான் நம்ப வேறுண்டோ; உன்
பாதாரவிந்தத்தில் ஒதுங்கினேன்; எனைப்
பாரும், கிருபையைத் தாரும், ஐயரே!— நம்பி

௨

என்னைப் படைத்த தேவனும் நீயே;—திரு உதிரத்தைச் சிந்தி
ஈடேற்றிக் கொண்ட மீட்பனும், நீயே;
இன்னமும் பின்னும் காப்போனும் நீயே;—ஒருபோதும் குன்றிடா
இன்பத்தில் வைக்கும் சீவனும் நீயே;

[1] வானவர்.



உன்னை யன்றி, யான் சொன்னவை வேற
துண்டோ? உந்தன் வாய் விண்டுரை செய்யேன்;
என் ஐயா! இதை யாவும் சொல்லுமே;
ஏழைக்குன் திருத்தாள் அருள் செய்யுமே;— நம்பி

௩

சுத்த இருதயத்தினைத் தருவாய்;—பரிபூரணானந்த
சோதி ஆவியின் நல் துணை அருள்வாய்;
நித்தமும் பய பத்தியைத் தருவாய்;—நான் ஊழியஞ்செய்ய
நீதனே! எந்தன் முன் எழுந்தருளாய்;
அத்தனும் பரிசுத்தனும் என
தன்பனும் அனுகூலனுமான
பத்தனே! பரி[1] சித்தனே! உனைப்
பாடினேன்; கிருபை சூடி, யாள் ஐயா!— நம்பி

௪

ஊக்கமும் மனத்தீர்க்கமும் வேணும்—சுவிசேஷ உரையை
உற்றுப்பார்த்ததில் தேறவும் வேணும்;
ஆக்கமும் அன்பர் சேர்க்கையும் வேணும்— உனக் கூழியம் செய்ய,
ஆவியும் அதின் ஈவதும் வேணும்;
ஏக்கமும் மனக் கவலையும் நீங்க
இன்பமுள்ள உன் அன்பின் நற்றிரு[2]
வாக்கையே நோக்கி இருப்பதால் என் முன்
வாரும், கிருபை தாரும், ஐயரே!— நம்பி

௫

உள்ளம் கலங்கி, சோர்ந்திடாமலும்,—கெட்ட மாமிச இச்சை
ஊறி, அசுத்த மாக்கிடாமலும்,
கள்ள மார்க்கத்தால் பயந்திடாமலும்,—உலகாசை மோசத்தைக்
கண்டு மருள வீழ்ந்திடாமலும்,
விள்ளரிய உன் ஆவி அருளை
வீசி, எந்தனை நேசித் திழுத்துக்
கொள்ளுவாய்; ஆண்டு கொள்ளுவாய்; எசு
கொற்றவா![3] திவ்ய நற்றவா![4] சாமி!— நம்பி

மரி.—உப.

[1] அன்பு, மேன்மை.
[2] நல்திரு.
[3] இராசாவே!
[4] நல்ல தவத்தோனே!

## ௨௦௨. TRUST IN GOD AND SUPPLICATION FOR HIS SAVING AND SANCTIFYING AID. 202.

# தேவநம்பிக்கையின்பேரில்.

வெண்பா.

சத்துருக்கள் மூன்றாலும் தாழ்ந்தவினை மூன்றாலும்
இத்தரையில் வாழ்க்கை இடறுண்டேன்;—முத்தி
வரம்தான் அடைவதற்கு வல்லவனும் அல்ல
பரனே! எனைப்பார்த் தருள்.

இராகம், செஞ்சுருட்டி. ஏகதாளம்.

பல்லவி.

பரனே! உனை நம்பினேன்; உரமுடன் தாங்கையா!

சரணங்கள்.

௧

அருள் தருவாயே; அகம்[1] வருவாயே;
திரிவினை[2] தீர்த்து விடுவாயே; ஓகோ!— பரனே!

௨

மானில மீது வரும் பலன் ஏது?
வானில் எனைச் சேர்த்திடு வாயே; ஓகோ!— பரனே!

௩

அலகையை ஜெயித்தாய், அதின் திறம் அழித்தாய்;
உலக வழுக்கனைத்தும் துடைத்தாய்; ஓகோ!— பரனே!

௪

பாவிகட்காக, பரனே! நீ சாக,
பூ உலகில் வந்ததற்காக, ஓகோ!— பரனே!

௫

தீயர்கள் உய்ய, தேவரீர் செய்ய
மாய உலகில் வந்து மாண்டாய், ஓகோ!— பரனே!

௬

விசுவாசம் தரவும், விசும்பில் யான் வரவும்,
அசுசி அகற்றவும், அடியேனை, ஓகோ!— பரனே!

[1] மனதில். [2] சிந்தை, செய்கை, சொல்லால் உண்டாகும் வினை.



௭

அங்கத்தில் நோயும், ஆன்மாவில் பேயும்;
பங்கப்படுத்தவே பார்க்கிறதே; ஓகோ!— பரனே!

ஜா.—பா.

## ௨௦௩. THE LORD IS MY SHEPHERD. (Ps. 23.) 203.

# திவ்விய மேய்ப்பன். (சங். 23.)

விருத்தம்.

சீவகாலம் முழுதும் என்னைத் திரள்தயை யால் நிரப்பி,
சாவதில் சேம மாகத் தாங்கியே நடத்தி விண்ணில்
ஓவலில்லாப் பேரின்ப உச்சித வாழ்வில் சேர்க்கும்
தேவ பிதா என் மேய்ப்பன் சிறுமை தாழ் வடைகிலேனே.

இராகம், இங்கிலீஷ். ஆதிதாளம்.

பல்லவி.

தேவ பிதா எந்தன் மேய்ப்பனல்லோ?
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

அனுபல்லவி.

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர்நீர் அருளுகின்றார்.— தேவ

சரணங்கள்.

௧

ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதியென்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்.— தேவ

௨

சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே;
வானபரன் என்னோடிருப்பார்,
உன் தடியும் கோலுமே தேற்றும்.— தேவ

௩

பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி,
சுக தயிலம் கொண் டென் தலையை
சுபமாய் அபிஷேகம் செய்குவார்.— தேவ

௪

ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்;
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்.— தேவ

T.—யோ.

௨௦௪. WATCHING UNTO PRAYER. **204.**

# செபத்தைப்பற்றி.

இராகம், இரேதாரகௌளை. ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தை நொந்து, மனமும் தளர்ந் தகம் அ
யர்ந்த தெந்தனுக் கிரங்கையா!

அனுபல்லவி.

எந்தையே! அடியேன் எப்போதும் உனக்கஞ்சி,
அந்தி சந்தியும் வணங் காவல் தா, என்று கெஞ்சி;— சிந்தை

சரணங்கள்.

௧

ஆதம் ஏவையி னதமத்தால் எனை அடைந்த அபாரி மிதக்கேடு
கள் நீங்கவே,
நீதில்லாத உன் னற் றிருமறையைக் கடந்த தீங்கை கிறிஸ்தென்
கல்வாறை வாங்கவே,
நீதி தேடித்தேன் மூலம் நீசன் தனைத் தாங்கவே,
சோதி முகத்தோய்! நீயே துணை என்று கெஞ்சி, கெஞ்சி,—
சிந்தை

௨

ஓதும் வேத மதை உணரும் மன தடைந்திவ் வுலகின் கல்வி
களைத் தள்ளவும்,



நீதி இந்த நீசன் நிமித்தம் சம்பாதித்த நிமலன்[1] தனை அறிந்து,
கொள்ளவும்,
காதலோடே[2] உயர் கதியை தினம் உள்ளவும்,[3]
ஆதியே! உதவென் றனுதினம் கெஞ்சி, கெஞ்சி,— சிந்தை

௩

பாவ மோசனமும், பரிசுத்த குணங்களும், பரத்தைக் குறித்து
நிச்சய மனதும்,
தேவ கோபமதைச் செலுத் தேசுவோ டைக்யம் செய்வி மெய்
விசுவாசமதும்,
பூவில் ஒளிபோல் தோன்றும் புத்தி நடக்கையதும்,
தேவ வரமும் தந்து, சேர்; எனக் கெஞ்சி, கெஞ்சி,— சிந்தை

தே.—மு.

௨௦௫. PRAYER FOR THE PRESENCE OF CHRIST. **205.**

*At this time be gracious and look upon me.*

# கிறிஸ்துவின் அருளைத் தேடல்.

வெண்பா.

பாவிகளை மீட்க என்றே பாரில் அவதரித்த
தேவ பிதாவின் திருமகனே!—பூவுலகில்
ஆதாரம் அற்ற அடிமைக் கிரங்குவாய்;
வேதா! தருணம் இது.

இராகம், இந்துஸ்தானி. அடதாளசாப்பு.

பல்லவி.

தருணம் இதுவே, கிருபை கூரும்,
விழிபாரும், பதம் தாரும், தாரும்.

சரணங்கள்.

௧

கருணை தெய்வ குமாரா! கன மனுடவதாரா!
அருமை ரட்சக யேசு நாதா!—உல
கனைத்தும் வணங்கும் சத்ய வேதா!—உன்றன்
அடியார்க் கருளும் திருப் பாதா!—சற்ப்ர தரு
சாதா! நீதா!—

[1] பரிசுத்தன், கடவுள். [2] விருப்பத்தோடே. [3] எண்ணவும்.

உ

கற்பின் மரி வயிற்றில் ஊற்பவித்துப் பிறந்த
கருத்தவியமே! ஏசு ராசா!—பரி
சுத்த சத்திய உபதேசா!—எனை
கடாட்சித்தருளும், சருவேசா!—கிருபை
வாசா! நேசா!— தரு

ங

வானத்திருந்து வந்த ஞானத்தொளி சிறந்த
மகிமைப் பிதாவின் திருப் பாலா!—ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா!—கன
விந்தைக் கருணை மனுவேலா!—மெய்ந்
நூலா! சீலா!— தரு

ச

அற்ப உலக வாழ்வில் அலைந்து, நிலை குலைந்து,
அலகைப்படு குழியில் வீழ்ந்து;—தாழ்ந்து,
அஞ்சி அஞ்சி நவிற் தேனே;—அடிமைக்
கஞ்சல் என்று சொல்லும் கோனே!—சி
மானே! தானே!— தரு

ரு

இந்த உலகத் தெமைச் சந்தித் தனுக்கிரகித்த
சொந்தக் கிருபைகள் மா காத்ரம்,[1]—அவை
சிந்தித்து முடியா விச் சேத்ரம்,[2]—கிர்ப்
பந்த அடியார்கள் எம் மாத்ரம்!—பத
தோத்ரம், தோத்ரம்— தரு

வே.—சா.

உ0சு. NOW BESTOW THY PRESENCE. **206.**

*An opening hymn.*

## தேவ காட்சியை வாஞ்சித்தல்.

வெண்பா.

உன்னைப் பணியும் உனதடிமை யான் அன்றோ?
என்னைப் பிரியாதே, என்பரா!—தன்னும்
மரணத் தருவாயும், மற்றும் எனக்கான
தருணமதில் உன்காட்சி தா.

[1] முக்கியம். [2] அதிசயம்.



இராகம், பைரவி. திரிபுடைதாளம்.

பல்லவி.

தருணம் ஈதுன் காட்சி சால!
அருள்; அனாதியே!—திவ்ய—சருவ நீதியே!

சரணங்கள்.

க

கருணை ஆசன ப்ரதாப
சமுக சன்னிதா!—மெய்—பரம உன்னதா!— தருண

உ

பர சுரர் நரர் பணிந்து போற்றும்
பரம நாயகா!—நின்—பத்தர் தாயகா!— தருண

ங

உன்னதத்திருந் தென்னை ஆளும்
ஒரு பரம்பரா!—நற்—கருணை அம்பரா![1]— தருண

ச

அரிய வல்வினை தீர்ப்பதற்குற
வான தீட்சகா!—ஓர்—அனாதி ரட்சகா!— தருண

ரு

அலகை, நரகை அகற்றி, முழுதும்
அடிமை கொண்டவா!—என—தருமை கண்டவா!—
தருண

சா

தினம் தினம் நரர்க் கிரங்கும், இரங்கும்,
தேவ பாலனே!—இம்—மானுவேலனே!— தருண

வே.—சா.

உ0எ. GOD'S ABIDING PRESENCE SOUGHT. **207.**

## பாவி கிறிஸ்துவை தன்னில் நிலைத்திருக்க கெஞ்சுதல்.

இராகம், புன்னாகவராளி. அடதாளம்.

பல்லவி.

ஆதி யாம் மகா ராஜனே!—எந்த வேளையும்
அடியனோடிரும் ஈசனே!

[1] மிக. [2] கடல்.

அனுபல்லவி.

நீதில்லா சருவேசா! தேசுறும் பிரகாசா!
பாதகன் யான் மிகு பலவீனன் ஆனதால்,— ஆதி

சரணங்கள்.

௧

பாவி பெலனுல் ஐயனே!—நின்றால் என்னை
பகைவர் ஜெயிப்பார் மெய்யனே!
தேவா! துணை நீர் ஐயனே!—சிறியனிடம்
சேர்ந்தே வசியும் துய்யனே!
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும் காவலன் நீரே;
சாவுவரையும் என்னைத் தாங்கி அரவணையும்;— ஆதி

௨

இரக்கம் பொழிய வாருமே,—கிருபையாக
இறைவா! என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே,—அனவரதம்
உந்தன் அருளைத் தாருமே;
செருக்காய் எம்மீ திகலோர் சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை அகற்றி என்னில் தினமும் அருள்புரியும்;— ஆதி

௩

எந்தன் மரண மட்டுமே,—அருகில் நீரே
இருந்தால் மகா இஷ்டமே;
எந்த அகிதர் கெட்டுமே,—இமைப் பொழுதில்
எகிப் போவார் திட்டமே;
தந்தை சுதன் நீரல்லால் தஞ்சம் வேறொரும் இல்லை;
விந்தை மேவும் கதியில் மேன்மையுடன் வாழ்கவே.— ஆதி

C.—யோ.

## ௨௦௮. THE DUTY OF HOLY LIVING. 208.

## பாவத்தை வெறுத்தல்.

வெண்பா.

அக்கிரமத் தாற்றேன்றி, ஆகா நினைவடைந்து
உக்கிரத்தை யேஉவக்கும் உள்ளமே!—விக்கினம்செய்
மாகொடுமையால் நிறைந்தே மண்ணுலகில் வைகுகின்றாய்
ஓகோ! பவத்தினைவிட் டோடு.



இராகம், காபி. ஆதிதாளம்

பல்லவி.

ஓகோ பாவத்தினைவிட் டோடாயோ?
உள்ளமே! ஏசு அன்பை நாடாயோ?

சரணங்கள்.

௧

மா கிருபையாக, ஏகன் அன்பாக
வந்த நிலையோ, புவியில் உனக்காக?— ஓகோ!

௨

நாற்பது நாளாய்த் தீப்பசிக் காளாய்
நாதன் உன் பொருட்டிருந்தார், கேளாய்;— ஓகோ!

௩

யூதர்கள் வைய, வேதனை செய்ய,
உன் பவம் செய்த தவர் உளம் நைய;— ஓகோ!

௪

சிலுவையில் இறுக்க, உலகரும் நொறுக்க,
செய்ததுன் பவம் மேசியா இறக்க,— ஓகோ!

௫

அலகை[1] உன் மீது பல வகைத் தீது
ஆவல் உடன் செய்வதால் புவி மீது,— ஓகோ!

௬

ஐயோ, என் மனமே! வையகம் வனமே;
அழியா உலகில் அன்புற் றனுதினமே;— ஓகோ!

ஜா.—பா.

## ௨௦௯. THE GODLY AND THE UNGODLY. (Ps. 1.) 209.

## பத்தர் அவபத்தர் பண்பு. (சங். 1.)

வெண்பா.

ஆனந்த தெய்வம் அவனியின் மாந்தர் பேர்
ஆனந்தம் எய்த அளித்திருக்கும்—ஞானநூல்
தன்னில் ஓர் ஆகமமாம் சங்கீதம் சாது துஷ்டர்
இன்னார் என இயம்பக் கேள்.

1 பிசாசு.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

சன்மார்க்கர் பண்பும்—சாற்றக்கேளும்,
துன்மார்க்கர் பண்பும்.

அனுபல்லவி.

நன்மார்க்கமாம் வேதம் நவிலுகின்றபடி
சன்மார்க்கர் துன்மார்க்கர் சமசாரம் கேளும்,— சன்

சரணங்கள்.

௧

கயவரின் பொல்லா—ஆலோசனைக்
கற்றதில் செல்லா,
பயமில் பவிகளின் பாதை நில்லாமல்,
பரிகாசர் இடமுனி பண்போர் சன்மார்க்கர்;— சன்

௨

கர்த்தரின் வேதம்—அல்லுபகல்
கருத்துற்ற போதம்,
நித்தமும் தியானித்து நேர்நெறி நடப்போர்,
நிமலனார் உகக்கின்ற நேய சன்மார்க்கர்;— சன்

௩

நீர்க்காலின் ஓரம்—நடப்பட்டு
நீர்மை நற் சாரம்,
தேக்கியே கனி தந்து இலைஉதிராத் தருச்
சிறப்பென வாழ்ந்து, சித்திப்பார் சன்மார்க்கர்;— சன்

௪

அதமர்கள் காற்று—போர்கள் மேலே
அடிக்கும்கால் தூற்று,
பதர்கள் போலே ஓடி பாணிடும் தீர்ப்பிலும்,
பரிசுத்தர் சபையிலும் தரியாத் துன்மார்க்கர்;— சன்

௫

சீறியரி பாதை—கடவுளார்
தெரிவரே, தீதை,
வீரியமாய்ச் செய்யும் வெய்யவர் வழியில்
வேதனைகள் எய்து மிவர்கள் துன்மார்க்கர்;— சன்

T.—யோ.



## ௨௱௰. THE CHARACTERISTICS OF THE GODLY. (Ps. 15.) 210.

## திருத்தொண்டரின் அறநெறி. (சங். 15.)

வெண்பா.

உன்னதவானே! உயர்ந்த பரமண்டலமே!
உன்னிடத்தில் நான் கேட்கும் ஓர் வினா—என்னவென்றால்,
கர்த்தரின் வீடதனைக் காண்பதார்? அந்தப் பரி
சுத்தமேட்டில் தங்குவதார்? சொல்.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

கர்த்தரின் வீட்டில் தங்குபவனார்?—அவர் பரி
சுத்த மேட்டில் வசிப்பவனார்?

அனுபல்லவி.

நித்த முண்மை யோடு நல்ல சுத்தனாகவே நடந்து,
சத்தியத்தை மனதாரச் சாற்றுவோனே தங்கிடுவான்.—கர்த்த

சரணங்கள்.

௧

தன்னாவைப் பொய்சொல்லி அசுசிப்படுத்தாமல்
தன்னயலார்களுக்குத் தீங்கு செய்யாமல்,
அந்நியன்பேரில் நிந்தை அவதூறு பேசாமல்,
முன்னவனுக் கேற்றதாய் மொழிபவன் தங்கிடுவான்.—கர்த்த

௨

ஆகாத செய்கைகளை அகற்றியே தள்ளிவிட்டு,
அக்ரமக்காரர் பேரில் ஆசை அன்பு கெட்டு,
ஏகனின் பத்தர் மேலே இன்பம் பிரீதியுற்று
சாக நேரிட்டும் ஆணை தவறாதோன் தங்கிடுவான்.— கர்த்த

௩

பெரும் வட்டி வாங்கியே பொருளீட்டஞ்செய்யாது;
பேதை நிரபராதிகள் மேலே தீது
வரும்படி பரிதானம் வாங்காமல் துப்புரவாய்
தரும நெறி ஒழுகும் சான்றோரே தங்கிடுவார்.— கர்த்த

N.—சா.

## ௨௧௧. HOLY LIVING. 211.

# ஆத்துமாவுக்கு நற்போதனை.

இராகம், தோடி.

பல்லவி.

மகிழ்ந்து, புகழ்ந்து, மிகப் பணிந்து, துதித்து, கிறிஸ்தை
வாழ்த்தி, போற்றும், என் ஆத்துமாவே!

அநுபல்லவி.

தகுந்த காலத்தில் கிறிஸ்துன் அகந்தைப் பவம் தீர்த்துன்னை
தமது கிருபைச் சமுகந்தனில் சேர்த்ததால்,— மகிழ்ந்

சரணங்கள்.

௧

அலகை உன்மேல் வர்மமாய்ப் பகை எடுத்தான்;
அகந்தை மிகும் வஞ்சக பாணத்தைத்[1] தொடுத்தான்;
உலகப் பொருளில் சிக்கும் மயக்கத்தைக் கொடுத்தான்;
உள்ளத் தெழுப்பிக் கெட்ட இச்சையால் கெடுத்தான்;
உந்தன் மீதினில் சிந்தை வைத் திறையோன்,
துறையோன்,[2] மறையோன்,—ஒரே
சொந்தப் புதல்வனைத் தந்ததால் அவர்
வந்து, தீயோனை வென்றுந்தனை மீட்டார்;— மகிழ்ந்

௨

சிந்தை மகிழ்ந்து சத்திய மார்க்கத்தில் ஓடு;
தினம் தினம் ஜெபத்தில் தேவாவியைக் கூடு;
விந்தையாய் மெய்ஞ்ஞான பதங்களைப் பாடு;
விண் உலகத்தின் நித்திய வாழ்வினைத் தேடு;
வீரமாய் மறை கூறும் சத்தியமே,
நயமே, ஜெயமே—திவ்விய
சாரமாய் வெகு தாரமாய்ப் பார்த்து,
சேருவாய்; களி கூருவாய் தினம்— மகிழ்ந்

௩

அவரைப் பின் சென்ற பின்பாசை ஆகாது;
அநித்திய உலகத்தின் பாசம் ஆகாது;

[1] அம்பை. [2] ஒதுங்குமிடமானவன்.



பவம் மிகும் மாமிச இச்சை ஆகாது;
பரிசுத்த நெறி விட்டுப் பிரியல் ஆகாது;
பந்தயப்பொருளைச் சிந்தையில் எண்ணியே
நண்ணியே,[1] உன்னியே,—மகா
விந்தைக் கிறிஸ்தரசன் உந்தன் சிரத்தின் முடி,
சந்தோஷமாய்ச் சூட்ட முந்தி ஓடு, மிக— மகிழ்ந்

மரி.—௨.ப.

## ௨௧௨. THE FIRST PSALM. 212.

# முதலாம் சங்கீதம்.

தீயோர் உரை கேளான், தீயோர் வழிச் செல்லான்;
தீயோர் முறையோதான், செல்வோனை;—தூயமறைச்
சொல்லொன்றே தேடகத்தான், சோராதி ராப்பகல்
செல்லொன்றே சூழுணர்வான், செல்வோனே;—ஒல்லெனப்
பாய்
நீர்முகத்துப் பொய்யா நிறைகனிகொய் கொம்பொப்பான்
கார்முகத்துப் பாசிலையும் காய்ந்துதிரா—சீர்முகத்து
மாசுள்ளோர்க்கெல்லாம் மயக்கம் அற வாழ்வாமே;
ஆசுள்ளோர்க் கப்படியோ அன்றன்றே;—தூசிபெறக்
காமமுதல் பற்றுதலால் கால்சுழற்றும் தூசியென
நாமமுதல் அற்றழிவார் நச்சறிவார்;—வீமமிகத்
தீர்வையிடு நாளில் திகைந்தேங்கி நல்லவருட்
சோர்வையுறத் தாம்பிரிந்து சூழ்ந்துளைவார்—போரவையில்,
தூயோர் நெறியறிவான் சூழாள்வான் கேடுகுக்கும்
தீயோர் நெறியறிவான் சேர்ந்து.

வீர.

## ௨௧௩. THE DUTIES OF CHRISTIANS. 213.

# கிறிஸ்தவர்களுடைய கடமைகள்.

இராகம், தசாவந்தி. ஆதிதாளம்.

பல்லவி.

புத்தியாய் நடந்து வாருங்கள்;—திரு வசனப்
புட்டைத் திறந்து பாருங்கள்.

[1] விரும்பியே.

அனுபல்லவி.

சத்தியத்தைப் பற்றிக்கொண்டு,
தன்னைச் சுத்தி பண்ணிக்கொண்டு,
நித்தமும் செபம், தருமம்
நீதி செய்து, பாடிக்கொண்டு,— புத்தி

---

சரணங்கள்.

க

ஒன்றான பிதாவின் மக்களே;—கிறிஸ்தின் ரத்தத்
தொன்றுடன் சகோதரர்களே!
குன்றாத சுதந்தரர்களே!—நீங்கள் எல்லாரும்
கோதில்லாத நீதிமான்களே!
சண்டாளப் பசாசின் மக்கள் தங்களைப்போல் வாதுபண்ணிக்
கொண்டு, திண்டு முண்டு செய்தால், கூற என்ன நீதி உண்டு;
—புத்தி

உ

அன்பு கூர்ந்திருக்கச் சொன்னாரே,—கிறிஸ்து நமை
ஐக்கியமாய்ப் போகச் சொன்னாரே;
இன்பமாய் நடக்கச் சொன்னாரே;—ஆவியில் ஒன்றாய்
இசைவாகப் பேசச் சொன்னாரே;
பண்பில்லா மிருகம்போலும், பாவப் பேயின் மக்கள்போலும்,
துன்பம், பொய்யு, வன்மம், பகை, தூஷணஞ் செய்யாமல்,
நல்ல— புத்தி

ங

உலகப் பெருமை வேண்டுமோ?—இவ்வுல கழுக்
குற்ற குப்பை யாக வேண்டாமோ?
பலன் இப்புவியில் வேண்டுமோ?—மறு உலகப்
பங்கில் ராசரீகம் வேண்டாமோ?
கலகக் காரர்களாகி, கர்த்தரை விட்டு நரகில்
தலை கீழாக விழாமல் சத்தியத்தில் நடவுங்கள்— புத்தி

ச

ஆருடைய பிள்ளைகள் நீங்கள்?—திரு உரையில்
அறிந்து உணர்ந்து பாருங்கள்;
சீருடைய தெய்வப் பிள்ளைகள்,—நீங்கள் எதிர்ந்த
தித்தரிப்பு[1] செய்யும் வகைகள்

---

[1] வஞ்சகம், உபாயம்.



கூருடன் மெய்த் திருமறை குறித்துச் சொல்வதை தினம்
நேருடன் ஆராய்ந்து பார்த்து, நித்திய ஒளியில் தானே,—புத்தி

ரு

அகந்தை பெருமை ஆகுமா?—இறுமாப்பு, கோள்,
அடம், பகை, வன்மம் ஆகுமா?
இகந்தனைத் தேடல் ஆகுமா?—உலகத்தின் கண்
இச்சையுடன் உறவாகுமா?
சுகம் தப்பி, என்றும் உள்ள துன்பத்துள் பட்டிடாமல்,
உகந்து, கிறிஸ்து சொன்ன உண்மைப்படி தன்னைக் காத்து,—
புத்தி

சு

ஆவியை அடக்காதிருங்கள்;—நான் சொல்லுவதை
அசட்டை செய்யாமல் பாருங்கள்;
சீவனை அடையத் தேடுங்கள்;—ஏசுக் கிறிஸ்தின்
சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள்;
மேவி ஜெபம், மன்றாட்டு, விண்ணப்பம், வேண்டுதலோடு
தாவி, ஏசுவைப் பிடித்து, தளரா நடையோ டுன்னி, — புத்தி

எ

சாதி பேதம் சொல்வர் அல்லவோ?—கிறிஸ்தவர்கள்
தானே தெய்வ சாதி அல்லவோ?
நீதி பரிசுத்தர் அல்லவோ?—மகிமையுள
நேசம் மிகு ராசர் அல்லவோ?
பேதனை உண்டாக்கும் சாதி வேற்றுமையை விட்டு, மறை
ஓதியபடி எல்லாரும் உத்தம கிறிஸ்தோராக,— புத்தி

அ

பொக்கிஷத்தை எங்கே வைத்தீர்கள்?—பரத்தில் வைத்தால்
பூரண பலன் அடைவீர்கள்;
நெருக்கிச வழியே செல்வீர்கள்;—கடைசியிலே
கண்டு ஜீவனை அடைவீர்கள்;
முக்கியமாய் எதைத்தேட, முன்னவன் சொன்ன சொற்படி,
மெய்க்கிறிஸ் திருப்பிடத்தின் மேலானதை நாடித் தேடி,—
புத்தி

௯

கக்கத்தில் கையிலேல், வாயினில்—வீட்டினில் மறை
கண்டால் போதுமோ மனதினில்,
தக்கப் பதிந்[1] தேசோவாவினில்—அன்புகூர்ந்துங்கள்
தங்களைப் போலவே பிறரில்
மிக்க அன்பு கூர்ந்து, செய்யவேண்டாமோ? கிறிஸ்துவை
முக்கிய மொழி ஈதாமே; முற்றிலும் கைப்பற்றி தினம்—
புத்தி

௰

எசுக் கிறிஸ்தையன் பதத்தைத்—துதித்துப் போற்றி
இன்பமாய்ச் சத்திய வேதத்தை
வாசித்தா ராய்ந்து கலத்தை—பிடித்துன்னத்தில்
வைத்துக்கொண் டிவ்வுலகத்தை
நேசியாமல் பகைத்துங்கள் நித்திய ரட்சிப்பை தினம்
ஆசையோடு தேடி, நீங்கள் அடையும்படி, முற்றிலும்— பு

௰௧

ஐயன் வருவார் நமைச் சேர்க்க—பூமியில் என்றும்
ஆளுகை செய்தோன்றாய் இருக்க,
வையக மனுக்கள் திகைக்க,—கிறிஸ்தோர்களின்
மகிமை மேன்மேலும் சுதிக்க,
தூயன் சீயோன் மலையில் சுதந்தரராய் வீற்றிருக்க,
மெய் இது பொய்அல்ல, உங்கள் மேன்மை இதை எண்ணி
தினம்— புத்

௰௨

முதலாவ துயிர்த்தெழுதல்,—தனக்குப் பங்கு
முத்திப் பெறப் பாத்ரமாகுதல்
சதமடங்காகப் பெறுதல்—நன்மை நமக்கு
சாசுவதம் உள்ள வாழுதல்;
பதன வாசலில் சாங்கோ பாங்கமாய் ஜீவனைப் பெற்று,
அதரிசனமா ரூபில் அன்புடன் தரிசிக்கலாம்;— புத்

௰௩

பரிசுத்த கூட்டம், அல்லவோ?—நீங்கள் எல்லாரும்
பரன் மகன் தேட்டம் அல்லவோ?
தரிசிக்க காட்டம் அல்லவோ?—கிறிஸ்தை உள்ளம்
தன்னிலே கொண்டாட்டம் அல்லவோ?
பரிசனை செய்தவர் போல், பாதத்தை மனதில் உன்னி,
தரிசனை யோடு தேடி, காணத் தீயோன் நாணப் பாடி,—புத்

[1] இருக்க.



௰௪

எத்தனை என்று நான் சொல்லட்டும்;—திருமறை தான்
ஏற்றித் தினம் சாற்றி வரட்டும்;
சத்திய தேவாவி சொல்லட்டும்;—உங்கள் மனது
தன்னிலே நல் எண்ணம் வரட்டும்;
நித்திய பிதாக் குமாரன் நேர் நல் ஆவி மூவராலும்
பத்தி, விசுவாசம், சிவ பாக்கியம் உண்டாக ஆமன்;— புத்தி
மரி.—உப.

## உகச. I WILL WALK WITHIN MY HOUSE WITH A PERFECT HEART. 214.

## நீதிமானின் நிர்ணயம்.

கலித்துறை.

இனிப்பும் கசப்பும் கலந்தே சுவைக்கும் இகத்தினிலே
எனக்குக் கடவுள் அமைக்கும் நிலைமை எதுவெனினும்
மனதில் முறுமுறுப் பில்லாது ரம்மிய மாயிருந்து
தினமும் புனிதமாய்ச் சீவித்துப் போற்றுவேன் தேவனையே.

இராகம், சகாணா. மிசிரதாளம்.

பல்லவி.

ஆண்டவரின் நாமமதை ஈண்டு[1] போற்றுவேன்—அவர்
ஆளுகையின் நீதி அன்பில் வாழி சாற்றுவேன்.

சரணங்கள்.

௧

உத்தம வழியில் நிதம் புத்தி கொள்ளுவேன்,—மன
உண்மையுடன் வாழ்ந்து தீய கன்மம் தள்ளுவேன்.— ஆண்

௨

கெட்ட விஷயங்கள் எனை ஒட்டுவதில்லை,—மதி
கேடரின் புரளிகளும் கிட்டுவதில்லை.— ஆண்

௩

வஞ்சகங்களை உகக்கும் நெஞ்சை நீக்குவேன்,—பொல்லா
மார்க்கங்களிலே நடக்கும் தீர்க்கம் போக்குவேன்.— ஆண்

[1] இங்கே.

௪

மற்றவனை ஏசி வாயால் குற்றங்கள் செய்யும்,—துஷ்ட
மாந்தர் மேலே பற்றுமவென் பாந்துவம் நையும்[1]— ஆண்

௫

சீரியர்கள்[2] பேரிலன்பு கூருவேனே,—நல்ல
சீரொழுகு சான்றோர்[3] தமை சேருவேனே.— ஆண்

௬

பொய்யர்களை என்னுடனே உய்ய[4] ஓட்டேனே,—மகா
புரளிசெய்யும் எத்தர்களின் திரளில் கிட்டேனே.— ஆண்

T.—யோ.

## உகரு. WHO ARE THE BLESSED. (MATT. 5. 1-10.) 215.

## பாக்கியவான்களின் லட்சணம். (மத். 5. 1-10.)

விருத்தம்.

பாக்கியன் கிறிஸ் திறைவன்[5] பருவதம் வீற்றிருந்து,
யோக்கிய மலைப்பிரசங்கம் யூகமாய் மொழியும் காலை
வாக்கியம் கேட்போர் தம்முன் வரம்பெறு மனுவோராகும்
பாக்கியர்க்குரிய பண்பை[6] பகர்ந்தனர்[7] உகந்துகேளீர்.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

பாக்கியர் இன்னார்—என்றிறைவன்
பண்புடன் சொன்னார்.

அநுபல்லவி.

ஆக்கியோன் ஏசுவின் வாக்கியம் கேட்கவே
அனந்தமான சனம் வனந்தனில் நிற்கையில்— பாக்

சரணங்கள்.

௧

ஆவி பணிந்தோர்,—மனத்தாழ்மை—யான தணிந்தோர்,
பாவிகள் தாமென்று பயந்து நடப்போர்
தேவனின் இராச்சியம் சேர்வதால் பாக்கியர்;— பாக்

[1] அழியும். [2] உத்தமர். [3] அறிஞர். [4] வாழ. [5] அரசன். [6] குணத்தை. [7] சொன்னார்.



௨

துக்கப்படுவோர்—பவத்துக்காய்—துயரப்படுவோர்,
விக்கினமின்றி எம் வேதன் அருளினால்
மிக்க மெய்யாறுதல் மீட்புறும் பாக்கியர்;— பாக்

௩

சாந்த குணத்தோர்,—சண்டை கோப—தாபம் வெறுத்தோர்,
வேந்தனார்[1] செய்கையுட் சாந்தனையும்[2] கொள்வோர்
மேதினி[3] வாழ்விலும் விண்ணிலும் பாக்கியர்;— பாக்

௪

நீதியின் பேரில்—பசி தாகம்—நித்தம் கொள்வோரில்
போத மெய்ப் புத்தியும் பூரண பத்தியும்,
காதலன்[4] ஆவி கடாட்சிப்பர், பாக்கியர்;— பாக்

௫

இரக்கமுடையோர்—பிறர்மீது—உருக்கமுடையோர்
நெருக்கப்படுவோர்க்கு நேயமுற்றுதவுவோர்
பெருக்க இரக்கம் பெற்றிடும் பாக்கியர்;— பாக்

௬

சுத்த நெஞ்சத்தார்—தேவனருள்—சுகிர்த சென்மத்தார்
பத்தியில் வர்த்தித்து நித்தமும் தேவனின்
பரிசுத்த சமுகத்தை தரிசிக்கும் பாக்கியர்;— பாக்

௭

சமாதானத்தை—நடப்பித்து—சல்லியம் வாதத்தை
தமதுநா நடக்கையால் தள்ளி ஒழுகுவோர்
எமதேகன் சேயர்கள் என்னும் மெய்ப்பாக்கியர்;— பாக்

௮

நற்செய்கை யிட்டுப்—பகைஞரால்—நஷ்டங்கள் பட்டு,
துர்ச்செய்கை நீங்கியே துன்பப்படுவோர்
சுகலோகம் சேர்ந்தென்றும் முடியாதபாக்கியர்;— பாக்

T.—யோ.

## உகசா. BE CLOTHED WITH HUMILITY. 216.

## மனத்தாழ்மையை தரித்துக்கொள்.

வெண்பா.

சற்றும் அகம் தாழாமல் தற்பொழிவினால் நிறைந்து
முற்றும் இறுமாப்படையும் மூட நெஞ்சே,—உற்றறி நீ
சீழ்மையது மேவும் கெருவமதை தள்ளி மனத்
தாழ்மையதைத் தானே தரி.

[1] இராசன். [2] சாகுமனவும். [3] பூமி. [4] நேசர் or யேசுநாதர்.

இராகம், முகாரி. ஆதிதாளம்.

பல்லவி.

தரி—தாழ்மையே தெரிந்து—வெறு
தாட்டிகமதை[1] உரிந்து. (1பே. 5. 5.)

சரணங்கள்.

௧

திரித்துவத் தொருவராம் கிறிஸ்தேசு
செயலதை நீ குறி மனமே;—அவர்
தரித்திரனிகராய் இகத்தில் உற்பவமாய்த்
தாழ்ந்திருந்தார் அனுதினமே. (பிலி. 2. 5–8.)— தரி

௨

மனத்தரித்திரர் தாம் பாக்கியரெனவே
வாகுடன் அவர் உரைத்தாரே,—நெஞ்சே
உனக்குள் இத்தகமையான நற்குணமே
உண்டோ என்றாய்ந்து[2] நீ பாரே. (மத். 5. 3.)— தரி

௩

மேட்டிமை யுடையோர் மீது தற்பரனார்
வெறுப்படைந் தகற்றுவார் உடனே;—நல்ல
தாட்டிகமதிலாத் தாழ்ந்த சிந்தையினோர்
தமக்கருள் புரிகுவர் திடனே. (யாக். 4. 6.)— தரி

௪

ஆதியில் தூதர்களில் சிலர் கெருவம்
அடைந்து நல் வாசமற்றாரே,—உடன்
தீதுறு பேய்களாய் எரிநரகில்
சேர்ந்ததி சாபமுற்றாரே. (யூதா. 6. 2 பே. 2. 4.)— தரி

௫

தொன்[3] நிறை[4] நேபுகாத் நேச்சர் தன்
துடுக்கிறுமாப்பதினாலே—வனம்
சென்று பன்னாய்ப் புல்லினை மேய்ந்து
திரிந்தனன் மாடது போலே. (தானி. 4. 30.)— தரி

௬

தேவனின் ஒலி[5] யென் றியாவரும் புகழச்
செருக்குற் றேரோது சிறந்தானே,—அவன்
கேவலமாய், தேவதூதன் வந்தறைய,
கிருமிகள் அரித்திறந்தானே. (அப். 12. 20–23.)— தரி

1 பெருமை. 2 ஆராய்ந்து. 3 பூர்வம். 4 இராசன். 5 சத்தம்.



௭

தற்பெருமையினால் சதிசெய்த ஆமான்
தனதிருப்பிடம் கொலைக்களமே;—நீயும்
அற்பமும் இறுமாப்படைகுதல் இதென்
றாய்ந்துணர்வடை எனதுள்மே. (எஸ்தர். 7. 10.)— தரி

௮

நானெனும் நினைவு தானுறு மெவரும்
நசிவது[1] திடம் உணர்விலையோ?—ஐயோ!
வானதிலே சிரஞ்சீவிகளாக
வசிப்பதற்கிது தருணமிலையோ? (மத். 23. 11.)— தரி

கா.—பா.

## ௨௧௭. SELF-EXAMINATION. 217.

## தற்சோதனை.

விருத்தம்.

இக்கிலந் தனிலே சால எதிர்செயும் அலகையோடே
துன்னிய உலகம்ஆதி சோதனை பலவும் உண்டே
தன்னிலே யேயும் மெத்த சதியுள பிறவி ஆனாய்;
உன்னையே நிமிஷந்தோறும் ஓர்ந்தறி யாயென் னெஞ்சே.

இராகம், வசந்தபைரவி. அடதாளசாப்பு.

பல்லவி.

உன்னையே நிமிஷந் தோறும் ஓர்ந்தறி, மனமே!

அனுபல்லவி.

உன் நினைவும், உன் விருப்பும்
இன்ன தின்ன தென்றுணர்ந்து,— உன்னை

சரணங்கள்.

௧

சுற்றி நிற்கும் பாவம் உனைப் பற்றினதுண்டோ, நீ நினை;
வெற்றி கொள்ளாதே அதன் கீழ் வீழ்வை ஆனால், மீள்வ
தெங்கே?— உன்னை

1 அழிவது.

௨

போக ஒண்ணுத் தலந் தன்னில் போக ஆசைகொண்டே உன்னில்
ஏகனுக் கிதிசையாதென் றின்றடங்கல் நன்றலவோ?—உன்னை

௩

முன் அருவருத்த தீதைப் பின்னும் நீ நினைக்கில், வாதை
தன்னையே வருத்தம் என்று சஞ்சலம் கொண் டஞ்சுவாயே;
—உன்னை

௪

மெய் முழுதும் தீவினையே செய்குவதினால் உனையே
ஐயம் அற ஆய்ந்தறிதல் எய்துவ தெவ்வாறெனவே;— உன்னை

௫

கண்ணினால் இங்குற்ற தோஷம் எண்ணில், ஓகோ! மிகு மோசம்;
கண்ணும் ஓர் பார்வையிலும், நீ கன்று தீதி தென்று கண்டு;—உன்னை

௬

வாய் செவியால் வந்த தீது நீ உணரில் அள வேது?
தீயதாம் இப் புலன் எல்லாம் செய்வினை அனைத்தும் நோக்கி;—உன்னை

ஜா.—பா.

௨௧௮. ALMS-GIVING AND CHARITY. **218.**

# தர்மஞ்செய்வதின்பேரில்.

விருத்தம்.

பூதலந் தன்னில் வாழும் புகழ்பெறும் மைந்தரே! நீர்
நீதமாய் நடந்தோமென்று நினைவுறில் போமோ? கேளீர்,
போதமாய் நன்றி, தர்மம், புரிந்திடா திருக்கில், இது
நீதிதான் ஆச்சு தோ? மா நெறியுளோரே! சொல் வீரே.

இராகம், பியாகு. ஆதிதாளம்.

பல்லவி.

நீதி யாமோ நீர் சொல்லும்?—ஐய்,
நெறியுளோரே! அறஞ் செய்யாதிருந்திடில்;—நீதி



சரணங்கள்.

௧

வாதைகொள் ஏழையின் நேரே,—சற்றும்
மனமிரங்காப் பெரி யோரே!—இது
நீதியாமோ என நீரே!—இப்போ
நேசமாய் தெளிந்து பா ரீரே!— நீதி

௨

ஆதுலர்க் கீவதே பாக்யம்,—பிறரை
ஆதரித்திடுவதே யோக்யம்,—ஓகோ!
பாதகஞ் செய்யில் நிர்ப் பாக்யம்,—மோட்ச
பாதை நடக்கில் சலாக்யம்.— நீதி

௩

அறம் செய்யும் குணமதை வியந்தே;—பவுல்
அறைந்தான் வேதத்தில் நயந்தே,—அதில்
குறித்திடும் முறையாய் மகிழ்ந்தே,—செய்யில்
கொற்றவன் அருள்வார் புகழ்ந்தே.— நீதி

௪

தரித்திரர்க் கிரங்குவோன் உடனே—இடுவான்
தற்பர னுக் கவன் கடனே,—என்று
கருத்துடன் சுருதியில் திடனே—உரைத்தார்
கடுநெஞ் சகல்வாய், மடனே.— நீதி

௫

அன்புடன் விதவையும் போட்ட—காசை
அதி வியப்பாய் யேசு காட்ட,—புகழ்
இன்புடன் அவள் மிசை சூட்ட,—அதை
எவர்களும் அகத்தினில் நாட்ட.— நீதி

௬

சோம்பிகட் கறஞ்செயில் தோஷம்!—மிகு
துயருறு வோர்க் கீதல் நேசம்!—அதில்
வீம்பு பாராட்டிடில் மோசம்!—யேசு
வேதனைப் புகழில் சந் தோஷம்!— நீதி

௭

பிறர் புகழும்படி இன்றே—செய்தால்,
பிரயோ சனமில்லை என்றே,—பரன்
மறையதில் விளம்பினார் நன்றே,—அம்
மாதிரி வில்காது நின்றே.— நீதி

அ
பரிதானம் வாங்குதல் தீது,—அதைப்
பறித்தறம் செய்தல் த காது,—உமக்
குரியதில் ஈவது போதம்,—இதில்
ஊன்றி இருப்பதே நீதம்.— நீதி

கூ
நன்மனதாய் இடில் நயமே!—யேசு
நாதன் புகழ்பெறில் ஜெயமே!—இதை
ஜென்மத்தில் எண்ணார் பயமே—அடைவார்,
சீக்கிரம் இதை உணர் சுயமே!— நீதி

ய
ஏழைகட் கீயாது ஆஸ்தி—யையே
இத்தலம் சேர்த்திடில் கீர்த்தி—ஏது?
வாழுல கடைந்தால் கோத்தி!—என்றும்
வாழலாம் அது மா பூர்த்தி!— நீதி

C.—யோ.

## ௨௧௯. THAT WHICH THOU FINDEST TO DO, HASTEN TO DO. 219.

# செய்யவேண்டியதைச் சீக்கிரஞ்செய்.

வெண்பா.

சாவு வருமுன்னே சற் குருவாம் ஏசுவையே
ஆவலுடன் தேடி அடைக்கலம்கொள்—பாவி நீ
உய்ய வகை இதுவே ஓர் நிமிஷம் போக்காமல்
செய்யத் தகுவதை நீ செய்.

பல்லவி.

செய்யவேண்டியதைச் சீக்கிரம்
செய், செய், செய், செய், செய்.

சரணங்கள்.

க
வையகமும்அதின் வாழ்வுகளும் மிக
மகிமை பெருமை பொருளானதுவும்,
வெய்யவன் கண்ட பனிபோலாகும் இது
மெய், மெய், மெய், மெய், மெய்.— செய்



உ
ஆவியும் கூடுவிட் டேகாமுன்,
ஆபத்து நாட்கள் வந்தணுகாமுன்,
தேவ சுதன் ஜெக ரட்சகரண்டை
சேர், சேர், சேர், சேர், சேர்.— செய்

ங
ஒளவியம் பெருமை அகந்தையும் அசுத்தமும்
அகற்றி நீ அனுதினமும்,
திவ்விய வேதத் தீவர்த்தி ஒளியினில்
செல், செல், செல், செல், செல்.— செய்

ச
துர்ச்சன ரோடுற வாகாமல் ஐயன்
துய்ய விதி பத்து மீறாமல்,
உச்சிதப் பதமருள் ஏசுவைப் பணிந்
துய், உய், உய், உய், உய்.— செய்

ஈ.—உப.

## ௨௨௦. THE VANITY OF THE WORLD. 220.

# உலகவாழ்வு மாயை எனல்.

வெண்பா.

உன்னதத்தை நோக்கி ஒரு பொருளைச் சிந்தனைசெய்,
பொன்னுலகைப் போக்கடித்துப் போடாதே;—மின்னல் ஒத்து
தாழ்வுதங்கும் பாழ்உலகச் சண்டாள மாமாய
வாழ்வைநம்பா தே,மன மே!

இராகம், ரேத்தா. அடதாளசாப்பு.

பல்லவி.

மாய வாழ்வை நம்பாதே, மனமே!
வாதை ஆம் பொல்லாத விக்கினமே.

அனுபல்லவி.

தீய துஷ்டப் பேய் நகைக்கத், தீமை புரியாதே,— மாய

சரணங்கள்.

௧

விந்தை மாதர், தந்தை தாயர், மைந்தர் தானும், பந்துளோரும்
நிந்தை செய் தொழிந்து போவர்; சந்தையாம் நன்றாதே.—மாய

௨

[illegible]டு மாடு, வீடு வாசல், மாட கூடம், மேடையோடு
பாடு[illegible]டும், காடு சாடும், கேடு நினையாதே.— மாய

௩

ஆனை, கொக்குச்[1] சேனை மெய்க்கும் பான்[2] உதிக்கும் பனி
ஒக்கும்;
வேனலுக்கும், வீழலுக்கும்[3] ஏன் மலைக்கிறாய் நீ?— , மாய

௪

பொட்டரிக்கும் சுட்டெரிக்கும் துட்டர் கொட்டம் இட்
டெடுக்கும்;
நட்டமிக்கும் கெட்டலைக்கும் பட்டிறக்கப் போறாய்,—மாய

வே.—சா.

## ௨௨௧. THE INSTABILITY OF EARTHLY THINGS. 221.

# உலகவாழ்வு அநித்தியம்.

வெண்பா.

நாளைக் கிருப்பாரை நாம்அறியோம், நாம்இரோம்
ஏழைத் தனமாய் இராதேயும்;—காளைகளே!
மல்லல்பட் டேனோ மயங்கிறீர்? ஒன்றும் இல்லை;
கல் அல்ல, வல்லும் அல்ல, காயம்.

இராகம், காப்பி. ஆதிதாளம்.

பல்லவி.

கல்லும் அல்லவே—காயம்,—வல்லும்[4] அல்லவே—இது.

அநுபல்லவி.

வெள்ளி பொன் விலைமதியா மேரும் அல்லவே.— கல்

[1] குதிரை. [2] சூரியன். [3] அற்பக்காரியம். [4] வலிமை.



சரணங்கள்.

௧

வல்லமை பேசாதே, நாளை வருவதறியாய்;—ஆதால்
நல்ல வழி தேடி, தேவ நாமத்தைத் தியானி.— கல்

௨

சூரியன் கீழ்க் கண்ட தெல்லாம் மாயை அல்லவோ?—சால்
மோன்
பார்[1] அறியச் சொன்னதை நீ பார்த்தறியாயோ?— கல்

௩

காற்றடித்த மேகம், புகைக் கொப்பதாகவே,—இங்கே
போற்றிய மனுடர் சீவன் போய் ஒழியுமே.— கல்

௪

வேகமாய் வடியும் ஆற்றுக் கொப்பதாகவே,—மாய
தேக நரர் நாட்களும் சீக் கிரம் கழியுமே.— கல்

௫

இராப் பகல் இருள், வெளிச்சம் மாறும் வண்ணமே—ஐயோ!
நராட்களின் மகிழ்ச்சிக்கு மா மாறுதல் உண்டே.— கல்

௬

பூவதும் உதிரும், பசும் புல்லும் வதங்கும்;—அது
போலவே நரர் உருவம் மாறி வதங்கும்.— கல்

௭

கொஞ்ச நாள் ஜெயஞ் சிறப்பான் பஞ்சை மனுடன்,—அவன்
கொஞ்ச நோய் வந்தால் கிடப்பான், தொஞ்சு போவானே.—
கல்

௮

மேலது கீழ், கீழதுமேல் ஆம் உருளை போல்,—நரர்
மேன்மையும் வாழ்வும் கீழது மேலும் ஆகுமே.— கல்

௯

பூவுலகின் மேன்மை என்ன! மா தரித்திரன்—போல்
யாவரும் வணங்கும் ராஜன் சாவும் ஒக்குமே.— கல்

௰

எத்தனை கற்றாலும் என்ன! சுத்தப் பேதைக்குச்—சரி
ஒத்தபடி செத்துப் போவான், முற்றும் மண்ணாவான்.— கல்

[1] உலோகம்.

௰௧
நுண்ணிமை ஞானி என்றாலும், கீர்த்தி பெற்றாலும்,—ஐயோ!
அன்னவன் மலையும் நேரம் யாவும் கலையும்.— கல்

௰௨
வெள்ளச் சேதத்துக்கும், பல விக்கினத் தாக்கும்—பார்
கொள்ளைக்கும் சடுதியில் போம், கூட்டும் ஆஸ்தியே.— கல்

௰௩
ஆசனம், துரைத்தனம், தத்துவங்கள் ஒழியும்—அர
சாண்ட மன்னரும் ஒரு நாள் மாண்டொழிவார்கள்.— கல்

௰௪
கொஞ்ச நாள் மினுக்கும் நரரின் சிறப்புகள்—செருக்கை
வெஞ்சிறு பூச்சிகள் அரிக்கும், வீ[1] அழிக்குமே.— கல்

௰௫
யாவும் ஓட்டமாகப் பாயும், யாவும் அழியும்;—மெய்
தேவபத்தியே செலிக்கும், சீவன் நிலைக்கும்.— கல்

வே.—சா.

## ௨௨௨. THE WORLD UNSATISFYING. 222.

## உலகப்பொருள்கள் நம்பத்தகாதவைகள்.

வெண்பா.

அன்னை, தந்தை, சுற்றம், அவனிஎல்லாம் ஓர்நாள்
மின்னினைப்போல், போயொழியும் விண்ணுலக—நன்மைதான்
போமோ ஒருக்காலும் போகா ததைத் தினமும்
நீ மனமே! தேடியே நில்.

இராகம், செஞ்சுருட்டி. திரிபுடைதாளம்.

பல்லவி.

நீ மனமே! பூமியினை நம்பாதே;
அதை மாயை என்றறி, நீ மனமே!

1 மரணம்.



அனுபல்லவி.

சாமித் துரோகமாமே, நம்பினால்;
சர்வமும் வெறு கிருபையைப் பெறு,— நீ மனமே!

சரணங்கள்.

௧
தேகம் மண்ணுக் கேகும் காலம் சேரிடுமே;—அந்தக் காலம் நீ பெற்ற
செல்வமும், பிறர் செல்வமாய் எண்ணப்படுமே;—முடிவாம் போதுனது
யோகமும், பிறர் யோகமதாகி விடுமே;—அந்த வேளையில் உனக்
குறுதியானவை பயன் இன்றி முற்றும் கெடுமே;
வேசமும் பாவ மோகமும் தடு; விண்ணினைத் தேடு; அண்ணலைப் பாடு,— நீ மனமே!

௨
அன்னையும், தந்தையும், யாரும் கைவிடுவாரே;—மாண்டு போன பின் உனை [யில் வைத்த
தருமை மக்களும் உரிமை விட்டிடுவாரே;—பூட்டுப் பெட்டி
பொன்னும் பணமும் எடுத்துப் பங்கிடுவாரே;—சண்டை போட்டுப், போட்டு;
பூஷணங்களை[1] நிறுத்துப் பங்கிடுவாரே;
நன்னிலம் தோட்டம், ஆடு மாடுகளில்
நல் பங்காகித் துணைப் பற் பல பேசுவார்;— நீ மனமே!

தே.—மு.

## ௨௨௩. TRUST NOT THE WORLD, IT PASSES AWAY. 223.

## உலகவாழ்வு அநித்தியம்.

வெண்பா.

இவ்வுலக வாழ்வினையோர் இன்பமென்றிங் கெண்ணாமல்,
கவ்வையில் வான்வாழ்வில் காதலாய்—கல்விமுதல்,[2]
தீயோர் விரும்பும் இவைநன்மை வாழ்வனைத்தும்
மாயவாழ் வென்று மதி.

இராகம், சௌராஷ்டிரம். ஆதிதாளம்.

பல்லவி.

மாய வாழ்வை நம்பி, மோசம் போகாதே;
வாழும் கதியைத் தேடுதை மறவாதே.

1 நகைகள். 2 இளமை.

அநுபல்லவி.

தீய மனது, வாக்கு, செய்கை தகாதே;
காயா[1] புரி அழியுங்காலம் பொய்யாதே;— மாய

சரணங்கள்.

௧

உலகம் அனைத்துக்கும் நீ முதல்வன் ஆனாலும்,
உன்னத மாளிகையில் வாசம் செய்தாலும்,
பல கலை நூல்களை நீ படித்திருந்தாலும்,
பாரிலுள்ளோர் புகழ் கீர்த்தி பெற்றாலும்,
நிலமிசை வாழ்ந்து நீடித்திருந்தாலும்,
குலமதில் உயர்ந்தவன் என்று கொண்டாலும்,
சலமதில் எழும்பிய குமிழிகள் போலே,
சருவமும் அழிந்திடும்; அதற்குப் பின்னாலே,
இலவ மரக் கிளிபோலே, இனி மேலே,
ஏங்கி, தவிக்கும் காலம் வரும், அதினாலே,— மாய

௨

பாவமதை நாடோறும் பரிகரித்திடவே,
பரம குருவினிடத் தொருமனப் படவே,
சாவு வருமுன் திவ்ய சரணத்தைத் தேடவே,
தாரமாதி உலக பாசங்கள் ஓடவே,
தீவினை அடங்கலும் சிதைப்பட்டு, மூடவே,
மூவுல காதிபன் தன் முன் சென்று பாடவே,
ஆவலுடன் கிறிஸ் தேசுவை நம்பு;
அண்டர் கோமானது தொண்டை விரும்பு;
தேவ வரம் பெறு, வேத வரம்பு;[2]
செல்வழி காட்டும்; அதற்குத் திரும்பு;— மாய
தே.—மு.

## ௨௨௪. THE VANITY OF EARTHLY THINGS. 224.

# உலகத்தை வெறுத்துவிடல்.

இராகம், செஞ்சுருட்டி. சாப்புத்தாளம்; இங்கிலீஷ் டோமிரி.

பல்லவி.

உலகம் நில்லாது, நல் மனதே! நீ கேளு.

[1] சரீரமாகிய நகரம். [2] ஒழுங்கு.



அநுபல்லவி.

நலம் இலா உலோகம்; அகந்தை உண்டதில்
ஞாயம் இல்லை; நம் இடம் இது அல்ல.— உலகம்

சரணங்கள்.

௧

அக்கிரமக்காரர் நிறைந்த முள் காடு;
ஆகுசப் பாவிகள் ஊர்[1] புழுக் கூடு;
துக்க சமுத்திர மான திவ்வீடு;
தொலையாத பேரின்ப வீட்டைத் தேடு;— உலகம்

௨

வேத விதிப்படி, சாதித்து நில்லு;
மேலாம் எருசலே வீட்டிற்குச் செல்லு;
பாதக ஆசா பிசாசத்தைக் கொல்லு;
பரம பொருளை அநுதினம் சொல்லு;— உலகம்

௩

நசரேய ராசன் நவில்[2] மொழி உள்ளு;
ஞானகரத்தில் அருள் மொண்டு கொள்ளு;
அசலம்[3] அழிவின் வனாந்தரம் தள்ளு;
ஆதி பராபரனால் பாவத்தை விள்ளு;— உலகம்
ச.—உ.ப.

## ௨௨௫. INSTABILITY OF EARTHLY GOOD. 225.

# உலகவாழ்வு அநித்தியம்.

விருத்தம்.

எத்தனை அனந்த செல்வம் ஏழையாம் உனக்குத் தானே
இத்தரை மீதிருந்தும் எண்ணமே அற்றுப் போகும்,
அத்தனை நம்பினால் உன் ஆத்துமா வாழும் என்றும்,
மெத்தவும் உலக வாழ்வை விரும்பிடில் மோசம் தானே.

இராகம், காம்போதி. சாப்புத்தாளம்.

பல்லவி.

விரும்பாதே மனமே!—உலக வாழ்வை
விரும்பாதே மனமே!—பதவினை

[1] நிறைந்த. [2] சொல்லிய. [3] பூமி.

சரணங்கள்.

க

தரும் பெரும் சுகம் என தரையின் செல்வமதை
கரும்பதாக எண்ணி, காதல் மிஞ்சி அதை— விரும்

உ

அகிலம் யாவுக்கும் நீ அரசன் ஆனாலும், மா
மகிமை நிறைந்த ஒரு மாளிகையில் வாழ்ந்தாலும்,—விரும்

ங

பெலத்தில் வீரனெனப் பேர் கீர்த்தி அடைந்தாலும்;
சலத்தின் ஓட்டம் போலே சணத்தில் ஒழிந்துபோவாய்.—
விரும்

ச

திட்டமாய் நூல் கற்றுத் தேர்ந்த ஞானி என்றே,
அட்டதிக்கிலும் உன் பேர் இஷ்டம் புரிந்தாலும்,—விரும்

ரு

பொன்னும் பொருளும் உந்தன் பொக்கிஷமானாலும்,
என்ன புகழ்ச்சி என்று இப்போதே வெறுத்து நீ—விரும்

சா

லோக ஆஸ்தி எல்லாம் குப்பை எனவே தள்ளு,
ஏக பரன் உனக்கு ஏற்ற பொக்கிஷம் தானே.— விரும்

எ

நிழலைப் போலே ஏகும் நிலையாச் செல்வமதில்
களிகூராமல் யேசு கர்த்தன் பதத்தைத் தேடு.— விரும்

C.—யோ.

---

## உஉசா. RENUNCIATION OF THE WORLD, THE FLESH, AND THE DEVIL. 226.

# மூவாசையை வெறுத்தல்.

வெண்பா.

ஆசைப் பெருங்கடலில் ஆழ்ந்தழுழும் என்மனமே!
நாசமாம் இந்நிலையை நாடாதே;—நேசமுறு
மன்னவனும் நம்கிறிஸ்தில் மாட்சிமையும், வாழ்வும் உண்டு;
செல்; நிமிஷ மெழுந்து, செல்.



இராகம், கலியாணி. ஆதிதாளம்.

பல்லவி.

மன்னனும் கிறிஸ்து மகிபனால்[1]
வாழ்வுண்டு; சேர்வாய், மனமே!

அனுபல்லவி.

கன்னி மரி எனும் அன்னை வயிற்றினில்
மின்னும் ஒளி என மன் உரு கண்ணின,— மன்

சரணங்கள்.

க

நீரில் குமிழிகள் போல்,—புவிப்பொருள்
நீங்கி அழியும்; இப்பால்
வீரியம் செய்தவர் பேரேனும் இல்லாமல்,
மாறி ஒழியும் இப் பாரினில் நில்லாமல்;— மன்

உ

மேகம் தனில் மின்னும்—மின் அன்ன
மேதினி மீது, பொன்னும்
சாகும் அளவினில் சாகம்[2] இழந்தென
தாகமாய் எங்கிட வேகமாய் நீங்கிடும்;— மன்

ங

பூமிப் பொருள்கள் எல்லாம்—உடல் விட்டுப்
போகும் பொழுது நில்லா;
நேமி புகழ் ஏசு சாமியை நம்பினால்,
நீ மிக வாழுவாய், தாமதம் இன்றியே;— மன்

ஏ.—ச.

---

## உஉஎ. RENUNCIATION OF THE WORLD. 227.

# உலகத்தை வெறுத்தல்.

வெண்பா.

சிந்தையை வீணில் சிதறவிடா தேஅலைந்து,
தந்தலைகைக் காளாய்த் தவியாதே;—பிந்தி
விரும்பிநின்று, மாயை விளக்குஞ்சோ தோமை
திரும்பிப்பா ராதே, நெஞ்சே!

---

1 மகி=பூமி; மகிபன்=ராசன். 2 தேஜீ.

இராகம், உசேனி. ரூபகதாளம்.

பல்லவி.

திரும்பிப் பாராதே,—சோதோமை
திரும்பிப் பாராதே;

அநுபல்லவி.

விரும்பிப் பார்த்து, லோத்தின் பெண்டு
மரம்[1] புப்புத் தூண் ஆனதைக் கண்டு.— திரு

சரணங்கள்.

௧

சந்தைக் கூட்டம் பொம்மலாட்டு,—மாதர்
சந்தடி செய்யும் சீராட்டு,
விந்தையான போராட்டு,—மந்தை
வேடிக்கை என்று விட்டோட்டு.— திரு

௨

செல்வத்திலே மெத்தச் செருக்கு,—நீ
செய்வதெல்லாம் முழுத் திருக்கு,
பல் வழி நீரோட்டப் பெருக்கு,—என்
பண்ணுகிறாய் இந்த முறுக்கு?— திரு

௩

ஆக்கை[2] அழியும் பங்கம்;[3]—மூ
ஆசையும் வில் லங்கம்;
காக்கை, கழுகு, கங்கம்[4]—தின்ன
காத்திருக்கும் உன் அங்கம்.— திரு

௪

அங்கும் இங்கும் சுற்றித் தயங்கிறாய்;—உல
காசையினால் மெத்த தியங்கிறாய்;
சங்கடத்துள்பட்டு மயங்கிறாய்;—வீண்
சண்டாளரோடு என் முயங்கிறாய்;— திரு

௫

ஆண்டவர் ஏசு சகாயம்,—உனக்
கடைக்கலம் ஐந்து காயம்;
வேண்டிக் கொள்வது நேயம்;—கை
விடாதே இந்த உபாயம்.— திரு

வே.—சா.

1 கல். 2 சரீரம். 3 தூசி, மண். 4 பருந்து.



## ௨௨௮. THE WORLD UNWORTHY OF OUR TRUST. 228.

## உலகம் நம்பத்தகாதது.

இராகம், பைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

நம்ப வேண்டாம், உலகை நம்ப வேண்டாம்.

அநுபல்லவி.

நம்பவேண்டாம் இவ்வுலகம் யாவும் விழல்[1] என்று சால்மோன்
செம்மையாய் அறிந்துரைத்தான், இம்மையில் உழன்றுழன்று,
—நம்ப

சரணங்கள்.

௧

மன்னர் மகுடரும், பால
சின்னவரும் ஓர் நிமிஷம்
தன்னிலே அழிவ தல்லால்,
பின் வழக்கே தொன்று மில்லை;— நம்ப

௨

காயத்தைப் பிரிந் துன்னுயிர்
ஏகி, ஒரு நாள் இருந்தால்,
நேய சுற்றம் மக்கள், பெண்டீர்
மாயமாய் அகன்று நிற்பார்;— நம்ப

௩

பிள்ளை இடு காடு மட்டும்,
பெண்கொடியாள் வாசல் மட்டும்,
தெள்ளிய அன்பர் பொருள் கைக்
குள்ள நாளளவு மட்டும்,— நம்ப

௪

ஆசையாய் கருத்தில் உந்தன்
ஏசுவைப் பதித்து, நிதம்
ஓசையாய் ஜெபித்து வந்தால்,
மோசம் இல்லை; வேறெதையும்,— நம்ப

ச.—உப.

1 மாய்கை.

## ௨௨௯. WE CAN CARRY NOTHING OUT OF THE WORLD. 229.

# பொருளாசையை அகற்றல்.

கொச்சகம்.

பாடுபட்டுப் பன்னாள் இப் பாரதில் பலவகையாய்
தேடிவைத்த செல்வமதை நேர்வழி வழங்காமல்,
நாடி மிகவொறுத்து நாட்கழிக்கும் லோபி! ஆவி,
தேடுபொருள் ஏதேனும் கூடவாராதே திடமே.

இராகம், ஆனந்தபைரவி. ஏகதாளம்.

பல்லவி.

தேடு பொருள் ஏதெனினும்
கூட வருமோ? சொல்லாய் நீ,
அந்திய[1] காலம் உறுமே, அப்போது;

அநுபல்லவி.

வீடு வாசலோடிகத்தில் மேவும் பொருள் அனைத்தும்
நீ போனால் நிலைக்கும் என்று, நினைத்துக் களிக்கு மைந்தா!—தேடு

சரணங்கள்.

௧

மன்னர் முதலான யாரும் மரிக்கின்ற நேரம்
வாரிக்கொண் டேகினரோ?
இந்நிலம் எலாம் ஒருவன் இசைந் தடைந்தாலும் அவன்
என்ன பலன் எய்து[2] வான் தன் இன் உயிர்க் கீனம் வருத்தில்,
—தேடு

௨

பரமானந்த சுகத்தைப் பரிகரித்தே,[3] நாளும்
பாரில் மகிழும், லோபி!
உரமாய் ஈயாமல் நிணம் உற்ற உனதுடலை
நரகப் புழுக்கள் தின்ன, நாடித்தவிக்குமே பார்;— தேடு

[1] மரணகாலம். [2] அடைவான். [3] நீக்கி.



௩

வையகம் எல்லாம் வெறும் மாயை அறியாயோ?
வான் கதி தன்னை நாடு,
உய்யும் இடம் இங்கிலை, நீ ஓடி நல்வழி தேடு;
ஐயகோ! உணர்வடைஉன் ஆவி பிரியுமுன்னே;— தேடு

ஜா.—பா.

## ௨௩௦. PRAYER FOR TRUE HAPPINESS. 230.

# மெய்ப்பாக்கியத்தை அபேட்சித்தல்.

வெண்பா.

ஆசாமை இடேற்ற ஆதி திருச்சுதனே!
மாது மரிவயிற்றில் வந்தனால்,—போதம்நிறை
வாக்குமனக் கடங்கா மாறாத பேரின்ப
பாக்கியம்தந் தாள்வாய், பரா.

இராகம், கியால். ஆதிதாளம்.

பல்லவி.

பாக்கியம் தந்தருவே,—பர—மானந்த மெய்ப்
பொருளே!—மெய்ஞ்ஞான

அநுபல்லவி.

வாக்குத் தத்தத்தின்படி வார்த்தை மாங்கிஷமாக
வானத்திருந்து வந்த ஞான குண நிதியே!— பாக்

சரணங்கள்.

௧

சத்ய கிருபாசனா!—கனம்—உற்ற தயாள மன்னா![1]
நித்ய திரித்வ மின்னா!—கதியின்—நிமலா![2] உமக்கே ஓசன்னா;
மெத்த உலகினாலே கஸ்தி அனுபவிக்கும்
புத்ரர் அனைவருக்கும் நித்ய ஆனந்தமான— பாக்

௨

இரட்சிப்பின் செங்கோலா!—ஞான—நீதி நெறி நூலா!
அச்சய அனுகூலா!—அன்பான—ஆனந்த தயை ஞாலா!
உச்சித மேலாம் பரம உன்னத விசால சீலா!
நிச்சயம் அனுக்கிரகித்தாள்; மூச்சுடர் ஒன்றான மூலா!— பாக்

தே.—றை.

[1] இராசாவே. [2] பரிசுத்தனே.

௨௩௧. AGAINST DRUNKENNESS. 231.

# மதுபான விலக்கல்.

வெண்பா.

புத்தி அற்று நல்ல புசிப்பிதுதான் என்றுற்போல்
நித்தம் வெறியால் நிரம்புகின்றீர்,—இத்தரையில்
சத்தியமாய் உம்மையே சார்பவன் கூறக், கேண்மின்;
மத்தியம் கொள்வோரே மதித்து.

இராகம், கலியாணி. அடதாளசாப்பு.

பல்லவி.

மத்திய பானத்தில் மிக நித்தியம் கருத்து வைக்கும்
மதி கேட்டோரே! கேளீர்.

அனுபல்லவி.

புத்தி மழுங்கவும் நும் புகழ் அழிந்திடவுமே;
சித்தம் உமக்குண்டானால் தெளிந்து குடியும்; சும்மா.— மத்

சரணங்கள்.

௧

பாம்பை மடியில் வைப்பாரோ?—பழகினாலும்,
பயம் இன்றி, அதை மொய்ப்பரோ?
வேம்பு கசப்பில் என்பரோ?—மதுக் குடிக்க
விரும்புகின்றீர், நல்லதோ?
நாம் பிசகோம் என்றும், நடந்து திரிவோம் என்றும்,
வீம்புகள் சொல்வதேன் விழுவீர், விழுவீர் காணும்;— மத்

௨

கைப் பொருள் இழந்திடவும்,—புதல்வரோடு
காதலி[1] அழிந்திடவும்,
மெய்ப் பொருள் மறைந்திடவும்,—எரி நரகில்
வீழ்ந்ததில் உறைந்திடவும்,
தற்பரன் அருள் இங்கு, தான் இழக்கவும், வேண்டில்,
எப்படியும் குடியும், இளைத்த சணங்கன் போலே;— மத்

[1] மனைவி.



௩

மாட்டுக்கும் உணர்ச்சி உண்டே;—உறங்கையிலும்
மயக்கம் உறாது கண்டீர்;
வேட்டை நாயதற்கும், எந்தப்—பிராணிகட்கும்,
விழிப்பும் நல் களிப்பும் உண்டே;
வீட்டில் தீப்பிடித்தாலும், விழியீரே, அவிந்த பின்
நீட்டிக் கிடத்திட வேறிடும் என்றறங் கறியீரோ?— மத்

௪

அடிபிடிக் கவசியமோ?—தொலையாத
அமளி அதில் விருப்பமோ?
உடுசீலை யோ டுறுமால்—பறிகொடுத் தங்
குருட்டிக் கிடத்த வீதியில்
கிடையில் கிடக்க யாரும் கே, கே, எனச் சிரிக்க,
இடைவிடாமல் குடியும், இதற்கும் மன முண்டானால்,— மத்

௫

கண்கள் உருண்டு சிவக்க,—எதிர்ப்படுவோர்
கண்டு மருள்வ தற்கும்;
புண்களில் உறு நாற்றம் போல்,—உமது வாய்கள்
போம் இடந் தனில் நாறவும்;
நண்புளோர் அகத்தும் நண்ணார் புறத்தும் நகைக்க
பண்பழியவும் வேண்டில், பகர்வார் இலை குடியும்;— மத்

௬

நடக்கில் செல்லும் திசை,—கிழக்கென்றால் நீர்
வடக்கும் தெற்குமாய் அலைவீர்;
படுக்கும் இடமும் அறியீர்;—அங்கு விழுந்து
கிடக்கும் குழியும் அறியீர்;
விடக்குப் போல் ஆய்த் தேகம் மெலிவாய் உலர வேண்டில்
குடித்துக் குடித்துத் தீரும்; குறி இதென்றறிவீரே,— மத்

௭

வெறி கொண்டு திரிவதினால்—உமது மதி
வேறுபட்டே நீதியை
அறியாமல் பிறர் தாரம்—மற்றெவரையும்
அணையத் துணிவீர் காணும்;
சொறி சிரங் கனையாப்பும் சுதந்தரமாய்க் கொள்வீர்
அறி குறி இதை அறிந் தகற்றும் மதுபானத்தை.— மத்

௮

சற்றும் விருப்பம் வேண்டாம்—மதுவில், அது
சதித்துக் கெடுத்து விடுமே;

முற்றும் இயேசுபரன் மேல்—உரிமையாக
முழுதும் அன்படைந் தவரைப்
பற்றி விசுவாசித்து, பாதகிக் காளாக
உற்ற மதுக் குடியை உடனே விடுதல் நன்றே.— மத்

ஜா.—பா.

## ௨௩௨. THE EVILS OF THE TONGUE. (James, 3. 1-13.) 232.

## நாவடங்காமை. (யாக். 3. 1-13.)

கலித்துறை.

விடந்தான் உட் கொண்டுன்றன் மேன்மை குலைய, விளைச்செருக்கால்
திடந்தான் அகலத் திருக்குற்ற தே; தீதி தாயினும், அங்
கிடந்தான் கொடுக்கில், இடும்பாய்ப் பழிக்கு யெழுப்பி,
அடங்காதுன் நாவது தீதருள் தேடதை ஆட்கொள்ளவே.

இராகம், இந்துஸ்தான் கருபா. ஆதிதாளம்.

பல்லவி.

அடங்காதே நாவு; நீதே, அதை
ஆட்கொள்ளவே பார்; இப்போதே, சற்றும்.

சரணங்கள்.

௧

உடலதில் அது சிறு அவயவம் ஆயினும்,
சடசடெனவே எழுந் தாடும்;—தீராச்
சல்லியம் மூட்டி, சண்டை போடும், சற்றும்— அடங்

௨

மா கபடாகவே வாயினுள்ளே இருந்
தாகம்[1] முழுதும் கறைப் படுத்தும்;—நர
காக்கினைக் குளைச் சிறைப் படுத்தும், சற்றும்— அடங்

௩

மூர்க்க அசுவம்[2] அது, கூட்ச கலினமதால்[3]
ஈர்க்கும்[4] மடக்கி அடங்கிடுமே;—அதை
இயற்றும் வழியில் உடன் படுமே, சற்றும்— அடங்

[1] உடல். [2] குதிரை. [3] கடிவாளம். [4] இழுப்பு.



௪

தேட அரிய கப்பல் சிறிய சுக்கான் ஒன்றால்
ஓட விடப்படுமே, நேராய்;—நாவோ
உற்றிணங்காது நற் சீராய், சற்றும்— அடங்

௫

நீந்தும் பிராணி புள்[1] ஊர்வன விலங்[2] கெல்லாம்
மாந்தர் கை வசமாகினாலும்;—நாவு
மட்டும் ஆகா தெவ ராலும், சற்றும்— அடங்

௬

மூட்டும் அற்ப நெருப்பு தோற்றி எத்தனை பெரும்
காட்டைக் கொளுத்தும் அறிவாயே;—அங்கே
கண்டறி குறு நாவும் தீயே, சற்றும்— அடங்

௭

மேவும் அநீதி மா வீம்பு பொல்லாங் குடன்
சாவிஷ மும் நிறைந்த தாமே;—அதின்
சற்பனை யால் மானம் போமே, சற்றும்— அடங்

௮

நாளு தவறுள நாவு நீ யொண் டையோ!
வானில் எதனைப் போற்ற லாமோ;—அதால்
வரும் நர[3] கழல் ஆற்ற லாமோ, சற்றும்— அடங்

ஜா.—பா.

## ௨௩௩. AGAINST SELF-CONFIDENCE AND COMMON SINS. 233.

## சுயபுத்தியில் சாயாதிருக்க உணர்த்தல்.

இராகம், பிஹாக்.

பல்லவி.

உந்தன் சுயமதியே நெறி என்
றுகந்து சாயாதே;—அதில் நீ
மகிழ்ந்து மாயாதே.

சரணங்கள்.

௧

மைந்தனே! தேவ மறைப்படி யானும்
வழுத்தும்மதித ளைக் கேளாய்;—நீங்
கொழித் திதமனந் தாழாய்; அருள் சூழாய்;— உந்

[1] பறவை. [2] மிருகம். [3] நரக அக்கினி.

௨

சொந்தம் உனதுளம் என்று நீ பார்க்கிலோ,
வந்து விளையுமே கேடு;—அதின்
தந்திரப் போக்கை விட்டோடு; கதி தேடு;— உந்

௩

துட்டர் தம் ஆலோசனைப்படியே தொடர்ந்
திட்ட மதாய் நடவாதே:—நீயர்
கெட்ட வழியில் நில்லாதே; அது தீதே;— உந்

௪

சக்கந்தக் காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே;[1]—அவர்
ஐக்யம் நலம் என்றெண்ணாதே; அதொண்ணாதே;— உந்

௫

நான் எனும் எண்ணம் அதால் பிறரை அவ
மானிப்பது வெகு பாபம்;—அதின்
மே லெரிக்குமே தேவ கோபம்; மனஸ்தாபம்;— உந்

௬

சிற்றின்பப் பாடல், கூத்தாடல், எத் தீதிலும்
உற்றணு காது, பின் வாங்கு;—அச
டற்றவர் சேர்க்கையில் ஓங்கு; அதே பாங்கு;— உந்

௭

என்ன முயன்று முன் றன் மனப் போக்குறில்,
பின்ன மதாம் அறியாயோ?—வானில்
நன்னிலைமை பெறுவாயோ? குறி யாயோ?— உந்

ஜா.—பா.

௨௩௪. WANT OF LOVE TO MEN. **234.**

## அன்பில்லாதவனைப்பற்றி பிரலாபித்தல்.

வெண்பா.

தன்னைப்போல் தன்பிறனைத்தான்நேசி யாதவன்றான்
இந்நிலத்தில் மானிடமாய் ஏன் பிறந்தான்,—எந்நாளும்
ஆ! நேசந் தானேதும் அற்றவன்றன் சீர்முடிவில்
மாமோசம் என்றே மதி.

[1] விரும்பாதே.



இராகம், மங்கையாமி. திரிசரதாளம்.

பல்லவி.

ஆ! நேசந் தன்னை அற்றவன் ஏன் பிறந்தான்?
மா தோஷம் அவன் வாழ்க்கை நிலையாதே;
ஓ! மோசம், அவன் ஊதியம் தான் அவமே.

சரணங்கள்.

௧

கண்ட சகோதரன் மேல் அன்பு கூராத
கன்னெஞ்ச னானவன் தான்,—காணா
அண்டர்[1] கோமானை[2] அறிந்தவரில் அன்
படைகுவ தெப்படியோ? ஆ!

௨

உற்ற சகோதரன் தன்னைப் பகைத்தவன்
ஓர் கொலை காரன் என்றே—வேதம்
குற்றி உரைப்பதினால் அவனைப் பழி
கூடத் தொடர்ந்திடுமே;— ஆ!

௩

கூடிக் குலாவி இருக்கும் சகோதரர்
கொள்ளும் இனிமை அதை,—பகை
மூடிப் பிரிந்து கலகம் புரிகின்ற
மூர்க்கன் உணரானே;— ஆ!

௪

ஆறுதல் இல்லை அமைதலும் இல்லை அன்
பற்றவன் உள்ள மதில்;—மிகு
தாறு மாறாக பல பல எண்ணங்கள்
தாக்கி உலைத்திடுமே;— ஆ!

௫

சாவு வரையும் பகையில் நிலைக்கும்
தறு கணன்[3] பேர் கெடுமே;—அவன்
ஆவி பிரிந்த பிற்பாடும் எரி—நர
காக்கினை சூழ்ந்திடுமே; ஆ!

௬

இப்படி நேசம் இலான் நிருவாகம்
இருக்க, முயற்சியுடன்—அன்பு
தப்புரவும் மாயம் அற்றது மாகத்
துலங்க வகைபாரும்;— ஆ!

[1], [2] வானவரின் அரசனை. [3] கொடுமையுள்ளவன்.

௭

பூரண நேசம் பயத்தைச் சரி வரப்
போக்கடிக்கும் அதனை,—சற்று
நேரம் அல்ல, நீர் எந்நேரமும் முற்று
நிலைக்க வகைபாரும்;— ஆ!

௮

வேதம் முழுவதும் ஓதும் அன்பானதில்
வீற்றிருக் கின்றதினால்,—அதை
நாதனுக் கேற்க அடைந் துறவாகில் எந்
நாளும் சுகிப்பீரே;— ஆ!

௯

இன்புடன் யாரும் கலந்து குலாவிட
ஏற்ற வகை தேடும்,—அசற்
கன்பின் விருந்தை அறி குறியாக
அமைத்தங் கனல் மூட்டும்;— ஆ!

௰

தேவ வசனப்படியே, இவ்வாறிங்கு
செய்ய மனம் இணங்கி,—அன்பை
ஆவலுடன் குறை வின்றி அடைந்திடில்,
ஆனந்த பாக்கியமே;— ஆ!

ஜா.—பா.

௨௩௫. PRAISE TO GOD FOR THE APPOINTMENT OF THE SABBATH. 235.

## ஓய்வுநாளைப்பற்றி.

விருத்தம்.

மன்னியே ஆறு நாளும் வருந்தியாம் உழைத்த தன்பின்
இந்நிலத் தினைப்பு நீங்கி யாவரும் உம்மைப் போற்ற
நன்னய மாக ஓய்வு நாளதை எங்கட் கீந்த
உன்னதா! உமக்குஸ் தோத்ரம் ஓதியாம் பணிகுவோமே.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

ஓய்வு நாளதை ஸ்தாபித் தருளிய
உன்னதா! உமக்கேஇ ஸ்தோத்திரம்.



அநுபல்லவி.

மாய்விலா மறையை யாம் மனதில் உட்கொண்டு,
வாழ்த்தி, உம்மைப் புகழ்ந்து போற்ற வாய் விண்டு,— ஓய்

சரணங்கள்.

௧

தேகக் கவலை, தொழில், யாவையும் ஒழிக்க,
திவ்ய சிந்தையால் எங்கள் இதயமே செழிக்க,
ஏகன் நின் அருள் பெற்றிவ் விகல் அற விழிக்க,
எவரும் ஒருநாளாய்க் கொண்டாடி எக்களிக்க— ஓய்

௨

விண்ணோருடன் யாரும் ஆவியில் கூட,
வேதா! உம்மைப் புகழ்ந்து மங்களம் பாட,
மண் உலகில் போராட்டச் சாலையில் ஓட,
வரம் அளித்திட, உம்மைக் கெஞ்சி மன்றாட,— ஓய்

௩

முத்தி வழி விலக்கும் தூர்க் குணம் மாற்றி,
முன் நின் றெம்மை நடத்தியே கரை ஏற்றி,
எத்தேசத்தாரும் உம்மை ஏகமாய்ப் போற்றி,
இறைஞ்ச[1] அருளும், உமதாவியை ஊற்றி,— ஓய்

ஜா.—பா.

௨௩௬. SABBATH DAY MEDITATION ON GOD'S WORD. 236.

## ஓய்வுநாள் தியானம்.

வெண்பா.

நூலில் உரைத்தது முன் னூலோர் மதித்தது எக்
காலும் திருச்சபைகள் காத்ததே—ஞாலமிசை
பேய் மரண சத்துருவைப் பிற்புறம் கண்டானுதித்த
ஓய்வுநாள் இதை உணர்.

பல்லவி.

ஓய்வுநாள் இது, என் மனமே!—தேவ
உரை யைத் தியானம் செய் கவனமே!

[1] வணங்க.

அனுபல்லவி.

நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேட வசனமே.— ஓய்வு

---

சரணங்கள்.

௧

சிவ சுக புத்திர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே;
மேவி அவர் கிருபாசனத்தின் முன்
வேண்டிக் கொள் இது சமயமே.— ஓய்வு

௨

ஆறு நாளுனக் களித்தவர் இனைப்
பாறி எழினில் களித்தவர்
கூறும் பூரண ஆசிர்வாதத்தைக்
குறித்துனை இதற் கழைக்கிறார்.— ஓய்வு

௩

கர்த்தர் ஆசனம் குறுகிக் கேள் இன்று
காலை நண் பகல் மாலையும்;
சுத்தம் விரும்புவோர் மாத்திரம் வந்து
துதிக்கத் தரும், இத் தேவாலயம்.— ஓய்வு

௪

ஆத்ம தேகம் நீ கடவுட்குப் படைப்
பாற்ற இஃதோர் சுபதினமே;
அறையில் தனிச் சமுசார செபம் செய்வோர்
அடைகுர் பலன் இதில் அதனமே.— ஓய்வு

P.

---

௨௱௩௭. A SABBATH MORNING HYMN. (PS. 63.) **237.**

## ஓய்வுநாள் உதயக்கீதம். (சங். 63.)

கலித்துறை.

கதிரோன்[1] எழும் வை கறை[2]யா யினதிர்தக் காலையினுன்
எதிராளியை வென் றெழுந்தார் கிறிஸ்து; இலைகனிகள்
உதிராத் தருவில்[3] ஒளித்தே வசிக்கும் ஒருபுருப்போல்
ததிரா கமிலசக்கத் தூக்கம்விழி என் சுயமனமே.

1 சூரியன். 2 அதிகாலை. 3 மரம்.



ராகம், பூபாளம். சாப்புத்தாளம்.

கண்ணிகள்.

௧

கதிரவன்[1] எழுகின்ற காலையில் இறைவனைத்[2]
துதி செய்ய மனமே—எழுந்திராய்!

௨

வறண்டு தண்ணீரற்ற வனம் இந்தப் புவிதனில்
திரண்ட தயைத் தேவை—நாடுவேன்.

௩

கடவுளின் வல்லமை கன மகிமை காணும்
இடமதில் செல்வதே—என் இஷ்டம்.

௪

சீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலை
ஆவலாய் நாடி நான்—போற்றுவேன்.

௫

ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய்ப் பாடி நான்—உயர்த்துவேன்.

௬

அறு சுவை உணவிலும் அவரருள் கிருபை என்
இருதயத்தை நன்கு— நிரப்புமே.

௭

மெத்தையில் ராச்சாமம் நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களை—சிந்திப்பேன்.

௮

அல்லும் பகலும் நான் அவர் செட்டைகளின் கீழ்
தொல்லைக்கு நீங்கியே—ஒதுங்குவேன்.

௯

ஆத்துமம் தேவனை அண்டிக் கொள்ளுதவர்
நேத்திரம்[3] போல் என்னைக்—காக்கிறார்.

௰

பகைஞர் எல்லாரையும் பட்டையத்தால் வெட்டி
இகலரின்[4] போசனம்—ஆக்குவார்.

T.—யோ.

1 சூரியன். 2 கடவுளை. 3 கண். 4 பகைஞர்.

௨௱௩௰௮. PRAYER FOR DIVINE PRESENCE IN PUBLIC WORSHIP. **238.**

## தேவ ஆராதனையில் செய்யும் பொது விண்ணப்பம்.

இராகம், புன்னாகவராளி. ரூபகசாப்புத்தாளம்.

பல்லவி.

வந்தருள், ஈதுன் மனை காண்; மகிமை எகோவாவே!—
உன்னை

வாழ்த்தும் அடியார்க்கு நிதம் வாய்த்த பெரு வாழ்வே!

அநுபல்லவி.

அந்தி பகல் இங்குனை வந்தடையும் அடியார்க் கிரங்கி,
ஆதரவாய் ஆண்டு கொள்வாய், வேத பராபரன் குமாரா!—வந்த

சரணங்கள்.

௧

திருக் கருணை மொழியால் மனத் திருக்கறுக்கும் பொருட்
டெழுந்து,
தீய வினை மிதித் தழிப்பாய், தேவர் பெருமானே!
பெருக்கமுள உன் வசனம் பேதையருக் கே பலிக்க,
உருக்கமுடன் இரங்கும், ஐயா! உன் பதமே தஞ்சமென்
றும்;—
வந்த.

௨

மனம் நொறுங்கி, தண்ணீர் சிந்தி, வந்தவர் கேடொழிக்க
வல்ல
வானவன் திருக் குமாரா! மா பெரு தயாளா!
இனம், சனம் ஒன்றாய்த் திரண்டு, இஷ்ட தெய்வம் நீ என்
றேத்த,
இன்ப வரம் தாரும், ஐயா! உம்பர் தொழும் மேசையா!— வந்த

௩

பஞ்சம், படை, நோவு, துன்பம், பயங்கரம் செய் பவ வினைக்
கும்;
கெஞ்சும் அடியாரைக் காப்பாய், கிறிஸ் தேசு நாதா!
மஞ்சு திகழ் பரமண்டல வாழ்வை விடுத்தே உலகில்
அஞ்சு சிறு பாலகனுகத் தோன்றி வரும் தேவ தேவே!— வந்த



௪

சஞ்சலம் மிஞ்சும் மனதால் சரணம் உனக்கென்று வரும்;
நமியர் தமக் காறுதலாய் தயை செய், ஆதிசேயா!
செஞ் சொல் மலிந்த புலவர் செப்பு தமிழ்க் குகந்த உந்தன்
சேரடிக்கண் சேர்பவர்க்கு ஆருயிர் உண்டாவதற்கு— வந்த

௫

பூவுலகை ஆளும் மன்னர் போதம் உணர் வேதியர் உன்
பொன் பதத்தை அர்ச்சயிக்க நல் பதம் தா, தேவே!
மூவுலகினில் துதியும், முக்யம், மகத்துவம், கனமும்
மா பலம் என்றும் உமக்கே மங்களம் உண்டாவதாக.— வந்த
கா.—உப.

௨௱௩௰௯. INVITATION TO PUBLIC WORSHIP. **239.**

## தேவ ஆராதனைக்கு அழைத்தல்.

வெண்பா.

சத்ய கிருபா சமுத்திரத்தி லேமூழ்கி,
முத்தி பெறஞான தீட்சைபெற்று—நித்யகிரு
பாசனமே வீற்றிருக்கும் பண்பார் கிறிஸ்துவண்டை
வா, சனமே! ஓடிவா, வா.

ராகம், புன்னாகவராளி. ஆதிதாளம்.

பல்லவி.

ஓடிவா, சனமே!—கிறிஸ்து அண்டைக்
கோடிவா, சனமே!—பண்டிகை கொண்
டாடிவா, சனமே!—அவர் பதத்தை
தேடிவா, சனமே!

அநுபல்லவி.

பு சமர் புரி கோடி அலகையை
க்ரகித்து, வான் பிடித்த உக்ர மனுவேலைக் கண்—டோடி

சரணங்கள்.

௧

நேர்ந்தடிகள் துதித்து,—நித்ய செபத்தில்
நீதித் தவங்கள் கதித்து,
சேர்ந்தருளை மதித்து,—சோதிக்கச் செய்த
தீய சர்ப்பத்தை மிதித்து,—அநித்தியமான
ஜெக சாலத்தைப் பணித்து, அகத் தாக்ரமத்தை விட்டு
திட்டமாக நின்று, பத்துக் கற்பனைப் படியே சென்று,
தேவ துந்துமி முழங்க,—சகீ கீதங்களும்,
பா வினங்களும் விளங்க,—அதன் ஒலியால்
அண்டமும் குலுங்க, பர மண்டலங்களும் இலங்க,
ஆராதனைகள் செய்து சீராய் நடந்து கொண்டு,
அரிய பரம் பொருள் ஒருவனை நெஞ்சகம்
உருகி நடம் செய்து, பெருகிய அன்புடன்— ஓடி

௨

ஞானஸ்நானம் பெற்று,—சுருதி நூலின்
மேன்மைச் சாஸ்திரம் கற்று,
ஈனப் பாவிகள் சுற்று,—மாயங்கள், அக்கி
யானக் கிரியைகள் அற்று,—மாங்கிஷத்தின்
இருளாந்த காரம் நீங்கி, அருளானந்தங்கள் ஓங்கி,
இட்டமாய் நடந் தெலார்க்கும், துட்டத்தனப் பொல்லார்க்
கும்
ஏசு நேசத்தைச் சூட்டி,—மனோகரத்தால்
பாசத் தன்பு பாராட்டி,—கவனமாக
அந்தி சந்தியும் செபங்கள், மந்திரங்களைப் படித்து,
ஆண்டாண்டைமைக் கரிசித்து, மீண்டாண்டனுக்கிரகித்த
அறிவுகள் இங்கித கிருபை விளங்கிய
திரிமுதலின் சரண் உறுதியுடன் தொழ— ஓடி

வே.—சா.

௨௪0. FOR MORNING WORSHIP. 240.

## காலை ஆராதனை.

இராகம், நாதநாமக்கிரியை. சாப்புத்தாளம்.

பல்லவி.

சரணம் நம்பினேன் ஏசு நாதா!—இது,

அநுபல்லவி.

தருணம் தருணம் உன்தன் கருணை கூர், வேதா!— சர



சரணங்கள்.

௧

நின் அருளால் இங்கே வந்து,—என்றும்
நின் அடைக்கலமாக என்னையே தந்து,
முன் நாள் வினையைத் துறந்து,—ஆதி
மூலமே! உனக் கோலம் ரட்சியும் என்று— சர

௨

சன்னதி முன் தொண்டன் நின்றே,—என்றும்
தாயான கருணை உனக் குண்டென்றே,
சென்னிமேல் கரம் தூக்கி நின்றே,—உனைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே,— சர

௩

அலைவாய்த் துரும்புபோல் ஆடி,—உன
தினி கருணை வரச் செம்பாதத்தைத் தேடி,
தொலையாத வாழ்வை மன்றாடி,—அன்பின்
தோத்ர சங்கீர்த்தன கீதங்களைப் பாடி,— சர

௪

இனிய கருணை பொழிவேதா! — எனை
இரு கரத்தால் அணை எம் கிறிஸ்து நாதா!
கனி வினையைத் தொலைத்த நீதா!—நசைக்
கர்த்தாதி கர்த்தனே! உன் கருணையைத் தா, தா;— சர

ச.—உப.

௨௪௧. MORNING HYMN. 241.

## காலைப் பிரார்த்தனை.

பல்லவி.

தேவா! பர தேவா! ஓ! யே
கோவா! எனைக் காவா.

அநுபல்லவி.

காவா, எனை இக் காலையில் எழுந்து,
கண் பார்த்தென் மேல் கருணை புரிந்து— தேவா

சரணங்கள்.

௧

கடந்த இரா வந்த காரம் பின் வாங்க,
காலை ஒளி கண்ணுறக் காத்தெனை ஓங்க,

உடந்தையாக என்னை உரித்துடன் தாங்க,
உன் அருள் புரி இடை யூறுகள் நீங்க;— தேவா!

௨

பாவம் பசாசுலக பாசம் விட் டோட,
பரலோக வாழ்வினைப் பத்தியாய்த் தேட,
பூவில் விசுவாசப் போராட்டம் ஆட,
புண்ணியன் உன்னையே போற்றி மன்றாட;— தேவா!

௩

இந்த நாளில் அடியேன் எழுந்து பணிகள் ஆற்ற,
ஏற்ற சவுக்கியம் பெலன் என் இடம் தோற்ற,
வந்தருள் உன் திரு வசனமே சாற்ற,
வரம் அளித்திட உன்னை வாழ்த்தியேபோற்ற;— தேவா!

௪

இந்திலந் தன்னிலே இறைவா! நீ மாத்திரம்
எத்தித் தொழும் மகிமை ஏற்றிடப் பாத்திரம்;
உன் இடந்தான் நோக்கும் ஊன்றி என் நேத்திரம்,
ஓதிடுவேன் என்றும் உனக்கே மா தோத்ரம்.— தேவா!

ஞா.—பா.

---

௨௪௨. MORNING HYMN. **242.**

## காலைப் பாட்டு.

பல்லவி.

இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்; ஏகநாதையா!
இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்.

அநுபல்லவி.

அன்றுன் உதிரம் நாக் கென்று சிந்தி மீட்டெனை
வென்றியுடன் ரட்சித்த நன்றி போலே எனக்கு— இன்

சரணங்கள்.

௧

போன ராவில் எனைக் கண் பார்த்தாய்—பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்;
ஈன சாத்தான் எனையே இடர்க்குள் அகப்படுத்தி
ஊனம் எனக்குச் செய்யா தருக்கமுடன் புரந்தாய்;— இன்



௨

கைவிட்டுக் கொள்ளு மென்றன் வேலை—யாவிலுமுன்றன்
கடைக்கண் நோக்கி அவற்றின் மேலே
ஐயா! நின் ஆசீர்வாதம் அருளி, என் மனோவாக்கு
மெய்யால் நின் மகிமையே விளங்கும்படி ஒழுக— இன்

௩

எத்தனையோ விபத்தோர் நாளே;—தஞ்சம் நீ என
எளியேன் அடைந்தேன் உன்றன் தாளே;
பத்தர் பாலனே! எனைப் பண்பாய் ஒப்புவித்தேன் உன்
சித்தம் எனது பாக்கியம், தேவ திருக்குமாரா!— இன்

௪

பாவ சோதனைகளை வென்று,—பேயுலகுடல்
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று,
ஜீவ பாதையில் இன்றும் திடனாய் முன்னிட்டுச் செல்ல,
தேவ சர்வாயுதத்தைச் சிறக்க எனக் கணிந்து,— இன்

P.

---

௨௪௩. AN EVENING HYMN. **243.**

## மாலைக்குரிய பிரார்த்தனை.

இராகம், கல்யாணி. ஏகதாளம்.

பல்லவி.

ஸ்தோத்ரம், கிருபை கூர், ஐயா!
விழி பார், ஐயா! விழி பார், ஐயா!

சரணங்கள்.

௧

பாத்ரம் இலா எனை நேத்ரம் என உச்சிதமாய்
காத்து வந்திடும் எனது கர்த்தாதி கர்த்தனே!— ஸ்தோ

௨

இந்த நாள் அளவிலும் வந்த துன்பம் யாவுமே
எந்தனை விட்டகலவே இரங்கிய தேவனே!— ஸ்தோ

௩

மனதிலும் வாக்கிலும் மட்டில்லாத பாவி நான்,
எனது தீதகற்றி ஆளும், ஏகாம்பர நாதனே!— ஸ்தோ

௪

போதனே! நீதனே! புனித சத்ய வேதனே!
கீதனே! தாசர் துதி கேளும், ஏசு நாதனே!— ஸ்தோ

ஏ.—அ.

௨௪௪. EVENING HYMN. **244.**

# மாலைப் பிரார்த்தனை.

பல்லவி.

கருணாகர தேவா! இரங்கி இந்தக்
கங்குலில் எனைக் காவா.

அநுபல்லவி.

இருளேதும் அணுகாமல், இரவிலும் பகல்போல
என்றும் பிரகாசமாக, இலங்கும் மா திரியேக.— கரு

சரணங்கள்.

௧

சென்ற பகலில் காத்து, சேர் விபத்துகள் நீத்து
சேர்த்தையே, விழி பார்த்து, திகில் தீர்த்து,
நன்றி யதற்குத் துதி, நவில்வன், நீ என் கதி
நாடும் என் அதிபதி நமஸ்காரம் உனக்கதி— கரு

௨

நித்திரையில் உட்புகுந்து, சத்துருப் பசாசு வந்து
நெருங்காமல் நீ எழுந்து, நிலை புரிந்து,
சுத்தநெஞ்சோ டமைந்து தூங்க நல்துயில் தந்து,
தூதர் காவல் நிரைந்து, துணையாய் என்னோடிருந்து— கரு

௩

தாதா, அண்டினேன் உன்னை, தஞ்சம் நீயே என்னை
தாங்குவதார் பின்னை, சார்வன் நின்னை;
வேதா! நான் உன் தொண்டு, வினைஞன் என் நிலை கண்டு,
மீண்டுன் செட்டைகள் விண்டு, விலகா தணைத்துக்கொண்டு— கரு

௪

தீய எண்ணங்கள் பாற, திகில் கனவுகள் மாற,
திவ்ய சிந்தை உள் ஊற, ஸ்திரம் ஏற,
காயம் உயிரும் கூட, கருத்துன்னோ டுறவாட,
காலை நல்லறம் நாட, களித்துன் துதி பாட— கரு

ஜா.—பா.



௨௪௫. EVENING HYMN. **245.**

# மாலைப் பாட்டு.

பல்லவி.

வினை சூழா திந்த இரவினில் காத்தாள்,
விமலா! கிறிஸ்து நாதா!

அநுபல்லவி.

கனகாபி ஷேகனே! அவனியர்க் கொளிர் பிர
காசனே! பவ நாசனே! ஸ்வாமி!— வினை

சரணங்கள்.

௧

சென்ற பகல் முழுது மென்னைக் கண் பார்த்தாய்;
செய் கருமங்களில் கருணைகள் பூத்தாய்;
பொன்று தாத்ம சரீரம் பிழைக்க வூண் பார்த்தாய்;
பொல்லாப் பேயின் மோசம் நின்றெனைக் காத்தாய்.— வினை

௨

சூரியன் அஸ்தமித் தோடிச் சென்றானே;
சோதி நட்சத்திர மெழுந்தன வானே;
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன; அடியேனும் பள்ளி கொள்வேனே.— வினை

௩

ஜீவன் தந்தெனை மீட்டோய்! சிறியேன் உன் சொந்தம்;
செகத் தின்பங்கள் விழைந்து சேர்தல் நிர்ப்பந்தம்;
பாவியேன் தொழுதேன் நின் பாதார விந்தம்;
பட்சம் வைத்தாள்வையேல் அதுவே ஆனந்தம்.— வினை

௪

இன்றைப் பொழுதில் நான் செய் பாவங்கள் தீராய்
இடர்கள் துன்பங்கள் நீங்க என்னைக் கை சேராய்;
உன்றன் அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்;
உயிரை யெடுப்பையேல் உன் முத்தி தாராய்.— வினை

P.

௨௪௬. PRAYER FOR DAILY MERCIES. **246.**

## அன்றாடக விண்ணப்பம்.

பல்லவி.

ஆரணத் திரித்துவமே!—எமை
ஆண்டருள் மகத்துவமே!

அனுபல்லவி.

பூரண தேவ பிதா, சுதன், ஆவியே!
பொன்னுலகத்தெழும் உன்னதமான
போதக் கிருபையா பத்தி நீதிச் சுடரே! நித்திய— ஆரண

சரணங்கள்.

௧

அன்றன்றை அப்பத்தைத் தாரும்;—எங்கள்
ஆபத் தனைத்தையும் தீரும்;
இன்றும் என்றெங்களைச் சேரும்;—திரு
இரக்கத்தால் முகம் பாரும்;
நன்றி கெட்டோர்களைக் கொன்று போடாதேயும்;
நம்பரா! கருணைம்பரா!
ஞானத் தனு மானத்தொளிர்
மேன்மைத் திவ்விய பானத்தருள்;— ஆரண

௨

மூவர் ஒன்றான யெயோவா!—உயர்
முக்ய கிருபையின் தேவா!
மேவி, அடியாரை தேவா!—பல
எவ்வினையினின்றும், கா, வா;
பாவிகள் நாங்கள் ஏவையின் மக்களே
பக்ஷமே! பரம மொக்ஷமே!
பாடும்புகழ் நாடும்பதி
வோடும், தயை நீடும்பரா!— ஆரண

வே.—சா.



௨௪௭. THE DEDICATION OF A PLACE OF WORSHIP. **247.**

## தேவாலயப் பிரதிஷ்டைக்குரியது.

பல்லவி.

நித்தம், நித்தம் பரிசுத்தர் துத்தியம் செய்யும் தேவே!—
இவ்வாலயம்
நேயத்துடன் வரும் யாவர்க்கும் உன் அருள் தாவே.

அனுபல்லவி.

எத்திசையும் பணி கர்த்தாதி கர்த்தன் நம்
ஏசுக்கிறிஸ்துவின் நாமத்திற்கே துதி;
சத்ய சுவிசேஷம் எங்கும் பரம்ப,
தயை அளித்தாளும் தயாபரனுக்கென்றும்
சர்வாதிகாரம்,—மகிமையும்—தரும் நமஸ்காரம்—பெருக
வும்*— நித்தம்

சரணங்கள்.

௧

அண்டம் அடங்கலும் அங்கையில் ஏந்திய நீயே—முனம்
அங்கோர் மடந்தை தம் உந்திதனில் அமர்ந்தாயே;
மண்டலம், விண்டலம் போற்றும் மகத்துவ நீயே—ஏழை
மாந்தர் பிழைக்க மரத்தினிலும் இறந்தாயே;
தொண்டர் வணங்கப் பெறும் கிருபாகரன்,
சுத்தர், சுத்தர், சுத்தர் என்னும் பராபரன்,
பண்டும் இப்போதும் எப்போதும் ஒருவிதம்
பாக்கியம், ஞானம், பரிசுத்த ரூபன்,
பரம மெய்ப் போதம்—அளிக்கவும்—பகர் ஆசீர்வாதம்—
நினைந்தி,
பற்றற்றகை மொப்புற்றடி வணங்கு சத்திய
சித்தந்தி னடக்கக் கொடு வரங்கள் நித்தியமும்;— நித்தம்

௨

அம்பரம் ஆசனம்; பூமியைப் பாதத்தில் கண்டாய்;—மிக
அஞ்சிப் பணிந்தோர் இருதயத்தும் குடிகொண்டாய்;

* தத் தித் திமி தத் தித் திமி தனுத்த செம் தரி தாம் தரி கிட-
தனக்கு தோமென.

இம்பர் பணிந்து நாம் எற்றக் கிருபையைத் தந்தாய்;—எங்கே
இரண்டொரு மூவர் இசைந்தாலும், வருவோம், என்றாய்;
இன்ப முழுக்கதாகும் ஞானஸ்நானம்
எல்லா உலகத்தார்க் கீயும் பிரதானம்;
அன்பர் அடையும் கருணை ராப்போசனம்
ஆத்துமாவுக்கு நல் ஆறுதலாம், தினம்;
ஆ! உபகாரம்—பராபரன்—அளித்தார், இந்நேரம், எங்கட்
கெந்த
ஆபத்திலும் சாபத்திலும் அருமையாய்த் தேவ
கோபத்திலும் யாவற்றிலும் கிருபையாகவே— நித்தம்

௩

எத்தலத்தோர்க்கும் உன் உத்தம வார்த்தையைக் கூறும்—சுவி
சேஷ குருமாருக்குக் கிருபை பெலன் தாரும்;
சுத்த நற்போதகத்தில் பயிலும் நற்சபையாரும்—மெய்ச்
சுடர் வழி கண்டு நடக்கக் கருணைக் கண் பாரும்;
பத்தி, விசுவாசம், நம்பிக்கை எங்களில்
பாலித்தருளும், எக்காலும் நிலைநிற்க,
முத்தி பெறுங் கடை நாள் வரை, ஆவி
முத்திரையாக நிதம் புரிந்தாளும்;
மூவர் ஒன்றாய் வந்—திவ்வீட்டில்—மேவும்; அன்பாய் நின்—
நல்வார்த்தை
முற்பட்ட மகத்வத் தயையால் உளங்கொள
முற்பொற் சிறை நற்பிற் சிறையே வணங்கியே— நித்தம்

கா.—உப.

---

௨௪௮. OPENING HYMN FOR THE DEDICATION OF A CHURCH. **248.**

# ஆராதனைத் துவக்கம் அல்லது தேவாலயப் பிரதிஷ்டை.

வெண்பா.

வானத் திருந்தாய்; இம் மாநிலத்தி றந்துயிர்த்தாய்;
ஞான சுவிசேஷம் நல்கினாய்!—ஆனதுபோல்,
சித்தம்வைத்துப் பாவிகள் செப்பங்கேள், இவ் ஆலயத்தில்
நித்ய திரித்துவமே! நின்று.



பல்லவி.

நித்தியா! இவ் ஆலயத்தில் சேர், ஐயா!—இதில்
நேயமாய் வந்தோருக் கருள் கூர், ஐயா!

அநுபல்லவி.

பெத்தலேம் பதிக் கிறைவா! பேச அரிதான திரு
சத்திய மறை பரவும்[1] சுவாமி ஏசு ராசன் எனும்— நித்தி

சரணங்கள்.

௧

அத்திப் பரமண்டல வாசனே!—பரி
சுத்தர் செய்யும் தோத்திரத்தில் நேசனே!
பத்தர்கள் இயற்று பவ நாசனே!—இந்தப்
பார் இருள் அகற்றும் பிரகாசனே!
சத்துரு, தசை,[2] உலகம் மெத்தவும் வருத்த நொந்து,
சத்தும் அடி யார்க்கு உந்தன் சித்தம் இரங்க என்று,
பத்து நெறியும் கடந்து, பித்தராய்ப் பிழைத்த எங்கள்
பாவமும், அதால் விளைந்த சாபமும் தொலைக்க வந்த— நித்தி

௨

மதி இல்லா எங்களைப் பாராட்டியே,—பொல்லா
மானிடர் பிழைக்க அருள் காட்டியே,
சதிசெய் அலகை வஞ்சம் ஓட்டியே,—உந்தன்
சபைக்குக் கிருபை முடி சூட்டியே,
கதியும் அற இழந்த கடையானோர் உன் பதத்தின்
கதி இது வாக வந்து, தங்குதலால் ஆதரிப்பாய்;
மதியும்,[3] பகத்தினில் இரவியும், தார கைக் கணம்,
துதிசெய் சிரத்தணிந்த தூய்ய சபை போற்றும் தேவே!— நித்தி

௩

தந்தை சுதன் ஆவியர்க்குத் தோத்திரம்—அ
னந்த சதா காலங்களும் பாத்திரம்;
விந்தை மறை யே நமது நேத்திரம்;—வி
ளங்கும் ஒளி யாக வந்த சூத்திரம்;
சொந்தமாய் இந் நாட்டிலுள்ள சுத்த சுவிசேஷ சபை
சொன்மறையின் ஊழியர் எச் சோதனை தனக்கும் தப்பி,
தந்த மறை சத்தியத்தில் தாபரிக்க ஆதரிப்பாய்;
சந்ததம் துதி உமக்கே, சாமி, ஏசு ராசன் எனும்— நித்தி

கா.—உப.

---

[1] சொல்லும். [2] மாமிசம். [3] சந்திரன்.

## ௨௪௯. ON THE ORDINATION OF A MINISTER. 249.

## போதகப்பட்டம் கொடுக்கும்போது.

இராகம், தோடி. அடதாளசாப்பு.

பல்லவி.

வாரும், திருக் கண்ணாலே பாரும்,
பரிசுத்தாவி தாரும்;
திருச் சபையைச் சேரும்;
என் ஏசு சுவாமி! வாரும்.

அநுபல்லவி.

சீரும் செயலுமுள்ள தேவ திரித்துவமே!
தெரிசித்தடி பணியும் பரிசுத்தமே!
கூறும் கருணாகரமே! யூத
கோத்திரமே! மெய்ஞ்ஞானப் பாத்திரமே!
சேரும் சபை அறிவில் தேரும்படி, உணர்த்த
திட்டமாய் இவர்க்குப் போதகப்
பட்டங்கட்ட இச்சமயம் வாரும்.— வாரும்

சரணங்கள்.

க

ஒன்றும் அறியாப் பேதை என்று உலகோர் சொன்ன
உத்தமர் ஈராறு பேரை இத்தரையினில்
சென்றுபதேசம் செய்ய என்றும் அப்போஸ்தலராய்த்
தேற்றியே ஆவியை அவர்க் கூற்றிய தேவா!
இன்றும் அவர் போல் உமக் கென்றும் ஊழியம் செய்ய
இவரை உம் தாசனாகச் சபையினில் வைக்கவும்— வாரும்

உ

நட்ட பயிர்கள் எல்லாம் பட்டுப்போகுமே, ஐயா!
நாற்றினில் களை முளைத்து, தோற்றுமே, மெய்யா!
அட்ட திசையும் வேலி கெட்டு, பாழையுமாகி,
அடங்கா விலங்குகள் தின்றடங்கும் ஐயோ!
இட்டமுடனே களை வெட்டி, நீர்ப்பாய்ச்சி, வேலி
இட்டு, காக்க ஒத்தாசைத் திட்டம் செய்யும் இவ்வேளை—
வாரும்



௩

மந்தை ஆடுகளும்மே விந்தினை நீரின்றி,
மலைகள் காடுகளினில் அலையும் ஐயோ!
மூர்த்த நரி கோளாய்நாளைந்து, குட்டிகளையும்
முடுக்கி, எங்கும் சிதற அடிக்கும் ஐயோ!
விந்தைப் புல் மீதோட்டி, நிறைந்த தண்ணீரில் காட்டி,
மேய்க்க உன் தாசனை ஞான மேய்ப்பனாக ஏற்படுத்த —வாரும்

௪

புத்தி மிகுந்த, தேவபத்தி, பொறுமை, தயை
புனிதம் செபத்தியானம், பிறரில் அன்பு,
சத்யம், நீதி, இரக்கம் மெத்தவும் பவப் பயம்,
தாழ்மை, இச்சை அடக்கம், கீழ்மை அகற்றல்,
சுத்த சற்குணம், இவை நித்தம் உன் தாசனிடம்
தோன்றச் செய்து, குருவாய் ஊன்றி வையும், தயவாய்;—
வாரும்

ச.—உப.

## ௨௫௦. PRAYER AT AN ORDINATION FOR THE HOLY SPIRIT. 250.

## பட்டம் பெறுகிறவர்களுக்காகப் பரிசுத்த ஆவியை மன்றாடல்.

இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

பொழியும், பொழியும்; தயை
பொழிந்திடும்.

அநுபல்லவி.

எழலடி தந்து தாசரிவர்க்கிரங்கி,— பொழி

சரணங்கள்.

க

சத்யம் விடாமல் அதில் தங்கி நிற்கவே,
நித்தமும் உமைத் துதித்து நேசிக்கவே,— பொழி

உ

தங்கள் விசாரணையின் சபை யாவின்மேல்
சங்குல் பகலதாகக் கவலை கொள்ள,— பொழி

௫

பாவச் சிந்தை முதலாய்ப் பரிச்சேதமே
மேவி உறாமல், உம் மேல் விருப்பம் வைக்க,—போதி

௬

உந்தன் திருமறையை உலகெங்குமே
எந்தக் குலத்தோருக்கும் எடுத்துரைக்க,— போதி

ஈ.—ஞா.

௨௫௧. THE HOLY SCRIPTURES. 251.

## வேதாகமங்களைப்பற்றி.

பல்லவி.

வேதப் பொருட் சுருக்கம்—சற்றிங்கே
விளம்புகிறேன்; கேளீர்.

அனுபல்லவி.

ஆதாமின் தீதை அகற்றி, புவியோரை
ஆண்டு, நமை முற்றும் மீண்ட கிறிஸ்தருள்
தேடி, பொருள் நாடி, மனம் கூடித் துதி பாடிப் பாடி—வேத

சரணங்கள்.

௧

சருவ மகிமை யுடைய பராபரன்
தந்த சுருதி மெய்ப் போதம்;—அவர்
தாசரோ டாவியல் பேசி, எழுதின
சத்தியமான நன்னீதம்;
குருவெனும் தேசிக ரோடுபதேசிகள்
கூறுகின்ற மறைக் கீதம்;—அதின்
கோவை அறுபத்தா றாகமங்கள் தனைக்
கொண்டதுவே சத்திய வேதம்;
அறுபத் தாறையும், இருபத் தேழ் வேறும்,
ஐயேழு நால் வேறும், செய்தவை இரண் டேற்பா
டாகும்; கதிக் கேகும் சுட ராகும்; இடர் போகும்,
போகும்;— வேத



௨

மோசே துவக்கி, மல்கி வரைக்கும்
முழுதும் பழைய ஏற்பாடு;—அது
முப்பதோ டொன்பது ஆகம மாக
முகிழ்ந்த வேதாந்தத்தின் வீடு;
பேசும் பிரமாணம் காதைப் பாட்டோடு
பெரிய தரிசனம் தேடு—அதைப்
பேணி மனதினில் ஊணி,[1] அனுதினம்
பேரின்ப மார்க்கத்தில் கூடு;
ஆசையை வென்று, நேசத்தி னின்று
ஆதாம் முதல் ஏசு நாதர் வரை பொருள்
நேரு தனைப் பாரு வெகு சீரு அதில் தேறு தேறு—வேத

௩

மத்தேயு முதலாய், வெளிப்படுத்தல்
வரையும் புதிய ஏற்பாடு,—அதின்
வகுப் பிருபத்து ஏழும்; கிறிஸ்தின்
மகிமை நிறைந்த நல் வீடு;
சத்திய காதை நிருபமும் தீர்க்க
தரிசனமாம் புகழ் தேடு;—தேவ
சாயலும் நித்திய சீவனும் ஈகின்ற
சந்தோஷ மார்க்கத்தில் ஓடு;
நித்யம் தேடி, பத்தியை நாடி,
நேசம் நிறை கிறிஸ் தேசு பதத்தருள் [ந்து கனிந்து—
அணிந்து, தலை குனிந்து மிகப் பணிந்து துதி கனி
வேத

௪

அப்போக்கிரிப்பா எனும் பேரான கள்ள
ஆகமங்கள் சில உண்டு;—மறைக்
காகாத நூல்கள் எனவே ஞானிகள்
அகற்றினார்கள், பிழை கண்டு,
தப்பிதம் மிஞ்சிப் பாப்பெனும் ரோமான்
சபையார் அதையும் கைக்கொண்டு;—வெகு
தந்திர மாகவே மாறாட்டப் போதகம்
சாற்றுகிறார் மனம் உண்டு;
ஒப்பனை யாமோ? தப்பியும் போமோ?
உத்தமனார் செய்யும் சத்தியத் தீர்ப்புக்குள்
படுவார் மிகக் கெடுவார் குணப் படுவாரானல் விடுவார்,
விடுவார்— வேத

மா.—௨ப.

---

[1] ஊன்றி.

௨௫௨. THE HOLY SCRIPTURES. **252.**

## சத்தியவேத மகத்துவம்.

வெண்பா.

தன்மைத் திருவசனம் சற்புதியோற் பாட்டின்
மகிமைச் சுவிசேட வாக்கியம்—அகமகிழ்ந்து
பார்க்கும் கருணைப் பரமசுத னைச்சார்ந்தோ
ரார்க்கும் தயைவாக்கி யம்.

இராகம், ஆனந்தபைரவி. ஏகதாளம்.

பல்லவி.

ஆருக்கும் தயவான வாக்கியம்,—சுவிசேட வாக்கியம்
அதின்படி நடந்தவர்க்கே சலாக்கியம்.

அநுபல்லவி.

ஆருக்கும் தயவான வாக்கியம்,
ஆதி சுதன் சுவி சேடத்தின் யோக்கியம்,
சீருக்குள் உயர் ஞான மனோக்கியம்,
தேடேற் கரிதான மெய்ப்பாக்கியம்— ஆரு

சரணங்கள்.

க

அப்பு, தேயு, சதுர்ப் பூதிய முன்தொகுத்தார்,—வானம்
பூமியையும், அதன்
ஆன வஸ்து பல சீவனையும் வகுத்தார்,
செப்பத்துடன் இரு பேர்களையே பகுத்தார்,—அதன்
எவை எனப் பெயர்
செப்பியே சிங்காரக் காவதிலே புகுத்தார்;
ஒப்பப் பரப்பொருள் தப்பைச்[1] சிறப் பகம்
உப்ப[2]ரிப்பப்புச துர்ப் பலனைக் கவர்
வெப்பம் மிகுப் பலகைப் புலையில் படும்
வித்தை ஆதத்துட பந்துக் களாகிய— ஆரு

உ

அட்ட திக்கில் பழைய எற்பாட்டின் காலத்திலே—மோ
சேசு முனிவனுக்
கட்சயன் சீனா என்ற வெற்பானதிலே

[1] உணவு.



கட்டளை யிட்டருள் ஞாயப் பிரமாணத்திலே,—நிறைந்தடங்கிய
கற்பனை பத்தும் வழுத்திய சாபத்திலே
பட்டுப் பாதபித் திட்டுத் தாட்டோட்[1] டிட்டு
பற்றாற் றிருக்கும் நரர்க் கிரக்கக் கடல்
மட்டற் றிட்ட இட்டம் விட்டுத் தட்டுக் கெட்ட
வஞ்சராகிய பஞ்ச மா பாவிகள்— ஆரு

௩

புத்தி அறிவதில்லாத அஞ்ஞானர்க்கும்,—ஏசுகிறிஸ்துவின்
புண்ணியத்தை விட் டகம்[2] புரி யூதர்க்கும்,
மெத்த மதங் கொள் மகமது மார்க்கர்க்கும்,—அரியானர் பதி
தர்க்கும்,
வேதப் பரட்டர்களான எல்லார்கட்கும்,
சத்திய வேதத்தை விட்டுக் கிறிஸ்துவை
சற்றும் எண்ணாமல், மதத்துத் திரிந்தவ
பத்தி மிகுத்தத மத்தில் நிலைத்த பொய்
பாப்புப் பதித துன் மார்க்கருக்கும் பின்னும்— ஆரு

வே.—சா.

௨௫௩. THE VALUE OF THE HOLY SCRIPTURES. **253.**

## சத்திய வேதத்தைப்பற்றி.

இராகம், சங்கராபரணம். மட்டியதாளம்.

பல்லவி.

தேன் இனிமை யதிலும் சத்திய வேதம்
திவ்யமான மதுரம்.

அநுபல்லவி.

ஞானமது நிறையும் வேத மதில் எனக்கு
நாதனே! அருள் ஆசை அநுதினம் ருசித்திட;— தேன்

சரணங்கள்.

க

ஆரணம்[3] அதி புனிதம்;[4] களங்கம் இல்
லாத சுகிர்த அமுதம்

[1] திமை. [2] பாவம். [3] வேதம். [4] பரிசுத்தம்.

பூரணமாய் அதைநீ தான் உட் கொண்டே வரில்,
பொன்னுல கதற் கேற்ற தன்மை உண்டாக்குமே;— தேன்

௨

பாதைக்குரிய தீபம்; மெய் வேதம்
பற்றிடில் மிகு லாபம்;
வாதை செய்திடும் பல சோதனைகளும் எதிர்
வரில் அனைத்தும் வென்றிடத் தரும் படைக்கலம்[1] இதே— தேன்

௩

விண்ணை அழிந்தாலும், அதோ டிந்த
மேதினி ஒழிந்தாலும்,
திண்ணமதாய் என்றும் நிறைந்திருக்கும் சீவ
திருமறை எனில் தங்கிப் பலன் தர அனுக்ரகி,— தேன்

௪

எத்திசை யிலுமுள்ள நரர் யாரும்
ஏகன் நின் அறிவு கொள்ள
சுத்த சுவிசேஷம் துலங்கிப்ர காசிக்க
தூய நல் ஆவியை யாவர்க்கும் ஈந்தருள்.— தேன்

ஞா.—பா.

## உ௫௪. THE EXCELLENCY OF THE GOSPEL. 254.

## சுவிசேஷ மேன்மை.

பல்லவி.

ஞான சுவிசேஷமே!
நன்மை தரும் நேசமே.

அநுபல்லவி.

வான வுபதேசமே! வளரும் விசுவாசமே!— ஞான

சரணங்கள்.

௧

சத்திய வாக்கியமே! சந்தோஷ பாக்கியமே!
புத்தியா ரோக்யமே! புண்ணிய சலாக்கியமே!— ஞான

௨

நீதிப் பிரசங்கமே! நிமலனருள் தங்கமே!
சோதிமிகுந் துங்கமே! துதிபெருகும் பொங்கமே!— ஞான

[1] போராயுதம்.



௩

அஞ்ஞானத்தை யழிக்கும், அலகையிட ரொழிக்கும்,
மெய்ஞ்ஞானத்தை அளிக்கும், விளங்கி யென்றுஞ் செழிக்கும்,— ஞான

௪

பேசுவுண்மையிற் சேர்க்கும், எல்லாவிடரும் நீக்கும்,
பேசும் பவத்தைப் போக்கும், பேதமையோனைக் காக்கும்,— ஞான

ஜே.—யா.

## உ௫௫. THE EXCELLENCY OF THE SCRIPTURES. 255.

## சுவிசேஷ மேன்மையைப்பற்றி.

இராகம், கியால். ஆதிதாளம்.

பல்லவி.

வானாதி[1] தாள்[2] காட்டும்,—நல்ல
வாத்தி சுவிசேஷம்.

அநுபல்லவி.

கோன்[3] ஆதி[4] ஏசு வெளிவந்து மொழிந்த தோர்
கோதில்லா நீதி நிறைந்த சுவிசேஷம்.— வானா

சரணங்கள்.

௧

ஆதி ஒளி தோண,—நல்ல—அறிவு மிகக் காண,—சத்திய
நீதியின் வேர் ஊண,—அதை—நீணிலத்தோர் பூண,
சாதிகளான சகல மனிதரும்
சத்ய மறை[5] என்று துதியம் புரியவும்,— வானா

௨

அன்பு நிறைந்திடவும்,—கெட்ட—ஆசை குறைந்திடவும்,—மோட்ச
இன்பஞ் சிறந்திடவும்,—பாவ—இருள்கள் மறைந்திடவும்,
முன்பு நடந்த முரட்டாட்டத்தை விட்டு,
முற்றிலும் நற்குண சுத்தம் பெருகவும்— வானா

[1] மகா தேவன். [2] பாதம். [3] இராசன்.
[4] தேவன். [5] வேதம்.

௩

பொற்பணி[1] போராதே;[2]—தங்க—பூச்சோ நேராதே;—பொன்னின்
நற் பணி[1] எருதே;—நவ—ரத்தினஞ் சேராதே;
கற்பு[3] நிறைந்த கனக மணி ஒளி
கண் மணியாகிய விண் மணி ஆம் அது;— வாரு

௪

கார் இருள் நீங்கிடவும்;—பாவக்—கயிறு பின் வாங்கிடவும்,—நித்ய
பேர் ஒளி ஓங்கிடவும்,—சத்ய—பிரபல்யம் தூங்கிடவும்,[4]
தாரணியில் உள்ள சகல மனிதரும்
சத்ய பிதா எனும் வஸ்துவைச் சேரவும்,— வாரு

௫

பாலர்கள் கூடிடவும்,—நித்ய—பாக்கி தேடிடவும்,—சிவ
காலங்கள் நீடிடவும்,—மோட்ச—கன முடி சூடிடவும்,
கோலம் நிறைந்த மணவாளன் வகையைக்
கூடி, அநுதினம் பாடித் துதிக்கவும்— வாரு

மீ.—உப.

## ௨௫௬. THE PRECIOUS GOSPEL TO BE MADE KNOWN EVERYWHERE. 256.

## சத்தியவேத மேன்மை.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

இந்த சுவிசேடம்போ லெங்குமகப்படாது,
ஏதோ என் பாக்கியமிது.

அநுபல்லவி.

விந்தையுடன் புவியோரை மீட்க பரனன்பாக,
வேதியர்க்கே யளித்தார், மெய்மறை சத்தியமாக,
விளங்க விபுலதில், கலங்க வலகையும்,
இலங்க மனுடர்கள், துலங்க காணுமே;— இந்த

சரணங்கள்.

௧

சாதிகள் யாவரும் சத்திய மறையிற் சேர,
சகல பொய் மதங்களும் தானிதனிலே மாற,

[1] ஆபரணம். [2] போதாதே. [3] படிப்பு. [4] மிகுதல்.



மேதினி மீதிலெங்கும் மெய்யறிவில் தேற,
விசுவாசமும் பெருகி, மேசியாவைக் கூற,
விக்கிரகத்தை யுடைக்க, உக்கிரகத்தை யொழிக்க,
விக்கினத்தை யறுத்த நிக்ஷேபத்தை யளிக்க;— இந்த

௨

இந்நிலமீதி லெங்கு, மிதற்கிணையுண்டோ பாக்கியம்,
இச்சுவி சேஷத்தினால் எவர்க்குமுண்டாகுஞ் சவாக்கியம்,
பன்னிரு சீடருக்கும் பகர்ந்தளித்திட்ட வாக்கியம்,
பாரில் மனுடர் பவம் பரிகரித்திடும் யோக்கியம்
பட்சமுடன் திரு ரட்சகருன் பெயும்
இச்சை மிகுந்தரு உச்சிதனே வருள்;— இந்த

௩

தேசமெங்கும் பெருகி, சீர்கெட்டோர்களை மேவி,
திடனற்றோர்களைத் தேடி, திவ்ய ஆவியானுதி,
பாசமுடன் கிறிஸ்தின், பாதம் பணிந்தே தாவி,
பார்பிசை யாவருமே, பவத்தை எவி,
பரத்தின் வழியைக் காட்டும், திறத்தின் கிரீடஞ் சூட்டும்,
கருத்தில் பலத்தை காட்டும், வரத்தினருளால் தேற்றும்.—இந்த

ஜே.—யா.

## ௨௫௭. LOVE-FEAST. 257.

## அன்பு விருந்து.

கொச்சகம்.

வன்புறு பிரிவினை மறுத்ததவில் யாவரோடும்
என்புடன் தசைதான் இசைந்திருக்கும் பான்மையதாய்,
இன்புறப் பொருந்தி நீர் ஏகமனதாய்வாரும்;
அன்புவிருந் துண்ண, நண்பரான சகோதரரே!

இராகம், வசந்தபைரவி. ரூபகதாளம்.

பல்லவி.

அன்பின் விருந் தருந்த சகோதரர் அனைவரும் வாரும்.

அநுபல்லவி.

இன்புடன் பூர்வ கிறிஸ்தவர் ஒன்றித்
திருந் துறவாக விருந்துண்ட வாறு[1]போல்

[1] விதம்.

இணைந்து, தலை¹வணிந்து, பிணிப்
பணிந்து, மறம்² தணிந்து தணிந்து,— அன்

சரணங்கள்.

௧

நண்பர்கள் கூட்டத்துக் கிந்த விருந்தொரு
நல்ல அடையாளம் மதியும்;—ஏக
நாதர் அன்பாய் இறும் என்ற கற்பனையை
நற்கருத்தாய், அகம்³ பதியும்,—மிகப்
பண்பட⁴ யாவருங் கூடிக் குலாவியே,
பரமனை இங்கு துதியும்,—உங்கள்
பழம் பகை யாவும் கட்டிச் சுருட்டி அப்
பாலே எறிந்ததை மிதியும்;
திண்⁵ புவியில் யாரும் ஒன்றிப்பதற் கேற்ற
செய்கை அறிந்து புரிவதற்கு வகை
தேடி, அன்பை நாடி, மனங்
கூடி, கீதம் பாடிப் பாடி;— அன்

௨

சண்டை, குடி வெறி, பேதகம், கோள், பகை,
தற் சிநேகம், வைராக்கியம்,—வீம்பு,
தந்திரம், மூர்க்கம், கபடம், பண இச்சை,
கற்பனை யாதி அயோக்கியம்,—இவை
பண்டை தொடுத்துப் பழிகாரக் கூளி இப்
பாரில் விளைத்த தீப் பாக்கியம்,—அதைப்
பாராமல் தம் மனப் போக்கில் நடக்கின்ற
பாவிகட் கென்ன சலாக்கியம்;
கண்டறிந்தே நீர் உணர்ந்து சமாதானக்
கட்டிலே ஆவி அதின் ஒருமை தனைக்
காத்து மறல்⁶ தீர்த்து, வினை
போக்கி, நண்பர் சேர்த்துச் சேர்த்து,— அன்

௩

உற்ற சிநேக மதற்கு நிகர் சொல்ல
ஒன்றும் இல்லை அதை ஓரும்,—அதால்
ஊதியமான சந்தோஷ சலாக்கியம்
ஒக்க இணைந்தவர்க்கு சேரும்;—அன்பு
பெற்ற சகோதரர் ஒன்றித்து வாழ்வது
பொருந்த மாட்சிமை பாரும்,—அதைப்

1 தலைவு, பட்சம். 3 மனம். 5 பெருத்த.
2 கோபம், பாவம். 4 சேர. 6 பகை.



பேணி உருகச் சகோதரர்கட் குரைத்து
மேடைகளோ வந்து சாரும்;
கற்றறிந்து வேத கற்பனை மறுமல்,
கர்த்தருக் கேற்க நடந்து பொறுமையைக்
கைக்கொண்டு, அற்பமே விலக்கி அன்பில்
நிலைத்து,¹ தமதில் குழைந்து குழைந்து,— அன்

௪

நம்முடைய பரமார் தலைகந்தனில்
நாட்டம் இல்லார் அதை அறியும்,—அவர்
நல் இரமான சமாதானம் தனதில்
நண்பும் விருப்பதைக் குறியும்,—பின்னும்
உம்மையும் அன்னிய உன்னியும் உற்றிட
உறைக்கிறார் பயக முறியும்—உள்ளம்
தனதுருவக் கூளி எய்கின்ற தீ அம்பின்
உக்கிரமானதைச் செறியும்;
செம்மை உற மனம் இல்லையோ வான் கதி
சேர புயத்தி யோடன் பயிற் சத்தில்
தேறி, முசிப்பாறி, பரி
மாறி, வயம் கூறிக் கூறி,— அன்

ஜா—பா.

## 253.

உ௫௩ INVITATION TO THE LORD'S SUPPER.

## இராப்போசனத்துக்கு அழைக்கல்.

இராகம், சங்கராபரணம். திரிசுரதாளம்.

பல்லவி.

கர்த்தரின் பந்தியில் வா,—சகோதரா!
கர்த்தரின் பந்தியில் வா;

அனுபல்லவி.

கர்த்தர் அன்பாய்ச் சொரிந்த ரத்தத்தைச் சிந்தினை
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி,— கர்த்

சரணங்கள்.

௧

ஆபேலின் ரத்தம் அல்ல,—நீ செய்த
அநியாயத்தைச் சொல்ல,
சாபம் எல்லாம் வெல்ல,—சிந்துண்ட
தயவை நான் என்ன சொல்ல,

1 கடைப்பிடி.

கோபம் இல்லாமல், உன் மா பாவந் தீர்த்திட,
சுறிப் பிதாவின் முன் நின்ற ரத்தமே,— கர்த்த

௨

ஜீவ அப்பம் அல்லோ?—கிறிஸ்துவின்
திருச் சரீரம் அல்லோ,
பாவ மனுக் கல்லோ,—உனக்காய்ப்
பகிரப்பட்ட தல்லோ;
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை, நீ
தின்று, அவருடன் என்றும் பிழைத்திட,— கர்த்த

௩

தூரமாய் நில்லாதே;—பக்தைத்
தொடர்ந்து பின் செல்லாதே;
பார மா பொல்லாதே;—அறிவின்
பயமதில் நில்லாதே;
வாரம்[1] வைத் துனக்கு நேதாய்ச் சிந்துண்ட
மாசற்ற ரத்தத்தின் பேத்தைப் பானஞ் செய்— கர்த்த

௪

தேவ அன்பைப் பாரு;—கிறிஸ்துவின்
வேதர் துயர் தீரு;
பாவக் கேட்டைக் கூறு;—ராப்போசன
பந்திதனில் சேரு;
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து, அன்னியன் ஆகாதே— கர்த்த

௫

இத்தனை நாள் வராக்குறை—உனக்
கிரக்கஞ் செய்த உருக்கம்;
எத்தனை மா பெருக்கம்;—அவற்றை
எண்ண, மன நெருக்கம்;
மெத்த அடைந்து நீ புத்தி மயங்கிறாய்,
வேண்டாம் மயங்காமல் ஆண்டவர் கிட்ட வா— கர்த்த

௬

கூடிக் குனங்காதே;—கெட்ட லோக
கூட்டத்திற் சேராதே;
மாக மிகுக் கிதே;—லோக நேசம்
வைத்ததிற் போகாதே;
ஏகசிறிஸ்துவின் நேசத்தைப் பார் அவர்
எத்தனையான உன் குற்றத்தை மன்னித்தார்— கர்த்த

1 அன்பு.



௭

பொருளாசை யாகாது;—அசுத்தம்
பொய் களவாகாது;
மருள் வெறி யாகாது;—உதாசினம்
மாய்மாலம் ஆகாது;
இருள் விக்கிரகத் திரள் மயக்கும் பல
இச்சையுடன், லோகப் பட்சமும் ஆகாது;— கர்த்த

௮

அன்பின் விருந்தாமே;—கர்த்தருடன்
ஐக்யப் பந்தி யாமே;
துன்பந் துயர் போமே;—இருதயம்
சுத்த திடனுமே;
இன்பம் மிகுந் தேவ அன்பின் விருந்துக்கு
எது தாமதமும் இல்லாதிப்போதே வா;— கர்த்த

மரி—உப.

---

௨௱௫௰௯. PRAYER TO CHRIST TO BE RECEIVED INTO HIS FOLD. **259.**

## கர்த்தர் தமது சபையிலே சேர்த்துக்கொள்ளும்படிக்கான விண்ணப்பம்.

பல்லவி.

என்னையும் உம தாட்டின் மந்தையோ
டேற்றுக் காத்திடும்; ஏசுவே!

சரணங்கள்.

௧

வன்னியான தோர் அலகைப் பேய் தனை
வைத்திட, ஞானப் பெலத்துடன் சிறந்
திந்நிலத்தில் வந்துதித்த நல்
ஏசுவே! எனைச் சேர்த்திடும்;— என்னை

௨

ஆயக்காரரோடு பாவிகளின் கும்பை
அழைத்து, நல் விதை முளைத்திட, வெகு
நேயமாகவே ஜீவ புனல்[1] தந்த
நிமலனே![2] எனைச் சேர்த்திடும்;— என்னை

1 தண்ணீர். 2 பரிசுத்தனே.

௩

ஐயிருப தாட்டினில் ஒன்
றகன்றிட்டால், மனம் உகந்து; சோன் அதை
மெய்யதாகவே தேடுவானென்ற
மேய்ப்பரே! எனைச் சேர்த்திடும்;— என்னை

௪

வாசலாகவே இருக்கிறேன், எனில்
வந்தவன் மனம் நொந்திடான், வெகு
சேமமாகவே வாழ்வான் என்ற நல்
நிமலனே! எனைச் சேர்த்திடும்;— என்னை

௫

நல்ல மேய்ப்பன் நான் என்று மொழிந்த என்
நாதனே! ஞான போதனே! சீவ
புல்லுள்ள நலந் தன்னில் கொண்டெனைப்
போஷித்து, பூரிப்பாற்றிடும்;— என்னை

௬

மேய்ப்பராகவே இருக்கிறீர், எந்தன்
மேய்ச்சலும் நீர் தாமல்லோ? ஞான
வாய்ப்புள்ள சத்ய மறையில் மேய்ந்து நான்
வளர - அருள் புரிந்திடும்;— என்னை

௭

அன்புள்ள மெய் மேய்ப்பராயிருந்
தாட்டுக்காய்ச் சொந்த ஜீவனை வெகு
இன்பமாகவே தந்து மீட்ட, நல்
ஏசுவே! எனைச் சேர்த்திடும்;— என்னை

ம.ரி.—உப.

௨௫௦. FOR THE LORD'S SUPPER. **250.**

# இராப்போசனத்துக்கேற்ற பாட்டு.

வெண்பா.

பாவத்தால் தீங்கொடிய பாடுகளுக் குள்ளாகா
தேவிமல னூர்வருந்தி யேதேவ—கோபத்தை
உத்தரித்த வாறதனை உள்ளமே சிந்திக்க
நித்தமித்த மும்பரத்தி நில்.



இராகம், முகாரி.

பல்லவி.

நித்தமுஞ் சிந்தித்துச் சிந்தித் தேசுவின் நிருமலப்[1]
பதஞ் சேராய்;
நெஞ்சமே! அவர் தஞ்சம் உய்ய நீ கெஞ்சிக் கெஞ்
சியே வாராய்.

சரணங்கள்.

௧

எத்திசைக்கும் இறைமை செலுத்திய கர்த்தர் உன் பவம்
போக்க,
இத்தரையில் ஓர் ஏழையாய் வந்ததைப் பத்தியாய் உன்னில்
தாக்க,— நித்

௨

தூதர் உன்னத வெளியில் கூடிச் சங் கீத தோத்திரம்பாட,
சோதியாய் அவர் உதித்த நன்மையைக் காதலோடு நீ தேட,—
நித்

௩

நோயர், அந்தகர், தூக்கு[2] குஷ்டரோகர்கள், பேய் பிடித்தவர்,
செத்தவர்,
காயம் உற்றவர் ஆதியைச் சுத்த மாய் அனுப்புவர் சத்தியை,—
நித்

௪

உவமையாய், வெளிப்படையதாய் அவர் நவமதாய் சத்திய
மறையை
சபைகளுக்கும், சம்சீடர்களுக்கும் விவரித்த திவ்ய முறை
யை— நித்

௫

கெத்சேமனித் தோட்டத்திலே அவர் பத்தியாய் ஜெபம்
தொடங்கி
ரத்த வேர்வை யோடாத்துமப் பாடு சகித் தகோரத்தால் நடு
ங்கி,— நித்

௬

யூதாசவனை விற்க, பேதுரு பீதியால்[3] மறுதலிக்க,
பாதகப் பிலாத்து யூதர் செய் கொடு வாதைத் தீ உன்னில்
சொலிக்க,— நித்

[1] பரிசுத்த. [2] தன்னுதல். [3] பயம்.

௭

சோதி முகத்தில் துப்ப, நரகச் சாதியார் நிந்தித் தேச,
ஆதி சகித்த சிறுமையை நீச ராதியர் மூன்றும் பேச,— நித்

௮

வாரடி கொண்டு தசை தெறிக்க, முட் கூரிடிகொண்டு சென்னியில்
பேர் உதிர ஆறாய் அவர் உடம் பிர ஓடிய இன்னலே— நித்

௯

சிலுவையை வாய்ந்த உடலிற் சுமத்தி, வலிமையாகவே கட்டத்தி,
கொலுகதாவினில் கொண்டுபோன துய்யுலருக்கே உனைக் கடத்த,—
நித்

௰

பார மரத்தில் அவர் கை காலெல்லாம் சேரவே அறைந்ததையும்,
[நித்
கூர் சவளக் குத்தால் விலாவிலேயில் சோரி நீர் பிறந்ததையும்,—

௰௧

பகலும் இருள, திரையும் கிழிய, ககமும்[1] நடுங்கிப் பிளக்க,
அகிலம்[2] அதிர, அவர் மரித்ததை சகல போர்க்கும் நீ விளக்க,
—நித்

௰௨

ஆழ் நரருனக் கெய்திடா தவர் தாழ் சமாதியில் மூன்று
நாள்வரைக்கும் இருந்தெழு செய்கையோர் சேனுன் வாழ்வுக்கென்றான்றி,—
நித்

௰௩

உன்னை மீட்கும்செயலை இவ்வண்ணமாய் பின்னம் இன்றியே முடித்து,
மன்னு தேவ வரந் தர வான் சென்றதுன் நல் யோகமாய்ப் பிடித்து,—
நித்

தே.—மு.

———௩௱௬௰———

௨௱௬௧. THE BAPTISM OF A CHILD. **261.**

## குழந்தை ஞானஸ்நானம்.

வெண்பா.

பாலகருங் கர்த்தருக்குப் பாக்காய்ச் சுதந்தரம் என்
றேலவே வேதம் இயம்பலேயோ?—பாலகனே!

[1] மலை. [2] பூமி.



மன்னன் கிறிஸ்துவிடம் மாறுச் சுகிர்தம் உண்டே;
என்னபயம் உண்டுனக் கினி!

இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

என்ன பயம் உனக் கின்னம் நயம், கனம்
என்றென்றும் செய்குவரே.

அநுபல்லவி.

மன்னர் மன்னவன் நன்மை செய் மகன் நீயே;
வந்தனை செய் தூத சேனை உந்தனை எந்துவர், சேயே![1]—
என்ன

சரணங்கள்.

௧

பேதகம் ஏதுமில்லை, ஆதரவான மலை,
பேசரிய மெய்ஞ்ஞான நேச ரேசு மெய்யான
நாதன் அங்கையிலே நீசனுகாமலே (நீ)
ஞானஸ்நானம் பெற்றாய், நானத்தருள் உற்றாய்,— என்ன

௨

சத்துருப் பிசாசமோ, மித்ர சடலமோ,
சாரும் உலகமோ, நேரும் பல பவமோ
சற்றும் வருத்தாமல் பத்ர மிருப்பதே (நீ)
தாராளமாய் விண்ணே சேரும் பதி, கண்ணே!— என்ன

௩

தேவ ஆவி யுன்னகம் மேவ, சீவிய சுக
நீரும் பொருந்தவே, சீவ கனி அருந்தவே,
ஆவலாய்க் கை தூக்கி, சாவின் துயர் போக்கி, (நீ)
அனந்த பாக்கியங் கோனே அளிப்பார்; சலாக்யந் தானே.—
என்ன

௪

சொர்ண[2] முடியும், தூய்மை உன்னு மங்கியும், மேன்மை
துலங்கு பத்ராதனமும், கலங்கொள் மகிமைகளும்
நிர்ணயமாய்த் தரவே முன்னர் உன்னைக் கையேந்தி (நீ)
ஏற்ற தறியாயோ? போற்றித் துதியாயோ?— என்ன
ஆ.—அ.

[1] குழந்தையே. [2] பொன்.

## ௨௬௨. PRAYER AT THE BAPTISM OF AN INFANT. 262.

# குழந்தை ஞானஸ்நானம்.

பல்லவி.

இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே!

அநுபல்லவி.

உந்தன் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய் வந்த— இந்த

சரணங்கள்.

௧

பிள்ளைகள் எனக் கதிகப் பிரியம் வரலாமென்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே!— இந்த

௨

பாலரைக் கையிலேந்திப் பண்பாய் ஆசீர்வதித்த
சீலமாயின்றும் வந்தாசீர்வாதம் செய்யுமய்யா!— இந்த

௩

உமக்கூழியஞ் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்
உமது ஆவியைத் தந்து உம்முடைய மந்தை சேர்த்து— இந்த

௪

உலகமும் பேய் பசாசும் ஒன்றும் தீது செய்யாமல்
நலமாய் இதைக்காத்தாளும் நன்மைப் பராபரனே!— இந்த

௫.

விசுவாசத் தோடிதுந்தன் மெய்ப்புக்கு உள்ளடங்கி
பசிய மரம்போல் தெய்வ பத்தியிலே வளர— இந்த

P.—பா.

## ௨௬௩. MOURNING THE DISTRESSED CONDITION OF THE CHURCH. 263.

# சபையின் இக்கட்டைப்பற்றி பிரலாபித்தல்.

இராகம், சயிந்தவி. அடதாளசாப்பு.

பல்லவி.

ஓ! ஸ்த்ரீ வித்தேசையா!
அன்புகூராய், துன்பம் தீராய், ஓ!



அநுபல்லவி.

வஸ்தோரே! கிறிஸ்துவேதா! மானுவேலே! ஏகநாதா!
வந்தெனைக் கருணைக் கண் பாராயோ?— ஓ!

சரணங்கள்.

௧

ஆதி மானிடர் புரிந்த பாதகம் தொலைக்க வந்த
அண்ணலே! உமக் கபயமே;
ஓ! ஸ்த்ரீ வித்தேசையா!
ஆதரித் திரங்க வேண்டுமே.— ஓ!

௨

எத்தனை மனக் கிலேசம்? நித்தமும் சத்ருக்கள் மோசம்,
எந்தையே! கை விட்டு விடாதேயும்;
ஓ! ஸ்த்ரீ வித்தேசையா!
எப்படியும் காத்தருள், மெய்யா?— ஓ!

௩

கெட்டுப் போன மக்கள் தானே; இஷ்டப்பிர சாதக் கோனே![1]
கிருபையாய் இரும், சுவாமியே!
ஓ! ஸ்த்ரீ வித்தேசையா!
கிறிஸ்துவே! உமக் கோலோலமே.— ஓ!

௪

ஆடுகள் சிதறிப்போச்சோ? அன்னியருக் கிஷ்டம் ஆச்சோ?
பாடுபட்ட பட்சக் கோனரே!
ஓ! ஸ்த்ரீ வித்தேசையா!
காடுகளில் தேடிப் பாருமேன்.— ஓ!

௫

மந்தையைக் கருணைக் கண் பாரும், சிந்தையில் துயரம் தீரும்,
சந்ததம் தொழுவம் சேருமேன்;
ஓ! ஸ்த்ரீ வித்தேசையா!
வந்தனம், உமக்கு ஸ்தோத்ரமே.— ஓ!

வே.—சா.

[1] கடவுள்.

## ௨௬௪. THE HOLY SPIRIT SOUGHT FOR THE REDEMPTION OF MEN. 264.

### பரிசுத்த ஆவிக்காக மன்றாடல்.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

ஐயனே! நரர்மீதிரங்கி அருள் ஐயனே!

சரணங்கள்.

௧

வையங் கெடுக்கப்பட்டு நொய்யு தனுதி! உன்றன்
துய்ய ஆவியை விடுத்துய்ய கிருபை புரியும்.— ஐய

௨

ஆதத்தின் மக்கள் எல்லாம் போதத் தவிக்கிறார்கள்;
வேதத் துரைப் பிரகாரம் நீதத்தன் ஆவி தந்தாள்.— ஐய

௩

மைந்தர் மடிந்து நர கந்தனில் வீழாதுன்றன்
மைந்தனின் ஆவியைத் தந் தெந்தவிதமுங் காப்பாய்.— ஐய

௪

முந்து மனுடருக்குத் தந்த வாக்குத்தத்தத்தன்
சிந்தை மகிழ்ந்தவர் நிர்ப் பந்தந் தவிர்க்கவேண்டும்.— ஐய

௫

உம்மில் ஒருவரான மும்முதலினில் ஆவி
தம்மை அனுப்பியருளும் மெய்ந் நன்மைப் பிதாவே!— ஐய

௬

ஆகாதவன் மடிந்து, சாகா துயிர் பிழைக்க,
வாகாய் அருள் செயும் திரி ஏகா! உமக்குஸ்தோத்ரம்.— ஐய

வே.—சா.

## ௨௬௫. INVITATION TO PROCLAIM THE GOSPEL. 265.

### சுவிசேஷத்தைப் போதிக்க ஏவுதல்.

இராகம், அடாணா. தரு. திரிபுடைதாளம்.

பல்லவி.

சுவிசேடங் கூறுவோம் வாரீர் — கன
தேசிகரே! உப தேசிகரே! — நாம்.



அனுபல்லவி.

திடமாயிப் புடவியிலே திரு
வசனத்தையே, விதைசெயவே, நாம்— சுவி

சரணங்கள்.

௧

யேசுகிறிஸ்துவின் நாமத்தை, சகல பேர்க்கும்
எடுத்துரைப்போம் போதமாய்;
தேச மெங்குஞ் சுற்றி, நேசமாக வெற்றி
தேசத்தி லஞ்ஞான மகற்றிட,
தேச கிறிஸ்தேசுவைப் போற்றிட;— சுவி

௨

சிலுவைக் கொடியே பிடிப்போம், ஜெயித்தெழும்ப
தேவ வசனந் தொடுப்போம்,
வலுவாய் நரகினில், மடியு மனுடரை
மாட்டிக் கறை, காட்டிடுவோம், வழி
கூட்டிக் குறை, தேற்றிடுவோம், நாம்;— சுவி

௩

காணாத ஆட்டையும் பார்ப்போம், கண்டாலதையும்,
கர்த்தன் மந்தையினிற் சேர்ப்போம்,
தானையிலேயு மஞ்ஞானச் சாதியைச்
சந்தித் தவருட னுறவாடியே,
மூர்க்கப் பவமற வதைத் தேடியே;— சுவி

௪

பூமி மீதெங்கு மெட்டுவோம், சுவிசேடத்தின்
புனித வலையைக் கட்டுவோம்,
தாமசமின்றி வந்து, சகலரைச் சேராக்கித்
தருணமிது குணப்பட எவி,
தரா மீதினில் யாவரும் மேவி;— சுவி

ஜே.—யா.

## ௨௬௬. INVITATION TO PREACH THE GOSPEL. 266.

### சுவிசேஷத்தை உரைக்க வாரும்.

இராகம், மத்தியமாவதி. திரிபுடைதாளம்.

பல்லவி.

மெய்ச் சுவிசேஷத்தை மேதினி[1] மீதில் விளைக்க,
வேதியரே![2] வாருமுரைக்க.

---

1 பூமி. 2 வேதத்தைப் போதிக்கிறவர்கள்.

அனுபல்லவி.

வையக[1] மெங்கு மஞ்ஞான, மார்க்கமதை யழிக்க
வல்ல பல[2] மொழிக்கவந்து மகிழ்ந்து திறந்து, மொழிந்திட,
—மெய்

சரணங்கள்.

க

மண்ணில்[1] மனுஷரின்னம், வைத்துச் சிலைகள் தன்னை
வணங்குவதைப் பாரும்;—மிக
வருத்தப்பட்டுலகில் மெய்ம் மறைதனைக்[3] காணார்க்கு
வலுவாய் சத்தியங் கூறும்;[4]—இன்மைம்
எண்ணில்லாச் சேனைகள் ஏசுவைத் தேடாமல்
இருப்பதென்ன தீரம்;[5]—என்றும்
ஏகாதி தேவனை ஏத்திப் பணியாமல்
ஏன் கெடுகிறார் வாரும்;—இப்போ
பண்ணும் பவங்கள்[2] தீரும் படி சுவிசேடந் தாரும்,
உன்னத சபையில் சேரும், உத்தம சற்றநல், நற்றவ, பத்
தரே!—
மெய்

உ

ஜீவ வசனத்தைத் தெளிவா யுபதேசிக்க
தெய்வ கவச[6] மூடுப்போம்,—ஏசு
சிலுவைக் கொடி பிடித்தே, தேசத்தி லஞ்ஞானம்
சிதையும்படி[7] அடுப்போம்,[8]—பூவில்
நாவில் பற்பல பாஷை நவிலவே[9] தேவனின்
நல்லாவியைத் தொடுப்போம்,—இந்த
ஞால[1] மதி லலகை[10] நாட்டிய பொய் மறையை[3]
நகர்த்துத் தகர்த் தடைப்போம்,—தீதியில்
தாகமென்றோரைக் கண்டு தவியா வாருங்களென்று
சாவிலவன்ா மீண்டு சத்திய நித்திய வெற்றியைக்கொண்டு,—
மெய்

ஜே.—யா.

1 பூமி. 4 சொல்லும். 7 அழியும்படி.
2 பாவம். 5 தைரியம். 8 நெருங்குவோம்.
3 வேதம். 6 போர்வை. 9 பேச, 10 பிசாசு.



267.

உகாளி. A PRAYER FOR BLESSINGS UPON THE CHURCH AND WORLD.

# பொது விண்ணப்பம்.

இராகம், ஙியால். அடதாளசாப்பு.

பல்லவி.

தூய பரப் பொருளே!
துன்பற, ரட்சித்தருளே!
தூய பரப் பொருளே!

சரணங்கள்.

க.

நேய பரனே! உனது நீதி நெறி மறந்து,
தீய நரர் ஆம் எளியர் செய்த பாவம் பொறுத்து,— தூய

உ

காவல் எமக் குன்னை அன்றி காண யாரும் இலையே,
தேவன் நீயே மேவும் எங்கள் சிறந்த கன்மலையே,— தூய

௩

சுற்றிவருங் கொள்ளை நோயில் தொண்டர் மடியாமலே,
பற்றதாய் வைத் தாதரித்தெம் பாவ மறியாமலே,— தூய

௪

எங்கள் பிணையாக வந்த ஏசுநாதர் மூலமாய்,
பங்கம் அற யாம் தழைக்க பாரில் அனுகூலமாய்,— தூய

௫

தீய குணம் யாவையுமே சிந்தையை விட்டகற்ற
நாயனே! எப்போதும் நாங்கள் நன்மைதனை இயற்ற, தூய

௬

போதகன்மார் யாரும் உந்தன் புகழினை விரிக்க,
சேதம் இன்றியே அவர் இத் தேசமதில் தரிக்க,— தூய

௭

உன் மகிமைக் கென்று யாரும் உலகினிற் பிழைக்க,
நன் முயற்சியாக எங்கும் நயம் பெற உழைக்க,— தூய

௮

கானமது போன்ற இந்தக் காசினி ஓர் நிலையோ!
வானில் நீ எங்கட்கும் இடம் வைத்திருப்ப திலையோ?— தூய

ஞா.—பா.

௨௬௮. CONSOLATION FOR THE BEREAVED. **268.**

## மரித்தவர்களைப்பற்றிய துக்கத்தை ஆற்றுதல்.

இராகம், யசாவந்தி.

பல்லவி.

ஆறுதல் அடை, மனமே!—கிறிஸ்துவுக்குள்
ஆறுதல் அடை, மனமே!

அநுபல்லவி.

பாருள் பவத்தால் வந்த பலனும் மரண மதின்
கூரை யழித்த ஏசு கொற்றவன் றனை நோக்கி,— ஆறு

சரணங்கள்.

௧

நம்பிக்கை யற்றோரைப் போல,—மரித்தோர்க்காக
நலிவதேன் ஒருக்காலே;
உம்பர் கோன் மேகத்தின் மேல்—தோன்றிடும் போ
துயிர்த்தெழும்புவ தாலே
வெம்பிப், புலம்பி, அழ வேண்டாம், கிறிஸ்து வெனும்
தம்பிரான் திருமொழிச் சாரத்தை ருசிபார்த்து,— ஆறு

௨

ஏசு வருவார், வானத்தில்,—தேவதூதர்கள்
எக்காளம் ஊதும் நேரத்தில்
காசினிதனில் ஏசுவில்—மரித்தோர் எல்லாம்
கதித்துயிராகி மேகத்தில்,
மாசறச் செல்ல நாமும் மறு ரூபமாகிச் சென்று,
சாசுவதமாய் என்றும் தற்பரனுடன் வாழ்வோம்— ஆறு

௩

துக்கம் மிகுக்கும் உள்ளத்தில்;—மாமிச ரத்தம்
துடித்துப் பொங்கும் விசாரத்தில்;
மக்கள் தவிக்கும் பக்கத்தில்;—நம்பிக்கைத் தாழ்வாய்
வாடி மனத் துயரத்தில்
சிக்கி மதிமயங்கித் தியங்கிக் கலங்க வேண்டாம்;
சக்கிர வர்த்தி கிறிஸ்து தானும் மரித்துயிர்த்தார்;— ஆறு

௪

ஏசு கிறிஸ்துவை நோக்கி,—மனத்துயரம்
எல்லாவற்றையும் நீக்கி,



பேசும் மறையைச் சீர்தூக்கி,—தினம் ஆராய்ந்து,
பேணி மனதினில் தாங்கி,
மாசுமிகுங் கவலை, மனவிருள் அற, ஒளி
வீசுந் தேவாவிக்காக விண்ணப்பஞ் செபம்பண்ணி;— ஆறு

௫

சீவ நதிகள் ஓடுமே;—எருசலேமில்
திரளாய் சனங்கள் கூடுமே;
தேவ துதியைப் பாடுமே;—ஏசுகிறிஸ்தின்
ஜெயத்தைச் சொல்லிக் கொண்டாடுமே;
ஆவலுடனே நாமும் அதையே அடைவதற்கு
சீவ வசனந் தன்னைத் திடனாய்ப் பிடிப்போமாக;— ஆறு

மரி.—உப.

௨௬௯. CONSOLATION ON THE DEATH OF FRIENDS. **269.**

## மரித்தோருக்காகக் கொள்ளும் துக்கத்தை ஆற்றுதல்.

இராகம், நாகவராளி.

பல்லவி.

ஆற்றிக் கொள்ளுவோம், மனத்தை,—கிறிஸ்துவினால்
தேற்றிக் கொள்ளுவோம் மனத்தை.

அநுபல்லவி.

சாற்றரிதான பரன் தோற்ற முடிவில்லானைப்
போற்றிப், பணிந்து, துதித் தேத்தித், திருவருளால்— ஆற்

சரணங்கள்.

௧

எண்ணெங் கவலைகள் உண்டாம்;—மரித்தோர்க்காக
ஏக்கம் பெருமூச்சும் உண்டாம்;
கண்ணீர் சொரிவதும் உண்டாம்;—துயரம் மிஞ்சி
கலங்கி, அழுவதும் உண்டாம்;
அண்ணல் கிறிஸ்துவும் முன் எண்ணிக், கண்ணீர் விட்டார்;
நண்ணி அவரை, செபம் பண்ணித், துயரை விட்டு,— ஆற்

௨

ஏசுவைப் பற்றின பேர்கள்—மரித்தும், உயிர்த்
தெழுந்து புறப்படுவார்கள்;
மாசற்ற தேவன் அவர்கள்—உடனிருக்க
மகிமை பெற்றிருப்பார்கள்;
பேச வேண்டுமோ ஏசு ராசன் சமுகமதில்
நேசமுடன் என்றைக்கும் வாசஞ் செய்வார்கள் அல்லோ?—
ஆற்

௩

நித்திய பிதா அவரே;—ஆரோக்கியம் அருள்
நீதிச் சூரியன் அவரே;
சத்தியம் வழி அவரே;—எண்ணங் கவலை
சஞ்சலந் தீர்ப்போர் அவரே;
புத்தியில் உணர்ந்து, தேவ பத்தியுடன் செபஞ் செய்து,
முத்தியை அடைய மனச் சுத்தி செய்தே; அன்பினாலே—ஆற்

மரி.—உ.ப.

---

௨௭௰. PRAYER IN A TIME OF TROUBLE. 270.

# இடுக்கவேளையில் இரக்க விண்ணப்பம்.

வெண்பா.

துக்கக் கவலை தொலையாதோ? நித்தம் நித்தம்
மிக்கப் பரிதபிக்க வேண்டுமோ?—மெய்க்கோவே!
ஆசகற்றி, பாவி அடியேனை மீட்கவந்த
ஏசுநாதா! இரங்கை யா!

இராகம், உசேனி. ரூபகதாளம்.

பல்லவி.

ஏசுநாதனே!—இரங்கும் என்—ஏசுநாதனே!

அநுபல்லவி.

ஆசைக் கிறிஸ்தெனு தன்புள்ள நேசனே! அருளே!
தெருளே! பொருளே!
ஆவல் ஆகினேன்,—மகா பிரலாபம் மூழ்கினேன்;
ஆயா! நேயா! தூயா! ரட்சியும்;
ஆபத்தினால் பரிதாபித்து நிற்கிறேன்.— ஏசு



சரணங்கள்.

௧

அருமை ரட்சகனே! உனை அல்லாமல் ஆதரவார்? ஐயா!
ஆத்தும நாயகன் நீ எனக்கல்லவோ? அன்புகூர், மெய்யா!
தருணந் தருணம், கைவிடாதேயும்; தலைவா! நலவா!
வலவா!
தாமதியாதே,—கிருபை செயும்,—சாமி—இப்போதே
தாதா! நாதா! நீ தா! நீ கா,
தருமப் பிரகாசனே! பரமச் சருவேசனே!— ஏசு

௨

ஐந்து காயத்தின் கிருபைக் கோட்டையில் அடைக்கலந்தாவே;
ஆதாமின் பாவத்தால் மானிடன் ஆனமெய் வாழ்வே;
விந்தைக் கிருபை அளிக்க வேண்டும்; விமலா! நிமலா! அம
லா!
வேறு பண்ணாதே,—மிகுஞ் சீறு—பாறு நண்ணாதே;
மேலா! கோலா! நூலா! நீயே
விரும்பிச் சேரும், கோவே! திரும்பிப் பாரும், தேவே!—ஏசு

௩

உன்னைப் போல் நரர்க்கார் பாடுபட்டது? உரிமைச் சீமானே!
உத்தம மெய்ப்பனே! சத்திய மீட்பனே! உண்மைக் கோமா
னே!
என்னை இரட்சிப்பதுன் கடன் அல்லவோ? இறையே! நிறை
யே! பொறையே!
ஏதம் இல்லானே!—அடியனைத்—தீது சொல்லானே!
ஏகா! வாகா! ஆகா! இரட்சியும்;
இரக்கமே உன் தஞ்சம், நெருக்கமே பிரபஞ்சம்.— ஏசு

௪

ஆடுகள் எங்கும் சிதறிப்போனதே, அருமைக் கோனாரே!
ஆயர்கள் எல்லாம் தங்களை மேய்த்து, அகந்தை ஆளுறே;
பாடு பட்டோரே! எங்கே இருக்கிறீர்? பரிவே! தெரிவே! விரி
வே!
பாங்கு கெடாதே,—கடல் மிசை—தூங்கி விடாதே;
பர்த்தா! கர்த்தா! சித்தா! நீ வந்து, ஏசு
பரிதாபம் பாராயோ? வரு சோபம் தீராயோ?—

வே.—சா.

## ௨௭௧. GOD, A PRESENT HELP IN TROUBLE. (Ps. 46.) 271.

# தேவனே ஆபத்துக்காலத்தில் அடைக் கலமும் பெலனுமானவர். (சங். 46.)

வெண்பா.

வாதைபல பீடை வளைந்தே பிடித்தாலும்,
ஏதும் துணை இலை, என் றேங்காதே;—பேதைநெஞ்சே!
அம்பரனே நம் அடைக்கலம், ஒத்தாசை,
நம்பிக்கையும் பெலனுமே.

இராகம், இந்துஸ்தான் டப்பா. ஆதிதாளம்.

பல்லவி.

தேவனே துயர் காலத் தடைக்கலம்,
தேவனே.

சரணங்கள்.

௧

சீவநாயகன் நம்பெலன்,—துணை,
காவலே இடர் காலமதில்,—யேசு— தேவ

௨

நேமிதான் நிலை மாறினும்,—மலை
நேர் நடுக் கடல் சாய்ந்திடினும்,—யேசு— தேவ

௩

வாரியின் சலம் கொந்தளித்துப்—பொங்கி,
மாதிரம்[1] அதிர்ந் தாலும் அஞ்சேல்,—யேசு— தேவ

௪

ஓர் நதி, அதின் நீர்க்கால்கள்—பரன்
ஊரையே மகிழ் வாக்குமே,—யேசு— தேவ

௫

உன்னதன் வசிக் கும் தலத்தை—அது
உண்மையாய் களிப் பாக்குமல்லோ?—யேசு— தேவ

௬

நாதனும் அதில் தங்குகிறார்,—ஒரு
நாளுமே அசை யாது நிசம்;—யேசு— தேவ

[1] மலை.



௭

நாயகன் அதி காலையில்—துணை
நல்குவார் மிக நண்புடனே.—யேசு— தேவ

௮

சாதிகள் மா கொந்தளித்தே—ராச்யம்
தத்தளித் தாலும் அஞ்சிடாதே.—யேசு— தேவ

௯

லோகமும் அவர் ஓசையால்—கரைந்
தேகிற்றே; பரன் நம்பக்கலே.—யேசு— தேவ

௰

சந்ததம்பரன் நம்முடனே—கூடி
சஞ்சரிக் கிறார், அஞ்சல் இல்லை.—யேசு— தேவ

௰௧

காசினி மிசை பாழ்க்கடிப்பை—செய்யும்
கர்த்தனின் செயல் வந்து பாரும்.—யேசு— தேவ

௰௨

யுத்தங்கள் புவி அந்தம் வரை—நீக்கி,
உத்தம சமதானம் செய்வார்.—யேசு— தேவ

௰௩

வில்லுகள், கருக் கான வேல்,—ரதம்
எல்லாமும் நெருப் பால் அழிப்பார்.—யேசு— தேவ

௰௪

மாந்தரே! நீங்கள் ஓய்ந்திருந்து;—நாமே
வல்ல தேவனூர் என்றறிவீர்.—யேசு— தேவ

௰௫

சாதிகட் குள்ளும் மேன்மையுளோன்—இந்த
தாரணி யிலு யர்ந்திருப்பேன்.—யேசு— தேவ

௰௬

யாக்கோபின் பரன் உற்ற அடைக்—கலம்,
நம் பெலன், துணை யும் அவரே.—யேசு— தேவ

C.—யோ.

௨௭௨. PRAYER IN TIME OF PESTILENCE. **272.**

## கொள்ளைநோயைப்பற்றிய விண்ணப்பம்.

விருத்தம்.

பாவமாம் வாதை யாவும் பண்புடன் நீக்கு தற்கு
மேவியே உலகில் வந்த வேதனும் ஏக நாதா!
பூவில்யாம் கொள்ளைநோயால் புலம்பியே கதறுகின்றோம்,
ஆவலாய் கடைக்கண் பாரும் அத்தனே! இழிஞர் மீதே.

இராகம், கெண்டை. ஆதிதாளம்.

பல்லவி.

வந்தே கடைக்கண் பாருமேன்,—சர்வேசுரனே!
வந்தே கடைக்கண் பாருமேன்.

சரணங்கள்.

௧

வந்தே கடைக்கண் பாரும், மானிடர் மீதிரங்கி,
எந்தா! துயரம் யாவும் எந்தவிதமும் நீக்க,— வந்தே

௨

கொள்ளைநோய் மிகுத்ததின் கொடுமை பெருக்கமாச்சே,
வள்ளலுன் சகாயத்தால் மாற்றும் கருணை தேவே!— வந்தே

௩

எண்ணு வேளை வாலரும் இறந்துபோறார், ஐயையோ!
கண்ணீர் சொரியும் மாந்தர் கலக்கம் அனைத்தும் போக்க,—வந்

௪

அபயம் ஐயா! உமக்கே அபயம் என்றே யாங்கள்
தபனமுடன் கதறும் சஞ்சலம் நீக்கி ஆளும்.— வந்தே

௫

எங்கே விரைந் தோடுவோம், இறைவா! உமை அல்லாமல்,
எங்கள் தஞ்சம் வேறொரும் இல்லை சரணம் ஐயா!— வந்தே

௬

மானிடர் துயரத்தால் மறுகியே திரிகின்றோம்,
ஏன் இந்த கஸ்தி யாவும்? எந்தையே! கண்பாருமேன்.—வந்தே



௭

எந்த மட்டும் இந்நோயால் ஈனர் எமை வாதிப்பீர்?
அந்தி சந்தி அலறும் ஆதுலர் மீதிரங்கி,— வந்தே

௮

வாரும், கருணாகரா! வந்தே கொள்ளை நோயதை
தீரும், இவ்வேளை தானே தீனர் எம்மீதிலின்றே.— வந்தே

C.—யோ.

௨௭௩. GOD A REFUGE IN TIMES OF PESTILENCE. (PS. 91.) **273.**

## கொள்ளைநோய் காலத்து அடைக்கலம்.

(சங்கீதம், 91.)

கலிப்பா.

எங்கும்பல ஆபத்துகள் இறுகியே பிடிக்கையில் மெய்ப்
பங்களிக்க வல்லவொரு பாகரனின் காவல் என்னும்
புங்கமுறும் கோட்டைதனில் புகுந்தடைக்கலந்தேடுவோன்
பங்கம் துயர் மோசமின்றி பாக்கியமாய் வாழ்வானே.

இராகம், இங்கிலிஷ். ஆதிதாளம்.

பல்லவி.

தூங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றி தங்குவான்.

அநுபல்லவி.

சங்குல் பக லும்பரனார்காவல் அரணாதலால்,— தூங்

சரணங்கள்.

௧

வேடன் கண்ணி குத்தாங்கால் விக்கினங்கள் சுற்றுங்கால்
மூடி உனைக் காப்பரே, ஓர் மோசமின்றி சேர்ப்பரே.— தூங்

௨

பட்டப்பகல் அம்பினால் பாதிரா நீர்க்கொம்பினால்
முட்டுண்ணாமல் தப்புவாய் முன்னவன் கடாட்சத்தால்.—தூங்

௩

பக்கத்திலே ஆயிரம் பாலே பதினாயிரம்
சிக்கென வீழ்ந்தாலுமே, நின்குனை அண்டாதுகாண்.— தூங்

௪

கண்ணீராலே பார்க்குவாய், கடவுள் செயல் நோக்குவாய்;
அண்ணலே உன் அடைக்கலம், ஆண்டவன் உன் தாபரம்.
—தூங்

௫

தீங்குனை அண்டாமலும் தினங்கள் தீண்டாமலும்,
பாங்கு தூதர் காவந்தில் பத்திரமாய் வாழ்வையே.— தூங்

௬

பாதம் கல்லிடறாமல் பகைவர் உக்ரம் மீறாமல்,
தூதர் உனைக் கைகளில் தூக்கி வந்திக்கொள்வரே.— தூங்

௭

சிங்கத்தின் சிரத்திலும் சீறும் சர்ப்பம் உரத்திலும்
ஓங்காரமாய் மிதித்து, நீ உறுதிவீரம் காண்பிப்பாய்.— தூங்

௮

நம்மில் அவன் அன்புற்றோன், நமது நாமமே பெற்றோன்;
உண்மையாக விடுவிப்போம், உயர்ந்த அடைக்கலம் வைட்
போம்.— தூங்

௯

நம்மைநோக்கி கெஞ்சுவான், நம்பிக்கையோடுஞ்சுவான்;
இம்மையில் அருள்செய்வோம், ஏற்றுவோம் பரத்திலே.— தூங்

௰

நீடுநாள்களாகவே கேடு துன்பம் போகவே,
வீடுப்ரதீசினில் சூடுவான் மா மகிமைகள்.— தூங்

T.—யோ.

௨௭௪. PRAYER IN TIME OF CHOLERA. 274.

## வாந்திபேதி நீங்கும்படி கடவுளை நோக்கி வேண்டுதல்.

### விருத்தம்.

விக்கினக் கொள்ளை நோய்கள் மேதினி தனிலே எமை
மிக்கவும் பொருத லாலே, வெகுமனத் துயரோ டுந்தன்
பக்கமே வந்தோம்; இனர் பாதகம்பொறுத்து, வாதை
சிக்கென நீங்க எம்மேல் தேவனே! இரங்கு வீரே.



இராகம், ஆனந்தபைரவி. ரூபகதாளம்.

### பல்லவி.

எங்கள் மீதிரங்குவீர் ஐயா!—இரக்கமுறும்
எந்தையே! திருக்கண் பார் ஐயா!

### அனுபல்லவி.

துங்க மிகும் ஏகனே! மெய்ச் சோதியுறும் ஏகநாதா!
இராப் பகல் துன்பம் மிஞ்சி கலங்குகிறோம் ஓலம் ஐயா!—
எங்கள்

### சரணங்கள்.

௧

வாந்திபேதி மல்கல் ஆச்சே,—மதிமயங்கி
வாலிபரும் சாகல் ஆச்சே;
மாந்தர் மிசை கோபம் ஆச்சோ,—மகத்வமிகும்
வள்ளலே! உன் அன்பும் போச்சோ?
வேந்தன் மனு வேலே! எங்கள் வேண்டுதலைக் கேட்டு, தயை
போந்தபடி ஈந்தருளும் பூரண நல் லாதிபனே!— எங்கள்

௨

ஈசனே! உன் தஞ்சம் அன்றியே,—எமக்குப் புகல்
எங்கும் வேறொருவர் இன்றியே;
நீச நரர் மீது நன்றியே—நிதம் அளித்த
நேசம் போயினதோ குன்றியே;
சாசுவத நாயகா! இத் தாரணியில் கொள்ளை நோயும்
வீசும்படி செய்ததாலே விம்முகிறோம் கேளும் ஐயா!—எங்கள்

௩

நாதனே! உன் அன்பினாலே,—நரர் எமக்கு
நன்மை சொரிந் தாயே சாலே;
பூதலத்தில் எங்கள் மேலே,—புனிதா! தயை
பொழிந்தாய், நீராழி போலே;
பாதகராம் நாங்கள் இந்தப் பாக்கியத்தை எண்ணுதென்றும்,
நீதுசெய்து, கோபமந்த தேவனுக்கு மூட்டிவிட்டோம்.—எங்

௪

வாதை மிக கெம்பு தையனே!—மனுடர் பலர்
மாண்டுபோகிறாரே துய்யனே!

எதுவிதமும் நீ மெய்யனே!—எம்மீதிரங்கி
இன்னல் தீரும் தயைக் கையனே!
நீதமுடன் செய்தால் இந்த நேரந்தன்னில் மாந்தர் எல்லாம்
பூதலத்தில் ஸ்தம்பம் அற்று பூவைப்போல் உதிர்ந்திடுவோம்.
—எங்கள்

௫

ஈனர் மன்றாட்டைக் கேள் ஐயா!—இப்போதிரங்கி
எம்பரா! நோயைத் தீர் ஐயா!
மானிடர் முகம் பார் ஐயா!—மகா நிச்சய
வாக்கின்படி கண்பார் ஐயா!
ஞானமுறும் ஏசு தேவா! ஞாலத்தில் வருந்தும் எம்மை
வானுலகில் சேர்த்து நிதம் மாட்சியுடன் வாழ்தற்காய்.— எங்
C.—யோ.

## ௨எ௫. LONGING TO DIE AND TO BE WITH CHRIST. 275.

### மரிக்கவும் யேசுவோடிருக்கவும் வாஞ்சித்தல்.

வெண்பா.

தரும வழிசென்று, சற்குண சன்மார்க்க
அருமைக் கிறிஸ்துவுக் குள்ளாக—ஒருமையாய்
இன்றைக்கோ, நாளைக்கோ? இவ்வாண்டோ, எவ்வாண்டோ?
என்றைக்கோ? சாவேனி யான்.

இராகம், ரீதிகௌளம். திரிபுடைதாளம்

பல்லவி.

என்றைக்குச் சாவேனோ?—என் யேசுவை நான்
என்றைக்குச் சேர்வேனோ?

அநுபல்லவி.

ஒன்றும் அறுதி பிதா உரிமைக் கிறிஸ்துவுக்குள்—என்

சரணங்கள்.

௧

இன்றைத் தினமோ? நாளையோ?—இன்னும் ஓர் ஆண்டோ?
இரவோ? பகல் எவ் வேளையோ?



துன்றிய வாலிபத்தோ? தோன்றும் முதுமையிலோ?
துன்ப வியாதியிலோ? சுகமாய் இருக்கும் போதோ?— என்

௨

வன்மம் பகை இல்லாமல்,—குறை சொல்லாமல்,
மனச் சாட்சி வாதை கொல்லாமல்,
கன்மப் பாவம் சாராமல், கற்பனைத் துரோகம் சேராமல்,
கவலை விசாரத்தினால் கலங்கி, மனம் சோராமல்,— என்

௩

தரும வழியில் நடந்து,—நிறைய கடந்து,
ஸ்வாமி அடியைத் தொடர்ந்து,
பரம கதியை நோக்கி, பல துர்க்குணமும் நீக்கி,
பாவ மன்னிப்பை நாடி, தேவ க்ருபையைத் தேடி,— என்

௪

ஐந்து மெய்த்திருக் காயமும்,—சிலுவைதனில்
அறையுண்டிருந்த நேயமும்,
நிந்தையின் முண்முடியும், நீண்ட இருப்பாணியும்,
நேய ரத்தப்ரவாகமும் கண்டு, துயரங்கொண்டு.— என்
வே.—சா.

## ௨எ௬. IN TIME OF DROUGHT AND FAMINE. 276.

### மழைத்தாழ்ச்சியும் பஞ்சமும் நீங்க தேவனைநோக்கி கெஞ்சுதல்.

இராகம், பைரவி. ஏரிசாபதாளம்.

பல்லவி.

வாரும், எமது வறுமை நீக்க,
வாரும், தேவனே!—மழை—தாரும், சீவனே!

சரணங்கள்.

௧

பாரில் மிகுக்கும் வருத்தத்தாலே
பாடு நீண்டதே;—வெகு—கேடும் நீண்டதே.— வாரும்

௨

கட்ட பயிர்கள் மழை இல்லாமல்
பட்டுப்போச்சுதே;—மிகக்—கஷ்டம் ஆச்சுதே.— வாரும்

௩

பச்சை மரங்கள் கனிகள் இன்றி
பாறிப் போச்சுதே;—அன்னம்—பாறல் ஆச்சுதே.— வாரும்

௪

தரணி யாவும் காந்தியாலே
ததும்புதே ஐயா!—நரர்—தயங்குறோம் மெய்யாய்.— வாரும்

௫

கருணையுள்ள நாதனே! இத்
தருணம் வாருமே;—எங்கள்—தயங்கல் தீருமே.— வாரும்

C.—யோ.

---

## ௨௭௭. PRAYER FOR RAIN. 277.

## மழைத்தாழ்ச்சியும் பஞ்சமும்.

வெண்பா.

இத்தப்பத் தைக்கொண்டே ஐயாயி நம்போர்க்கு
விந்தையால் இந்த சருவேசனே!—வந்தபஞ்சம்
எத்திசையிலும் அகல, இப்புவியில் நன்மாரி
இத்தருணம் பெய்ய அருள் செய்.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

தருணம் மழை ஈயும் நாதனே!
சருவேசா! அதி நேசா! பவ நாசா! ஈசா!

சரணங்கள்.

௧

தருணம் அருள் ஈசனே! தவிக்கிறோம் மா நாசனே!
கிரணம் ஒளிர் உல்லாசனே! கிலேசம் அகற்றும் நேசனே! —தரு



௨

பூமி வறண்டு போனதே, புற்கள் வாடல் ஆனதே,
சாமி நன் மழை ஊற்றுமே, தாபம் அனைத்தும் மாற்றுமே.—தரு

௩

வெப்பம் மிகுந்த தையனே! வேளை உதவாய் துய்யனே!
எப்படியும் மழை பொழிந்தே இரக்கம் செய்வாய் மெய்யனே!— தரு

௪

ஜீவன் யாவும் மாளுதே, தினமும் துயரம் நீளுதே,
தேவே! திருக்கண் பாருமே, செழிக்க நன் மழை தாருமே. —தரு

௫

பஞ்சமே பறந்தோடவே, பணிந்துனைக் கொண்டாடவே,
கெஞ்சும் அடியார் கூடவே, கிருபை அருள் நீடவே.— தரு

௬

அல்லும் பகலும் அழுகிறோம், ஆற்றும் பரனே! தொழுகிறோம்,
பொல்லா ரெனவே விழுகிறோம், பொழியும் மழையை எழுகிறோம்.— தரு

௭

அன்பின் கருணை நேத்திரா! ஆ! விற்பன்ன சூத்திரா!
துன்பம் நீக்கும் பாத்திரா! துணை அருள் மா காத்திரா!— தரு

C.—யோ.

---

## ௨௭௮. THE GOODNESS OF GOD CELEBRATED. 278.
[A New Year's or Anniversary hymn.]

## தேவன் செய்த நன்மைகளுக்காக அவரைப் போற்றுதல்.

வெண்பா.

ஆண்டுகொண்டோன், எம்மை ஆதரித்தோன், ஜீவன் வீட்டு
மீண்டுகொண்டோன், இம்மாறு வேல் என்போன்,—வேண்டும்
வரங்கள் அளித்தான், வருஷம் முழுதும்
இரங்கினான், இம்மட்டுமே.

இராகம், தசாவந்தி. ஆதிதாளம்.

பல்லவி.

இம்மட்டும் சீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்திரிப்போமாக.

அனுபல்லவி.

நம்மை ரட்சிக்க வந்து, தம்மை பெலியாய்த் தந்து,
நற்சுகம் மேவவும், அற்புதமாகவும்— இம்

சரணங்கள்.

௧

காலம் சொல் போல் கழியும், தண்ணீரைப் போல் வடியும்,
கனவைப் போலேயும் ஒழியும்;
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ் வொன்றும் நிற்க மாட்டாது;
கோலப் பதுமைக்கும், நீர்க் குமிழிக்கும், புகைக்குமே
கொண்ட உலகத்தில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன்— இம்

௨

பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலிய தீமையை வென்றோம், நலியும்[1] ஆசையைக் கொன்
றோம்;
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்ற தெல்லாம் விண்டோம்,[2] கர்த்தாவின் மீட்பைக்
கண்டோம்,
காய்ந்த மனதொடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்துகெடவும் ஆராய்ந்து நெறியுடன்— இம்

௩.

பிசலை வரக்கண்ட தாய் பெற்ற குழந்தைதனை
பேணித் தற்காக்கும் நேர்மையே,
விசுவாசமாய் ரட்சகர் காலில் விழுந்தவரை
மேவிச் சரண் புகுந்தோரையே,
நிசமாய்க் கர்த்தாவின் கையே தன் காளில் காக்கும், மெய்யே,
நேயத்தினால் ஐந்து காயத்தினால் வெகு
பாயத்தினால் மிகு ஞாயத்தினாலுமே— இம்

1 துன்பஞ்செய்கிற. 2 விட்டோம்.



௪

எச்சரிப்பும், விழிப்பும், விசாரிப்பும், அவர் தாமே,
இல்லாவிட்டால், வீணாமே;
உச்சிதமாய் தினமும் அன்பாய் நவமாய்ச் செய்த
உயர் அனுக்ரகம் எல்லாம் மேன்மை;
நிச்சயமாய்ப் புகழும், ஸ்தோத்திரமும், துதியும்,
நித்திய காலமும் உத்தமமே வளர,
பத்தியோடே சன தத்திய மாகவும்— இம்

௫

இனியும் நீர் தாம் எழிட்டு, தமியோர்களை ரட்சித்தே,
எல்லா இக்கட்டிலேயும் [தாழ்ந்து,
கனிவாய் சகாயம் செய்யும்; துன் காலில் நாங்கள்
கலங்கி, மிரண்டும் உம்மைச் சார்ந்து,
அநியாய லோக வாழ்வை விட்டு, நிலைக்கிறதுக்
காகத் திடன் எடுத்து, யூகத்துடன் அடுத்து,
நாகப் பகை தடுத்து, ஸ்நேகித் தருள் கொடுத்து,— இம்

௬

சன சேதம் வருவிக்கும் கேடுகெட்டோர் முடிவு
தந்து, நொறுங்கினதைக் கட்டி,
சன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்து,
கண் நோக்கி, எல்லார் மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து, தமது தேவ
சிந்தை விநோடதி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த விநோதமாய்— இம்

வே.—சா.

## 279.

FOR THE NEW YEAR.

௨௭௯.

# வருஷப்பிறப்பு.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

தேவசுதனைத் துதிசெய்—எனதுள்ளமே!
தேடி அவர் தயவைப் பாடி, மன்றாடி, இன்று.

அனுபல்லவி.

சீவ தயாபரரான யெகோவாவின்
திருச் சுதனாகிய கிறிஸ்தெனும் ரட்சகர்,
பாவ விமோசனராகச் சிலுவையில்
பாடுபட் டிறந்துயிர்த் தெழுந்தெனை மீட்டவர்— தேவ

சரணங்கள்.

க வானும், புவியும், இனையும்—அவைகளின் உள்
வஸ்து பலவும்*தோன்ற விஸ்தரித் தமைத்து,
வாழும் காலத்துக்குத் தக்க—நன்மைகள் உனைச்
சூழுஞ் செயல்கள் மிகுக்கக் கொடுத் துயர்த்தி,
போன வருடம் முழுதும்—நடத்திக் காத்து,
புது வருடமாம் இதில் சதிருடன் கொண்டு வந்து,
போதகரும் சபைகளும்,—சிநேகிதரும்
வேத நெறியை எடுத்துப் பாராட்ட, தேவ
ஞானமும் நீதியும் பரி—சுத்தமும் மீட்பும்,
ஞயமுடனாகிய கிறிஸ்தேசு உன் பெல
ஈனமதில் உதவி செய்து,—நிற்கிறார்;
இன்பமுடன் அவர் அன்பதில் நிலைத்து நில்;— தேவ

உ சத்துருக்கள் சோதனைகள்,—துன்பங்கள், நோய்கள்,
சாரும் கவலைகளும், சீறும் பசாசுகளும்,
சதியாய் உந்தனைப் பிடிக்க—வளைந்தும் ஜீவ
அதிபதி வந்துனை அடுக்க நின்றுன்னைக் காத்து,
பத்திரமாக நடத்தி, நீ செய்த பல
பாவச் சுமையை அவர் தாவி, சுமந்து தீர்த்து,
பரிசுத்த கூட்டத்துடனே—அன்பின் விருந்தை
தரிசித்துன் கொள்ள உந்தனைச் சேர்த்த தயவை
உத்தம கீழ்ப்படிதலுடன்—அநுதினம்
ஊக்கமாய் உணர்ந்து நல் தீர்க்கமாய் செபம் செய்து
அத்தன் வருகைக்குக் காத்து—எதிர் நோக்கி
ஆயத்தமாய் இரு; சாயுச்சியம் அடைந்திட— தேவ

ங ராசர், துரைகள், தலைவர்,—பிரபுக்களும்,
ராச்சியக் குடிகளும், மாட்சிமையுள்ள தேவ
ரட்சிப்படைந்தி, தழைத்து,—சமாதானமாய்
பட்சத்துடனே நடந்து, வாழ்க பூ எங்கும்
வாசம் செய் போதகர்களும்—தேவ தயவை
வாழ்த்தி, பணிந்து புகழ்ந் தேத்தும் கிறிஸ்தோர்களும்
வல்லமை கொண்டு செழித்து,—சுவிசேஷத்தை
சொல்லும் திறத்தில் சுதித்து வாழ்க, சகல
தேசங்கள் பாஷைகள் கோத்—திரங்களெல்லாம்
தேவாதி தேவனெனும் கர்த்தாதிய யேசு
பாவின் அரசாட்சியை—சேர்ந்திட
விண்ணப்பமும், செபமும் வளர்ந்தேறிட— தேவ

ம்ரி.—உப.





௨௱௩௰.

# வீட்டுப் பிரதிஷ்டை.

கலித்துறை.

வானம், புவனி சமஸ்தமும் ஆளும், மகிபனே! உன்
ஞானம், பெலனும் அளவிடக் கூடுமோ நாயகனே!
இனாக் குனதரு ளாலே கிடைத்த இருப்பிடத்தில்
தானே எழுந்துன் தயை செய்வாய் யேசு தயாபரனே.

ஆதிதாளம்.

இராகம், மராஷ்டம் லாவணி.

பல்லவி.

தேவா! இவ்வீட்டில் இன்றே மேவி எழுந்து வாவே,—
தயை
செய்வாய் எமது கோவே!

சரணங்கள்.

க

மூவர் ஒருவரான தேவா! கிறிஸ்துநாதா!—எங்கள்
முன்னவா! சத்திய வேதா!
பூவில் எமக்குதவி யாருமில்லை எம் தாதா!—யேசு
புண்ணியனே! மா நீதா!—இங்கு
கண்ணுவாய் மெய்ப் போதா!—தயை
பண்ணுவாய் வி நோதா!
மேவி உனதருளை ஈவாய் இவ்வீட்டின் மீது
ஜீவனே! யேசு கோனே!—ஏழை தேவா!
பாவிகள் மீட்பன் தானே.—

உ

விந்தையுடன் களிப்பும், சந்தமுடன் உண்டாக,—அதி
மேன்மையுடன் ஏகேகம்,
அந்தமுடன் பெருகி, எந்தப் பாவமும் ஏக,—என்றும்
அந்தனே நிற வாக,—செப
தந்துமிகள் முழங்க,—ஐக்யம்
பந்தமுடன் இலங்க,
தந்தை பரனே! இன்று உந்தன் அருள் நிறைவாய்
சொந்தமுடன் ஈவாயே,—இவர் தேவா!
சந்ததம் வாழ நீயே.—

௩

இங்கு வசிக்கும் மட்டும், தங்கள் மொழிக் கிசைந்தே,-பரன்
இஷ்டப்படி நடந்தே,
அங்கம் மனது யாவும் பங்கம் இன்றி தொடர்ந்தே,—இவர்
அநுதினமும் மகிழ்ந்தே,—உயர்
அம்பர வீட்டில் சேர்ந்து,—மிகு
கெம்பீரமாக வாழ்ந்து,—
பங்கமுடன் நிதமும் தங்கி யேசு பரனில்
இங்கிதமாய்க் கொண்டாட,—நிதம்
மங்களக் கவி பாட.— தேவா!

C.—யோ.

## உ௮௧. PRAYER FOR DOMESTIC MERCIES AT THE TIME OF MARRIAGE. 281.

## குடும்ப சிலாக்கியங்களைக் கேட்டல்.

கொச்சகம்.

ஆதியில் மனிதர் தம்மை ஆணும்பெண்ணு மாய் வகுத்து
மேதினியில் மெய்ம்மணம் விதித்த தயாபரனே!
மாதும்மண வாளனும் வளம்பெறவே வாழ்ந்திருக்கத்
திதிலா மாமகத்வ தேவா! வந் தாளுவையே.

இராகம், சைந்தவி. ஆதிதாளம்.

பல்லவி.

திதிலா மா மகத்வ
தேவா! வந்தாளும்.—அதிசய;

சரணங்கள்.

௧

ஆதி மூலனே!—உயர்—நீதி குணாலனே!—மனுச்
சாதி இடமே மணமானதை மாதயவாய் நிலையாக்கின-திதிலா

௨

வேத போதனே!—பிர—சாத நாதனே!—தினம்
மாது மணாளனும் யாதொரு பேதம் இலாது சுகித்திட—திதிலா



௩

மித்திர சேர்க்கையும்,—பரி—சுத்த இல் வாழ்க்கையும்,-வளர்
புத்திர சந்தானமோடே இவர் நித்திய சிலாக்கியம் உற்றிட,—
திதிலா

௪

தேவ சேயராய்,—இவர்—மேவ நேயராய்—கெடு
பாவ வழி மாறி நெருங்கிய சீவ வழியே தொடர்ந் தேகிட—
திதிலா

௫

உம்பர் சோதியே!—சுரர்—சம்பும் நீதியே!—அதி
சம்ப்ரம பூரண காரண எம்பரம உதார குணாகர— திதிலா

ஜா—பி

## உ௮௨. A MARRIAGE SONG. 282.

## கலியாணப்பாட்டு.

இராகம், டப்பா. ஏகதாளம்.

பல்லவி.

குணம் இங்கித வடிவாய் உயிர் கோவே! ஏசு தேவே!
மணம் இங்கதி வளமாய் உற வருவீர், மேசியாவே!

சரணங்கள்.

௧

மன்றல் செய்து மனை புகு மண
வாளனோடவ ளோரும்
தன் துணையான மங்கையும் இங்கே
தழைக்க அருள் தாரும்;— குணம்

௨

ஆதி மானிடற் கான[1] ஓர் துணை
அன் றமைத்த நற் போதனே!
நீதற இணையாம் இவர்க் கருள்
செய்குவீர்; எங்கள் நாதனே!— குணம்

௩

தொன்று கானாவில் மன்றல் ஓங்கிடத்
தோன்றிய தயா பரனே!
இன்று மன்றல் சிறந்திட அருள்
ஈந்திடும்; கிர்பா கரனே!— குணம்

[1] மானிடனுக்கான.

௪

பண்பதில் லவ லேசமுங் குறை
பாடில்லாத தெய் வீகனே!
நண்பதில் இரு பேரும் வாழ்ந்திட
நண்ணும்; மா திரி யேகனே!— குணம்

௫

சீவ காலம் அதில் இவர் மறு
ஜென்மமாகப் பிறக்கவும்,
தேவனே! அருள் செய்திடும்; உந்தம்
சேயராகச் சிறக்கவும்.— குணம்

௬

நாதனே! எளி யோர்க்கிது வரை
நல்கின நன்மை யாவும்
போதமாய் உணர்ந்தே உம்மை இங்கு
போற்றவே எம்மை ஏவும்.— குணம்

௭

உற்ற நல் உற வோரும் எங்கள்
உரிமை ஆனவர் யாரும்
பற்றதாய் உறு பத்தியோ டும்மைப்
பாட நல் மனந் தாரும்.— குணம்

௮

தாசர் வேண்டும் மன்றுடல் கேட்டிடத்
தானெழும்; இது தருணம்,
மாசற அருள் ஈந்திடும், ஜெயோ
வா! நும தடி சரணம்.— குணம்

ஜா.—பா.

---

௨௮௩. A MARRIAGE SONG. 283

# கலியாணப்பாட்டு.

விருத்தம்.

எங்கும்நிறைந் தெவ்வுயிர்க்கும் இறைவ னாய் அங்
கியலும்நன்று தான் அளிக்கும் ஏக னே! நற்
பங்கெமக்கும் அளிக்கவென்றிப் பாரில் மேவிப்
பலதுயர்உற் றிறந்தெவெற்றி படைத்த தேவே!
மங்களமும் ஓங்கஉன்றன் மாட்சி தோன்ற
மாதுமணை வாளனுக்கும் வரங்கள் ஈய,
இங்கெமது நடுவில்மகா இரக்க மாக
எழுந்திடாய் உன்கருணை பொழிந்தி டாயே.



இராகம், சௌராஷ்டிரம். ஆதிதாளம்.

பல்லவி.

இங்கெமது நடுவில் எழுந்திடுவாய்,—இந்நாளில்,
இறைவா! எம்மேற் கருணை பொழிந்திடுவாய்.

சரணங்கள்.

௧

தூங்கவனே![1] இவர்கட் கிங் கியற்றும்,—நல்ல
சோபனம் ஓங்க வென்று சீர்வதிக்க,
மங்கள கீதத்தால் மனம் மகிழ,—இங்கே
வரும் அனைவோரும் உரிமை உற் றெடு யவதாக
மருவி மறம் யாவும் மறந்திட,
வரும் நேசமதாலே சிறந்திட,— இங்

௨

உற்றார் சுற்றத்தார் யாரும் உளங் களிக்க,—வஞ்சம்
உறு மருவலர் தாமும் மனந் தெளிக்க,
பற்றுறு நேசர் கூடிப் பதம் படிக்க,—இந்தப்
பதி மனையாளின் உறவோர் நிதியுடன் வாழ்க,
பணிவாய் மன தோடு மதித்திட,
பரனே! உனை யாங்கள் துதித்திட,— இங்

௩

பண்டு கானாவில் ஆன கல்யாணத்தில்,—வந்து,
பட்சம் வைத்தருள் செய்த பான்மை யதாய்,
தொண்டர் எளியர் இங்கு கொண்டியற்றும்—இந்தச்
சோபன நாளில் தேவரீர் காவணம் மேவி,
சுகியால் எமதுள்ளம் கெலிந்திட,
தூய்தான நல்லாவி மகிழ்ந்திட,— இங்

௪

ஆடவனும் மடந்தை யானவளும்,—என்றும்
அன்பிற் குன்றாமல் இருந் தகம் மகிழ,
நாடுந் திரார் சம்பத்தும் மிக அடைய,—இவர்
நன்னயமாக கற்பதில், திண்ணயம் மேவ,
நல்லோர் என நாமமும் ஓங்கிட,
ஞாலமதிலே துயர் நீங்கிட,— இங்

ஜா.—பா.

---

1 மேன்மையுள்ளோனே.

## ௨௮௪. MARRIAGE SONG. 284.

# கலியாணப் பாட்டு.

### வெண்பா.

ஆதம்ஏவாளைமணமாக்கி, அநுக்ரகித்து,
பாதுகாத் தாண்ட பராபரனே!—மாதயவாய்
இந்தமங்க ளஞ்செழிக்க இங்குஅருள் பூர்ந்துவந்து,
சந்ததமும் நின்கிருபை தா.

இராகம், தசாவந்தி. ஆதிதாளம்.

### பல்லவி.

இந்த மங்களஞ் செழிக்கவே,—கிருபை செயும்;
எங்கள் திரித்துவ தேவனே!

### அநுபல்லவி.

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில்-சென் றம்பணத்தை[1]
கந்தரசமாகச் செய்த விந்தைபோல் இங்கேயும் வந்து— இந்

### சரணங்கள்.

௧

ஆதி தொடுத் தன்பை எடுத்தாய்,—மனுடர் தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்,
நீதி வரம் நாளுங் கொடுத்தாய்,—பெற்றுப் பெருகி
நிற்க, உலகத்தில் விடுத்தாய்;
மாதவர் பணியும் வேத போதனே! அந்தப்படி உன்
ஆதரவைக்கொண்டு சுதன் நீதியை நம்பிப் புரிந்த— இந்

௨

தக்க ஆபிராமும்[2] விண்டனன்,—அதனை மன
அக்குள் எலியேசர் கொண்டனன்,
முக்ய ஹாரன்[3] நிலத் தண்டினன்,—நினைத்தபடி
சக்கியமதாகக்[4] கண்டனன்;
பக்குவம் உரைத்திடா ரெபெக்காளும் ஈசாக்குவுக்கு
தக்க மணவாளியாகத் தந்து தயை செய்தாற்போலே— இந்

[1] நீர். [2] ஆபிரகாம். [3] ஆரம். [4] சிநேகமாக.



௩

சத்திய வேதத்தின் வாசனே!—அருளு பரி
சுத்த சுவிசேட நேசனே!
பத்தர்கள் பவ விமோசனே!—பழுதணுவும்
அற்ற கிறிஸ் தேசு ராசனே!
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்
புத்திர சம்பத்துண்டாக்கி, நித்திய சுப சோபனமாய்— இந்

வே.—சா.

## ௨௮௫. MARRIAGE SONG. 285.

# கலியாணப் பாட்டு.

### வெண்பா.

சுந்தரஞ்சேர் கானாவின் துய்யமண வீட்டில் அப்பைக்
கந்தமது வாக்கினநின் காட்சிபோல்—இந்தமண
வாயில்வந் துந்தன் மகிமைஅளித் தாள், ஏசு
நாயகா! எந்நாளு மே.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

### பல்லவி.

ஏசுநாயகா! வந்தாளும்,—எந்நாளும் திவ்ய
ஏசுநாயகா! வந்தாளும்.

### அநுபல்லவி.

ஆசிர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக— ஏசு

### சரணங்கள்.

௧

தற்பரப் பரப்ரம மகத்துவ ப்ரதாபா!
அற்புத மிகக் கிருபை கூரும், கண் பாரும்— ஏசு

௨

சுந்தரம் மிகும்படி முன் அந்த மண வீட்டில்
உன்றன் அருள் தந்த தயை போலே, அன்பாலே— ஏசு

௩

உத்தம சன்மார்க்க நெறி, பத்தி, விசுவாசம்,
நித்ய சமாதானம் உற்று வாழ, மிக வாழ,— ஏசு

௪

துங்கம் மிகு நன் கனம் விளங்கி, வளமாக
மங்களம தோங்க, நலம் தாங்க, நலம் தாங்க— ஏசு

௫

நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகி
புத்திர சந்தானமே செழிக்க; தழைக்க— ஏசு

வே.—சா.

---

௨௮௬. MARRIAGE SONG. 286.

## கலியாணப் பாட்டு.

விருத்தம்.

ஆதியை அரூபி யானை அடிமுடி நடுவாய் நின்ற
நீதிசேர் ஏசு நாத நிமலனைப் பணிந்து, போற்றி,
கோதற விவாகஞ் செய்த கோமக னோடே கூட
மாதையும் வலமாய் வைத்து, வாழ்த்திமங் களஞ்சொல் வோமே.

இராகம், கேதாரகௌளம். திரிபுடதாளம்.

பல்லவி.

சந்தத[1] மங்களம், மங்களமே;
சந்தத மங்களம், மங்களமே.

அநுபல்லவி.

அந்தம் ஆதி இலான் அருள் சேயா!
எந்தை ஏசு கிறிஸ்து சகாயா!— சந்

சரணங்கள்.

௧

ஆறு சாடி அயம்[2] மதுவாகவே வேறு செய் கலிலேய விநோ
தா!
மாறில்லாமல் இம் மன்றல் செழிக்க நல் பேறு தந்தருளாய்;
பிரதாபா!— சந்

[1] எப்போதும். [2] நீர்.



௨

அந்தாம், பரம் பூமி அடங்கலும் விந்தை மேவி, நிறைந்த
விசாலா!
இந்த நாள் மணம் செய்யும் இவர்க் கருள் தந்துன் ஆசிடை
சாற்றும், தயாபரா!— சந்

௩

வையமுற்ற மணவறைப் பந்தலில் ஐயனே! உன் அருட்கொடு
வந்திருந்
துய்ய ஐங் குறியாலும் உவந்தருள் செய்யும்; ஏக திரித்துவ தே
வா!— சந்

௪

கர்த்தனே! கருணைக் கடலே! உயர் பெத்தலைப் பிரதாப விசே
டா!
புத்திரர் பெறவும், புகழ் ஓங்கவும், சித்தம் வைத்தே இவர்க்
கருள் செய்திடும்;— சந்

வே.—சா.

---

௨௮௭. A MARRIAGE PRAYER. 287.

## மெய்விவாகத்தைப்பற்றி.

பல்லவி.

இம்மணர்க் குன்னருள் ஈ பாவாசா!
ஏசுக் கிறிஸ்தையா! ஓ சருவேசா!

சரணங்கள்.

௧

செம்மையும் நன்மையும் செல்வமுந் தாரும்,
தேவரீர் இவ்விரு பேரையுங் காரும்;— இம்

௨

ஆதமோ டேவையை அன்றமைத்தீரே,
அவ்விதமாக நீர் இன்றுஞ் செய்வீரே;— இம்

௩

அன்பன் ஈசாக்கு ரேபக்காட் கிரங்கி,
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீரே;— இம்

௪

உன் தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்,
ஒருவர்க் கொருவர் நல்லன்பில் நிலைக்கவும்;— இம்

௫
தாழ்மை பொறுமைகள் சற்குண மேன்மைகள்
தந்தும தாவியைக் கொண்டு காத்தாளுமேன்;— இம்

௬
இயேசுகிறிஸ்துவை நேசித்து வாழவும்,
இன்ப விசுவாச வீட்டாரென் றாகவும்;— இம்

P.—பா.

௨௮௮. THE SECOND COMING OF CHRIST. **288.**

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

விருத்தம்.

அந்தர காலம் மேகா சனத்தெழுந் தமரர் சூழ,
சுந்தரத் தேழாந் தூதன் தொனிக்கும்எக் காளத் தோடே,
மைந்தரை எழுப்பி ஞாயத் தீர்ப்பிட, மகத்வத் தொன்றும்
எந்தையார் திருக்கு மாரன் ஏசுநா யகன்வந் தானே.

இராகம், காப்பி. ஆதிதாளம்.

பல்லவி.

வந்தானே, தந்தை பிதா வின் சுந்தர மைந்தனே.

அனுபல்லவி.

அந்தமாய் உருவங்கொண்டு, அன்புடன் சீயோனைக் கண்டு
விந்தையில் சல்லாபம் விண்டு, மீண்டிரட்சித் தாளவென்று— வந்

சரணங்கள்.

௧
அங்கியும் மார்பருகில் பொற் கச்சையும் கட்டி,
அட்சய தேவத்ரவிய ஆரணங் கொட்டி,
துங்கமாய்க் கரத்தில் வான ராச்சியச் செங்கோலை நீட்டி,
சோதிப் பிர காச சிவ ரத்ன கிரீடஞ் சூட்டி,— வந்

௨
அக்கினிக் கொழுந்தடைவாய் கண்கள் எரிக்க,
ஆதித்தன் எனவே முக ப்ரபை விரிக்க,



மிக்க சிரத்தின் ரோமம் பஞ்சிலும் வெண்மை செரிக்க,
மேன்மையில் எக் காளங்கள் கொண்டேழு தூதர் ஆர்ப்பரிக்க,
—வந்

௩.
காயுஞ் சொகு சாவுக் கொத்த கால்கள் இலங்க,
கரத்தினிலே எழு நட்சத் திரங்கள் அலங்க,
வாயிலிருந் திருபுறமும் கூர்மைப் பட்டையந்துலங்க,
வாருதிச் சலத் தொனியின் வார்த்தையால் அண்டங் குலுங்க,
—வந்

வே.—சா.

௨௮௯. ON THE COMING OF CHRIST TO JUDGMENT. **289.**

## கிறிஸ்துவின் கடைசி வருகை.

வெண்பா.

பொல்லாரைத் தீரகிற் போக்கி, தண் டிப்பதற்கும்
நல்லார்கள் மோட்ச நலம்பெறற்கும்,—வல்லார்
பெரியமே காசனத்தில் பேரிமுழக் கோடே,
வருவார்; விழித்திருங் கள்.

இராகம், சௌராஷ்டிரம். திரிபுடைதாளம்.

பல்லவி.

வருவார், விழித்திருங்கள்;—இயேசுநாதர்
வருவார், விழித்திருங்கள்.

அனுபல்லவி.

பெரியவர், சிறியவர், பேதையர், மேதையர்,
சருவர்க்கும் நடுத்தீர்த்து, தகு பலன் அளித்திட— வரு

சரணங்கள்.

௧
பேரிகையால் அண்ட பித்திகளும் குலுங்க,
பேர் எக்காளத் தொனியால், பேய்க் கணங்கள் கலங்க,
தாரணியோர் மலங்க, தமைப் பற்றினோர்களும்
சீர்நிறை தூதரும் சேர்ந்து, சூழ்ந் திலங்க,— வரு

௨

வானம் மடமடென்க, வையங் கிடுகிடென்க,
சனப் பேயைச் சேர்ந்த எவரும் நடுநடுங்க,
மானம் இன்றி வாழ்ந்த மா பாதகர் அடங்க,
ஞான கானம் பாட நல்லோர் சபை தொடங்க,— வரு

௩

துன்பம் உற்றோர்க்குச் சீவ இன்பக் கனிகள் ஊட்ட,
தொண்டு செய்த அன்பர்க்கு அண்டர் முடிகள் சூட்ட,
அன்பற்றோரை நரக வன்புத் தீயில் வாட்ட,
அத்தனைச் சேர்ந்தோரை நித்திய கதியில் கூட்ட,— வரு

௪

விசுவாசிகள் தமை மெச்சிப் புகழுதற்கும்,
மேலா மோக்ஷ தலத்தோர் சால மகிழுதற்கும்,
விசுவாச ஈனரை வியவா திகழுதற்கும்,
விண்ணோர் குழாங்கள் சூழ, அண்ணல் கிறிஸ்தரசர்— வரு

தே.—மு.

௨௱௯௰. **290.**

THE SECOND COMING OF CHRIST
DESIRED BY THE CHURCH.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை சபை வாஞ்சித்தல்.

பல்லவி.

மின்னாள்[1] சீக்கிரம் வரச் சொன்னாள்,
வரச் சொன்னாள்.

அனுபல்லவி.

மன்னா; ஏசுகிறிஸ்து மகராஜா! ஓசன்னா!— மின்

சரணங்கள்.

௧

உமது சபையாம் மனையாட்டி,—உம
திரக்கத்தினால் உம்மில் அன்பு பாராட்டி,— மின்

௨

சீயோன் மகள் காதல் மிஞ்சி,—உமைச்
சீக்கிரம் வரச் சொன்னாள்; மெத்தவுங் கெஞ்சி;— மின்

1 சபைப்பெண்.



௩

எருசலேம் மகள் உமைத் தேடி,—மன
தேங்கி, ஏங்கி, மதி முகம் மிக வாடி,— மின்

௪

இரத்தமாம் நீர் இட்ட பரிசம்,—அவள்
இரட்சிக்கப்பட்டதால், இது நல்ல வருஷம்;— மின்

௫

சொந்த ரத்தத்தைக் கொடுத்தீராம்;—பாவ
துன்பத்தினின் றவள்தனை எடுத்தீர் ஆம்;— மின்

௬

பாவம் அறக் கழுவினீராம்;—அவள்
பரிசுத்தவதி யென்று பேர் கொடுத்தீர் ஆம்;— மின்

௭

ஆவி நீர் கொடுத்த அச்சாரம்—மேவி
அப்பா! பிதாவே! என்று கூப்பிடச் செய்தீர் ஆம்;— மின்

௮

திருடன்போல் வருவேன் என்றீர் ஆம்,—தினம் [மின்
செபம் பண்ணி, விழித்துக் காத்திருக்கச் சொன்னீர், ஆம்;—

௯

சீக்கிரம் வருவேன் என்றீர் ஆம்;—காலம்
செல்லுதாம்; ஆதலால் எழுந்தருள்வீர் ஆம்;— மின்

௰

சீவத் தண்ணீரும் வேண்டும் என்றாள்;—முன்னே
செத்தவள் உம்மாலே பிழைத்ததைக் கண்டாள்;— மின்

௰௧

மெல்லிய புடவை ஒன்றிருக்காம்;—அது
வேண்டுமாம் அதின்மேலே தனக்காசைப் பெருக்காம்;— மின்

௰௨

சீவ கனி உம்மிடம் உண்டாம்;—அதை
தின்றால் பிழைப்பா யென்றதவளுக்கு நன்றாம்;— மின்

௰௩

சீவ கிரீடம் வேண்டுமென்றாள்;—அதைச்
சீக்கிரமாய்க் கொண்டுவர வேண்டுமென்றாள்;— மின்

௰௪

மாமிச இச்சை பொல்லாக் கண்ணி,—தன்னை
மயக்கிக் கெடுக்கு மென்ற பயம் மிக எண்ணி;— மின்

௰௫
கெட்ட பசாசன் அவள் மேலே,—பாயக்
கெர்ச்சித்துத் திரிகிறான், சிங்கத்தைப் போலே,— மின்

௰௬
சீக்கிரம் வரவேண்டுமென்றான்,—வந்து
சேரும் மட்டும் தெருவில் நிற்பேன் நானென்றான்;— மின்

௰௭
நீர் வாராவிடில் செத்துப்போவாள்;—இது
நிச்சயம் நீர் வந்தால், அவள் உருவாவாள்;— மின்

௰௮
சிலுவையில் உயிர் விட்ட நேசம்;—நீர் தாம்
சீவனோடெழுந்ததால் வைத்தாள், விசுவாசம்;— மின்

௰௯
நான் அவருடன் தூதுக்காரி;—உமை
நம்பின பெண், நீர் என் நல் உபகாரி;— மின்

௨௰
நன்றாய் ராசரீகஞ் செய்வீராம்—கூட
நடந்துலாவ அவள் தனக் கருள்வீர் ஆம்;— மின்

௨௧
தேவரீருடன் ஒன்றாய்க் கூடி,—நித்ய
சீவனை அடைந்திட மிகவும் மன்றாடி;— மின்

௨௨
சித்தம் உமது சித்தம் ஐயா!—திருச்
சித்தத்துக் கறிய நான் செப்பினேன்; மெய்யா!— மின்

௨௩
அடியாள் பிழைகளையும் நீக்கி,—எனை
ஆசீர்வதியும், திருக் கிருபைக் கண் நோக்கி,— மின்

௨௪
ஏழை அடியாள் பவந் தீரும்;—உம
தின்பத் திருச்சபையின் மகிமையிற் சேரும்;— மின்

௨௫
தோத்திரம் உமக்கென்றுந் தேவா!—நித்ய
சோபனம் துதி உமதடியாளைக் காவா;— மின்

ம்ரி.—உப.



௨௯௧. THE SECOND COMING OF CHRIST. **291.**

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

பல்லவி.

எனது கர்த்தரின் ராசரீக நாள்
எப்போ வருகுமோ?
ஏங்கு மென் கவி நீங்கி மகிழ்ச்சி
எப்போப் பெருகுமோ?

அநுபல்லவி.

மனிதசுதனின் அடையாளம் விண்ணில் காணுமென்றாரே,
வல்லமையோடு மகிமையாய்த் தோன்றி வருவேன் என்றாரே;
—எனது

சரணங்கள்.

௧

தேவ தூதரின் கடைசி எக்காளம் தொனி முழங்கவே,
ஜெகத்தில் ஏசுவைப் பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே,
சீவனுள்ளோரும் அவருடன் மறுரூபமாகவே,
ஜெகத்தில் பத்தர்கள் கர்த்தரிடத்துக் கெழுந்து போகவே;—
எனது

௨

தூதர் எக்காளத் தொனியிலென்னிடம் சேர்ப்பேன் என்றாரே,
சோதனை காலந்தனில் தப்பவுன்னைக் காப்பேன் என்றாரே,
பாதக மனுசாதி வேதனை அடையு மென்றாரே,
பாவ மனுஷன் தோன்றி நாசமாய்ப் போவானென்றாரே;—
எனது

௩

சூரியனிருளாகிச் சந்திரன் ரத்தமாகவே,
சோதி நட்சத்திரங்கள் அத்திக்காய் போலுதிரவே,
பாரில் அக்கினி வீழ்ந்து மூன்றிலோர் பங்கு வேகவே,
பயங்கள் பஞ்சங்கள் யுத்தங்கள் பூமி யதிர்தலாகவே;—எனது

௪

உலகத்தின் ராச்சியங்கள் நமது கர்த்தர் தம்மையும்;
உத்தம முள மீட்பராகிய ஏசுகிறிஸ்தையும்,
நலமுடன் சேர்ந்தென்றும் விண் சபையோடு பாடவும்,
நன்றாய் என்றும் ஆளக்கடவீர் என்று துதிக்கவும்;— எனது

௫

வல்ல சர்ப்பம் முற்றும் கட்டுண் டடைபட்டுப் போகவே,
மகிமையுடனே கிறிஸ்து ஆயிரம் வருஷமுமாளவே,
நல்ல வாக்கு அருளிநந்து மா கெம்பீரமாகவே,
நன்மையாயவர் உலகெங்கும் ராசரீகஞ் செய்யவே;— எனது

௬

யூதரினி ருதயத்திலுள்ள முக்காட்டை நீக்குவார்,
யூபிலே எனுஞ் சீர்திருத்தலப் போதே யாக்குவார்,
காதலாய் பத்துப் பேரோர் யூதன் வஸ்திரத்தைப் பற்றுவார்,
கர்த்த ருங்களோ டிருக்கிறாரெனக் கூடச் செல்லுவார்;—எனது

௭

சாதிகட்குக் கொடியா யீசாயின் வேரன் றேறுவார்,
சகலரும் அவர் கொடியின்கீழ் வந்து பணிந்து சூழுவார்,
நீதியாய்த் தானே மேசியா எங்கும் ஆளுகை செய்வார்,
நித்தம் பிரபுக்களும் நியாயமாய் துரைத்தனஞ் செய்வார்;—
எனது

௮

எருசலேமிலிருந்து ஜீவ நதிகள் ஓடுமே,
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை ஏத்திப் பாடுமே,
வருஷமாயிர முளவும் பூமியில் பலன்கள் நீடுமே,
வான ராச்சிய சேனைகள் யாவும் வந்து கூடுமே;— எனது

௯

சஞ்சலங்களும் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே,
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே,
நெஞ்ச மகிழ்ந்து நீதிமான்களின்வாய் துதிக்குமே,
நித்திய ஜீவனைப்பெற என்றன் மனந் துடிக்குமே;— எனது

௰

சீக்கிரமாக வருகிறே னென்று சொல்லி விட்டாரே,
ஜீவ விருட்சந்தனில் அதிகாரம் தருவே னென்றாரே,
பாக்கியமுள்ள சுவிசேஷத்தைக் கைக்கொள்ளச் சொன்னாரே
பார்க்கப் பார்க்க நல் வேதவாக்கியம் தோன்று மென்றாரே;—
எனது

P.





# நியாயத் தீர்ப்புநாள்.

வெண்பா.

கள்ளன் வரும்நேரம் காணுவரோ? கர்ப்பவதி
பிள்ளை பெறும்மணியும் பேணுவரோ?—வள்ளல்
திடுக்கெனத் தோன்றிடுவார்; தீயுலகோர் எண்ணார்,
நடுத்தீர்ப்புச் செய்யவரும் நாள்.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

நடுத்தீர்ப்புச் செய்ய வாறாரே;—புவி தனக்கு
நாயன் கிறிஸ்து நின்று, ஞாயம் புரிய வென்று.

அனுபல்லவி.

கடு மரக் கனி தின பவமதில் வீழ் உல
கதில் உறு மனுடர்கள் அவரவர் கிரியைகள்
திடு திடென் றொலிபெறும் மடமடப் பொடு வரு
கிறிஸ்துவின் நாளினில் விரித்துமே, வெளிப்பட—நடுத்

சரணங்கள்.

௧

சூரியன் அந்தகாரம் ஆம்;—சுடும் அந்நாள் முன
சுத்த நிலாவும் ஒளி அற்று, மறைந்து போகும்;
தாலக்க வெள்ளிகள் அதிரும்;—தொகைதொகையாய்
பெலத்துப் பழம்போல் உதிரும்;—பெருக்கமொடு
பேச்சில் வானம் அசையும்; ஆச்சரியம் இசையும்
பேதையர் தாமும் மருள்வர்,—பிரியமாக
பாரினில் பெண்களைக் கொள்வார்கள், கொடுப்பார்கள்
பயம் அறச்செருக்கினில் பொசிப்பார்கள், குடிப்பார்கள்,
வீரியமாய்ப் பல கட்டுவர், நாட்டுவர்;
விதத்துடனே கொடுந் தீமைகள் புரிகுவர்;— நடுத்

௨

ஆர்ப்பரிப்போடு வருவார்;—ஆகாயமுடன்
அண்டம் குலுங்கிடவே, எண்டிசையும் உருகும்;
அக்கணம் தூதர் நடப்பார்;—அதிர்ச்சி உற
எக்காளந் தானும் தொனிப்பார்;—எல்லாரும் அப்போ

எழும்பி, கல்லறை விட்டே, ஒடுங்கி, கிறிஸ்துவுக்
கெதிர் சென்று, வானம் ஏகுவார்;—ஏகோபித் தன்று
பார்ப்பார்கள் கிறிஸ்துவைப் பாவிகள் நடுங்குவர்;
பரன் அருள் அடைந்த நல் பாக்கியர் களிப்பார்கள்
தீர்ப்புகள் பெற எனத் திரு மகன் ஆசனம்
சேர்த்துமே, அனைவரைப் பார்த்துமே உரை சொலி,— நடுத்

௬

எங்கோன் கிறிஸ்து நின்றுமே,—இரு வகுப்பாய்
இடையன் ஆடும், கிடாயும் நடுவாய்ப் பிரிக்கும் நேராய்,
இஷ்டரை வலது பக்கமும்,—இறுமாப்பான
துஷ்டரை இடது பக்கமும்,—தொகைப்படுத்தி
சுகமாய் வலது பக்கத் துற்ற பத்தரே! நீங்கள்
துவக்கு லோகமுதல் வைத்த—சுக உலகம்
இங்கிதமாய் அடைந் தினிப்பற மகிழுங்கள்;
இடப் புறக் கொடியரே! என்னை விட்டிங் ககலுங்கள்;
பங்கமாய் அலகைக்கும், அவனுடைத் தூதர்க்கும்,
பத்திரமாம் நரகத்தினில் விழும், என— நடுத்

௭

ரண்டு புஸ்தகங்களையே—நடுவறுக்க
நத்தி, திறந்து, புகழ்ப்பெற்று, சிறந்த வல
நல்லோரைப் பார்த்து, சொல்லுவார்;—நயம்புரிந்த
வல்லோரே! நீங்கள் வாழுங்கள்;—வறுமையினால்
வஸ்திரம் ஊணும் அற்று வந்தேன், உங்களை நட்டி;
வரிசைகள் தான் புரிந்தீர்கள்;—வருத்தம் உறக்
கண்டெனை நோவிலும், காவலின் அறையிலும்,
கருத்துடன் பார்க்கவும், புறப்பட நோக்கினீர்;
வண்டர்களே! நீங்கள் இவைகளைச் செய இல்லை;
வருந்துங்கள், தீக்கடல்; அமிழ்ந்துங்கள், எனச்சரி;— நடுத்.

ஏ.—உவா.

௨௯௩. ON THE BLISS OF HEAVEN. 293.

# மோட்சானந்தம்.

இராகம், சுருட்டி. ஆதிதாளசாப்பு.

பல்லவி.

மோட்ச பேரின்ப பாக்கியங்கள்,—அறிவுக்கெட்டா
ஆச்சரியமாம் யோக்கியங்கள்.



அநுபல்லவி.

காட்சி வளர் கடவுள் மாட்சிமையின் பிரதாபம்
காண அமரர் கண்கள் நாணும்; அதுவோ வேணும்.— மோ

சரணங்கள்.

௧

கண்களுக் கடங்கா நிதியும்,—பளிங்கைப்போல
கலந்து, பாய்கின்ற நதியும்,
விண்ணவர்கள் கெம்பீரம், வெற்றியின் ஆரவாரம்,
அண்ணல் கிறிஸ்து வீரம், ஆர் உரைப்பார், இந்நேரம்.—மோ

௨

திரு நகரில் இரவில்லை,—தேவும், ஏசுவும்
தேவாலய மதனிலே,
அருள் அருவியிற் றோய்தல், அமலன் அணியினில் மேய்தல்
நறிது[1] நம் மீதில் பாய்தல், நன்மைப்ரவாகம் வேய்தல்,[2]—மோ

௩

நித்திய சங்கீர்த்தனங்களும்,—ஏயோனுக்கும்,
நிமலர்க்கும் மங்களங்களும்,
சுத்த பளிங்கு மேடை, ரத்ன கசித ஆடை,
சுக பரிமள வாடை, சுதந்தரர் ஆவதோடே— மோ

௪

அறிவைக் கடந்த சுகங்கள்,—உட்டணம் வெயில்
அணுவும் இல்லாத நிகங்கள்;
செறியும் சுத்த சுத்தங்கள், திவ்யப்ரகா பதங்கள்,
பரவு பேரின்பங்கள், பதியை நோக்குவோம் எங்கள்;— மோ

௫

பயங்கள் இங்கில்லகளோது?—பரிசுத்தர்கள்
பாடி மகிழும்போது
ஜெயம், ஜெயம் என்று தோத்ர திரித்துவத்துக்கு மாத்திரம்
மய ஏசரேயர் கோத்திரம் மகிழ்ந்து, சொல்வோமே; தோத்தி
ரம்,— மோ

ச.—உப.

1 நன்மை. 2 கூடல், 3 பிரகாசம்.

உகூச. THE GLORY OF HEAVEN. **294.**

# மோட்சவாழ்வு.

பல்லவி.

பரத்திலே நன்மை வருகுமே,—நமக்கு நித்ய
பாக்கியம் மிகப் பெருகுமே.

அநுபல்லவி.

பரத்திலே சிறந்த சீவ பதி வளர் கிரீடம் அதைச்
சிரத்திலே அணிய வசு
தேவனைப் பணிந்து போற்றுவோம்— பரத்

சரணங்கள்.

க

அன்புள்ள தோழரே! கூடுங்கள்;—பராபரனை
அர்ச்சனை செய் திசைந்து, பாடுங்கள்;
திண்புவி உறவைப் போடுங்கள்;—ஏசுகிறிஸ்தின்
திரு அருள் தனையே தேடுங்கள்;
துன்பம் மிகும் பாவம் இடர்,
தொல்லை யாவையும் அகற்றி,
இன்பமுடனே துதியை ஏற்றி,
அன்பாய் போற்றி செய்யுங்கள்;— பரத்

உ

ஆட்டுக் குட்டியின் ரத்தத்தில் தோய்த்து,—வஸ்திரங்கள்தனை
அழுக்கறப் பிரகாசமாய் வெளுத்து,
வாட்டங்கள் அனைத்தையுந் தீர்த்து,—கண் நீர் அறவே
மகிமையின் கரத்தினால் துடைத்து,
கூட்டி, சீவ புனலிடத்தில்
கொண்டு மேய்த்தருள் முடியை
சூட்டியே அனந்த பாக்கிய
சுகத்தில் வாழ்ந்திருக்கச் செய்குவார்;— பரத்

௩

பரம சீயோன் மலையில் ஏறலாம்,—கிறிஸ்தின் புதுப்
பாட்டைப் பாடி, ஜெயத்தைக் கூறலாம்,
சீரமண்டலத் தொனியைச் சேரலாம்—தேவ குமாரனின்
சுந்தரங் கண்டிளைப்பும் ஆறலாம்;
வரமிகும் பரிசுத்தரோடும்
வானவர்களான சேனைத்



திரள் சபை சங்கத்தினோடு, நாம்
சேர்ந் தெந்நாளும் வாழ்ந்திருக்கலாம்;— பரத்

௪

தேவ தூதர் சங்கத்தில் சென்று,—புதெருசலேமில்
சேர்ந்த சபை யாவையுங் கண்டு,
ஆவல் மிகுங் காதலைக் கொண்டு,—பராபரனை
அர்ச்சனை செய் துறுதியாய் நின்று,
சாவு நோவு யாவும் இன்றி;
தற்பரன் சமுகத்தில்
சீவ விருட்சத்தின் பங்கைச்
சேர்ந் தெந்நாளும் வாழ்ந்திருக்கலாம்;— பரத்

ரு

வருத்தம், பசி, தாகம், சாவில்லை;—அலறுதலும்,
மனத்துயர், இரவு சாபம் இல்லை;
அருணன், மதி வேண்டியதில்லை;—துன்மார்க்கரெனும்
அசுத்தர் வந்து சேர்வதும் இல்லை;
சருவ மகிமை யுடைய தந்தை
பரனொடு கிறிஸ்தின் திரு
அருள் சிறந்த ஒளி
தெளிவுற ப்ரகாசம் ஆக்குமே;— பரத்

சா

பங்கம் இன்றி மகிழ்ந்து வாழலாம்;—பேர் ஒளி துலங்கும்
பரம கிருபாசனத்தைச் சூழலாம்;
சங்கை யோ டாசிருந்தே ஆளலாம்;—பராபரன் றன்
சமுக ப்ரபைதனிலே வாழலாம்;
மங்கை சீயோன் மகளின் பிரிய
மன்னவன் தேவாட்டுக் குட்டியின்
இங்கித கல்யாணப் பந்தியில்
இருந்து நித்ய விருந்தால் மகிழலாம்;— பரத்

எ

ஏசுக்கிறிஸ் தருளைத் தேடுவோம்,—மீட்பின் செயத்தை
ஏத்தி, அன்பாய்ச் செபத்தை நாடுவோம்;
மாசு, தினை யாவையும் போடுவோம்,—மன மகிழ்ந்து
வாழ்த்தி, அல்லேலூயா பாடுவோம்;
தேசிகருடன் கிறிஸ்தைச்
சேர்ந்த சபை யாவும் வாழ்க;
ஓசன்னா என உரைத்தே,
உன்னத யோவாவைப் போற்றுவோம்;— பரத்

மரி.—உப.

௨௯௫. THE GLORY OF HEAVEN. **295.**

# மோட்சமகிமை.

வெண்பா.

வாக்கில் அடங்கா மகிமைசேர் பொன் உலகை
யோக்கியரின் நாவும் நவிலாதே;—பாக்கியத்தை
இச்சணமே பார்க்க எழுந்து, நட, என்மகனே!
உச்சித பட்டணத்துக் கோடி.

இராகம், வராளி. ஏகதாளம்.

பல்லவி.

உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம்;—
விரைந்தோடி நடவடி, உத்தம புத்திரி!—
உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம்.

அநுபல்லவி.

நிச்சயமாகவே ரட்சகர் செப்புரை
நீணிலம் தோன்றும் முன்னடி,—நம்
நித்ய பிதாவே ஆயத்தமாய் நாட்டிய
நீதியின் பட்டணம், ஆதிபன் கட்டடம்,
நின்னைய மா நகரம்,—திடத்திடு
உன்னதமே சிகரம்,—நமின் பிரிய
நேசர் கிறிஸ்து மேல் பாசம் மிகுந்தவர்
நேரே செலும் நவ சாலேம் நகர், என்ற— உச்சி

சரணங்கள்.

௧

சித்தமாய் உச்சித பட்டணம் பற்றியே,
செப்புகிறாய் எனின் தாயே!—அதில்
சேர்ந்திடு பிள்ளைகள் வாழ்ந்திடும் பாக்கியம்
தீட்ட அரிதாம், என் தாயே!—புது
வித்தக மா நகர் ரத்னப் பளிங்கு—வி
ளக்கொளி மேவும், நன்றாயே;—அந்த
விஞ்சையர் பட்டணம் எங்கே இருக்கும்? வி
ளம்பி விரி என் பேராயே!
இத்தரை மீதிலோ? அந்திரி[1] வானிலோ?
இட்டமாய் யாம் அதற் கெட்டி நடவமோ?
எங்கே இருக்குதம்மா!—கவலை அற்

1 ஆகாயம்.



றங் கிருப்போமே, சும்மா;—சரி சரி
இன்பக் கண்ணாடியே! அன்புப் புதல்வியே!
எங்கிருக்கு தென்றன் தங்கமே! சொல்கிறேன் — உச்சி

௨

ஆரஞ்சிப் புஷ்பங்கள் தாரில் மணக்கிற
அந்த வனமது தானோ?—தாயே!
அண்டத்தில் சோதி போல் கண்டு மினுங்கிற
அற்புத மின்மினிக் கானோ?—படர்
பேரீச்சு மாமரக் கொப்புகள் உச்சியில்
பேணி வளர் சாரோனோ?—பெயர்
பெற்ற பறவைகள் செட்டையில் மூத்துகள்
பெற்றெழும் உச்சித வானோ?
வாரியில் மின் உற வீரியத் தீவிலே
வன்னச் சிவப்புப் பழக் கனிக் காவிலோ?
வற்புறு சிமையிலோ?—பின்னை அது
பொற்புறு பூமியிலோ?—இல்லை, இல்லை
மானே! தேனே! மா மயிலே! அந்த
மங்கலப் பட்டணம் அங்கில்லை, அங்கில்லை,— உச்சி

௩

கற்றவர் மெய்க்கவே அப்பெரும் பட்டணம்
கண்ணினால் கண்டவர் இல்லை;—அதின்
காரியக் களிப்பும், பேரிகை முழக்கும்
காதாரக் கேட்டவர் இல்லை;—உயர்
கொற்றவன் தனையே நற்றவர் போற்றும் அக்
கோலத்தைச் சொல்வார் இங்கில்லை—கண்ணே!
கோதும், மரணமும், வாதும் விசாரமும்,
கூடுவதுண்டோ? அவ் வெல்லை;
மெத்தப் படித்தவர் புத்தியும் போதாது;
விஸ்தரித்துச் சொலில் மேன்மை முடியாது;
வெயில் இரவும் இல்லை;—கனவிலும்
ஐயோ! எனும் சொல் இல்லை;—மகளே!
வெங் கதிரின் மேக மண்டலந் தாண்டியே
விண்டல மேல் பர மண்டலம் அண்டிய— உச்சி

௪

உன்னத வானிலிருந் திறங்கும் அவ்
வெருசலேம் பட்டணங் கண்டு—வெகு
ஊக்கமுடன் அதைப் பார்க்கப் புறப்பட்டோர்
சன்னவும் பாடிக் கொண்டு—அங்கே
பன்னிரு வாசலும், கண்ணாடி வீதியும்,

பாஜொளிக் கற்களும் உண்டு;—அந்த
பட்டணம் தேவாட்டுக் குட்டியின் ஆசனம்
பண்பாக மத்தியில் கொண்டு;
மின்னும் விளக்குகள், தீவட்டிகள் இல்லை;
விண்ணினில் சூரிய சந்திரரும் இல்லை;
மெய்ப் பொழுதானவரே—அதின் விளக்
கெப்பொழுதும் அவரே;—அலங்க்ருத
மேன்மைப்ரகாசப் பான்மையின் நீதியர்
மேனி மினுங்கிடத் தோணி இலங்கிடு—  உச்சி

௫

சுத்தப் பளிங்கினை ஒத்த சலத்தின்
துலக்கமாம் நீர் ஓடும்;—அனுத்
தூசும் இல்லாதவன் ஆசனம் நின்றொரு
தூய்ய நதி நீடும்;—அதில்
சித்திரமாய் இருபக்கமும் எட்டிடும்
சீவ மரக் கோடும்,—பலர்
சீவனுக் காங் கனி பற் பல மாதிரி
சீர் கொள், இலை, தோடும்,
முற்றி மாதந்தோறும், நற்றி, பழந் தரும்;
முக்ய மணிகளும், மிக்க ஒலி பெறும்;
முத்தொளி மா நகராம்,—கனிகையின்
வித்ததின் பேர் இறையாம்;—அதில் உறு
மோட்ச வாசிகளின் ஆச்சரிய நலம்
முன் ஒளி வெட்டிடும் கண்ணைப் பகட்டிடும்;—  உச்சி

௬

பந்தயம் பெற்றுமே, அங்ஙனம் உற்ற மெய்ப்
பாக்கியரே களிப்பர்;—என்றும்
பட்டினி வந்து, உடற்றுது, தேவனின்
பாலன் கனி அளிப்பர்;—களிச்
சந்தோடமாய்ச் சீவ தண்ணீரின் ஆற்றினில்
தாகந் தீரக் குளிப்பர்;—எங்கள்
தற்பிரனுர் எல்லார் கண்களின் கண்ணீரை
தான் துடைத்தே அளிப்பர்
அந்தியும், சந்தியும் ஆலயம் மேவுவர்;
ஆசனத்தின் முன் ஆராதனை செய்குவர்,
அங்கிகள் தான் துவைப்பர்,—குருதியில்
இங்கிதமாய் வெளுப்பர்,—ஒவ்வொருவர்
அங்கைகளில் குருத் தோலைகள் கொண்டெழுந்
தாட்டுக் குட்டி மண வாட்டியும் ஆகுவர்.—  உச்சி

ஏ.—உவா.



உசூரா. WHEN SHALL I REACH AND SEE THE HEAVENLY ZION? **296.**

# மோட்சவாஞ்சை.

பல்லவி.

எப்போ காண்பேனோ? எப்போ சேர்வேனோ?
எது என் சீயோனோ? அதின்னம் எத்தனை தொலையோ?

சரணங்கள்.

௧

என்னேசகாதர்—என்னைத்தும மீட்பர்
என் ரட்சகராகிய ஏசுகிறிஸ்து இருக்கிற இடத்தை—  எப்

௨

தூதர்கள் கூடி—சோபனம் பாடி
காதன் கிறிஸ்தைப் போற்றும் பரிசுத்த ராச்சிய வாழ்வை—எப்

௩

சீவ கிரீடம்—திவ்விய வாழ்வு
பாவி எனக்குப் பரிசுத்தவான்களின் பங்குமுண்டாமே—எப்

௪

துன்பங்கள் மாறும்—சுகம் வந்து சேரும்
இன்பக் கிறிஸ்திடத்திலே சேர்ந்தால் என் மனம் ஆறும்—எப்

௫

உலகத்தின் கவலை—ஒன்றுஞ் செய்யாதே
பலவித தொல்லை யிராது அங்கே பாக்கியங்கொள்வேன்—எப்

௬

பாவத்திலாசை—லோகத்தின் மாய்கை
தேவனுக்கு ஏராததொன்றுமில்லா திவ்ய இடத்தை—  எப்

௭

தின்மைசெய் பேயை—ஜெயித்துப் போராடி
நன்மை நிறைந்த பரிசுத்த மோட்சத்தை நான் சேர்வதெப்
போதோ—  எப்

௮

கைகளில் வீழ்த்தேன்—கண்ணீரைத் துடைப்பார்
ஜயன் கிறிஸ்து மேற் கவி பாடி நான் ஆனந்தங் கொள்வேன்—
எப்

P.—பா.

# நரகம்.

வெண்பா.

அக்கினிக் கந்தகத்தி னூலே கடப்பட்டுத்
துக்க நரகக் கவலையிலே—பக்கால்
அருண்டுருண்டு பாவி யலறுவாய், ஐய்யோ!
இருண்ட நித்ய வலைகமே.

பல்லவி.

நித்தியமாகுதே, இருண்ட
நித்தியமாகுதே, ஓகோ?
நித்தியமாகுதே, வேதனை ஐயோ!
நித்தியமாகுதே, ஓகோ!
சாத்தான் தீவினை வாதனை ஐயோ!
நித்தியமாகுதே.

அனுபல்லவி.

பத்துக் கற்பனைப் பிரகாரம் பாழ்நரகக் குழியே
கிறிஸ்துவைப் பற்றாதவர் யாதனை வழி சூழியே.—நித்தி

சரணங்கள்.

க

அக்கினிக் கெந்தகமே, துக்க சாகரமே,
அழுகையும் பற்கடிப்பும் மாறாதே, ஓகோ!— நித்தி

உ

அக்கினி அவியாதே, துக்கம் முகியாதே,
அரித்தரிக்கும் பூச்சியும் மரியாதே, ஓகோ!— நித்தி

ங

மாயாத சோகமே, ஓயாத தாகமே,
வன்னிச் சுவாலையின் வாழ்க்கையே, ஓகோ!— நித்தி

ச

பாதாள ஆழியே, வேதாள கூளியே,
பாய்ந்து கர்ச்சிக்கும் பயங்கரமே, ஓகோ!— நித்தி

P.



# விக்கிரகபத்தியைக் கண்டித்தல்.

வெண்பா.

பித்தர்களே! செத்தவனைப், பேயை, உருவத்தை,
மற்ற சராசரத்தை, வாழுகிலை—பற்றாதீர்;
நித்திய மோட்சத்தை நீடக் கிருபை செய்தார்
சத்திய கிறிஸ்துநாதர்.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

சத்திய கிறிஸ்துநாதர் உத்தம கிருபை கிடைத்த
தெத்தனை பாக்கியம்? சதா நித்திய மோட்சந்தானே.

அனுபல்லவி.

சுத்த சுவிசேட போத வித்தக மெய்ஞ்ஞான நீத
சித்திரப் பிதாவின் நேச புத்திர மகத்வ ராச— சத்

சரணங்கள்.

க

செத்தவர்களால் என்னாகும்? மற்றவர்களால் என்னாகும்?
செம்பு தாரச் சிலை உருவங்களினாலும் என்னாகும்?
பத்தி இல்லாமல் பூலோகத் தெத்திசையும் ஓடி ஓடி,
பம்பரம் போலே சுழன்று, வம்பிலே திரியாதேயும்.— சத்

உ

விக்கிரகங்கள் தான் என்ன? அக்ரம லீலைகள் என்ன?
வேடிக்கைக்காரப் பிள்ளைகள் கூடிச்செய்த விளையாட்டு;
முக்கிய ஸ்தலங்கள் என்ற துர்க்குறி தெய்வங்கள் தமை
மூடத்தனத்தாலே தேடி, பாடுபட்டலைய வேண்டாம்.— சத்

ங

கொல்லனும், குசவனும், கல் தச்சனும், கன்னானுமாக
கொட்டியே, சம்மட்டியாலே தட்டிய உருவங்களை

வல்வினை அகற்றும் என்று சொல்லி, உங்கள் தலையினிலே
மண்ணை வாரிப் போட்டுக் கொண்டு, கண்ணை மூடிக்கொள்
ளாதேயும்.— சத்

ச

அந்தரத் தெழுங் கிரகங்கள், சந்திர சூரியர், மீன்கள்,
அக்கினி, காற்று, மண், தண்ணீர், விக்கினேசுரக் கோட்டா
னும்,
தந்த்ர அரி, சிவன், அயன், செந்தில் முருகன், அருணன்,
சத்தியும், குறத்தியுமோ முத்தி தரும்? பித்தர்களே!— சத்

ரு

கருடன், கழுகு, மயில், திருடும் நாய், பெருச்சாளி,
கடிக்கும் பாம்பு, குரங்கு, பிடிக்கும் குதிரை, யானை,
குருடர்களே! மாடுகளையும், அதின் சாணியையும், வெகு
குறியான தெய்வம் என்று வெறிகொண் டலையாதேயும்.— சத்

சு

வில்வம், துளசி, கொன்றை, கொல்லும் அலரி, அத்தி,
வேம்போ டரசு, வன்னி, ஒம்பால், பனை, அறுகம்
புல், ஒதி, தருப்பை, மாவும், நல்கும் கதி யென்றெண்ணி,
பொருளைக் காணாதே போனீர்; இருளின் மக்களே! நீங்கள்.—
சத்

எ

பத்திரகாளி, பிடாரி, சூந்திரக் காட்டேரி, மாரி,
அத்தனை அகோரி, சூரி, எத்தனை மூதேவி உண்டோ?
பித்தரே! மாடன், கறுப்பன், மற்றுள பசாசனையும்,
பேய்த்தனங்களாய் வணங்கி, மாய்த்துயிர் மடியாதேயும்.— சத்

அ

சத்துருப் பசாசங்களின் புத்தியின் கண்களைக் கெடுத்
தெத்தியே, மயக்கி, நரகத்திலே கொண்டுபோகாமல்,
அத்தனோர் அருளிச் செய்த புஸ்தகங்களைக் கவனித்
துத்தம பாதையில் செல்லும்; பத்திரம், பத்திரம் சொன்
னேன்.— சத்

வே.—சா.



# விக்கிரகபத்தியை நிக்கிரகிக்க நியாயம்.

விருத்தம்.

மண்டலந் தன்னில் உள்ள மானிடப் பதரே! நீவிர்
பண்டுதான் வணங்கி வந்த பலவித உருக்கள் எல்லாம்
அண்டர்கா யகனுங் கோக்கா அருவருப் பென்றே கன்றாய்க்
கண்டறிந் துணர்ந்து பார்த்து, கதிவழி சேரு வீரே.

இராகம், தசாவந்தி. ஆதிதாளம்.

பல்லவி.

கண்டறிந் துணர்ந்து பாருங்கள்,—உமைப் படைத்த
கடவுள் அண்டையில் சேருங்கள்.

அனுபல்லவி.

பண்டு நீர் வணங்கி வந்த பல பல தேவதைகள்
படுத்திய ஆபத்தில் உமைக் கெடுத்ததோ? ரட்சித்ததோ? அதை
—கண்

சரணங்கள்.

க

காத்தவராயன், கறுப்பண்ணன், கண்ணனூர் மாரியும்,
கல்லுக்கோட்டுச் சூரியும், வல்லத் தேகரி வீரியும்,
பார்த்திருக்கக் கொண்டுபோம் பற் பல காட்டேரியும்,
பங்கருளும் தெய்வமோ? என் றுங்கள் புத்தியின் கண்ணா
லே— கண

உ

காசி, இம, சேதுமட்டும் கால்கடுக்க ஓடியும்,
காவடி எடுத்துப் போய், கடம்பனைக் கொண்டாடியும்,
தாசிகளை ஆடச்சொல்லி, சங்கரனைப்பாடியும்,
சற்றேனும் நன்மை தந்ததோ? குற்றம் குறைகள் தீர்ந்ததோ?—
கண

ங

பிள்ளையாரைக் குட்டிக்கொண்டு, பெருமான் கோவில் சுற்றி
யும்,
பேயாடி போல் திரிந்து, பேச்சியைப் பிதற்றியும்,

வள்ளியை நத்திக்கொண்டோடும் மாயாண்டியைப் பற்றியும்.
வாழ்நாளை மாய்த்துக் கொள்ளாதேயும்; வீணான தெய்வங்கள் இதாகீரும்.— கண்

௪

கண்ட கோவில் தெய்வம் என்று கை எடுத்துப் போற்றியும்,
களிமண்ணைச் சாணியை வைத்து, கர்த்தா என்று சாற்றியும்
வண்டது போல் சுற்றி, சுற்றி மலர் பறித்து, தூற்றியும்.
வந்த பலன் ஏதேனும் உண்டோ? சிந்தையும் இருப்புக் குண்டோ?— கண்

௫

சன்னாசிபோல் உத்திராட்சத் தாவடங்கள் பூட்டியும்.
சாம்பலைப் பெருக்கப்பூசி, சடை வளர்த்து நீட்டியும்.
வன்னக் காவி வேட்டியும், பின் அநேகக் கோட்டைகளும்,
வம்பைப் பாராட்டியும், மின்னச் செம்பைக் காதில் மாட்டியும் என்ன?— கண்

௬

பட்டை நாமம் போட்டு, பொட்டு பகட்டி விட்டீரே,
பாழில் ராமா, ராமா என்று தோளிலுஞ் சுட்டீரே,
மொட்டை அடித்து, தலங்கள் எங்கும் முனைந்து கும்பிட்டீரே,
முழுதும் உங்கள் ஆஸ்தி எல்லாம் மோசமாய்ச் செலவிட்டீரே.— கண்

௭

பொங்கலிட் டாடுகள் வெட்டி, பூசை போட்டுக் கண்டீரே.
போட்டியாகப் பெண்களை வைத்தாட்டிக் கோரணி கொண்டீரே,
சங்கை அற்ற சாஸ்திரச் சடங்கிலே துவண்டீரே,
சத்துருப் பிசாசு பண்ணும் சர்ப்பனை இதென்றே எண்ணும்.— கண்

௮

இரண்டு நினைவாயிருந்து, சண்டைகள் செய்யாதேயும்.
ஞாயம் இன்றி ஆத்துமத்தை நரகத்தில் சாய்க்காதேயும்.
பண்டதுபோல் குந்தி, குந்தி நொண்டி, நடவாதேயும்,
பராபரனை விட்டு விட்டு, பாகாலைப் பணியாதேயும்.— கண்

நீவே—சா.



# வீண்பத்திநாசம்.

பதிற்றுச்சீர் கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

௧

மாசிலா மனத்தாய் ராசவிற் பனத்தாய்,
பதிமையின் கிருபைபூ சனத்தாய்,
வலியமா சனத்தாய், பல்செய்போ சனத்தாய்.
மட்டிலா வன்மைசேர் கனத்தாய்,
தேசுறுந் திறத்தாய், பேசரும் பரத்தாய்,
திரித்துவ வைசத் துவத்தாய்,
செய்யசுக் தரத்தாய், துய்யமந் திரத்தாய்,
திடவரத்தாய், திரு வுரத்தாய்,
பாசமே வதித்தாய்; நேசமே சதித்தாய்,
பரமசத் துவமகத் துவத்தாய்,
பாததோத் திரத்தாய், வேதசாஸ் திரத்தாய்,
பார்த்திபன் கோத்திரநேத் திரத்தாய்,
வசறப் படைத்தாய், ஆசறத் துடைத்தாய்,
எரிநர கக்கத வடைத்தாய்,
என் உரு எடுத்தாய், பொன்னகர் கொடுத்தாய்,
எந்தையே! ஏசுநா யகனே!

௨

கல்லதை, செம்பை, வெள்ளியை, பொன்னைக்
கடவுளென் றடிதொழ மாட்டேன்;
களிமண்ணால் மிதியிட் டுருவெனக் குயவன்
காட்டிய கோலமுங் கருதேன்;
வல்லிரும் புருக்கால் வெண்கலத் தகட்டால்,
மற்றுள பஞ்சலோ கத்தால்
வார்த்ததும், அடித்து வைத்ததும், ஆன
வன்சிலை களெலாம் மதியேன்;
செல் அரிக்காத மரத்தினைத் தெரிந்து
சித்திர வேலைகள் தீர்ந்த
சிறந்தபொம் மைகள்பற் பலபடங் களையும்
சிந்தையில் கனவிலும் நினையேன்;
எல்லையில் லாஎவ் விதங்களாய் இனமும்,
இருந்திய சுரூபங்கள் அனைத்தும்
எனக்கினி ஆகா துனக்கியான் அடிமை,
எந்தையே! ஏசுநா யகனே!

௩

வாயிருந் தாலும், பேசிடா தூமை
வலியகண் இருந்தும், நோக் காத
வன்குரு டதற்குச் செவிஇருந் தாலும்,
வார்த்தைகேட் டறிந்துகொள் ளாது,
காயமோ டிருகைகண் டெனினும் தொடாது,
கால்இருந் திடினுங்ட வாது,
கடியமூக் கிருந்தும், மோந்திடா ததனின்
கண்டமும் ஓசையெழுப் பாது,
தீயினில் போட்டால் எரிந்துபோம், வைது
திட்டினும் செயலிலா திருக்கும்,
செத்ததோர் பிணம்போல் வைத்திடங் கிடக்கும்,
திருடன்வந் தெடுக்கினும் எடுப்பான்,
நீஎனை விடுவி என்றறி வழிந்து,
நீச அச் சிலைகளைப் பணியேன்,
நின்னையே பணிவேன், என்னை ஆண் டருள்வாய்;
நித்தனே! ஏகநா யகனே!

௪

குஞ்சினைத் திருடும் பருந்ததோ கருடன்,
குலைக்கும்நாய் வயிரவ சாமி,
குரங்கதோ அநுமார், பன்றியும், மீனும்,
கூர்மமும் விட்டுணு வடிவம்;
அஞ்சிடக் கடிக்கும் பாம்பதோ நாக
சுவாமிவிக் கினேசுரன் யானை
தோகையும், அனமும், காகமும், கிளியும்
தாங்கிய தேவர்வா கனங்கள்;
அஞ்சியே வளையில் புகும்பெருச் சாளி
யானையைத் தாங்குமோ? ஐயோ!
ஆவிலே பதினா லாயிரம் பெண்கள்
அனைந்தவன் றனைவிடப் பதுவோ;
வெஞ்சினமாடு நந்திகே சுரனே;
விபூதியும் அதிலுடை சாணி,
வீண்இழ வெனவே தோணினேன் இதெலாம்
வேதனே! ஏகநா யகனே!

௫

சூரியன் வடிவோ, சந்திரன் உருவோ,
தொகை இலா வான்பற வைகளோ,
துன்னிய காற்றோ, வன்னியோ, முகிலோ,
தோன்றிய பூமியோ, விண்ணோ,



பாரினில் ஊருஞ் சீவனோ, இசந்தோ,
பற்பல நாலுகால் விலங்கோ,
பசும்புலோ, செடியோ, அனந்தா பரமோ,
பயோததி நீந்துசந் தினமோ,
எரியோ, குளமோ, ஆறதோ, நதியோ
எண்ணிலா மலைகளோ, சுனையோ
இடங்களோ, விசேஷ ஸ்தலங்களோ, கோடி
இத்தனை இழவும்அல் லாமல்,
காரியம் எனவே நரகலை, நீறை,
கலந்தபெண் குறியோடாண் குறியை
கடவுள்என் றிருந்த மடையன், நான் ஐயா!
கருணைசெய், ஏகநா யகனே!

௬

புல்லது தெய்வம் ஆகினல், மாடு
பொசிப்பதற் கியலுமோ? அலது
போற்றிய மாடு தெய்வமே யாகில்,
புலையன்எப் படிஅதைப் பொசிப்பான்?
அல்லது மாட்டின் சாணியும் தெய்வம்
ஆகினல், அடுப்பினில் எரிப்ப
ததும் அலோ? அதனைச் சாம்பல் தாக்க
அக்கினிக் குப்பலன் உளதோ?
அல்லஅக் கினியும் பகவனே ஆனால்,
மழையினால் அழிந்துபோய் விடுமோ?
வருணனும் பகவன் ஆகினல், அதிலே
வாய்கைகால் கழுவவும் படுமோ;
கல்விகற் றிருந்த நல்லவர் இதனை
கண்டறி யார்களோ கண்டால்,
சுதிதரும் உனைவிட் டநீதவின் பொருளைக்
கைதொழார்; ஏகநா யகனே!

௭

ஊரினில் பெயர்கொண் டிருந்துசெத் தவர்க்கும்,
உளவுபோய் மடிந்தகா முகர்க்கும்,
உயிர்விட வலிய நான்றுகொண் டவர்க்கும்
உவந்துதிப் பாய்ந்தநீ விசட்டும்;
பாரினில் துணைவன் தனக்கடங் காமல்
பகைத்திட நஞ்சினைத் தின்றும்,
படுங்கசத் தினிலும் ஆற்றிலும் வீழ்ந்து,
பசாசுரு வானபா விகட்கும்

போரினில், படையில், பட்டவீ ரருக்கும்,
புராதனத் திருந்தமன் னவர்க்கும்,
புலையர், சக் கிலியர், குறவர்கள், ஈனப்
புதரையர், கழுவில்வ றிகட்கும்,
தேரினும், கோவில் புறத்திலும், நடக்கும்
தெருவிலும் சிலைஅடித் திருத்தி,
தேவனென் றிருந்த பாவிநான், இனிஉன்
திருவுளம், ஏகநா யகனே!

அ

அரி,சிவன், பிரமன்,ஐங்கரன், ஆறு
முகன்,சாதா சிவன்,மகே சுரனே
டையனார், வீர பத்திரன், இருளன்,
அருமந்தன், காலசங் காரன்,
பொருதடி மாடன், கறுப்பணன், இடும்பன்,
புத்தனார், காத்தவ ராயன்,
பொம்மன் தொட் டியச்சின் னான்,சக்கதேவி
பொன்னியங் காளி,கங் காளி,
பெரியமா காளி, ரணபத்ர காளி,
பேச்சிசா முண்டி,உத் தண்டி,
பில்லிவாய்க் குறளி, வகரி,வீரி,
பிடாரி,காட் டேரி,துத் தேரி,
எரிதழல் மாரி, வராகி,ஓங் காரி,
எமகண்டி, சாமளை, துர்க்கை,
இன்னமும் அனந்தம் பெயர்களைப் பணிந்த
ஈனன்நான், ஏகநா யகனே!

௯

கள்ளுடன் சாரா யங்களைப் படைத்து,
கடாக்களை ரணபலி கொடுத்து,
களத்தமா டாடு, சேவல்கள் அடித்து,
கடலின்மீன் வகைகளும் பொரித்து,
பிள்ளையார்க் கேற்ற தோசைகள், வடைகள்,
பிட்டுகள், வட்டடி ரசங்கள்,
பெலத்தமோ தகங்கள், அவல், பொரி யுண்டை,
பெரும் பணி யாரம், இட்டலிகள்,
எள்ளுடன் பயறு, கிழங்குகள், பழங்கள்,
இனியபச் சரிசி, தேங்காய்கள்,
எண்ணெயோ, நெய்யோ, பால்களோ, தயிரோ,
எத்தனை விதங்களோ செய்தும்,



தள்ளி நீ போடா, குறைகள் உண்டெனவே,
சத்தம்இட் டலறி கொந்திருக்கும்,
சத்துருப் பேயை முற்றிலும் விட்டேன்;
தயவுசெய், ஏகநா யகனே!

௰

சாவடி சுமந்து, தோளெலாந் தடித்து,
தடுநடை பயணங்கள் பண்ணி,
கழுத்தினில் அரிகண்டங்களைப் போட்டு,
கயிறுகள், செடில்குத்தி யாடி,
கூவியே, தீயில் குதித்துக், கொக்கரித்து,
கொடிய பந்தங்களால் சுட்டுக்
கொண்டு கூத்தாடி, உடம்பெலாங் கீறி,
கோணியே வலித்து மார் அடித்து,
யாவரும் அறியத் தலையையுஞ் சிரைத்து,
நடைவிளக் கேற்றியே, தோளின்,
நடுவினில் சுட்டு, செருப்பெடுத் தடிக்க,
ராமா ராமா எனக் கதறி,
மேவி அங்கப்பிர தட்சணம் உருண்டு,
விரதங்கள், நோன்புகள் பிடித்தும்,
மெய்ப்பயன் காணு தப்பனே! அடைந்தேன்;
வினைதவிர், ஏகநா யகனே!

௰௧

வஞ்சகப் பார்ப்பான், தொட் டியன், ஆண்டி,
வள்ளுவன், மற்றுள பெயரான்,
வழுத்திய குறி கோடங்கிகள் கேட்டு,
வாரமும் யோகமும் தெரிந்து,
சஞ்சலம் அறுமென் றெண்ணிமைச் தருக்குச்
சாதகம் எழுதி,நாள் கணித்து,
தக்கதோர் இராசிப் பலன்களும் பிரித்து,
சடங்குகள் விதம்விதம் செய்து,
நெஞ்சினில் பல்லி சத்திலும் அஞ்சி,
நிமித்தமும், பொருத்தமும் கண்டு,
நெடுகிலும் வீண்சாஸ் திரங்களைப் பார்த்து,
நிலையிலாப் பொய்களை நம்பி,
பஞ்சமா பாவி களைக்குரு என்று,
பாழிலே பொருள்எலாம் தோற்று,
பரதவித் துன்றன் சரணம்வந் தடைந்தேன்;
பட்சம்வை, ஏகநா யகனே!

௰௨

பிறந்தநாள் முதலாய்ச் சாரும்நா ளளவும்
பிராமணர் பிதற்றிய பொய்யை,
பிரியமாய்க் கேட்டு, சுவாமியென் றவரைப்
பிசகற நம்பி, வீழ்ந் திறைஞ்சி;
இறந்தோர் கலியா ணங்களில், ருதுசாந்
திகளினில், சிறுவர்கள் பிறந்த
தினங்களில், திருநாட் களில் பிதிர் இறந்த
திதிகளில் நன்மை தின்மைகளில்,
அறைந்தவர் சொன்ன படியெலாங் கொடுத்தா
லயங்கள், சத்திரங்கள், சாவடிகள்,
அனைத்திலும் இவரே முதன்மையாய் மறுமைக்
கவர்கையில் உண்மையைப் பெற்றால்,
இறந்தபின் பற்றிக் கொள்ளுமெனவே
ஏய்த்ததால் பேய்த்தன மாக
எண்ணிலாத் தானம் பண்ணியும், பலனொன்
றெய்திலேன்; ஏகநா யகனே!

௰௩.

தாடிகள், சடைகள் வளர்த்துருத் திராட்சத்
தாவடம் பலபல தரித்து,
தண்டுடன் கமண்ட லங்களுங் கொண்டு,
சாம்பலும் விம்புறப் பூசி,
ஆடிய மயிலின் தோகையும், காவி
ஆடையும், அயினமும்,[1] குறடும்,
அங்கமாய்க் கொண்டு, சகசருண் டலம்இட்
டரகரா என்றுகூப் பிட்டு,
காடுகள், மலைகள், செபிகளிற் புகுந்து,
கந்தமூ லங்களைப் பொசித்து,
காயசித் திஅதற் குடலையும் ஒறுத்து,
கடுந்தவங் களையெலாம் புரிந்து,
வாடியே, யோகத் திருந்து,மூச் சடக்கி,
அவுஷதா தனங்களுஞ் செய்து,
வஸ்துவின் நிலைகாண் பதற்கரி தெனவே
வந்தனன்; ஏகநா யகனே!

௰௪

வானமும், புவியும், அனைத்தையும் படைத்த
மட்டில்லாச் சர்வவல் லவரும்
மகத்துவ தேவன் ஜெகத்தினில் ஜனர்
வருத்தமே னியில்இருப் பானோ?

[1] மான்தோல்.



தானதாய் இருந்தோன் ஒருவனே, இரண்டோ?
சாற்றுவீர், சாஸ்திரி மாரே!
சத்தியந் தப்பி, அவரவர்க் கேற்ற
சாதிகள் செய்யவுந் தகுமோ?
ஞானம்உள் ளவர்கள் இல்லையோ? நீதி
நடுவிலா தேசமோ! கோகோ!
நம்முடைக் கையால் சமைத்தவிக் கிரகம்
நமக்குநற் பதவியைத் தருமோ?
என்இதைச் செய்தீர்? பாதகம் அலவோ?
இடர்வரும், பதனம்என் றுரைக்க,
என்றனை இகழ்ந்தார்; உன்றனை அடைந்தேன்;
இரட்சியும், ஏகநா யகனே!

௰௫

ஆதிநா யகனே, சோதிநா யகனே,
அநந்தபே ரின்பநா யகனே,
அரியநா யகனே, பெரியநா யகனே,
அர்ச்சிய தேவநா யகனே,
நீதிநாயகனே, நீதிநா யகனே,
ஒப்பில்லாப் பரமநா யகனே,
உரிமைநா யகனே, அருமைநா யகனே,
உன்னத ஞானநா யகனே,
போதநா யகனே, நாதநா யகனே,
புண்ணிய சொரூபநா யகனே,
பொறுமைநா யகனே, சருவநா யகனே,
போற்றருங் கிருபைநா யகனே,
வேதநா யகனே, வேதநா யகமாய்
விளம்புசங் கீதநா யகனே,
மிக்கநா யகனே, முக்யநா யகனே,
மேசியா, ஏகநா யகனே!

வே.—சா.

# GLOSSARY.

கீர்த்தனைகளில் உள்ள

## அரும் சொல் அகராதி.

### அ

அகடம். (அ+கடம்=நீதி) அநீதி.

அகண்டன். (அ+கண்டம்=பங்கு) கடவுள்.

அகம். மனம், வீடு, பாவம்.

அகிலம். (அ+கிலம்) பங்கில்லாமை, பூமி, எல்லாம்.

அங்கப்பட ஒழுங்குபட

அங்கம். சரீரம், ஒழுங்கு, பங்கு.

அங்கிசம். பாட்டுடைத்தலைமை.

அசலம். (அ+சலம்) அசைவின்மை, பூமி, மலை.

அசுவம். குதிரை.

அச்சயன். (அ+சயன்) அழிவில்லாதவன், கடவுள்.

அஞ்சல். பயப்படுதல், பயப்படாதே.

அஞ்சல்கூர். பயப்படாதேஎன்று சொல்.

அடம். பகை, இடம்.

அடர். நெருக்கு.

அடல். போர், போர்செய்தல்.

அடவி. வனம்.

அடுப்போம். நெருங்குவோம்.

அட்டம். எட்டு.

அணி. பூணு, ஆபரணம், படை வகுப்பு.

அணுகல். நெருங்கல், சமீபித்தல்.

அணை. சேர்த்தல், மெத்தை.

அண்டம். ஆகாயம், வானம்.

அண்டரின்குழாம். வானோர் கூட்டம்.

அண்ணல். கடவுள், இராசா, மூத்தோன்.

அதகம். அகம், நீதித்தப்பு.

அதி. அதிக, வெகு, கன, பதி, மிகுந்த.

அதீதம். புத்திக்கெட்டாதது.

அத்தன். தகப்பன், கடவுள், குரு.

அத்தியாபகர். உபாத்தியாயர்.

அந்தம். அழகு, முடிவு.

அபசாரம். துர்நடை, ஆசாரமில்லாமை.

அபரி. அவகீர்த்தி.

அபவர்க்கம். மோட்சம்.

அமரர். (அ+மரர்) மரியாதவர்கள், வானோர்.

அமலன், அமலா. மாசற்றவன், கடவுள்.

அம்பணம். தண்ணீர்.

அம்பரம். ஆகாசம், பஞ்சபூதங்களில் ஒன்று.

அம்பரன். (அம்+பரம்=மோட்சம்) கடவுள்.
அம்புலி. சந்திரன்.
அம்புவி. (அம்+தண்ணீர்=புவி) நிலம், பூமி.
அயர்தல். சோர்தல்.
அரக்கு. அழி.
அரத்தம். இரத்தம், பொன், சிவப்பு.
அரிவை. பெண்.
அருந்து. உண், புசி, குடி.
அர்த்தம். பொருள், திரவியம்.
அலகை. பிசாசு.
அலக்கண். துன்பம்.
அவம். வீண், குறை, இனம், இல்லாமை.
அவனி. (அவ=காப்பாற்று) பூமி.
அழல். நெருப்பு.
அழுந்து. வருந்து.
அளி. தாரும்.
அனவரதம். (அன+வரதம்=முடிந்த) எப்போதும்.

## ஆ

ஆ, ஆன். பசு.
ஆகம். உடல்.
ஆகா. பாடகன்.
ஆகுலம். வியாகுலம், சஞ்சலம.
ஆருசம். அழுக்கு, புகை.
ஆஸ்தானம். இராசசபை, ஆஸ்தானம்.
ஆடு. நீராடு, குளி, ஸ்நானம் பண்ணு.
ஆட்சி. பெருமை, ஆண்மை.
ஆண்டகை. இராசன்.
ஆதிக்கம். மேன்மை, முதன்மை, உரிமை.
ஆதித்தன். சூரியன்.
ஆயர். இடையர்.
ஆய்தல். ஆராய்தல், சோதித்தல்.
ஆரணம். வேதம்.
ஆரவாரம். சத்தம்.
ஆரியன். ஆசாரியன்.
ஆர். நிறைதல்.
ஆர். (நிறை) மண், பூமி.
ஆர்க்க. சத்தஞ்செய்ய, சப்திக்க.
ஆலம். பாம்பின் நஞ்சு.
ஆலகாலம். கொடியநஞ்சு.
ஆழி. கடல்.
ஆறு. விதம், வழி.
ஆற்ற. செய்ய,
ஆற்றல். குளிரச்செய்தல், வல்லமை.
ஆன்ம. ஆத்தும, ஆத்தும, ஜீவ ஆத்மீய.

## இ

இகத்தல். கடத்தல்.
இகம். பூமி, இம்மை, இவ்விடம்.
இகலர். பகைஞர்.
இகுத்தல். கொல்லல். [கம்.
இங்கிதம். இனிமை, இதவச
இசைத்தல். சொல்லுதல்.
இடை. இடம், இடுப்பு.
இடைதல். பின்னிடல், தாழ்தல்.
இணை. ஒப்பு, நிகர்.
இதம். பிரியம், இசைவு.
இதயம். இருதயம்.
இமையவர். வானோர்.
இயம்புதல். சொல்லுதல்.
இயற்றுதல். செய்தல்.



இரணம். போர்.
இருடியர். ரிஷிகள், தவத்தோர், ஞானசுசிலகள்.
இலங்கும், பிரகாசிக்கும்.
இறுதி. நாசம், கடைசி, முடிவு, அந்தம்.
இறைஞ்சு. வணங்கு.
இறைமை. தேவத்தன்மை, தலைமை, அரசாட்சி, மேன்மை.
இறைவன். (இறை=மேன்மை) கடவுள், அரசன்.
இன்னல். (இனிமையான+அல்=அல்ல) சிறுமை, துன்பம்.

## ஈ

ஈசன். (ஈசம்=உயர்வு) கடவுள்.
ஈண்டு. இங்கே.
ஈறு. இறுதி, கடைசி.

## உ

உகம். (இரண்டிற்கும் நடுவான இடம்) பூமி.
உக்கிரம். மிகுந்த பெலம்.
உடு. நட்சத்திரம், தாரகை.
உதகம். ஜலம், நீர். [வல்.
உத்தரி. சகி, ஈடுசெய்.
உந்தி. நதி, கொப்பூழ்.
உந்திய. உயரமான.
உம்பர். வானோர்.
உயர்; உயர்ந்த.
உய்ய. பிழைக்க, வாசம்பண்ண.
உரம். பெலம்.
உரித்து. உரிமை, பட்சம்.
உருக்கு. உருகச்செய், வருத்தம்.
உரை. சொல், உயர்ச்சி.
உலரு. சிறிதுசிறும்பு, காய்ந்துபோ.
உலைதல். தட்டுக்கெடுதல், அழிதல், கெடுதல், வருந்துதல்.
உல்லாசம். சந்தோஷம், டம்பமான சந்தோஷம்.
உவந்து. பிரியமாய். [தல்.
உழற்றுதல். வருத்தப்படுத்து
உழன்று. சுழன்று திரிந்து, வருந்தி.
உளவு. வே .
உற. பொருந்த, அடைய, நெருங்க, சேர, பட, உண்டாக.
உறுக்கிடல், கடிந்துகொள்ளல், பயமுறுத்தல்.
உறைதல். தங்குதல், இருத்தல், இருகுதல்.
உன்னல். நினைத்தல்.

## ஊ

ஊதியம். இலாபம்.

## எ

எந்தை. என் தகப்பன், எம் தகப்பன். [னே.
எந்தா, எந்தாய். என்தகப்ப
எழில். அழகு.
என்பு. எலும்பு.

## ஏ

ஏகன். ஏகனான கடவுள்.
ஏகுதல். போதல்.
ஏங்குதல். கவலையுறல், தவித்தல், அழுதல், திகிலுறல்.
ஏதம். குற்றம்.
ஏத்த. போற்ற, துதிக்க, வணங்க.
ஏந்திரன். தாங்குகிறவன்.

ஏமாந்து. தடுமாறி, மிகுகளிப்புற்று, ஏமாறி, நம்பிமோசம்போய், செருக்குற்று.
ஏலவே. ஏற்கவே.
ஏறுகடைசி. முடிவானகடைசி.

ஐ

ஐயன். குரு, உவாத்தி, தந்தை.

ஒ

ஒண்ணல். தகுதல், பொருந்துதல்.
ஒப்பு. உவமை, சமம்.
ஒய்யாரன். அலங்காரன், உல்லாசன்.
ஒலி. சத்தம்.
ஒழுகுவோர். நடப்போர்.
ஒன்னார். பகைவர்.

ஓ

ஓசையாய். பிரபலமாய், கீர்த்தியாய்.
ஓர்தல். தெளிதல், ஆராய்தல்.
ஓவா. ஒழியாத, என்றுமுள்ள.
ஓவியம். சித்திரம்.

க

கங்கம். பருந்து, கழுகு.
கங்குல். இரவு.
கசிவு. அன்பு.
கடவுள். (கட, எல்லாவற்றையும் கடந்தது, அல்லது கடம், எல்லாரும் கடன்பட்டவர்.)
கடி. சீக்கிரம், பிசாசு.
கடு. நஞ்சு, விஷம், கசப்பு, மிகு.
கட்செவி. பாம்பு.
கணம். கூட்டம், நட்சத்திரம், பிசாசம்.
கதித்தல். அதிகப்படல்.
கதிரவன். சூரியன்.
கரம். கை.
கரவு. களவு, வஞ்சகம்.
கலி. சிறுமை.
கலை. கல்வி, வித்தை, மான.
கவசம். போர்வை.
கழல். பாதம், கால்.
கனகம். பொன்.
கனல். நெருப்பு.
கனன்று. கோபித்து.
கன்ன. கற்ற.

கா

கா. தோட்டம்.
காசினி. (காசு=குற்றம், அற்றது, இன்னது) பூமி.
காதல். ஆசை, பிரியம்.
காதலன். நேசன், ஏகவானவர்.
காத்திரம். உறுதி, கனம், முக்கியம்.
காயம். காயாபுரி, சரீரம்.
காரம். காரியம்.
கார். இருள், மேகம், நீர்.
கால். காலம், ஒளி.
காவலன். காப்போன், இராசன்.
கானகம். வனாந்தரம்.
கானம். பாட்டு.

கி

கிஞ்சம். சிறுமை, வறுமை.
கிஞ்சன். சிறியன், எளிஞன்.
கிஞ்சிதம். கொஞ்சம்.
கிரகம். வீடு.
கிருபாகரன். (கிருபை + ஆகரம்) கிருபைக்கு உறைவிடமானவன்.



கீ

கீலம். பாளம், கீற்று.

கு

குசமசக்கு. மயக்கம், கனகுழப்பம்.
குணாலயன். சுகுணம், வாசமாயிருக்கப்பட்ட கடவுள்.
குத்திரம். பொய், வஞ்சகம்.
குருதி. இரத்தம், குருகுடி.
குலாவுதல். சந்தோஷித்தல்.
குவலயம். (கு + வலயம்) பூகோளம், பூமி.
குழவி. குழந்தை.
குழாம். கூட்டம்.
குழைதல். இளகுதல்.

கூ

கூபம். கிணறு.
கூளி. பிசாசு, பேய்.
கூறும், சொல்லும்.

கெ

கெழு. நிறம்பொருந்திய.

கே

கேசரி. சிங்கம்.
கேள்வன். தோழன், சிநேகன், புருஷன்.

கை

கைதவம். துன்பம்.

கொ

கொடி. கயிறு.
கொண்டாட்டம். சந்தோஷம்.
கொத்தடிமை. முன்னோர்முதலாக அடிமை.
கொற்றவன். அரசன்.

கோ

கோ. இராசன்.
கோது. குற்றம்.
கோதை. பெண், ஸ்திரீ.
கோரணி. பரியாசம்.
கோரம். அகோரம், கொடுமை.
கோலம். அலங்காரம்.
கோலம். அழகு, மகிமை. [னே!
கோலா. மகிமை பொருந்தியவ
கோன். இராசன்.

ச

சகடம். வண்டில், அசத்தம்.
சகலாத்து. சிவப்புத்துணி.
சசி. சந்திரன்.
சச்சிதானந்தம். (சத் + சித் + ஆனந்தம்) அழியாத அறிவின்பம்.
சடம். உடல், சரீரம்.
சதம். எப்போதும் உள்ளதுமாறு.
சதித்தல். அழிவுசெய்தல், வஞ்சனைசெய்தல்.
சத்தம். ஏழு.
சந்ததம். எப்போதும்.
சந்தம். நூல், அழகு. [கு.
சந்திரப்பதம். சந்திரனின் அழ
சமரம். சமர், போர்.
சமைத்தல். உண்டுபண்ணுதல்.
சயம்பு, சுயம்பு. தானாய் உள்ளது, கடவுள்.
சயிலம். மலை.
சரண், சரணம். பாதம், அடைக்கலம்.
சராசரம். அசைவுள்ளதும் அசைவில்லாததும்.

சல்லியம். கலக்கம்.
சவளம். ஈட்டி.
சற்காரி. பட்சம், உபசாரமுள்ளவன்.
சற்பனை. துரோகம்.

சா

சாங்கோபாங்கமாய். முழுமையாய், ஒழுங்காய். [ள.
சாசுவதம். எப்போதும் உள்
சாந்தனை. சாருமனவும்.
சால. மிக.
சாற்ற. சொல்ல.
சான்றோர். அறிஞர்.

சி

சிதையும்படி. அழியும்படி.
சிந்தாகுலம். மிகுவியாகுலம்.
சிந்தை. மனம், எண்ணம்.
சிலதன். தோழன், ஊழியன்.
சின்மய. (சித்+மய) ஆவிக்குரிய தன்மையான.

சீ

சீபதி. (சீ+பதி) மகிமைபொருந்திய எசமான், கடவுள்.
சீரியர். உத்தமர்.
சீலா. மேன்மைபொருந்தியவனே.
சீறுமாறு. கோபத்திலே சீறுதல்.

சு

சுகாசனம். (சுகம்+ஆசனம்) சிங்காசனம்.
சுகானுபவம். (சுகம்+அனுபவம்) நல்ல அனுபவிப்பு.
சுசீலம். நற்குணம்.
சுயம்பு. தானுயிருந்தது, கடவுள்.

சுரர். வானோர், தேவதூதர்.
சுருதி. (சத்தம்) வேதம்.

செ

செகம், சகம். (சகம்=பேர்வது) பூமி.
செப்பம். ஒழுங்கு.
செப்புதல். சொல்லுதல்.
செய்ய. அழகான, சிவந்த.
செரு. பகைவர்.
செருக்கு. அகங்காரம், செல்வம், பெருமை, களிப்பு.
செறிதல். அடர்தல், மிகுதல்.
செறுத்தல். கொல்லுதல், அழித்
சென்னி. சிரசு, தலை. [தல்.

சே

சேகரம். தலை, சேர்க்கை.
சேடம். மிச்சம்.
சேடன், சேடி. ஊழியக்காரன், ஊழியக்காரி.
சேணா. தூரம்.
சேயர்கள். பிள்ளைகள்.
சேயன். மகன்.
சேய். பிள்ளை. [டம்.
சேர்வை. போர்ச்சேவகர்கூட்
சேர்வை. சேவிப்பு, வணக்கம்.

சை

சைன்னியம். சேனை.

சொ

சொற்றல். சொல்லுதல்.

சோ

சோபிதம். அழகு. [டி.
சோரன். திருடன், ஆட்டுக்குட்
சோரிசோனை, இரத்தம்.



சௌ

சௌரியம். சூரத்துவம், சூரத்தன்மை.
சௌரியன். சூரன்.

ஸ்

ஸ்வயம்பு, சுயம்பு, சயம்பு. தானுயிருப்பது, கடவுள்.

ஞா

ஞாயப்படி. நியாயப்படி.
ஞாலம். (தொங்கல்) பூமி.

த

தகர் செம்மறி ஆட்டுக்கடா.
தகல். தருதல். [ன்
தகைத்தவன். தன்மையுள்ளவ
தகைமை. விதம், அன்பு.
தண்டன். வணக்கம்.
ததி. ஏற்றகாலம், வல்லமை.
தத்தி. குதித்து.
தபனன். சூரியன். [பூமி.
தரணி. (தரணம்=தாங்குவது)
தராதலம். (தரா+அதலம்) பூமி.
தரு. மரம்.
தருதல். பிறப்பித்தல், உண்டாக்குதல்.
தவனம். தாகம்.
தளைதல். கட்டுதல்.
தறுகணான். குரூரன், கொடியன்.
தற்பரன். (தத்=தான்; பரன்=கடவுள்) கடவுள்.
தனையன். மகன்.

தா

தாட்டிகம். பெருமை.

தாதா. தந்தை, தகப்பன், இகையாளன்.
தாபரம். ஒதுக்கிடம், உதவி.
தாரகம். ஒதுக்கிடம், ஆதரவு.
தாராகணம். நட்சத்திரக்கூட்டம்.
தார். மாலை.
தாவுதல். எப்படிப்பற்றுதல்.
தானலோகம். சுவர்க்கலோகம்.

தி

திகழ். ஒளிசெய்கின்ற.
திண். பலமான, உறுதியான, கனத்த. [ருக்கம்.
திண்டாட்டம். கலக்கம், நெ
திண்டுமுண்டு. தண்டுமுண்டு, அடாதது, மூர்க்கத்தனம்.
திரி. மூன்று.
திரித்துவ. திரியேக, மூன்றொன்றாகிய.
திரிபுவனம். மூவுலகம்.

தீ

தீரம். வல்லமை.
தீனம். எளிமை, குறைவு.
தீனர். எளியவர்கள், அற்பர்.

து

துகில். துணி, வஸ்திரம்.
துங்கம். மேன்மை, உயர்ச்சி.
துஞ்சுதல். நித்திரைசெய்தல், மரித்தல்.
துடி. பறை, தத்தளி.
துட்டு. தீமை.
துட்டுத்தடி. குறுந்தடி.
துணி. வெட்டு.
துந்துபி. பேரிகை, பறை.

துய்யத்தை. பரிசுத்தத்தை.
துருத்தி. தோல்பை.
துருவநிலை. அசையாநிலை.
துல்லியம். கல்வியம், சுத்தம், பரிசுத்தம்.
துறத்தல். விடுதல், நீங்குதல்.
துறை. தலைவன்.
துன்றி. அடங்கி.
துன்னிய. நெருங்கிய, கெட்டியான, அடர்ந்த.

தெ

தெரிவு. தெரிந்தது, அறிவு.
தெருள். ஞானம், அறிவு.
தெல்லு. வஞ்சிப்பு.
தெவிட்டுதல். தின்றுசலித்தல்.
தெள்ளிய. அறிவுடைய, பிரகாசமான.

தே

தேசிகர். ஆசிரியர், குரு.
தேசு. ஒளி, அழகு.
தேவன். (தே=பிரகாசிக்கிறது) பிரகாசிக்கிறவன், கடவுள்.
தேறுகிறது. தெளிகிறது, அதிகரிக்கிறது.

தை

தையல். பெண், ஸ்திரீ.

தொ

தொண்டர். ஊழியர், அடியவர்.
தொல். பழைய, பூர்வ.
தொன்று. பூர்வம்.

ந

நகம். (கடைப்பங்கு) மலை, பூமி.
நகை. பிரகாசமான, அழகிய.
நசிவது. அழிவது.
நஞ்சார். நஞ்சுநிறைந்த.
நடிக்க. கூத்தாட.
நடு. நீதம், நீதி.
நடுவிட்ட. தீர்ப்புச்செய்து.
நண்ணுதல். பொருந்துதல், கிட்டுதல்.
நண்பு. சிநேகம், அன்பு.
நத்துதல். விரும்புதல்.
நந்தல். குறைதல், கெடுதல்.
நமோ. நமோவே, வணக்கம்.
நயனம். கண்.
நலிதல். தளர்தல், மெலிதல், தேய்தல், அழிதல், வருந்துதல்.
நல்குதல். கொடுத்தல்.
நவில. சொல்ல.

நா

நாட்டம். பார்வை, தேட்டம், விருப்பம்.
நாதம். சத்தம், ஓசை.
நாரம். தண்ணீர்.
நாவலர். கற்றோர், புலவர், கவிஞர்.
நானிலம். நால்வகை நிலமுள்ளது, பூமி.

நி

நிகம். ஒளி.
நிகிலம். எல்லாம்.
நிக்கிரகம். அழிவு, நாசம்.
நிதி. அதிகம் பொருந்தியவர், கடல், திரவியம், நீதி.
நிமலன். அழுக்கில்லாதவன், கடவுள், பரிசுத்தன்.
நியதி. நியமநிட்டை.



நிரஞ்சனன். மாசற்றோன்.
நிரந்தரம். எப்பொழுதும்.
நிராதரன். ஆதாரமில்லாதவன், கடவுள்.
நிருமலம். நிர்மலம், அழுக்கில்லாமை, பரிசுத்தம்.
நிறை. பூரணம், அழிவில்லாமை.

நீ

நீட. போக, நீளமாக.
நீதம். நீதி, நன்னெறி.
நீறு. சாம்பல், வெந்து தூளானது.

நு

நுண்ணிமை. நுணுக்கம், கூர்மை, ஆழ்ந்த தன்மை.

நூ

நூக்கு. தள்ளு, மேற்படுத்து.
நூற. அழிக்க.

நே

நேத்திரம். கண்.
நேமி. (வட்டம்) கடல், பூமி.
நேருற. செம்மைப்பட, செம்மையாக.
நேர்தல். சம்மதித்தல், பொருத்தனைபண்ணல்.

நை

நைதல். வருந்துதல், அழிதல், மனம்நோதல், வாடுதல், இரங்குதல்.
நையும். அழியும்.

ப

பகடு. பெருமை, மாடு.
பகர்தல். சொல்லுதல்.
பங்கம். வெட்கம், குறைவு, பழுது, பாவம்.
பஜனை. பாட்டுத்துதிகள்.
படி. பூமி.
படிறு. பொய், வஞ்சகம்.
படைக்கலம். போராயுதம்.
பணிய. தாழ, கீழே.
பண். பாட்டு.
பண்டு. முன், பழங்காலத்தில்.
பண்பை. குணத்தை.
பதம். பாதம், பதவி.
பத்ததி. (பத்தம்; கட்டு) ஒழுக்கநூல், வேதம்.
பயோததி. சமுத்திரம்.
பலதலம். மோட்சம்.
பரிகரித்தல். நீக்கல்.
பரிசனி. உபசரிக்க.
பரிதி. சூரியன்.
பரிபாலன். ரட்சகன், பாதுகாப்போன்.
பரிவு. வருத்தம், அன்பு.
பருதி. பரிதி, சூரியன்.
பர்த்தா. கணவன்.
பவம். பாவம்.
பள்ளி. நித்திரை, வீடு.

பா

பா. பாட்டு.
பாசம். அன்பு, கயிறு.
பாமரன். அறிவில்லான், இளன்.
பார். (பாரமுள்ளது) பூமி.
பார்த்திபன். அரசன், பூமிக்குடையவன்.
பால். இடம், பகுதி.
பானு. சூரியன்.

பி

பிணி. நோய், வியாதி, துன்பம்.
பிரக்கியாதம். பிரபல்லியம்.
பிரசாதம். தயை, கிருபை.
பிரபலம். கீர்த்தி, பிரசித்தம்.
பிரபோதம். ஞானம்.
பிரபோதர். ஞானமுடையவர்.
பிரான். எசமானன், கடவுள்.
பிரவாகம். வெள்ளம்.

பீ

பீடு. துன்பம்.
பீடை. துன்பம், வியாதி, துக்கம்.
பீதி. அச்சம், பயம்.
பீன், பயம்.

பு

புகர். குற்றம்.
புடவி. (பிருதிவி) புவி.
புடை. இடம், பக்கம்.
புதல்வன். புத்திரன்.
புதின. அதிசயமான.
புரி, செய், விரும்பு, பிசாசு.
புறவம். சோலை.
புனல். நீர்.
புனிதம். பரிசுத்தம்.
புனை. அணி, அலங்கரி.

பூ

பூ. (இருப்பது) பூமி.
பூணுதல். அணிதல், சேர்த்தல், கையிடல்.
பூரகம். மூச்சுள்வாங்குதல்.
பூரியர். காட்டார், பெரியோர்.

பெ

பெத்தரிக்கம். பெருமை.
பெருமான். அரசன், பெருமையிற் சிறந்தோன்.
பெற்றி. தன்மை, குணம்.

பே

பேறு. சம்பாதிக்கப்பட்டது, வெற்றி, புகழ், பலன்.

பொ

பொம்மலாட்டு. விண்மாயம்.
பொய்த்தல். பொய்யாய்ப்போதல்.
பொருவில். ஒப்பில்லாத.
பொறை. பொறுமை.
பொற்பு. அழகு.
பொன்றல். சாதல்.

போ.

போகம். அனுபவிப்பு, செல்வம், பாக்கியம்.
போத. திருப்தியாக, போதிய அளவாய்.

ம

மகவு. மகன். [வுள்.
மகேசன். (மகா + ஈசன்) கட
மங்குரு. உட்குதல், வாடுதல், பேர்ஒளி அழகுமுதலிய குறைதல்.
மஞ்சு. மேகம், அழகு.
மடவு. அறியாமையான, பெண்.
மணாளன். புருஷன், மணவா
மதி. சந்திரன். [ளன்.
மதி. புத்தி, மனம்.
மயல். ஆசைமயக்கம்.
மருட்டுதல். பயமுறுத்தல்.
மருவு. சேர்ந்த. [கிறது.
மருவுகிறது. கிட்டுகிறது, சேர்
மருள், மயக்கம்.
மலக்கம். மயக்கம்.
மலைதல். மயங்குதல்.
மறம். பகை, குற்றம், பாவம்.
மறல். குற்றம், மரணம், சண்டை.
மறுத்து. மீதி, இல்லையென்று.
மறை. வேதம், ஒளிக்கப்பட்ட பொருள்.
மன்னன். அரசன்

மா

மாக்கள். மனிதர்
மாது. ஸ்திரீ.
மாருதம். ஆகாயம்.
மாறு. பகை, விகாரம், எதிர், வித்தியாசப்படு.
மானனார். (மான் + அனார்) ஸ்திரிகள்.
மானு. மகிமையுள்ள.

மி

மிகை. அதிகம், துன்பம்.
மிசை. மேல்.
மிதம். மட்டு, அதிகம்.
மிருது. மெதுவு, மென்மை.

மீ

மீது. மேல்.
மீன். நட்சத்திரம்.

மு

முகங்கோணுதல். விசனமுதலியவற்றால் முகம் நேர்கொள்ளாதிருத்தல்.
முதல். கடவுள்.
முயங்குதல். தழுவுதல்.
முரம்பு. கல், பாறை.
முருகு. பண்டிகை.
முனை. கூர், பகை, கோபம்.
முன்னவன். (முன், முதலிருந்தவர்) கடவுள்.

மூ

மூ. மூன்று.
மூது. முதிய, முற்றின.

மெ

மெய். உள்ளம், சரீரம்,
மெய்ப்பாய். புகழுற.
மெல்லியல். (மெல் + இயல்) ஸ்திரி, தசையினால் உண்டானது.

மே

மேதினி. பூமி.
மேரு. மலை.
மேவி. அடைந்து, சென்று, மேல்மூடுதல்.

மை. கறுப்பு.

மொ

மொக்கை. வெட்கி
மொய். பெருமை, கூடுதல்

மோ

மோடி. மேட்டிமை. [செ
மோன. மௌன, வாய்பே

யா

யாதியாதும். ஏதேதும்.

ர

ரஞ்சிதம். மனதுக்கு அல்லது வாய்க்கு இதமானது.

வ

வசந்தம். தென்றல்.

வசை. ஏச்சு, இகழ்ச்சிச்சொல்.

வஞ்சம். வஞ்சகம், கொடுமை.

வதை. கொலை, துன்பம்.

வரர். வானவர்.

வருத்துகிறது. துன்பப்படுத்துகிறது, வருவிக்கிறது.

வருந்து. வருத்தப்படு, துன்பப்படு, முயலு.

வரைதல். எழுதுதல்.

வர்த்தனை. வர்த்திப்பு, விசாலம்.

வல்லாய். வல்லபனே!

வளமை. இயல்பு, மாட்சி, உபகாரம்.

வள்ளல். வரையாது கொடுப்போன்.

வறியன். எளியவன், தரித்திரன்.

வனம். காடு, அழகு, வழி.

வன்னி [illegible]

[illegible]குவாதத்தை.

[illegible]மு, தர்க்கம்.

[illegible]ம். அன்பு.

[illegible]. சமுத்திரம்.

வி

[illegible]சேத்திரம். விச்சித்திரம், விசித்திரம், நூதனம், கோத்தி.

விண்டு. சொல்லி, வெளிப்படுத்தி.

விந்தை. நூதனம், அதிசயம்.

விபுதர். வானோர், அறிவாளிகள்.

விமல. மாசற்ற.

விலங்கு. மிருகசாதிகள்.

வில். ஒளி.

விளைத்தல். உண்டாக்குதல்.

விள்ளுதல். சொல்லுதல், தெரிதல், பிரிதல்.

விழல். புல், வீண், அற்பம்.

விழுப்பம். சிறப்பு, மேன்மை.

வீ

வீ. சாவு, மரணம், பறவை.

வீதல். அழிதல், சாதல்.

வீய. சாக, கெட.

வீழ. விழ.

வீழ்த்து. விழச்செய்.

வெ

வெம். காங்கையான, கொடிய.

வெருவுதல். பயப்படல்.

வே

வேசாறுதல். அலுத்துப்போதல், மனமழிதல்.

வேணா. மிகவிரும்பப்பட்டது.

வேதியர். போதகர், வேதத்தைப் போதிக்கிறவர்கள்.

வேந்தன். இராசன்.

வை

வைகறை. அதிகாலை.

வையகம். (வை=பூமி+அகம் உள்ளானது.)

# INDEX OF LYRICS WHICH MAY BE SUNG IN THE SAME TUNES.

## இராகம் ஒன்றுக்கொன்று இசைவாய்ப் பாடத்தக்க கீர்த்தனைகள்.

௧, ௨௮௯.

௩, ௧0௩, ௧0௭, ௧௭௮.

௪, ௫௭, ௧௯௫, ௨௭௯, ௨௯௨.

௧0, ௧௩௯.

௧௮, ௧௪௩, ௧௮௯.

௨0, ௨௨, ௮௯, ௧௫௩, ௨௯௮.

௨௩, ௫௧, ௧௨௭, ௧௫௯, ௨௮௨.

௨௪, ௩௯, ௫0, ௯௯, ௭௪, ௮௨, ௧௨௫, ௧௩௯, ௧௪0, ௧௪௧, ௧௪௨, ௧௯௭, ௨0௯, ௨௧௫, ௨௨௫, ௨௨௯, ௨௪௪, ௨௫௩, ௨௫௫, ௨௫௮.

௨௯, ௨௮, ௧௮௪, ௧௯௬, ௨0௧, ௨௫௨.

௩௧, ௨௩௯, ௬௫௯.

௩௪, ௩௮, ௫௨, ௯௫, ௯௮, ௭௨, ௨௧0, ௨௩௫, ௨௪௫, ௨௯௧.

௩௯, ௧௫0.

௪௩, ௨௮௧.

௫௩, ௨௪௯.

௫௪, ௯௯.

௫௯, ௯௪.

௯௨, ௨௭௨.

௯௩, ௨௯௫.

௯௭, ௧௩௯, ௧௫௮.

௮௧, ௯௧.

௮௪, ௧௪௯.

௮௯, ௨௯0.

௯0, ௨௯0.

௯௭, ௧௩௮.

௯௮, ௨௧௧.

௧00, ௧௫௭, ௨௩௪.

௧0௨, ௨௪௪.

௧0௪, ௧௨௯, ௧௮0.

௧0௫, ௨௯௭, ௨௮௭.

௧0௯, ௧௭௧.

௧௧௨, ௨௭௧.

௧௧௩, ௧௩௮, ௨0௯, ௨௭௯.

௧௨௩, ௧௫௪.

௧௨௫, ௨௨௫.

௧௨௯, ௨௨௭.

௧௩௨, ௨௯௩.

௧௩௩, ௧௫௨, ௧௮௩.

௧௫௪, ௧௯௩.

௧௯௭, ௨௯௪.

௧௯௯, ௧௮௭, ௧௯௩, ௨0௪.

௧௮௮, ௨௭௮.

௨00, ௨௧௩, ௨௯௮, ௨௭௮, ௨௮௪, ௨௯௯.

௨௩0, ௨௫௫.

௨௪0, ௨௪௨, ௨௯௩.

௨௫௧, ௨௫௭.

## OLD LYRICS IN THIS VOLUME IN THE ORDER OF THE FORMER EDITIONS.

### பழைய பாட்டு புஸ்தகத்தின் ஒழுங்கான இலக்கமும், புது பாட்டு புஸ்தகத்தின் இலக்கமும் அடங்கிய அட்டவணை.

| பழையது. | புதியது. | பழையது. | புதியது. | பழையது. | புதியது. | பழையது. | புதியது. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 28 | 29 | 56 | 15 | 86 | 88 |
| 2 | 2 | 29 | 30 | 57 | 16 | 88 | 89 |
| 3 | 3 | 30 | 32 | 62 | 59 | 89 | 90 |
| 5 | 4 | 31 | 33 | 63 | 60 | 91 | 91 |
| 6 | 5 | 32 | 35 | 64 | 61 | 93 | 99 |
| 7 | 6 | 33 | 37 | 65 | 62 | 94 | 87 |
| 8 | 7 | 35 | 34 | 66 | 66 | 96 | 96 |
| 9 | 8 | 36 | 38 | 67 | 67 | 98 | 95 |
| 10 | 9 | 39 | 42 | 68 | 70 | 99 | 102 |
| 11 | 278 | 40 | 43 | 69 | 64 | 100 | 97 |
| 12 | 11 | 41 | 39 | 70 | 71 | 101 | 120 |
| 13 | 12 | 42 | 48 | 71 | 72 | 102 | 121 |
| 14 | 13 | 43 | 49 | 72 | 65 | 103 | 111 |
| 16 | 184 | 44 | 41 | 73 | 73 | 104 | 109 |
| 18 | 14 | 45 | 50 | 74 | 75 | 105 | 108 |
| 19 | 20 | 47 | 51 | 75 | 76 | 106 | 205 |
| 20 | 22 | 48 | 55 | 76 | 77 | 107 | 118 |
| 21 | 23 | 49 | 52 | 77 | 78 | 108 | 112 |
| 22 | 19 | 50 | 53 | 78 | 79 | 109 | 116 |
| 23 | 17 | 51 | 54 | 79 | 80 | 110 | 1 14 |
| 24 | 24 | 52 | 56 | 80 | 82 | 112 | 189 |
| 25 | 25 | 53 | 57 | 81 | 83 | 114 | 125 |
| 26 | 26 | 54 | 58 | 82 | 84 | 115 | 122 |
| 27 | 28 | 55 | 21 | 84 | 105 | 116 | 123 |

| பழையது. | புதியது. | பழையது. | புதியது. | பழையது. | புதியது. | பழையது. | புதியது. |
|---|---|---|---|---|---|---|---|
| 117 | 124 | 155 | 174 | 198 | 220 | 239 | 252 |
| 118 | 127 | 156 | 187 | 199 | 221 | 240 | 253 |
| 119 | 74 | 157 | 177 | 200 | 222 | 241 | 255 |
| 120 | 128 | 159 | 178 | 201 | 223 | 242 | 257 |
| 121 | 86 | 160 | 166 | 202 | 224 | 243 | 258 |
| 123 | 131 | 161 | 190 | 203 | 226 | 245 | 259 |
| 124 | 130 | 162 | 204 | 204 | 227 | 246 | 260 |
| 125 | 132 | 163 | 192 | 205 | 228 | 247 | 261 |
| 126 | 134 | 164 | 182 | 206 | 229 | 248 | 268 |
| 127 | 135 | 166 | 183 | 209 | 200 | 251 | 269 |
| 129 | 138 | 167 | 185 | 210 | 201 | 253 | 270 |
| 130 | 250 | 168 | 115 | 211 | 202 | 255 | 275 |
| 131 | 139 | 170 | 110 | 212 | 117 | 260 | 279 |
| 132 | 140 | 171 | 119 | 215 | 231 | 262 | 281 |
| 133 | 159 | 174 | 191 | 216 | 143 | 263 | 282 |
| 134 | 169 | 175 | 188 | 217 | 144 | 264 | 283 |
| 136 | 164 | 176 | 186 | 219 | 155 | 265 | 284 |
| 137 | 165 | 178 | 206 | 220 | 156 | 266 | 285 |
| 139 | 158 | 180 | 141 | 222 | 149 | 267 | 286 |
| 140 | 157 | 181 | 193 | 223 | 145 | 268 | 197 |
| 141 | 160 | 182 | 194 | 224 | 150 | 269 | 263 |
| 142 | 148 | 183 | 198 | 225 | 153 | 270 | 264 |
| 143 | 162 | 185 | 199 | 227 | 152 | 271 | 267 |
| 144 | 163 | 186 | 208 | 228 | 142 | 272 | 292 |
| 146 | 161 | 187 | 195 | 229 | 235 | 273 | 289 |
| 147 | 246 | 188 | 234 | 230 | 238 | 274 | 288 |
| 148 | 168 | 189 | 233 | 232 | 239 | 275 | 290 |
| 149 | 175 | 190 | 217 | 233 | 240 | 276 | 293 |
| 150 | 176 | 191 | 211 | 234 | 243 | 277 | 294 |
| 151 | 170 | 192 | 213 | 235 | 247 | 278 | 295 |
| 152 | 171 | 195 | 232 | 236 | 248 | 279 | 298 |
| 153 | 172 | 196 | 181 | 237 | 249 | 280 | 299 |
| 154 | 173 | 197 | 230 | 238 | 251 | 281 | 300 |

# INDEX OF CHORUSES.

## பல்லவிகளின் அகராதி.


| | | கீர்த்தனை. |
|---|---|---|
| அடங்காதே, நாவு; இதே ........ | | ௨௧௨ |
| அடியேன் மனது வாக்கும் கொடிய ........ | | ௧௨௩ |
| அதம் செய்த பாதகம் தொலைய ........ | (௧௧) | ௧௧ |
| அதிசயமான புண்ணியம் ........ | (௬௧) | ௬௭ |
| அதிமங்கல காரணனே! ........ | (௧௧) | ௧௭ |
| அப்பனே! நீர் எனக்கு எப்படியும் ........ | | ௧௮௮ |
| அப்பா! தயாள குணாநந்த மோனந்த ........ | (௯௭) | ௯௭ |
| அமலா! தயாபரா! அருள்கூர் ஐயா! ........ | (௰) | ௯ |
| அருமில் நில்லாதோ? எந்தனை ........ | | ௧௧௰ |
| அரூபியே! அரூப சொரூபியே! ........ | | ௧௧௨ |
| ஆனந்த ஞான சொரூபா! கமலமே ........ | (௨௫) | ௨௯ |
| அன்பனே! பிரலாபம் ........ | | ௧௯௭ |
| அன்பின் விருந்தருந்த சகோதரர் ........ | | ௨௬௭ |
| ஆ! அம்பர உம்பரமும் புகழும் திரு ........ | | ௪௪ |
| ஆசையாகினன், கோவே! ........ | | ௧௨௨ |
| ஆண்டவரின் நாமமதை ........ | | ௨௧௪ |
| ஆண்டவா! மோட்சகதி நாயனே! ........ | | ௧௨௯ |
| ஆசரி ஐயா! இந்த ........ | | ௧௭௯ |
| ஆதாமின் பாவத்தாலே அரூபன் ........ | (௧௬) | ௧௪ |
| ஆதி திருவார்த்தை ........ | | ௨௭ |
| ஆதி பராபரனின் சுதனே! ........ | | ௧௬௫ |
| ஆதி பிதாக்குமாரன் ஆவி ........ | (௨) | ௨ |
| ஆதியந்தம் இல்லானே ........ | (௰௧) | ௩௨ |
| ஆதியாம் மகா ராஜனே! ........ | | ௨௦௭ |
| ஆத்தும அடைக்கலம் ........ | | ௧௦௬ |
| ஆத்துமமே! என் முழு உள்ளமே! ........ | | ௧௯௪ |


*Note.* ( ) இந்த அடையாளத்திலுள்ள இலக்கம், முதல் புஸ்தகத்தில் இருந்த பாட்டென்று குறிக்கிறது.

| பல்லவி | | கீர்த்தனை. |
|---|---|---|
| ஆ! நேசந்தனை அற்றவன் ஏன் | | ௨௯௪ |
| ஆமென் அல்லெலூயா, மகத்துவத் தம் | (௮௧) | ௮௯ |
| ஆரணத் திரித்துவமே! எமை | | ௨௪௧ |
| ஆரிடத்தில் ஏகுவேன் நான் | | ௧௭௦ |
| ஆருக்குந் தயவான வாக்கியம் | | ௨௬௨ |
| ஆருந்துணை இல்லையே, எனக் | (௫௯) | ௯௩ |
| ஆ! வாரும் நாமெல்லாரும் கூடி | (௨௯) | ௧௭ |
| ஆறுதலடை, மனமே! இதிலுவக் | | ௨௯௫ |
| ஆற்றிக்கொள்ளுவோம், மனத்தை | | ௨௯௯ |
| இங்கெமது நடுவில் எழுந்திடுவாய் | | ௨௮௯ |
| இத்தனை பாடேன் பட்டீர்! | (௯௫) | ௭௦ |
| இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக் | | ௨௯௨ |
| இந்த கவிசேடம் போலெங்கும் | | ௨௬௯ |
| இந்த மங்களஞ் செழிக்கவே | | ௨௮௪ |
| இந்த வேளையினில் வந்தருளும் | | ௩௯௯ |
| இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார் | (௭௭) | ௭௫ |
| இந்நாள் இரட்சிப்புக்கேற்ற நல் | (௱௨௧) | ௮௧ |
| இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை | | ௧௭௩ |
| இம்மனோர்க் குன்னருள் ஈ பரவாசா! | | ௨௮௭ |
| இரங்காய், இரங்காய், என் ஏசுவே! | | ௧௧௯ |
| இரங்கும், இரங்கும், கருணைவாரி! | | ௧௧௬ |
| இறைவன் நீயே, எளியனுக் கிரங்கு | | ௧௧௦ |
| இனித்தவறேன் என்றும், நம்பேனே | | ௧௭௪ |
| இன்றைக்கே மனந்திரும்புவாய் | | ௧௪௭ |
| இன்றைத்தினம் உன்னருள் | | ௨௪௨ |
| உச்சித பட்டணம் பட்சமுடன் | | ௨௯௩ |
| உந்தன் ஆவியே சுவாமி! எந்தன் | | ௧௯௪ |
| உந்தன் சுயாதியே வேதி என்று | | ௨௯௯ |
| உலகம் இல்லாது, நல் மனதே! நீ | | ௨௨௪ |
| உலகில் பவப் பாரத்தால் சோரும் | | ௧௬௨ |
| உள்ளக் கருத்துடன் இசைந்து | (௨௯) | ௨௯ |
| உன் நேசர் என்னும் ஏசுவே! | (௰௫) | ௧௪ |
| உன்னதப் பரமண்டலங்களில் | | ௧௯௨ |
| உன்னையே தினந்தோறும் | | ௨௧௭ |
| எங்கள் மீதிரங்குவீர் ஐயா! | | ௨௭௪ |



| பல்லவி | | கீர்த்தனை. |
|---|---|---|
| எங்கே சுமந்து போகிறீர்? | (௯௩) | ௯௨ |
| எதற்காய் அஞ்சுகின்றனை பாவி? | | ௧௪௯ |
| எந்தன் பரம குரு செய்த | | ௧௯௯ |
| எப்படியும் பாவிகளை | (௮௫) | ௮௯ |
| எப்போ காண்பேனோ? | | ௨௯௧ |
| எல்லாம் ஏசு மயம் | | ௧௦ |
| எழுந்தருளும் ஏசு சுவாமி! | (௭௪) | ௭௩ |
| எழுந்தனன் முகில் மேலே | (௭௯) | ௮௦ |
| எழுந்தானே, தேவ புத்திரன் | (௭௫) | ௭௯ |
| எனது கர்த்தரின் ராசரீக நான் | | ௨௯௧ |
| என் ஐயா! தினம் உனை நம்பி நான் | | ௧௮௨ |
| என்றைக்குக் காண்பேனோ? | | ௧௨௯ |
| என்றைக்குச் சாவேனோ? | | ௨௭௩ |
| என்ன பயம் உனக்கினம் நயம் | | ௨௯௧ |
| என்ன பாக்கியம்? எவருக்குண்டு | (௪௩) | ௬௦ |
| என்ன பாடுபட்டீர்? ஐயா! | (௭௯) | ௭௯ |
| என்றாலே ஜீவன் விடுத்தீரோ? | (௭௰) | ௭௧ |
| என்னையும் உமதாட்டின் மந்தை | | ௨௬௯ |
| என்றோ! பல நினைவாலும் நீ உன்னை | | ௧௯௫ |
| ஏங்குதே என் அகந்தான் | | ௯௯ |
| ஏசு தேவா! தயை புரிந்தே எனை | | ௧௧௧ |
| ஏசு சபையின் அதிபதியே! | | ௧௧௩ |
| ஏசுநாதனே! இரங்கும் | | ௨௭௦ |
| ஏசுநாதன் சாவை வென்று | (௭௩) | ௭௯ |
| ஏசு நாமம் ஒன்றை நம்புவீர் | | ௯௯ |
| ஏசுநாயகனைத் துதிசெய் | | ௯௫ |
| ஏசுநாயகா! வந்தாளும் | | ௨௮௩ |
| ஏசு ராசா! எனை ஆளும் நேசா | (௩௯) | ௨௦ |
| ஏசுவே! உமதன்பை மிகப் பகரும் | (௨௭) | ௨௫ |
| ஏசுவே! கிருபாசனப்பதியே | | ௧௧௯ |
| ஏசுவே சர்வ துதி வணக்கம் | | ௮௩ |
| ஏசுவையே துதிசெய், நீ மனமே! | | ௧௫ |
| ஏசுவை அன்றி, வேறொரு ரட்சகர் | (௯௧) | ௯௧ |
| ஏதனுநி தேவனே! சிறுமை சுமந் | (௭௧) | ௭௨ |
| ஏன் இந்தப் பாடையா? | (௯௬) | ௯௦ |

| பல்லவி | | கீர்த்தனை. |
|---|---|---|
| ஏன் மயங்கிறாய்? மனமே! | | ௧௪௬ |
| ஐயனே! நார் மீதிரங்கி அருள் | | ௨௯௪ |
| ஐயா! உனதருள் புரி அருமை | | ௧௦௮ |
| ஐயையா, நான் வந்தேன் | | ௧௦௦ |
| ஐயையா! நான் பாவி என்னை | | ௧௫௭ |
| ஐயையா! நான் ஒரு மா பாவி | | ௧௬௬ |
| ஐயோ! நான் ஒரு பாவ ஜென்மி | | ௧௯௯ |
| ஒரு மருந்தருங் குருமருந்தே | | ௯௪ |
| ஓகோ பவத்தினை விட்டோடாயோ? | | ௨௦௮ |
| ஓ! ஸ்திரி வித்தேசையர! | | ௨௯௬ |
| ஓடிவா சனமே, நிதிந்துவண்டை | | ௨௬௯ |
| ஓய்வுநாளதை ஸ்தாபித்தருளிய | | ௨௬௫ |
| ஓய்வுநாள் இது என் மனமே! | | ௨௬௯ |
| கண்டறிந்துணர்க்க பாருங்கள் | | ௨௯௯ |
| கதிரவன் எழுகின்ற காலையில் | | ௨௬௭ |
| கருணாகர தேவா! இரங்கி இந்த | | ௨௪௪ |
| கருணாகரனே! பரமேசுரனே! | (௬௯) | ௪௨ |
| கர்த்தரின் பந்தியில் வா | | ௨௫௮ |
| கர்த்தரின் வீட்டில் தங்குபவர்? | | ௨௩௦ |
| கல்லும் அல்லவே காயம் வல்லும் | | ௨௨௧ |
| கனம் கனம் பராபரன் | (௯௨) | ௬௯ |
| காட்டும் நல்வகை காட்டும் ஐயனே! | | ௪௯௧ |
| கிஞ்சிதமும் நெஞ்சே? அஞ்சாதே | | ௧௭௬ |
| கிருபாகரனைத் துதிப்போம் | (௫) | ௪ |
| கிருபைகூரும் ஐயனே! | | ௧௫௯ |
| கிருபை புரிந்தெனை ஆள் | | ௧௮௯ |
| குணம் இங்கிது வழிவாய் உயர் | | ௨௮௨ |
| சதிபேய் செயுது தனை நீயே | | ௧௭௫ |
| சத்திய நிதீஸ்வரநாதர் உத்தம | | ௨௯௮ |
| சந்தத மங்களம் மங்களமே | | ௨௮௯ |
| சந்தோஷி கொண்டாடிடுவோ | | ௧௬௫ |
| சமாதானம் ஒதும் எங்கிறிஸ்து | (௩௪) | ௩௧ |
| சரணம் சரணம் அனந்தா! | (௯௯) | ௯௪ |
| சரணம் சரணம் சரணம் எனக்குன் | (௯) | ௫ |
| சரணம் கழ்பிணேன் ஏகநாதா! | | ௨௪௦ |





| பல்லவி | | கீர்த்தனை. |
|---|---|---|
| சருவேசுரா! ஏழைப் பாவி என் | | ௧௯௪ |
| சன்மார்க்கர் பண்பும் சாற்றக் | | ௨௦௯ |
| சிந்தைப்படாதே நெஞ்சமே! | | ௨௦௦ |
| சிற்றை கொந்து மனதும் | | ௨௦௪ |
| சிரடை தருணம் இதுதி மனமே | | ௧௫௦ |
| சீராடை நீ உடனே | | ௧௪௫ |
| சீயோன் நாதனுக்கு ஜெய மங்களம் | (௨௨) | ௧௯ |
| சிவனே! நித்திய சீவனே! | (௯௮) | ௯௫ |
| சுதன் பிறந்தார் | (௪௨) | ௪௮ |
| சுந்தெரியாயோ தூர்க்குணம் | | ௧௬௭ |
| சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசு | (௨௰) | ௨௨ |
| சுந்தரப் பராபரனே! பரிசுத்தன் | (௫௧) | ௫௪ |
| சுவிசேடங் கூறுவோம் வாரீர் | | ௨௯௫ |
| செய்யவேண்டியதைச் சீக்கிரம் | | ௨௧௯ |
| சென்மம் எதற்கு, செபஞ்செய்யா | | ௧௪௨ |
| சென்றான் சென்றான் மனுவேல் | (௮௰) | ௮௨ |
| ஜெகநாதா! குருபரநாதா! | (௫௪) | ௫௮ |
| சேரும் கிறிஸ்தேசுவே! எனை | | ௧௨௦ |
| சேர் ஐயா! எளியேன் செய் | | ௧௧௨ |
| சேவித்துக்கொண்டேன் ஐயா! | | ௧௭௧ |
| சொல்லரும் மெய்ஞ்ஞானரே! | (௫௫) | ௨௧ |
| ஸ்தோத்ரம் கிருபைகூர் ஐயா! | | ௨௪௬ |
| ஞான ஆயுதம் உண்டு, பேயே | | ௧௭௭ |
| ஞான சுவிசேஷமே! | | ௨௫௪ |
| ஞான திரிமுதல் ஒரு பொருளே! | | ௧௯௯ |
| தந்தை சருவேஸ்பரனே! | | ௧௮௯ |
| தந்தை பராபர சம்ப்ரம பூரண | (௬) | ௬ |
| தயைகூர் ஐயா! என் சாமி! | | ௧௧௮ |
| தரி தாழ்மையே தெரிந்து | | ௨௧௯ |
| தருணமே பரமேசுரி! | | ௧௮௬ |
| தருணம் இதில் அருள்செய் ஏசு | | ௧௫௯ |
| தருணம் இதுவே கிருபைகூரும் | | ௨௦௫ |
| தருணம் இதுன் காட்சி சால | | ௨௦௯ |
| தருணம் மழை இயும் நாதனே! | | ௨௭௭ |
| திரிமுதல் கிருபாசனனே! சரணம் | (௮) | ௭ |

கீர்த்தனை
திருமுகத் தொளிவற்று ....................
திரும்பிப் பாராதே சோதோமை ....................
திருவாய் திறந்திதை தயவாய் .................... (௪௯)
தீதிலா மா மகத்துவ தேவா! ....................
தீய மனதை மாற்ற வாரும் ....................
தீயன் ஆயினேன் ஐயா! ....................
தீயோர் உரை கேளான் ....................
துக்கமுற்றோர் இம்மானுவேல் .................... (௭௨)
துங்கனில் ஒதுங்குவோன் ....................
துதி தங்கிய பரமண்டல .................... (௨௧)
துய்ய திருப்பாலனே! துன்பவினை .................... (௫௨)
தூய பரப்பொருளே துன்பற ....................
தெய்வம் இவர் தெய்வம் இவர் .................... ([illegible])
தேடு பொருள் ஏதெனினும் ....................
தேவ கிருபைக்குக் கீர்த்தனம் ....................
தேவசுதனைத் துதிசெய் என ....................
தேவ சுதன் பூவுலகோர் பாவம் .................... (௫௨)
தேவ சேயோ! தேவ சேயோ! ....................
தேவ தேவனே! யெகோவா! .................... (௭)
தேவ பிதா எந்தன் மேய்ப்பனல்லோ? ....................
தேவதே ஓர் ஏக வஸ்து! .................... (௫௯)
தேவனே துயர்காலத் தடைக்கலம் ....................
தேவன் மரித்தே இவ்வுலகில் ....................
தேவா, இரக்கம் இல்லையோ? ....................
தேவா இவ்வீட்டில் இன்றே ....................
தேவாதி தேவன் இன்றுயிர்த்தார் .................... (௭௯)
தேவாதி தேவா, திருமறை அருளிய ....................
தேவாதி தேவே! நீரே ....................
தேவா! திருக்கடைக்கண் பார் ....................
தேவா, பர தேவா! ....................
தேன் இனிமை அதிலும் சத்திய ....................
தேன் இனிமையிலும் ஏசுவின் ....................
தோத்திரம் செய்வேனே .................... (௨௫)
தோத்திரம் புகழ் கீர்த்தனம் ....................
நடுத்தீர்ப்புச் செய்யவாருரே ....................



கீர்த்தனை.
நம்ப வேண்டாம் உலகை .................... ௨௨௮
நம்பி வந்தேன் மேசையா! .................... (௯௯) ௯௯
நம்பினேன் உனதடிமைநான் .................... ௨௦௧
நாளும் எளியேன் நற்கதி சேர .................... ௧௧௪
நல்லாயன் ஏக சாமி! .................... (௯௯) ௯௯
நல்ல விசேஷம் கேளுங்கோ .................... (௪௩) ௪௯
நல்லனே! வேண்டல் கேள் என் .................... ௧௮௦
நல்வழி மெய் சீவன் எனும் நாம .................... (௱) ௯௭
நித்தமும் சிந்தித்துச் சிந்தித்து .................... ௨௯௦
நித்தம் நித்தம் பரிசுத்தர் துத்தியம் .................... ௨௪௭
நித்தியமாகுதே இருண்ட .................... ௨௯௭
நித்தியா இவ்வாலயத்தில் .................... ௨௪௮
நித்தியானந்தனே! நித்தம் .................... ௧௧௭
நினையேன் மனம் நினையேன் .................... ௧௨௭
நின்பாதம் துணையல்லால் .................... ௧௯௯
நிதியாமோ நீர் சொல்லும்? .................... ௨௧௮
நீ மனமே! பூமியினை நம்பாதே .................... ௨௨௨
நீயே கிலே உனதருள் புரிவாயே .................... (௯௪) ௮௭
நெஞ்சமே! தன்னாடி நொந்து .................... (௯௯) ௧௦௨
நெஞ்சே! நீ கலங்காதே .................... ௧௫௧
நேசம் வைத்தானந்த சீர்வழி .................... ௧௩௧
பதறுதே மனதே! வீணிலே .................... ௧௯௯
பாத்திலே நன்மை வருகுமே .................... ௨௯௪
பரம சேனை கொண்டாடினோர் .................... (௪௧) ௩௯
பரனே! உனை நம்பினேன் .................... ௨௦௨
பரனே! திருக்கடைக்கண் .................... ௧௯௩
பரனே! பரப்பொருளே! .................... (௯௯) ௯௯
பஜனைசெய் மனமே! .................... ௧௨௯
பாக்கியர் இன்று .................... ௨௧௫
பாக்கியம் தந்தருளே! .................... ௨௩௦
பாடித் துதி மனமே .................... ௧௯௭
பாதகன் எனையினை தீர் ஐயா! .................... ௧௪௯
பாதம் வணங்கமே வரப்பிர .................... (௨௫) ௨௫
பாருங்கள் தொடர்ந்து வாருங்கள் .................... ௯௮
பாரும் பாரும் ஐயா! .................... ௩௦௯

| | | கீர்த்தனை. |
|---|---|---|
| யார்க்க ரூனம் வருவேன் | | ௧௨௪ |
| பாவப்பிணி அகல சிவ மருந்து | | ௧௮௭ |
| பாவம் வந்ததையோ! உலகுக்கு | | ௧௪௦ |
| பாவி எனைச் சற்றே காண்பாரும் | | ௧௬௩ |
| பாவி நான் என்ன செய்வேன்? | (௩௰௯) | ௭௪ |
| பாவி! மனதுருகே | (௪௮) | ௫௩ |
| பாவியாகவே வாறேன் | | ௧௰௯ |
| பாவியாம் எனை மேவிப்பார் ஐயா! | | ௧௬௰ |
| பிறந்தும் விபர்த்தம் ஆச்சே | | ௧௯௧ |
| புத்தியாய் நடந்து வாருங்கள் | | ௨௧௩ |
| பூதலமதிலொரு அதிசயமே! | | ௩௯ |
| பூரண கிருபையின் மயமே! | | ௪௦ |
| பெருக்கத் திருக் கருணைப் பிதா | (௯) | ௮ |
| பொழியும் பொழியும் தயை | | ௨௫௦ |
| பொற்புமிகும் வானுலகம் | (௯௪) | ௪௧ |
| மகனே! உன்னெஞ்செனக்கு | | ௧௫௪ |
| மகிழ்ந்து புகழ்ந்து மிகப் | | ௨௧௧ |
| மங்களம் ஜெய மங்களம் | (௧) | ௧ |
| மத்திய பானத்தில் மிக நித்தியம் | | ௨௩௧ |
| மரித்தாரே கிறிஸ்தேசு | | ௧௫௧ |
| மலையாதே நெஞ்சமே! | (௮௯) | ௮௮ |
| மறவாதே மனமே! | | ௧௨௫ |
| மனமே! ஓ உன்னதம் | (௧௪) | ௧௩ |
| மனவாதை அடைந்த கனபாதகன் | | ௧௭௯ |
| மனுடனானதே வார்த்தையும் | (௨௯) | ௩௦ |
| மனுவேலர் திருநாமம் இகழாதே | | ௧௪௪ |
| மன்னரும் மிரிந்து மகிபனுல் | | ௨௨௯ |
| மன்னுயிர்க்காக தன்னுயிர்விடுக்க | (௩௰) | ௩௨ |
| மாசில்லா தேவ புத்திரன் | (௪௰) | ௪௩ |
| மாட்சிமையானதோர் | | ௬௩ |
| மாயமாம்புவை நம்பாதே மனமே! | | ௨௨௦ |
| மாயவாழ்வை நம்பி மோசம் | | ௨௨௩ |
| மாற்றீர் என் கவலை | | ௧௦௧ |
| மின்றேன் சீக்கிரம் வரச்சொல்லுன் | | ௨௯௦ |
| [illegible]த்தேன் உமது சித்தம் ஐயா! | (௮௨) | ௮௪ |





| | | கீர்த்தனை. |
|---|---|---|
| மெய்ச் சுவிசேஷத்தை | | ௨௯௯ |
| மேசியா ஏக நாயனர் | | ௩௧ |
| மேலோகத்தை விட்டு செடு | (௪௭) | ௬௧ |
| மோட்சபேரின்ப பாக்கியங்கள் | | ௨௯௩ |
| யார் இவர் ஆரோ? | (௫௰) | ௫௩ |
| யேசு நாமமல்லால் உலகினில் | | ௧௨ |
| யேசையா! பிள்ளை ஆதி மலையே! | | ௧௦௪ |
| ராச ராச பிதா | | ௪௯ |
| வந்தருள், இதன் மனை காண் | | ௨௩௮ |
| வந்தாரே ஆதி சிஷர்கள் மேலே | | ௧௩௯ |
| வந்தானே தந்தைப் பிதாவின் | | ௩௮௮ |
| வந்தே கடைக்கண் பாருமேன் | | ௨௭௨ |
| வரவேணும் எனதரசே! | | ௧௨௮ |
| வருவார் விழித்திருங்கள்! | | ௨௮௯ |
| வல்ல பராபரன் மைந்தன் வந்தாரே | (௩௨) | ௩௫ |
| வாரா வினை வந்தாலும் சோராதே | | ௧௦௫ |
| வாரும் எமது வறுமை நீக்க | | ௨௭௯ |
| வாரும்! திருக்கண்ணாலே பாரும்! | | ௨௪௯ |
| வாரும் தேற்றரவரே! வாரும் | | ௧௩௫ |
| வாரும் வாரும் எனதடி வந்து | | ௧௫௩ |
| வானம் பூமியோ? பராபரன் | | ௪௭ |
| வானராச்சியம் வந்ததோகோகோ! | | ௧௪௯ |
| வானசனத்திருந்தார் மனுவுருவாய் | (௩௯) | ௩௮ |
| வானுசி தான் காட்டும் | | ௨௫௫ |
| விரும்பாதே மனமே! உலகவாழ்வை | | ௨௨௫ |
| வினை சூழாதிந்த இரவினில் | | ௨௪௫ |
| வேதப்பொருட் சுருக்கம் | | ௨௫௧ |
| வேதா? தயை நிறை நாதா! | | ௧௯௧ |


முற்றிற்று. 114478

S. P. C. K. Press, Vepery, Madras, 1888.